# திருக்குறள் கதைகள்

அறத்துப் பால் - 301- 380

**மணிமேகலைப் பிரசுரம்** **கே.வி.குணசேகரம்**

# கல்வியாளரும் எழுத்தாளருமான கே.வி.குணசேகரம் ஒரு பார்வை

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் ஓர் ஆசிரியர், கல்வியாளர், கல்விநிர்வாகி என்ற ஆளுமைக்கு அப்பால் தம்மை இனங் காட்டிக் கொண்டுள்ள ஒரு துறை படைப்பிலக்கியத் துறையாகும். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் மற்றும் சிறுவர் கதை ஆகிய பல்துறைகளிலும் அவர் கால் பதித்தவர். குறிப்பாகச் சிறுகதை, நாவல் என்பவற்றில் பல்வேறு பரிசுகள் பெற்றதன் மூலம் அத்துறைசார் வாசகர்கள் மற்றும் படைப்பாளிகளது கவனத்தை ஈர்ந்தவர்.

படைப்பாக்கம் என்பது வாழ்க்கை பற்றிய விமர்சனமாகவும் சமூகத்தை “உசுப்பி” விழிப்புறச் செய்யும் கடப்பாடு உடையதாகவும் அமைவதாகும். இத்தன்மை கே.வி.குணசேகரத்தின் படைப்புக்களில் நிறையக் காணப்படுகின்றது. பிரச்சினைகளை இனம்காட்டி வாசகர்களின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்தப் படைப்பாளியாகவே கே.வி.குணசேகரம் எமக்குக் காட்சி தருகின்றார்.

கே.வி.குணசேகரம் என்ற படைபாளியின் படைப்பாற்றல் என்ற வகையிலே குறிப்பிட்டுக் கூற வேண்டிய அம்சம், அவர் சமூக மாந்தரை இரத்தமும் சதையுமாக எம்முன் நிறுத்தும் பாங்கு ஆகும். ஒவ்வொரு கதா பாத்திரத்தையும் அதன் உணர்வு நிலைகளை அடையாளம் காட்டக் கூடிய வகையில் பேச்சுவழக்கு, மொழிநடை மற்றும் உடல் சார் வர்ணனைகளுடன் நமது நேரடிப் பார்வைக்கு இட்டு வருகின்றார். அவர்களது ஆசாபாசங்களுடன் எம்மை நெருங்க வைக்கின்றார். இவ்வாறான செயல் முறை காட்சிப்படுத்தும் பண்பு எனப்படும். இதனால் அவரது படைப்புக்கள் பலவும் வாசகனை உடனடியாகத் தம்முடன் ஒன்றவைத்து விடுகின்றன. முக்கியமாக இளம் தலை முறையினரின் உணர்வுகள் குறிப்பாக காதல்சார் மன அவலங்கள், பிரிவுத்துயர்கள், ஏக்கங்கள் சார்ந்தவற்றை அவர் எழுதும் போது நாடகம் மற்றும் திரைப்படக் காட்சிகளுக்குரிய சுவைஉணர்வு அவற்றில் வெளிப்படுகின்றது. ஒரு வகையில் குணசேகரம் அவர்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படும் படைப்பாளியாகக் கவனத்தைப் பெற்று வருவதற்கு அவரது இவ்வாறான சித்தரிப்பு முறைமை ஒரு முக்கிய காரணமெனக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அறமும் நீதியும் நிறைந்த மரபுகள் நமக்கு வளமாக இருந்தும் அவை பேணப்படாமல் அழிந்து கொண்டு போகின்றனவே என்ற ஒரு மனஆதங்கமே அவரது எழுத்துக்கள் பலவற்றிற்கும் உள்ளீடாக, உணர்வோட்டமாக அமைவதை உணர முடிகின்றது. ஆசிரியப் பணி புரிவோர் அதற்கான பண்பு நலன்களை பேணிக்கொள்ளாமை, குடும்ப உறவுகளில் பாசம் பற்று என்பன விலகி அவற்றின் இடத்தைப் பணம், அந்தஸ்து என்பன பற்றிக் கொண்டமை, பெண்ணைப் போகப் பொருளாகக் கருதும் ஆண் ஆதிக்கக் கொடுமைகள், காதல் என்ற புனித உணர்வு எதிர்கொள்ளும் அவலங்கள் முதலியவற்றை

மயமிட்டே அவர் தம் கதைகளுக்கான உணர்வுக் கூறுகளைக் கட்டமைத்துக் கொள்கின்றார். சில ஆக்கங்களில் அவர் தாம் உணர்ந்து விரும்பிய தீர்வுகளை முன்வைக்க முற்படுகின்றார். ஆயினும் பொதுவாகப் பிரச்சினைகளை இனம் காட்டி வாசகனின் மனச்சாட்சியை விழிப்புறச் செய்யும் ஒரு விமர்சன யதார்தப் படைப்பாளியாக கே.வி.குணசேகரம் நமக்குக் காட்சி தருகின்றார்.

**பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன்**
முன்நாள் தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

கே.வி.குணசேகரம் நாடறிந்த நல்ல எழுத்தாளர். நாவல், சிறுகதை, சிறுவர்கதை, கவிதை முதலானவற்றிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ளார். எழுத்துத் துறையில் பல பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இவர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றும் அனுபவங்களில் வெளிபாடும் இக்கதைகளினூடு துள்ளியமாகத் தெரிகின்றது.

மாணவர்களின் மொழிவளத்தை, ஆக்கத்திறனை, சிந்தனை விருத்தியை, ஒழுக்க வாழ்வை மேம்படுத்தத் திருக்குறள் கதைகள் பெரிதும் உதவும் என நம்புகின்றேன். சில காலத்துக்கு முன்னர் இலங்கையிலும் தமிழகத்திலும் திருக்குறள் கதைகள் என்னும் நூல்கள் வெளி வந்தன. எல்லாக் குறள்களுக்கும் அல்லாமல் தெரிவு செய்யப்பட்ட சில குறள்களுக்கே கதைகள் எழுதப்பட்டன. ஆனால் கே.வி.குணசேகரம் எல்லாக் குறள்களுக்கும் கதை எழுதும் உற்சாகத்துடன் இருக்கிறார். ஏற்கனவே 290குறள்களுக்குக் கதைகள் வெளிவந்துள்ளன. தற்பொழுது 170குறள்களுக்கான கதைகள் வெளிவருகின்றது.

ஒவ்வொரு குறளுக்கும் அமைவாக பொருள் நயம் சிந்தாமல் சிதறாமல் கதை எழுதுவதென்பது இலகுவான காரியம் அல்ல. எழுத்தனுபவமும் சிந்தனை வீச்சும் உடைய கே.வி.குணசேகரம் இந்த வகையிலே பெரு வெற்றி பெற்றுள்ளார். கற்பனை வளமும் கருத்துச் செறிவும் மிக்க இவரது கதைகள் மாணவர் சமுதாயத்துக்கு நன்கு வழிகாட்டும் என உறுதியாக நம்பலாம். கே.வி.குணசேகரத்தின் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

**பேராசிரியர்.கலாநிதி. எஸ்.சிவலிங்கராசா**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

# என்னுரை

தமிழர்களின் வாழ்வியல் நூலான திருக்குறளில் உள்ள 1330 பாக்களுக்கும் கதை எழுத விரும்பி ஆரம்பித்தேன். இக் கதைகளைச் சிறந்த முறையில் எழுத வேண்டும் என்பதற்காக ஏராளமான நூல்களைக் கற்றேன். அதற்கமைய 210 குறள்களுக்கான கதையை முதலில் எழுதினேன். அக்கதைகளை நல்ல முறையில் சா்வதேசத் தரத்திற்கு அமைவாக மிகவும் அழகுற லங்கா பதிப்பகத்தினா் வெளியிட்டனா். இலங்கையில் உள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள், சமயஸ்தாபனங்கள், கோயில்கள் என்பன இக்கதைகளைக் கொள் முதல் செய்து பரிசளித்தன; மாணவா்களுக்குக் கொடுத்தன; நூல் நிலையங்கள் யாவும் கொள்வனவு செய்தன.

திருக்குறள் பாக்களுக்கு மிகவும் பொருத்தமான கதைகள்; மிகவும் இனிமையான வசனநடை; நல்ல தத்துவக் கருத்துக்கள். என்று பல கல்விமான்கள் நேரிலும் கடித மூலமும் தெரிவித்தனா்.

அறத்துப்பாலின் மிகுதிக் குறள்களுக்கான கதைகள் இப்பொழுது மணிமேகலைப்பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்படுகிறது. இதற்கு முன்பு திருக்குறள் கதைகள் இன்பத்துப்பால் 80 என்ற எனது நூல் மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டது. அதன் மிகுதிப் பகுதி விரைவில் வெளி வரும்.

அடுத்து பொருட்பாலுக்குரிய கதைகளை எழுதி வருகிறேன். 1330 குறளுக்கான கதைகளும் மணிமேகலைப் பிரசுர நிறுவனத்தினரால் எதிர் காலத்தில் வெளியிடப்படும்.

திருக்குறளைப் பற்றிப் பேசாத புலவரில்லை; மொழிபெயா்க்கப்படாத மொழிகள் இல்லை. பள்ளிப் பருவத்திலிருந்து வயது சென்றவா் வரை படித்து இன்புறும் இத்திருக்குறளைப் பற்றிப் பல்வேறு நூல்கள் வெளிவந்த போதும், முழுக்குறளுக்கும் இதுவரை யாரும் கதை எழுதியதில்லை. உலக வரலாற்றில் முதன் முதலாக இப்பணியை நான் தொடங்கியுள்ளேன். இதற்கு அனைவரது ஆதரவும் எனக்குத் தேவை. குறிப்பாக தமிழ்நாட்டு அறிஞா்களின் ஆதரவையும் கருத்துக்களையும் எதிா்பாா்க்கிறேன். குறளை அணுஅணுவாக அலசி ஆராயும் தமிழ் நாட்டு அறிஞா்கள் இக்கதைகளையும் ஆராய வேண்டும். இதுவே எனது ஆசை.

திருக்குறள் கதைகளின் கீழ் குறளும் அதற்கான கருத்துக்களையும் எழுதியுள்ளேன். யாழ்ப்பாணத்து அறிஞா் பலா் மிகவும் இலகுவாக மாணவா்கள் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு எழுதப்பட்ட அவ்வுரையைத் தொகுத்து நூலாக வெளியிடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனா். அடுத்து அந்நூல் வெளிவரும். இக்கதைகளை நல்ல முறையில் அச்சுப்பதிவு செய்து தந்த செல்வி.க.சுகந்தினியின் சேவை அளப்பரியது. அவருக்கும், மிகவும் எளிமையாக என்னுடன் பழகி ஈழத்தவரின் ஆக்கங்களை நூலுருவாக்கி ஈழத்து இலக்கிய மாதாவுக்குப் பெருமை அளித்துக் கௌரவித்துக் கொண்டிருக்கும் மணிமேகலை பிரசுர முகாமைப் பணிப்பாளா்

திரு.ரவிதமிழ்வாணனுக்கும் அணிந்துரைகள் தந்துதவிய பேராசிரியா் நா.சுப்பிரமணியனுக்கும், பேராசிரியா் எஸ்.சிவலிங்கராசாவுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

கே.வி.குணசேகரம்
15.06.2005.

அதிபர்
யா.ஃ. நாவலா் தமிழ் வித்தியாலயம்,
கோப்பாய்,
ஸ்ரீலங்கா.

# பெருமையானது

பிணையில் சென்ற தனபாலனையும் சின்னத்தம்பியையும் கிருஸ்ணனையும் புஸ்பநாதனையும் காவல் நிலையத்திற்கு வரும்படி உத்தரவு பிறப்பித்தார் சிவபாதசுந்தரம். தனபாலனும் சின்னத்தம்பியும் காவல் நிலையத்திற்குப் புறப்பட ஆயத்தம் செய்தனர். தணிகாசலம் முதல் நாள் நால்வரையும் தனித்தனியே சந்தித்து மறுநாள்க் காலை ஒன்பது மணிக்கு நால்வரும் தனது வீட்டுக்கு வந்து காவல் நிலையத்திற்குச் செல்லுமாறு வற்புறுத்திக் கூறியிருந்தார்.

சின்னத்தம்பியும் தனபாலனும் காலை எட்டுமணிக்கே தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்து விட்டனர். கிருஸ்ணனும் புஸ்பநாதனும் ஒன்பது மணியாகியும் வராமையால் தணிகாசலம் அவர்கள் இருவரையும் காவல் நிலையத்திற்குச் செல்லுமாறு கூறிவிட்டு கிருஸ்ணனையும் புஸ்பநாதனையும் தேடிச் சென்றார்.

புஸ்பநாதனது வீட்டுக்குச் சென்ற தணிகாசலம் அவனது மனைவி இலட்சுமியிடம்; ‘‘புஸ்பநாதனை இன்று காவல் நிலையப் பொறுப்பதிகாரி கூட்டிவரச் சொன்னவர். நேற்றுச் சந்தித்துச் சொன்னனான். அவன் இன்னும் வரவில்லை. எங்கை போட்டான்?’’ என்று கேட்டார்.

‘‘அவரை ஏன் நீங்கள் பிணை எடுத்தனீங்கள். நாங்கள் பிணை எடுக்காததற்குக் காரணம் அவர் சிறைக்குப் போய்த் திருந்த வேண்டும் என்று நீங்கள் பிணை எடுத்து விட்டதாலை அவர் நான் வந்து பிணை எடுக்கவில்லை. என்று எனக்கு அடித்தவர். உங்களுக்கேன் உந்த வேலை. தீயவர்களுக்கு உதவி செய்தால் தீமை தான் வரும். இராத்திரி அவரும் கிருஸ்ணனும் காவல் நிலையத்திற்குச் சென்றால் பிடித்து அடைத்து விடுவார்கள் என்றும் எங்கையாவது போய் நாலைந்து நாட்களுக்குத் தலைமறைவாய் இருந்திட்டு வருவம் என்றும் கதைத்தவை. விடிய முன்னம் கிருஸ்ணன் வந்து அவரையும் கூட்டிக் கொண்டு போனவன். ஆட்களின் குணத்தை அறியாமல் உதவி செய்பவை கஷ்டப்படுவினை’’ என்றாள் இலட்சுமி.

அவளது திமிரான பேச்சு தணிகாசலத்திற்கு கோபத்தை உண்டாக்கிய போதும், அவர் எதுவும் பேசாமல் நடந்தார். அவள் சொன்னதைக் கேட்ட அவ்வழியால் வந்த இராமநாதன் சொன்னான்; ‘‘அண்ணை இவள் சரியான திமிர் பிடிச்சவள். இவள் சரியாக நடந்தால் அவன் திருந்தி விடுவான். அவன் களவெடுக்கிறத்திற்குக் காரணமாக இருப்பதே அவள் தான் உள்ளே அவனை ஒளித்து வைத்துக் கொண்டும் அப்படிச் சொல்லுவாள். நீங்கள் நல்ல மனிதன் இவங்களுக்கேன் உதவி செய்யப் போனனீங்கள்’’ என்றான்.

தணிகாசலம் எதுவும் சொல்லாது சென்றார். காவல் நிலையத்திற்குச் செல்லும் வரை அவரது மனம் நிம்மதி இழந்து பரபரத்தது. காவல் நிலையத்திற்கு வெளியே சின்னத்தம்பியும் தனபாலனும் நின்றனர்.

‘‘பத்தரை மணியாச்சு இன்னும் கிருஸ்ணனையும் புஸ்பநாதனையும் காணேல்லை. இரண்டு பேரும் கெட்டவங்கள் எங்காவது ஒளித்திருப்பங்கள்’’ என்றான் தனபாலன்.

‘‘ஐயா சிவபாதசுந்தரம் நீங்கள் வந்தவுடனை தன்னை வந்து சந்திக்கச் சொன்னவர்’’ என்றான் சின்னத்தம்பி.

தணிகாசலம் உள்ளே சென்றார். காவற்துறைப் பொறுப்பதிகாரியான சிவபாதசுந்தரம் தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். தணிகாசலத்தைக் கண்டதும்; ‘‘இருங்கோ’’ என்றவர் பின்; ‘‘இரண்டு பேர் வரவில்லை கூட்டி வந்தீர்களா?’’ என்று கேட்டார்.

‘‘இல்லை’’ என்றார் தணிகாசலம்.

சிவபாதசுந்தரத்திற்குக் கடுங் கோபம் வந்தது; ‘‘ஊருக்கு உதவாத திருடர்களுக் கெல்லாம் ஏன் உதவி செய்கிறீர்கள். திருடுவதில் உங்களுக்கும் பங்கு தருகிறார்களா..?’’

தணிகாசலம் அதிர்ந்து போனார். அவருக்கு வியர்த்துக் கொட்டியது. அளவுக்கதிகமான கோபம் வந்ததால் முகம் சிவந்தது. அதை அவதானித்த சிவபாதசுந்தரம் சொன்னார்; ‘‘உமக்குக் கோபம் வருது. அவர்கள் இருவரும் வராவிட்டால் உம்மை பிடித்து அடைக்க வேண்டி வரும். என்றார் மறுபக்கம். திம்பி அங்கு நின்ற ஊழியனிடம்; ‘‘வெளியே நிற்கும் இருவரையும் வரச் சொல்’’ என்றார்.

சின்னத்தம்பியும் தனபாலனும் பயந்து பயந்து உள்ளே வந்தனர்; ‘‘அவர்கள் இருவரும் வரும் வரை உங்களை வெளியே விட மாட்டேன். தணிகாசலம் நாளை காலைக்குள் அவர்கள் இருவரையும் கூட்டி வராவிட்டால் உம்மைப் பிடித்து அடைப்போம்’’ என்றார்.

கவலையுடன் வீட்டுக்கு வந்தார் தணிகாசலம். தணிகாசலத்திற்கு நேர்ந்த கதியை அறிந்த கதிரேசனும் தில்லை நடராசாவும் சேனாதிராசாவும் நவராசாவும் புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் தேடிச் சென்றனர். இருவரும் சீனியனது வீட்டில் கள்ளுக் குடித்துக் கொண்டிருந்தனர்.

‘‘டேய் கிருஸ்ணா, புஸ்பநாதா இரண்டு பேரும் இன்று காவல் நிலையத்திற்குச் செல்லாததால் தணிகாசலம் அண்ணையை காவல் துறை கைது செய்யப் போகுது. நீங்கள் சந்தோசமாய்க் கள்ளுக் குடிக்கிறியள்’’ என்றவாறு புஸ்பநாதனுக்கும் கிருஸ்ணனுக்கும் நவராசா அடித்தான். சேனாதிராசாவும் சேர்ந்து அடித்தான். பின் இரண்டு பேரினதும் கைகளைக் கட்டி விட்டு தணிகாசலத்தின் வீட்டிற்கு அழைத்து வந்தான் நவராசா.

தணிகாசலம் அவர்களைப் பார்த்தார். இருவரின் தலைகளில் இருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது; “நவராசா நீ சிறுபிள்ளை, கோபப்படக் கூடாது. அதிலும் வலிமை இல்லாதவர்கள் மீது கோபிப்பது வீரனுக்கு அழகல்ல. கொழுந்து விட்டெரியும் கோபத்தை அடக்கித் தவறு செய்பவனை மன்னிப்பவன் தான் பெருமைக்குரியவன். நீ இளவயதினன். அளவுக்கதிகமாகக் கோபப்படுவதால் துன்பங்களைத் தான் தேடிக் கொள்வாய். அன்பும் அமைதியும் மன்னிக்கும் மனப் பாங்கும் தான் உன் போன்ற இளைஞர்களுக்குத் தேவையானது. இவர்கள் இருவரையும் கொண்டு சென்று காவல் துறை அதிகாரியிடம் ஒப்படையுங்கள் என்றார் தணிகாசலம்.

301. செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?.

பலிக்கும் இடத்தில் சினம் வராமல் காப்பவனே சினம் காப்பவன் ஆவான். பலிக்காத இடத்தில் சினத்தைக் காத்தால் என்ன?. காக்காமல் விட்டால் என்ன?.

## பெருமை

ஒரு மாதம் விளக்கமறியலில் இந்த கிருஸ்ணனும் புஸ்பநாதனும் விடுதலை பெற்று வீட்டுக்கு வந்தனர். அவர்களை ஆறு மாத காலத்திற்குத் தினமும் காவல் நிலையத்திற்கு வந்து கையொப்பமிடுமாறு நீதிபதி பணித்தார். தனபாலனையும் சின்னத்தம்பியையும் காவல் நிலையத்திற்குச் சென்ற மறு நாள் சிவபாத சுந்தரம் விட்டு விட்டார்.

தனபாலனையும் சின்னத்தம்பியையும் விட்டு விட்டு தம்மை ஒரு மாதகாலம் அடைத்து வைத்திருந்தது. மட்டுமல்லாமல் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்குத் தினமும் காவல் நிலையத்துக்கு வந்து கையொப்பமிடச் சொன்னது கிருஸ்ணனுக்கும் புஸ்பநாதனுக்கும் அளவு கடந்த சினத்தைக் கொடுத்தது. அதனால் தணிகாசலத்தையும் நவராசாவையும் பழிவாங்க வேண்டு மென்று நினைத்தனர். அவர்கள் இருவரும் அன்று கள்ளைக் குடித்து விட்டு தனபாலனது வீட்டுக்கு வந்தனர்.

“தனபாலு, உன்னை மாதிரியும் சின்னத்தம்பியை மாதிரியும் ஆட்களை நான் காணவில்லை. சின்னத்தம்பி நாச வேலைகளுக்கு திட்டமிட உன்னுடன் சேர்ந்து துணைக்கு நாங்கள் இருவரும் வந்தனாங்கள் அப்படியிருக்கத் தணிகாசலம் எங்களிரண்டு பேரையும் அடைச்சு வைச்சிட்டு உன்னையும் சின்னத்தம்பியையும் பிணையிலை எடுத்தந்திட்டான். நீங்கள் ஒவ்வொரு நாளும் காவல் நிலையத்துக்குச் சென்று கையெழுத்துப் போடுறனீங்களே... நாங்கள் ஆறு மாதத்திற்குக் கையெழுத்துப் போடவேணும். இது நியாயமே...?” என்று கேட்டான் புஸ்பநாதன்.

‘‘நானும் சின்னத்தம்பியும் வரச் சொன்னவுடனை போனதுக்காகத்தான் விட்டவை. நீங்கள் வராதத்தாலை தான் விளக்கமறியலிலை இருக்க வேண்டி வந்தது’’ என்றான் தனபாலன்.

‘‘உந்தக் கதையை நான் நம்பமாட்டன். தணிகாசலம் தான் ஊருக்கு நன்மை செய்யிறதாய்ச் சொல்லிக் கொண்டு நாடகமாடுறார். சின்னத்தம்பியும் நீயும் இப்ப அவரோடை நல்ல மாதிரி. களவெடுக்கிறதிலை ஏதும் குடுப்பாய்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘அந்த மனிசனைப்பற்றிக் கதைத்தால் கதைக்கிறவையின்ரை வாய் அழுகிப் போம்... ஆராயாமல் கதையாதை’’ என்றான் தனபாலன்.

‘‘முந்தி அவரைப்பற்றிக் கேவலமாகக் கதைச்சதையெல்லாம் மறந்திட்டியே... அவருக்கொரு சண்டியனும் சேர்ந்திட்டார். நவராசா இல்லாட்டில் தணிகாசலத்தை அடித்து முறித்துப் போடுவன்’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘நவராசாவுக்கு நான் அடிக்காமல் விடமாட்டன்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘நவராசா பலசாலி மட்டுமில்லை ஊருக்கை மதிப்பும் மரியாதையும் உள்ளவன். மிகவும் நேர்மையானவன். யார் கேட்டாலும் உதவிகள் செய்து கொடுப்பவன். அவனுடைய பேரனான கதிரேசுவை நான் கிழவன் என்றும் பாராமல் அடித்ததற்காகத் தான் அடித்தவன். நீ வராததாலை தணிகாசலத்தைப் பிடித்து அடைக்கப் போவதாகக் காவல் துறை அதிகாரி சொன்னதைப் பொறுக்க முடியாமல் தான் உங்களைத் தேடிப் பிடித்து அடித்தவன். அதோடு அவன் இப்ப சரியான வசதியுள்ளவன். மணிவண்ணன்ரை தம்பியார் அவன்ரை குடும்பத்திலை சம்பந்தம் செய்ததாலை பணத்திற்கும் பிரச்சினை இல்லை...’’

‘‘பணத்திற்குப் பிரச்சினை இல்லாத தாலை தான் அவர் தலைகால் தெரியாமல் நடந்து கொள்கிறார். அவன் எப்படியானவனாக இருந்தாலும் அவனுக்கு அடியாமல் விட மாட்டன்’’ கோபத்துடன் சொன்னான் புஸ்பநாதன்.

‘‘வலிமை உள்ளவனோடை மோதி நாம் வெல்ல முடியாது. அத்துடன் நீ அவனுக்கு அடித்தால் ஊரே திரண்டு வந்திடும். இப்ப ஊர்ச்சனங்கள் முந்தின மாதிரி இல்லை. களவெடுக்கிறவனைத் தேடிக் கண்டு பிடித்து கட்டிப் போட்டு அடிக்கிறதாய்த் தீர்மானிச்சிருக்கினை’’ என்றான் தனபாலன்.

‘‘உன்னுடைய வெருட்டுக்கு நான் பயப்பட மாட்டன். நவராசனுக்கு அடிப்பன்..’’ என்று கூறிவிட்டுச் சென்றான் புஸ்பநாதன். அவனைப் பின் தொடர்ந்தான் கிருஸ்ணன்

அவர்கள் இருவரும் பூபாலசிங்கத்தின் கடையருகே வந்த போது நவராசா வந்தான். அவனைக் கண்ட புஸ்பநாதன் சினத்துடன் கத்தினான்; ‘‘டேய் நவராசா நீ ஆம்பிளை யென்றால் எனக்குக் கிட்டவா’’ என்றான்.

நவராசா அவனின் அருகில் வந்து சொன்னான்; ‘‘நீ குடிச்சிருக்கிறாய். உன்னோடை கதைக்க எனக்கு விருப்பமில்லை. என்னை விடப் பலவீனமான உன்னை அடிப்பது எனக்குப் பாவம். அன்றைக்கு தணிகாசலம் அண்ணையைப் பிடித்து அடைக்க ஏற்பாடு செய்ததாலை தான் எனக்குக் கோபம் வந்தது. நீ அவருக்கு அப்படிச் செய்திருக்கக் கூடாது என்றான்.’’

நீர் உபதேசம் செய்யிறீர்’’ என்றவாறு நவராசாவுக்கு அடிக்கக் கையோங்கினான் புஸ்பநாதன். நவராசா அவனது கையைப் பிடித்தான். புஸ்பநாதனால் அவனது பிடியில் இருந்து மீள முடியவில்லை. கிருஸ்ணன் அதை கவனிக்காதவன் போல விரைவாக நடந்து கொண்டிருந்தான்.

புஸ்பநாதனுக்குத் தனது கை முறிவது போல இருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது தனது கையை விடுவிப்பதற்காகத் திமிறினான். திமிறத் திமிற நோ அதிகரித்ததே தவிர நவராசாவின் பிடியில் இருந்து புஸ்பநாதனால் விடுபட முடியவில்லை.

நான் உனக்கு அடிப்பது கேவலம். அதனால் தான் அடித்த உனது கையைப் பிடித்தேன். இனிமேல் ஏதாவது கதைத்தால் கரைச்சல்படுவாய்’’ என்றான் நவராசா.

அவ்விடத்தில் பலர் கூடிவிட்டனர்; ‘‘உவனையும் உவன்ரை சினேகிதர்களையும் அடித்துக் கொல்ல வேண்டும்’’ என்றார் ஒரு பெரியவர்.

‘‘களவெடுத்துப் போட்டு சண்டித்தனம் காட்டுறியோ...’’ என்று அடிக்கச் சென்றான் ஓர் இளைஞன்.

புஸ்பநாதனுக்குத் தனபாலன் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

302. செல்லா இடத்துச் சினம்தீது; செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

பலிக்காத இடத்தில் சினம் கொள்வது தீமையைத் தரும். பலிக்கும் இடத்திலும் சினம் கொள்வது தீமையைத் தவிர வேறு எதையும் தராது.

## மறத்தல்

புஸ்பநாதனின் கை மணிக்கட்டு கொழுக்கட்டையைப் போல வீங்கியிருந்தது. அந்த வீக்கத்தைக் குறைப்பதற்காகப் புஸ்பநாதன் நோ எண்ணெய் வாங்கி வந்து பூசினான். இரண்டு மூன்று தினங்கள் நோ

எண்ணை பூசியும் அவனது கை வீக்கம் குறையவில்லை. உடலெங்கும் புண்ணாக வலித்தது. லேசாகக் காய்ச்சலும் காய்ந்தது. அதனால் பயந்த புஸ்பநாதன் அவ்வூரில் இருந்த சித்த வைத்தியரிடம் சென்றான்.

சித்த வைத்தியர் நோ எண்ணெய் பூசித் தேய்த்தார். புஸ்பநாதனுக்குப் பயங்கரமாக வலித்தது. வாய்விட்டுப் பெரிதாகக் குழறினான்.

நவராசா பிடித்த பிடிக்கே இப்படி அலறுகிறாய். தற்செயலாக அடித்திருந்தால் என்ன நடக்கும்?'' என்று கேட்டான் புஸ்பநாதன்.

''நீ தெரியாத மாதிரிப் போட்டாய். தனபாலன் சொல்லேக்கை நியாயம் கதைச்சுப் போட்டு இப்பிடிச் செய்வாய் என்று நான் நினைக்கேல்லை'' என்றான் புஸ்பநாதன்.

''எனக்கு கோபம் வந்தது தான். தனபாலன் சொன்னதைக் கேட்டாப் பிறகு அவன் சொல்வது நியாயம் போலப் பட்டது. களவெடுக்கிற எங்களுக்கு என்னத்திற்குக் கோபம் வருவான். மானம், வெக்கம், ரோசம் உள்ளவனுக்குத் தான் கோபம் வர வேணும். வலியவர்களிடத்தில் கோபம் பலிக்காது. அவர்களோடு கோபம் கொண்டால் தீமை தான் வரும் என்று தனபாலன் சொன்னது எவ்வளவு சரி. அன்றைக்குக் கூடி நின்றவங்களே எங்களுக்கு அடிக்க வந்திட்டாங்கள். நானும் சேர்ந்திருந்தால் இரண்டு பேரையும் அடித்து முறித்திப்பங்கள்'' என்றான் கிருஸ்ணன்.

''தம்பி கை எலும்பிலை சின்ன வெடிப்பு ஒன்று இருக்கிறது போலத் தெரிகிறது. புக்கை கட்ட வேண்டும். ஒன்றை விட்ட ஒரு நாளைக்கு வந்து கட்டு ஒரு முறை புக்கை கட்ட இருநூற்றி ஐம்பது ரூபா வாங்குகிறனான். எண்ணைக்கு இருநூறு ரூபா'' என்றார் சித்த வைத்தியர்.

''எத்தனை புக்கை கட்ட வேணும்'' என்று கேட்டான் புஸ்பநாதன். குறைந்தது ஐந்தாவது கட்ட வேணும். நோக் குறையுறத்தைப் பொறுத்துத் தான் புக்கை கட்டுற எண்ணிக்கை கூடிக் குறையும் என்றார் சித்த வைத்தியர் சித்த வைத்தியரிடம் புக்கை கட்டி எண்ணெய்யும் வாங்கிக் கொண்டு புறப்பட்டான் புஸ்பநாதன்.

''தேவையில்லாமல் கோபப் பட்டதாலை இப்ப ஆயிரக்கணக்கிலை செலவு வந்திட்டுது. தோட்ட வேலைகள் செய்ய முடியாமல் இருக்கு. நாலைந்து நாட்களாகப் புல்லுச் செதுக்காதத்தாலை மாடு ஆடுகளெல்லாம் பட்டினியாய்க் கிடக்கு. அதோடை என்ரை வேலைகளையும் செய்ய முடியாமல் இருக்கு. காலமை கிணத்திலை தண்ணி அள்ளிக் குளிக்க முடியேல்லை. மனிசியைக் கேட்டால் சண்டைக்கு வாறாள்? என்றான் புஸ்பநாதன்.

''யார் மீதென்றாலும் கோபப்பட்டால் தீமைகள் தான் தொடர்ந்து வரும் என்று பெரியவை சொல்லுறவை'' என்றான் கிருஸ்ணன்.

தணிகாசலம் நவராசாவைத் தேடிக் கொண்டு அவனது தோட்டத்திற்குச் சென்றார். நவராசா மரவள்ளிச் செடிக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அவனின் அருகிற் சென்ற தணிகாசலம் சொன்னார்; ‘‘நீ புஸ்பநாதனுக்கு அன்றைக்குச் சரியாய் அடிச்சுப் போட்டியாம். கை முறிந்ததாலை நோய் வாய்ப் பட்டு வீட்டோடை இருக்கிறானாம். இப்ப சமைக்கவே முடியாமல் இருக்கென்று புஸ்பநாதன்ரை மனிசி வந்து அழுதாள். நான் கொஞ்சக் காசு கொடுத்தனான். நான் உனக்கு நெடுகச் சொல்லுறனான். முற்கோபம் கூடாதென்று நல்லவனாக வாழ வேண்டு மென்று நினைத்தால் சினத்தை அடக்க வேண்டும். கோபத்தை அடக்க மன உறுதி வேண்டும். மனவுறுதியுள்ளவனால் தான் கட்டறுத்துக் கொண்டு வரும் சினத்தை அடக்க முடியும். நல்லவனான நீ கோபங் கொள்வதால் தீமைகளையே அடைவாய். சினத்தை அடக்கி வாழ்ந்தால் அவனை எல்லோரும் மதிப்பார்கள்’’ என்றார் தணிகாசலம்.

‘‘சத்தியமாய் நான் அவனுக்கு அடிக்கவில்லை. என்னை அடிக்கக் கையோங்கினான். அவனின் கையைப் பிடித்தேன். தனது கையை விடுவிக்க அவன் திமிறினான். நான் விடவில்லை அதனால் தான் நோ வந்திருக்கு மென்று நினைக்கிறேன்’’ என்றான் நவராசா.

‘‘அறிவு என்பது புத்தகங்களைப் படித்து பரீச்சை எழுதிச் சித்தி பெறுவதல்ல. ஒருவன் பலவீனனாக இருப்பதை நீ பார்த்தால் அவன் மீது இரக்கப்படுதல் வேண்டும். அன்று புஸ்பநாதனும் கிருஸ்ணனும் காவல் நிலையத்திற்கு வரவில்லை. என்பதற்காக நீங்கள் சிலர் அவனைத் தேடிச் சென்று தாக்கினீர்கள். போதிய அறிவு இல்லாமையால் தான் அவர்கள் மறைந்திருந்தனர். அறிவில்லாதவனின் மீது கோபப்படுதலை விட்டு விட்டு, அவனுடைய நிலைக்கு இறங்கிச் சென்று அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் அவன் தானாக உணர்ந்து கொள்ளா விட்டால் பிரச்சினைகள் வளருமே தவிரக் குறையாது. அன்று அடித்து அவனைப் பிடித்துச் சென்று காவல் துறை அதிகாரியிடம் கொடுத்து அவர்களை மறியலில் வைக்குமாறு நாங்கள் சொன்னதாக அவன் நினைத்தமையால் தான் அவன் உன்னுடன் சண்டைக்கு வந்தான். மீண்டும் உனக்கு நான் சொல்கிறேன் யாரிடத்திலும் கோபங் கொள்ளாதே. அவன் செய்தது பிழையானாலும் கோபங் கொள்வதால் தீமையான விளைவுகளே உண்டாகும்’’ என்றார் தணிகாசலம்.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

யாரிடத்திலும் சினங்கொள்ளாமல் அதை மறத்தல் நன்று. தீமையான விளைவுகள் பல சினத்தால் வந்து சேரும்.

## பகை

நவராசாவுக்குத் தணிகாசலம், புஸ்பநாதனைப் பற்றிச் சொன்ன பின்பு கவலையாக இருந்தது. தணிகாசலம் சொன்னது போல அறிவில்லாததால்

தான் அவன் காவல் நிலையத்திற்குச் செல்லாமல் விட்டிருப்பான் என்று நினைத்தான். புஸ்பநாதன் ஏழை, நாலைந்து நாட்களுக்கு வேலைக்குச் செல்லாவிட்டால் கஷ்டப்படுவான் என்று நினைத்து தணிகாசலத்திடம் சென்றான்.

‘‘நீங்கள் சொன்ன பிறகு யோசித்துப் பார்த்தேன். ஒருவனுக்குப் பகைவன் வேறு எவரும் இல்லை. அவனுள் எழும் சினம் தான் அவனுக்குப் பகைவன் என்பதை உணர்ந்து கொண்டேன். அறியாமையால் வரும் துன்பங்களில் பெருந்துன்பம் கோபமே என்பதையும் உணர்ந்து கொண்டேன். அதனால் அவனுக்கு ஏதாவது உதவி செய்யலாமென்று நினைக்கிறேன்’’ என்றான் நவராசா.

‘‘கோபம் ஒருவனது முகமலர்ச்சியையும் மகிழ்வான வாழ்க்கையையும் அழித்து விடும். சினம் கொள்பவன் காலப் போக்கில் நோயாளியாகிவிடுவான். நீ சிறு பிள்ளை தேவையில்லாத விடயங்களில் எல்லாம் தலையிட்டு, கோபப்பட்டு உன் வாழ்க்கையை அழித்து விடப் போகிறாய் என்று கவலைப் பட்டேன். ஆனால் நீ நான் சொன்னவற்றைக் கேட்டுத் திருந்தியதற்கு மிக்க மகிழ்ச்சி என்றார் தணிகாசலம்.

நவராசாவும் தணிகாசலமும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றனர். அரசமரநிழலில் சுவாமியார் இருந்தார். அவரின் அருகே புஸ்பநாதனும் கோசலையும் இருந்தனர்.

‘‘சுவாமி இன்று வீட்டில் உலை வைக்கவில்லை. இவரை நான் திருமணம் செய்த நாளில் இருந்து எந்தச் சுகத்தையும் அனுபவிக்கவில்லை. காலையில் எழுந்து சென்றாரென்றால் இரவு பத்து மணிக்கு மேல் தான் வீட்டுக்கு வருவார். வரும் போது நன்றாகக் குடித்து விட்டு வருவாய். நான் கூலி வேலை செய்து அவருக்கு உணவு தயாரித்து வைத்தல் வேண்டும். அதுகும் சுவையாக இருக்க வேண்டும் இல்லாவிட்டால் எனக்கு அடிப்பார். அதைவிட ஊரில் களவெடுப்பதால் என்னை ஊரவர் எவரும் மதிப்பதில்லை. இப்பொழுது நல்லவர்களுடன் சண்டை பிடிக்கிறார். அதனால் அவரது வலது கையில் முறிவு ஏற்பட்டு விட்டது. அதற்குப் புக்கை கட்ட தினமும் இருநூற்றி ஐம்பது ரூபா தேவை. நான் என்ன செய்வது. இவருக்கு புத்திமதிகள் கூறுங்கள்’’ என்று அழுதாள்.

புஸ்பநாதன் எதுவும் அறியாதவனைப் போல தலையைக் குனிந்த படி நின்றான். சுவாமி யார் கண்களை மூடியபடி இருந்தார்.

‘‘உன்னைத் திருத்த முடியாது. மனிதனாகச் சில கணங்கள் இருந்து சிந்தித்துப் பார் நீ செய்யும் காரியங்கள் நல்லவையா என்று, பாவம் உனது மனைவி எந்த வீட்டில் பெண்மதிக்கப்படுகிறாளோ அந்த வீட்டில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்திருக்கும். பெண்கள் மதிக்கப்படாத வீடுகளில் பேய்கள் தான் குடியிருக்கும். மனைவியை மதியாத எந்த ஒரு ஆணின் வாழ்விலும் இன்பம் இருக்க மாட்டாது. ஒரு சில்லில் வண்டி ஓடுமா..? இல்லை ஒரு கையை அசைத்தால் ஓசை வருமா? முதலில் நீ உன்மனைவியை மதிக்கக்

கற்றுக் கொள்'' என்று கூறிய தணிகாசலம் நவராசா கொடுத்த பணத்தைக் கோசலையிடம் கொடுத்தார்.

''உங்களைப் போன்ற புண்ணியவான்களால் தான் உலகம் வாழ்கிறது. மிகவும் நன்றி ஐயா. நீங்கள் நேற்றும் பணம் தந்தீர்கள். இன்றும் பணம் தருகிறீர்கள். ஒவ்வொரு நாளும் எமக்கு நீங்கள் பணம் தர முடியுமா? இவரைத் திருத்தித் தாருங்கள். நான் ஏதாவது சொல்லப் போனால் கடுங் கோபங் கொண்டு என்னைத் தாக்குகிறார். எனது உடலெல்லாம் இவர் அடித்ததால் புண்ணாக வலிக்கிறது'' அழுதாள் கோசலை.

சுவாமியார் கண்களைத் திறந்தார்; ''மகனே பெண்களை மதித்து நடத்தல் வேண்டும். உனது தாயும் பெண் என்பதை மறந்து விடாதே. சினத்தைப் பெண்கள் மீது காட்டுபவன் பேடி. குடும்பத்தில் வரும் பிரச்சினைகளுக்கெல்லாம் பெண்களையே நாம் குற்றம் சாட்டப் பழகிக் கொண்டோம். பிறர் மீது உள்ள கோபத்தை வீட்டில் வந்து மனைவியின் மீது காட்டுவோரே அனேகர். கோபம் கொள்வதால் பல தீமைகள் உருவாகின்றன. வீட்டில் கோபம் கொள்பவன் மகிழ்ச்சியையும் சிரிப்பையும் இழக்கிறான். நண்பரோடு கோதித்துக் கொள்பவன் நட்பையும் உதவிகளையும் இழக்கிறான். அயலவரோடு கோபித்துக் கொள்பவன் அன்பான தொடர்புகளை இழக்கிறான். மேலதிகாரியுடன் கோபித்துக் கொள்பவன் முன்னேற்றமான வாழ்வை இழக்கிறான். எனவே கோபம் கொள்ளல் தீமையானது. நோய்களின் தாய் கோபம் தான் எனவே அன்பாக வாழப்பழகுங்கள். குறிப்பாக இளைஞர்கள் கோபங் கொள்ளக் கூடாது'' என்றார் சுவாமியார்.

''சுவாமி அதை நான் உணர்ந்து கொண்டேன். இனிமேல் கோபப்பட மாட்டேன்'' என்றான் நவராசா.

புஸ்பநாதன் எதுவும் பேசாமல் நின்றான். சுவாமியார் சொல்வதைப் பயத்தின் காரணமாக ஒத்துக் கொள்பவன் போல நடித்தான்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

## சினம் கொல்லும்

அருள் நேசனும் தில்லை நடராசாவும் தணிகாசலத்திடம் வந்தனர்; ''அண்ணை கனகசபாபதிக்கு இருதயமே இல்லைப் போலை கிடக்கு. காலங்காலமாய்ச் சின்னத்தம்பி தோட்டம் செய்த சிதம்பர சொத்துக் காணீக்கை கடையைக் கட்டினான். பல பேற்றை எல்லைகளை அகட்டினான். என்ரை அடிச்சரிக்கை இருக்கிற என்ரை காணியைத் துப்பரவு செய்து கிணறை இறைச்சனான். மாவிட்ட புரத்திலை இருந்து இடம் பெயர்ந்து ஒரு

குடும்பம் வந்து எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை உள்ள வைரவர் கோயிலிலை தங்கியிருக்கு. இரண்டு குமர்ப்பிள்ளைகள் அதோடை வயது போன பெற்றார். பார்க்கப் பாவமாக இருந்தது என்ரை அடிச்சேரிக் காணி சும்மா தானே கிடக்கு. அதுக்குள்ளை அதுகளை வீடு கட்டி இருக்கச் சொன்னனான். இவன் விர்றானில்லை'' என்றான் அருள்நேசன்.

''ஏன் அதுக்கையும் கனகனுக்குப் பங்கிருக்காமே?'' என்று கேட்டார் தணிகாசலம்.

''தனக்குக் கிணற்றுப் பங்கும் வழிவாய்க்காலும் இருக்கலாம். வேலி அடைக்கேக்கை விலத்தி அடைக்கட்டாம்'' ஆத்திரப்பட்டான் அருள்நேசன்.

''அவன் மனிசனே இல்லை. ஊரிலை இருந்து எத்தனை அட்டூளியங்களைச் செய்கிறான். பள்ளிக்கூடக் காணி, கோயில் காணி, பொதுச் சொத்தென்றெல்லாம் அவன் பார்க்கிறேல்லை. கோயிலிலை பொருளாளராக இருக்கேக்கை கோயில் காசை வட்டிக்குக் குடுத்துப் பிளைப்பு நடத்தினவன். போனவரிசம் மூத்த மோன் வெளிநாட்டிலை இருந்து கோயிலுக்குக் கொஞ்சக் காசு அனுப்பினவன். அந்தக் காசிலை நூறு ரூபாவை குருக்களிட்டைக் கொடுத்து அர்ச்சனை செய்த தோடை சரி...'' என்றான் தில்லை நடராசா.

''வயதுக்கு மூத்த மனிசன் நீங்கள் அதோடை இந்த ஊர் மக்களுக்குத் தகப்பன் மாதிரி இருக்கிறனீங்கள். அதோடை நான் உங்களை மதிக்கிறனான். இண்டைக்குப் பின்நேரம் பத்துப் பதினைந்து பேர் வேலி அடைக்கப் போறம். கனகன் வந்தாணெண்டால் அலவாங்காலை அடித்து முறிக்கிறது என்று நினைச்சிட்டன். இவனைக் கோடு கச்சேரிக்கு விட்டால் காசாலை எல்லாவற்றையும் செய்து போடுவன்'' என்று கோபத்துடன் கூறினான் அருள்நேசன்.

அருள்நேசனது கண்கள் சிவந்திருந்தன. கோபத்தால் அவனது உடல் நடுங்கியது. சினத்தின் மேலீட்டினால் பல்லை நெருமினான் அருள்நேசன்.

''நான் அருளுக்குப் புத்திமதிகள் சொன்னனான் அண்ணை அவன் கேட்காததாலை தான் நான் உங்களிட்டைக் கூட்டியந்தனான். கோபம் வந்தால் புத்தி செயற்படாது. ஆத்திரத்திலை அவனுக்கு அடிச்சால் நாளைக்கு இவன்ரை பெண்சாதி பிள்ளை குட்டிகள் தான் கஷ்டப்படும். அதை விளங்கிக் கொள்கிறான் இல்லை'' என்றான் தில்லை நடராசா.

''கனகனாலை ஊரிலை வாழ மடியாமல் இருக்கு. என்ன செய்தாலும் வந்திடுவன். போனவரிசம் வெளிநாட்டாலை வந்த விதானையின்ரை மகன் ஐந்து இலட்சம் ரூபா பாடசாலை மைதானத்திற்கு அனுப்புறதெண்டு விளையாட்டுப் போட்டிலை சொல்லிப் போட்டுப் போனவன். இவன் அவளைக் குடுக்க விடாமல் பண்ணிப் போட்டான். இவனை அடித்து முறித்தால் தான் ஊர் திருந்தும்'' என்றான் அருள்நேசன்.

‘‘அருள், ஒருவன் தன்னையும், தன் நலன்களையும் தன் குடும்பத்தையும் காத்துக் கொள்ள வேண்டுமானால் அவன் தன் கோபத்தை அடக்க வேண்டும். கோபத்தை அடக்கா விட்டால், அக் கோபம் அவனது நலன்கள் முழுவதையும் அழித்து விடும். உனக்கு நாலைந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். நீ கனகனுக்கு அடித்து விட்டுச் சிறை சென்றால் உனது குடும்பம் தான் அழியும். ஒருவன் நல்ல முறையில் வாழ்ந்தால் தான் அவனது சந்ததிகள் தழைக்கும். ஊரில் பார் இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்பு அநியாயமாக நடந்தவர்களும் அநியாயமாகச் சொத்துத் தேடியவர்களும் கெட்டழிந்துள்ளனர். சிலருக்கு தேடிய பொருட்களைப் பராமரிக்கக் கூடிய வாரிசுகள் இல்லை. சிலருக்குப் பிள்ளைகள் நோயாளிகளாகவும், மனக் குறைபாடுகள் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். எல்லாப் பாரங்களையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு கவலைப்படாமல் இரு எல்லாம் சரி வரும்’’ என்றார் தணிகாசலம். அருள் நேசன் எதுவும் பேசவில்லை.

‘‘அருள் நீ வீட்டை போ... நான் பிறகு சந்திக்கிறேன். தில்லை நீ என்னோடை வா’’ என்றார் தணிகாசலம்.

தில்லை நடராசாவும் தணிகாசலமும் காவல் துறை அலுவலகத்திற்குச் சென்று சிவபாதசுந்தரத்திடம் யாவற்றையும் விபரமாகக் கூறினர். அன்று பின்நேரம் அடிச்சேரிக் காணியைத் துப்புரவு செய்ய விடாது கனகசபாபதி தடுத்தான். அந்நேரம் அங்கு காவல் துறை வாகனத்தில் வந்த சிவபாதசுந்தரம் கனகசபாபதியை அழைத்துக் கொண்டு காவல் நிலையத்திற்குச் சென்றார்.

‘‘கனகு உம்முடைய நடத்தைகள் யாவும் எனக்குத் தெரியும். இந்த ஊர் மக்கள் மிகவும் நல்லவர்கள். தொலைந்த உனது பெறுமதி வாய்ந்த பெட்டியைக் கூட எடுத்துத் தந்துள்ளனர். நீ கெட்டவனாக இருந்த போதும் ஒரு நல்ல மனிதனின் வேண்டு கோளுக்காகத் தான் அதைத் திருப்பி உனக்குத் தந்தனர். அதன் பெறுமதியும் முக்கியத்துவமும் உனக்குத் தெரியும். அப்படி இருந்தும் நீ அவற்றை மதியாமல் மீண்டும் மீண்டும் அநியாயங்களைச் செய்கிறாய். உன்னை மிகச் சுலபமாக மக்களைக் கொண்டே தண்டிக்க முடியும். அதை நான் விம்பவில்லை. பிறரின் ஒரு ரூபாவைக் களவெடுத்தால் உனது ஒரு இலட்சம் ரூபா பறிபோகும். ஆகவே நீதியாக நட’’ இல்லாவிட்டால் உன்னைச் சனமே அடித்து முறிக்கும்’’ என்றார் சிவபாதசுந்தரம்.

கனகசபாபதியால் பேசமுடியவில்லை.

305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால், சினத்தை அடக்க வேண்டும். அடக்கா விட்டால் சினம், அவனை தன்னையே அழித்து விடும்.

# தீ

“ஐயா இரவு எட்டுமணிபோல் கடைக்கு நான் சென்ற போது நாலைந்து பேர் எனக்கு அடித்து விட்டார்கள்” என்று அழுதான் கனகசபாபதி.

ஐந்து தினங்களுக்கு முன்பு இரவு எட்டு மணிபோல் கனகசபாபதி வீட்டின் அருகில் உள்ள கடைக்குப் பொருட்கள் வாங்கச் சென்ற போது கும்பலாக வந்த சிலர் பொல்லுகளாலும் கொட்டன்களாலும் கண் இமைக்கும் நேரத்தில் கனகசபாபதியை தாக்கி விட்டு ஓடி விட்டனர். கடைக்குச் சென்ற கனகசபாபதி நெடு நேரமாகியும் வீட்டுக்கு வராததால் அவனைத் தேடிச் சென்ற அவனது மனைவி வீதியில் மயங்கிக் கிடந்த கணவனைக் கண்டு பலமாகக் குழறினாள். அக்கம் பக்கத்தில் பலர் இருந்தும் ஒருவரும் வெளியே வரவில்லை. அதனால் மீண்டும் பலமாகக் குழறினாள் அவனது மனைவி.

நாலைந்து பேர் வந்து பார்த்தனர். பின்; “ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ” என்றனர்; “தம்பியவை இவர் உங்களுக்குக் கெடுதல் செய்தாலும் ஓர் உயிர் என்று நினைத்து உதவி செய்யுங்கள்” என்று மன்றாடினாள் கனகசபாபதியின் மனைவி சகுந்தலை.

இவன் மனிதன் இல்லை விசப்பாம்பு. துன்பத்தால் அவஸ்தைப்படுகிறது என்று காப்பாற்றப் போனாலும் கடிக்கும் என்றான் ஒருவன்.

“இருட்டில் முகம் தெரியாத போதும் குரலில் இருந்து கதைப்பவன் கனகசபாபதியின் மருமகன் கேசவன் என்று உணர்ந்து கொண்டாள் சகுந்தலை.

அப்போது அவ்வழியால் வந்த தணிகாசலம் சனங்கள் கூடி நிற்பதைக் கண்டு அங்கு சென்று பார்த்தார்; “கனகனுக்கு யாரோ அடித்துப் போட்டாங்கள். மனிசிகுழறியதாலை வந்தனாங்கள். இவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனால், மயக்கம் தெளிந்ததும் நாங்கள் தான் அடித்தனாங்கள் என்று சொல்லுவன்”.

மயங்கிக் கிடந்த கனகசபாபதியைப் பார்த்தார் தணிகாசலம். பின்; தம்பி கேசவன் ஓடிப் போய் ஒரு வாகனம் பிடித்துக் கொண்டு வா” என்றார்.

“கேசவன் சிறிது தாமதித்தான்; போடா... போ.... கெதியாய் வா” என்றார் தணிகாசலம். வேறு வழியின்றி வாகனத்தை அழைத்து வரச் சென்றான் கேசவன்.

தணிகாசலம், கனகசபாபதியைக் கொண்டு சென்று வைத்தியசாலையில் அனுமதித்தார். நான்கு தினங்களுக்குப் பின்பு தான் அவனது மயக்கம் தெளிந்தது.

“ஐந்தாம் நாள் காவல் துறை அதிகாரியான சிவபாத சுந்தரம் அவனிடம் வாக்கு மூலம் பெற வந்திருந்தார்.

“உங்களுக்கு அடித்தவர்களைத் தெரியுமா?”

“இல்லை ஐயா சரியான இருட்டு காலமை தேநீர் தயாரிப்பதற்குச் சீனி இல்லை என்று எனது மனைவி சொன்னான். அதனால் கடைக்குச் சென்றேன். கண் இமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அடிச்சவை யாரென்று எனக்குத் தெரியாது”.

“நீங்கள் யாரையாவது சந்தேகப்படுகிறீர்களா?

“எனக்கு எதிரிகள் பலர் நவராசா,சேனாதிராசா, சின்னத்தம்பி, அருள்நேசன், கேசவன், கதிரேசு, தனபாலன், தில்லைநடராசா” என்று சொல்லிக் கொண்டிருந்தான் கனகசபாபதி.

“ஊரிலை இருக்கிற முழுப்பேற்றை பேரையும் சொல்லுறியள் போலை கிடக்கு.. இவ்வளவு பேரையும் எப்படி விசாரிக்கிறது. உங்களின் நண்பர்களின் பெயர்களைச் சொல்லுங்கோ பார்ப்பம்..”

“ம்... யோசித்தார் கனகசபாபதி.

“இனத்தவை நண்பர்களின்ரை பெயரை உடனை சொல்ல முடியாவிட்டால் இனத்தவை நண்பர்கள் ஒருவரும் உமக்கு இல்லை என்பது தானே அர்த்தம்”

“இல்லை ஐயா... அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி... தணிகாசலம்...” கனகசபாபதி கூறிக் கொண்டிருக்கும் போது சிவபாதசுந்தரம் குறுக்கிட்டார்; இவை ஊரில் உள்ள எல்லோர்க்கும் நண்பர்கள் உமக்காக காவல் நிலையத்திற்கு வந்து சாட்சி அளிப்பார்களா... இல்லை உம்மைத் தாக்கியவனைப் பற்றிச் சொல்வார்களா?” என்று கேட்டார் சிவபாதசுந்தரம்.

கனகசபாபதி தடுமாறினார் அவரால் பேசமுடியவில்லை; ஒரு மனிதன் வீதியில் விபத்துக்குள்ளானால் வீதியின் அருகே இருப்போரும் அதில் பிரயாணம் செய்வோரும் உடனே விபத்துக்குள்ளானவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று விடுவர். நீர் மூன்று மணித்தியாலங்கள் வீதியில் மயங்கிக் கிடந்துள்ளீர். விபத்துக்குள்ளான உம்மை,உமது இனத்தவர்களும் அயலவர்களும் வந்து பார்த்து விட்டுச் சென்றுள்ளனர். நல்ல காலம் உமது அதிஸ்டம் என்று தான் சொல்ல வேணும் நேரங்கழித்தென்றாலும் அவ்விடத்திற்குத் தணிகாசலம் வந்ததால் பிழைத்தீர். அதன் பின் அவரது வேண்டு கோளைத் தட்ட முடியாததால்

தான் அவர்கள் உம்மை வைத்தியசாலையில் கொண்டு வந்து அனுமதித்தனர்''.

கனகசபாபதி அழுதார். பின்பு; ''நான் யாருக்கும் கெடுதல் செய்வதில்லை. என்னை ஏன் இப்படி கேவலமாக நினைக்கிறார்களோ தெரியவில்லை'' என்றார்.

''நீர் ஊரில் யாருடன் ஒற்றுமையாக இருக்கிறீர்? இனத்தவர்கள், ஊரவர்கள், அயலவர்கள் எல்லோருடனும் சண்டைக்குப் போவீர். கோபங் கொண்டு கடின வார்த்தைகளால் ஏசுவீர். சினம் நெருப்பைப் போன்றது. அது சினம் கொள்பவனையும் அழிக்கும். உற்றார் உறவினர் நண்பர்களையும் அழிக்கும். தன் இனத்தையும் அழிக்கும். எனவே சினம் கொள்ளாது சந்தோசமாக வாழப் பழகுங்கள்'' என்றார் சிவபாதசுந்தரம்.

306. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

சேர்ந்தவர்களை அழிக்கும் சினமாகிய நெருப்பு, அவனது இனம் என்னும் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

## தப்பாதது

வைத்தியசாலையில் தங்கிச் சிகிட்சை பெற்று வரும் கனகசபாபதியைப் பார்ப்பதற்காகத் தணிகாசலம் வந்திருந்தார். கனகசபாபதியின் வலது கால் முறிந்தமையால் அவரது வலது காலை மேலே தூக்கிக் கட்டி அதன் கீழ்ப் பகுதியில் மண்மூட்டை ஒன்று கட்டியிருந்தனர். தலையில் பெரிய காயம் இருந்தது. காயத்திற்கு மருந்திட்டு துணியால் சுற்றிக்கட்டப்பட்டிருந்தது. அத்துணி இரத்தம் கசிந்தமையால் அத்துணி சிவப்பாக இருந்தது. இரண்டு கைகளிலும் காயங்கள் இருந்தமையால் பல இடங்களில் மருந்திட்டுக் கட்டப்பட்டிருந்தன.

கனகசபாபதியைப் பார்க்க தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது.

தணிகாசலத்தைக் கண்டதும் கனகசபாபதி விக்கி விக்கி அழுதான்; ''அண்ணை நான் யாருக்கும் தீங்கு செய்யவில்லை. என்னைக் கொல்லுறத்துக்குத் தான் அண்டைக்கு அடிச்சவங்கள். நான் செய்த புண்ணியம் தான் என்னைக் காப்பாற்றியது''.

தணிகாசலம் பேசாமல் சில கணங்கள் இருந்தார்; ''கனகு நான் உன்னைக் குற்றம் சொல்வதாக நினைக்காதே எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் யார் மீதும் கடுஞ் சினம் கொள்ளல் கூடாது. சினத்தால் பேசும் தகாத வார்த்தைகள் கேட்போருக்கு அளவு கடந்த ஆத்திரத்தை வரவழைக்கும். இதனால் இருவருக்கும் தீமைகள் தான் உண்டாகும். அன்று

உனக்கு யார் அடித்தார்கள் என்று தெரியாது. ஆனால் அடித்தவர்களை விட உன்னை வந்து பார்த்து விட்டு பேசாமல் சென்றவர்கள் தான் உன்னைத் தாக்கியவர்களை விட மோசமாக நடந்து கொண்டனர். இதற்குக் காரணம் என்ன? நீ அவர்களின் மீது கொண்ட கோபமும் அவர்கள் உன்மீது கொண்ட கோபமும் தான். ஒவ்வொரு வரும் தாம் தாம் நினைப்பது தான் சரியென்றால் உலகம் எப்படி இயங்கும். ஆத்திரமும் பிடிவாத குணமும் தான் நல்லவற்றைச் செய்ய விடாமல் தடுப்பன.

‘‘திட்ட மிட்டுத்தான் என்னைத் தாக்கியிருக்கிறார்கள். ஒருவர் அல்ல பலர். எல்லோருக்கும் என்மீது பொறாமை. நான் நல்லாய் இருப்பது எவருக்கும் பிடிப்பதில்லை. அதனால் தான் என்னைக் கொல்லப் பார்த்தனர்.’’

‘‘நீ தவறாக நினைக்கிறாய். உனக்கு எதிரிகள் பலர் என்று சொல்கிறாய். அத்துடன் உனது பேச்சில் இருந்து பலருக்கு நீ எதிரியாக இருக்கிறாய். பலர் சேர்ந்து உன்னை அடித்தார்கள். நீ வீதியில் மயங்கிக் கிடந்தாய். உனது வீட்டைச் சுற்றியிருக்கும் உறவினர்களோ, நண்பர்களோ, அயலவர்களோ உனக்கு உதவி செய்ய முன்வரவில்லை இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்று கேட்டு விட்டு சிலகணங்கள் கனகசபாபதியின் முகத்தைப் பார்த்தார் தணிகாசலம்.

கனகசபாபதி பேசாததால் தணிகாசலம் சொன்னார்; ‘‘நீ நினைப்பதைப் போல ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் அல்ல. கெட்டவர்களாக இருந்தால் நீ தொலைத்த பெறுமதி மிக்க அந்தப் பெட்டியைக் கொண்டு வந்து தருவார்களா? உனது சகோதரியின் பிள்ளைகளே உன்னோடு தொடர்பு கொள்வதில்லை’’.

‘‘அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தால் சொந்தம் கொண்டாடுவார்கள். தினமும் கொடுத்து விட்டு ஒரு நாளைக்குக் கொடுக்காவிட்டால் திட்டித்திரிவார்கள்’’ என்றான் கனகசபாபதி.

‘‘எப்பொழுதும் தவறுகளையும் குற்றங்களையும் நாமே பொறுப்பேற்க வேண்டும். மற்றவர்களால் தான் நமக்குத் துன்பங்கள் வந்து சேர்கின்றன என்று நினைக்கக் கூடாது. நிலத்திற்கு எமது கைகளால் ஓங்கி அடித்தால் அடிப்பவனது கை தான் புண்ணாகும். அதே போலச் சினம் கொள்பவனின் வாழ்வும் அழிந்து போய்விடும். இரண்டு வாரமாக நீ வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெறுகிறாய். உன்னை யாராவது வந்து பார்த்தார்களா’’ உனக்குத் தினமும் மூன்று வேளையும் உணவைத் தயாரித்துக் கொண்டு வந்து தர உனது மனைவி எவ்வளவு சிரமப்படுகிறாள் தெரியுமா? அத்துடன் ஆட்டம் அசைவு இன்றிக் கட்டிலில் படுத்திருக்கும் உனக்கு உதவியாக யார் இருக்கிறார்கள். சம்பளத்திற்கு ஆளை வைத்து உனது மனைவி பராமரிக்கிறாள். பராமரிப்பவர்களுடனும் நீ கோபங் கொள்வதால் அவர்கள் உன்னைப் பராமரிக்க மறுப்புத் தெரிவிக்கின்றனர்.’’ என்றார் தணிகாசலம்.

அப்பொழுது வைத்தியசாலையில் வேலை செய்யும் தாதி ஒருத்தி கனகசபாபதிக்கு மருந்து கொடுப்பதற்காக அங்கே வந்தாள். அவர் தணிகாசலத்தைப் பார்த்துச் சொன்னார்; ஐயா இவரைப் பார்ப்பதற்கு யாரும் வருவதில்லை. பாவம் என்று சொல்லி வைத்தியசாலை ஊழியர்கள் இவருக்கு உதவி செய்வார்கள். இவர் அவற்றை உதவியாக நினைப்பதில்லை அது அவர்களின் கடமை யென நினைத்து அவர்கள் மீது கோபங் கொண்டு கடுமையாகப் பேசுவார். அதனால் இப்போது இவருக்கு உதவி செய்ய அவர்களும் வருவதில்லை, அசைய முடியாத இவர், தன்னுடைய நிலமையை உணர்ந்து உதவி செய்பவர்களுடன் அன்பாக நடந்து கொள்ள வேணும் என்று சொல்லுங்கோ''.

தணிகாசலம் கனகசபாபதியைப் பார்த்தார்; ''நீ இனியென்றாலும் சினத்தை அடக்கப்பார். நாம் வாழ்வது கத்தி முனையில் நடப்பதைப் போன்றது'' என்றார் தணிகாசலம்

307. சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
 நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

நிலத்தைக் கையால் அறைந்த பின் துன்பப்படுவது போல, சினத்தைப் பொருளாகக் கொண்டவனுக்கும் துன்பம் வருவது நிட்சயமானது.

## நன்றானது

கனகசபாபதியை வைத்தியசாலையில் சென்று பார்த்து விட்டு வீட்டுக்கு வந்த தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது. எப்படியான கொடுமைகள் பலவற்றை ஒருவன் செய்தாலும் அவனைச் சினங் கொண்டு தாக்குவது கூடாது. என்று நினைப்பவர் தணிகாசலம். ஆணவத்தோடு நடந்து கொண்ட பலர் இன்று கேவலமான வாழ்வு வாழ்கிறார்கள். ஒவ்வொருவரும் சினத்தால் செய்யும் தீமைகளுக்குக் கடவுள் பெருந்தண்டனை கொடுப்பார். சினங் கொண்டு தவறான வார்த்தைகளைப் பேசுபவனையும் தவறாக நடந்து கொள்பவனையும் சினத்தை அடக்க முடியாதவன் தான் தண்டிப்பான். என்று அடிக்கடி சொல்லியும் அதைக் கேளாது கனகசபாபதியை யாரோ தாக்கியது தணிகாசலத்திற்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. கனகசபாபதியால் இயற்கைக் கடன்களைக் கூட சரிவரச் செய்ய முடியாததைக் கண்டு வருந்தினர்.

சினம் என்ற நெருப்பு அணைந்தது போலத் தென்பட்டாலும் சாம்பருள் உள்ள நெருப்புப் போல் உறங்கிக் கொண்டிருக்கும். காற்றூதினால் சாம்பருள் மறைந்திருக்கும் நெருப்பு சுடர் விட்டெரிவதைப் போல அன்று கனகசபாபதிக்கு அடித்தவர்களுக்கு யாரோ உற்சாக மூட்டியிருருக்கிறார்கள் என்று நினைத்தார் தணிகாசலம். அதனால் அவர் நவராசாவின் வீட்டுக்குச் சென்றார்.

நவராசா நல்லவன்; நேர்மையானவன்; யாருடனும் எந்தவித மான பிரச்சினைகளுக்கும் போகாதவன். யாராவது உற்சாக மாகக் கதைத்தால் அவர்களின் பக்கம் ஆராயாமல் சாய்ந்து விடுவான். அவனது பேரனான கதிரேசுவிற்குத் தனபாலன் அடித்தது அவனுக்குத் தெரியாது. கதிரேசுவும் சொல்லவில்லை. சின்னத்தம்பி தனபாலனின் மேலுள்ள கோபங்காரணமாக, தனபாலன் கதிரேசுவிற்கு அடித்ததைக் கூறி அவனுக்கு அடிக்கும் படி ஏவி விட்டதால் தான் அடித்தான்.

அன்று தில்லை நடராசா புஸ்பநாதன் மீதும் கிருஸ்ணன் மீதும் இருந்த கோபங்காரணமாக நவராசாவை ஏவிவிட்டான். அதனால் எதையும் ஆராயாமல் புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் பிடித்து அடித்து விட்டு காவல் துறையில் கொண்டு சென்று ஒப்படைத்தான். நவராசாவின் இக் குணத்தைத் தெரிந்த தணிகாசலம் நவராசாவுடன் அன்பாகக் கதைத்துத் தகவல்களைப் பெற்றுக் கொள்வார்.

தணிகாசலம் நவராசாவின் வீட்டுக்குச் சென்ற போது நவராசா வீட்டில் இருந்தான். தணிகாசலத்தைக் கண்டதும் எழுந்து வர வேற்றான்.

‘‘நாளைக்கு என்ரை வாழைத் தறைக்கு குழை தாட்க வேணும் செய்து தருவியே’’

‘‘இரண்டு மூன்று நாட்களுக்கு வேலை இருக்கண்ணை. நாலைந்து நாள்ப் பொறுத்துக் கொள்ளுங்கோ’’ என்றான் நவராசா.

‘‘காலமை கனகசபாபதியைப் போய்ப் பார்த்தனான். சரியான அடி அடிச்சுப் போட்டாங்கள். பாவம்... யார் அடிச்சிருப்பினை’’ என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘எனக்குத் தெரியாதண்ணை நான் சேரவில்லை’’ என்றான் நவராசா.

‘‘பல கொடுமைகளை ஒருவன் செய்தாலும் நாம் அவன் மீது கோபம் கொள்ளாமல் இருப்பது நன்மையைத் தரும். கனகசபாபதி கூடாதவன்; பல தீமைகளை அஞ்சாமல் செய்பவன்; உறவினர், நண்பர்கள், தனக்கு நன்மை செய்தவர்கள் என்றெல்லாம் எண்ணி யாராவது தீமை செய்பவன் என்றாலும் இப்படி மோசமாக அடித்திருக்கக் கூடாது’’ என்றார் தணிகாசலம்.

அவன் அடக்க முடியாத சினத்தினால் தீமைகள் செய்கிறான் என்று நெடுகப் பொறுக்க முடியுமே? பொறுமைக்கும் ஓர் அளவிருக்கு. எந்த நல்லவனானாலும் தொடர்ந்து தீமைகள் செய்தால் அவனுக்குக் கோபம் வரத்தான் செய்யும்’’ என்றான் நவராசா.

‘‘கோபம் வரக்கூடாது என்று தான் நான் சொல்லுவன். தற்செயலாக அன்று அவன் இறந்திருந்தால் அவனைக் கொன்ற பழியை அல்லவா ஏற்க்க வேண்டி வந்திருக்கும்’’.

என்னைப் பொறுத்த வரை அவனுக்கு அடித்தது சரியென்று தான் நான் சொல்லுவன். நெடுகத் தவறு செய்கிறவனைத் தண்டிக்காமல் விட முடியுமே'' ஆத்திரப் பட்டான் நவராசா.

''நீ அடிக்காவிட்டாலும் உனது கதையில் இருந்து உனக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. என்று தணிகாசலம் கூறிக் கொண்டிருக்கும் போது நவராசா குறுக்கிட்டான்; ''சத்தியமாய் நான் அடிக்கேல்லை'' அவனைக் கதைக்க விடாது சொன்னார்; '' நீ அடிச்சதென்று நான் சொல்லவில்லை, ஆனால் அடித்தவர்களுக்கு ஆதரவாய்க் கதைக்கிறாய். இப்படிக் கதைப்பது கூடாது. அப்படிக் கதைப்பதன் மூலம் அடித்தவர்களின் குணத்தையே நீயும் கொண்டிருப்பது எனக்குப் புரிகிறது. ஒருவன் ஆராயாது தொடர்ந்தும் பல தீமைகளைச் செய்தாலும் பொறுத்துக் கொள்வது நல்லவனது பண்பு''.

நவராசாக்கு மனதுள் கோபம் வந்தது. இருந்த போதும் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளாது பேசாமல் நின்றான்.

''எனக்கு அடித்தவர்களைத் தெரியும். நாலைந்து நாட்களுக்குள் அவர்கள் வந்து எனக்குச் சொல்வார்கள். பொய் பேசுவதும் அறிந்ததைச் சொல்லாமல் இருப்பதும் கடுங்கோபம் கொண்டவனின் குணங்கள் கனகசபாபதியைப் போலத் தான் அடித்தவர்களும் அளவுக்கதிகமான சினத்தை அடக்க முடியாதவர்கள்'' என்று கூறி விட்டுச் சென்றார் தணிகாசலம்.

308. இணர்எரி தோய்வுஅன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பல சுடர்களையுடைய பெரு நெருப்புச் சுடுவது போன்ற துன்பங்களை ஒருவன் செய்தாலும், அவன் மேல் கோபம் கொள்ளாதிருத்தல் நல்லது.

## உடன் கிடைப்பவை

செல்லப்பா தோட்டத்தில் வேலை செய்து விட்டு வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அன்று முழுவதும் கடுமையாக வேலை செய்தமையால் அவன் நன்றாகக் களைத்திருந்தான். பூபாலசிங்கத்தின் கடைக்கு வந்த அவன் ஒரு சுருட்டு வாங்கிப் பற்றிக் கொண்டு நடந்தான்.

வேப்ப மரநிழலில் இருந்த புஸ்பநாதனும் கிருஸ்ணனும்; ''டேய் செல்லப்பா'' என்று கூப்பிட்டனர்.

செல்லப்பா நின்று திரும்பிப் பார்த்தான்; ''இஞ்சை வாடா'' என்று அழைத்தான் புஸ்பநாதன்.

செல்லப்பா அவர்களின் அருகில் சென்றான்; “தம்பி புஸ்பநாதன் உன்னிலும் பார்க்க ஏழேட்டு வயது கூடியவன் நான். என்னுடன் நீங்கள் எப்படியும் கதைக்கலாம். நீ டேய் செல்லப்பா என்றழைத்தால் நான் குறைந்து விடப் போவதில்லை. அதே போல நீ செல்லப்பா அண்ணை என்று அழைத்தவுடன் எனது மதிப்பு உயரப் போவதும் இல்லை. ஒவ்வொருவரது நடத்தையும் அவரவர்களின் குணத்தை மற்றவர்களுக்குக் காட்டிக் கொடுக்கும். எனவே மூத்தவர்களை மதிக்காவிட்டாலும் பரவாயில்லை அவர்களை அவமதிக்காமல் இருக்கப் பழகல் வேண்டும்” என்றான்.

“இப்ப இவரும் சுவாமியார் மாதிரி அறிவுரை கூறத் தொடங்கி விட்டார். யோகேஸ்வரனை ஏமாற்றி அவன்ரை காசு பணம் நகை காணியெல்லாவற்றையும் வாங்கிப் போட்டார். அவற்ரை காசிலை மோளுக்குக் கலியாணமும் செய்து வைச்சவுடனை பெரிய எண்ணம் அவருக்கு” என்றான் புஸ்பநாதன்.

அவர்களோடு கதைத்தால் அவமானம் என்று நினைத்த செல்லப்பா மெதுவாக அவ்விடத்தை விட்டுச் சென்றான். அதைக் கேட்டுக் கொண்டு நின்ற சேனாதிராசா செல்லப்பாவிடம் வந்தான்; “செல்லப்பா, புஸ்பநாதனும் கிருஸ்ணனும் ஏதோ நக்கல் அடிக்கிறாங்கள். நீ கேட்டுக் கொண்டு போறாய். நாணெண்டால் நாலு சாத்துச் சாத்திப் போட்டுத்தான் போவன்”.

செல்லப்பா சிரித்தான்; “இவங்களோடு கதைத்தாலே மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள். அடிபட்டால் எப்படி இருக்கும். அவர்கள் குடித்திருக்கிறார்கள். குடித்தவனின் கதைக்கு மாறாகக் கதைத்தால் அவனுக்குக் கோபம் வரும். அதனால் அவன் எனக்கு அடித்தால் நாளைக்கு ஊரிலை மதிப்புள்ளவை என்னை மதிக்காயினை. அத்துடன் நான் என்ரை தகுதியை உணர வேண்டும். மகள் ஆசிரியை, மருமகன் ஆசிரியர், நான் சினங் கொண்டு அவனுடன் சண்டைக்குச் சென்றால் நாளைக்கு என்னுடைய மகளையும் மருமகனையும் யாரும் மதிக்க மாட்டார்கள்” என்றான் செல்லப்பா.

“கனகசபாபதி நீ செய்த தோட்டத்தறையை உழுததாய் அறிந்தன் உண்மையே?” சேனாதிராசா கேட்டான்.

“ஓமண்ணை ஆறு மாதங்களுக்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுக்கு எருப்பறிச்சு வெங்காயம் நட்டனான். வெங்காயம் கிண்டின மற்ற நாள அவன் உழுதிட்டான். அது அவன்ரை தோட்டம் நான் இரந்து கேட்டுத்தான் வாங்கினனான். இப்ப உன்ரை மகள் ஆசிரியை. மருமகனும் ஆசிரியர். நல்ல வருமானம் வருது. இனி ஏன் நீ கஷ்டப்படுறாய். நடராசா கஷ்டப்படுறான் அவனுக்குக் குடுக்கப் போறன் தறையை விடு என்று கனகசபாபதி சொன்னான். விட்டுட்டன்” என்றான் செல்லப்பா.

“அப்ப பசளைக் காசு வாங்கினனியே..?

“மனச் சாட்சியின் படி எனக்கு அவன் பசளைக் காசு தரவேணும். கேட்ட இவ்வளவு காலமும் செய்தனி தானே. உழைச்சிருப்பாய் என்றான். அதுக்குப் பிறகு நான் என்னத்தைக் கதைக்கிறது.”

“வழக்குப் போடடாப்பா”

“எனக்கு கனகசபாபதி மீது எந்தக் கோபமும் இல்லை. நான் கஷ்டப்படேக்கை அந்தத் தோட்டத்தைத் தந்துதவினவன். அந்த நன்றி என்ரை நெஞ்சிலை இருக்கு. வீணாய் அவன்மீது கோபப்பட்டு வழக்குத் தாக்கல் செய்து என்னுடைய நேரத்தையும் நிம்மதியையும் இழக்க நான் விரும்பவில்லை. ஒருவன் அடுத்தவர்கள் மீது கோபங் கொள்ளாமல் வாழ்ந்தால் அவன் எண்ணிய நன்மைகள யாவற்றையும் பெறுவான் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அதோடு எல்லாம் நன்மைக்கு என்பார்கள். எனது மருமகன் மிகவும் நல்லவர். அவர் என்னை இனிமேல் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டாம் என்று சொல்கிறார். தோட்டச் செய்கையை முற்றாய் விடட்டாம். யோகேஸ்வரன் இவ்வளவு காலமும் உங்களுக் உதவியமையால் அவரின் வேலைகளைச் செய்து கொண்டிருங்கோ என்கிறார். அதனால் கனகசபாபதி தோட்டத்தை உழுததும் நன்மைக்குத் தான்” என்றான் செல்லப்பா.

சேனாதிராசா பேசாமல் நடந்து வந்தான். செல்லப்பா சொன்னான்; “அண்ணை நான் மிகவும் மகிழச்சியாக வாழ்றன். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியமையால் தான் இன்று எனக்கு இந்நிலை ஏற்பட்டது. நகைக் கடை வைத்திருக்கிற மயில்வாகனத்திட்டை நான்கு வருடங்களுக்கு முன்னம் மனிசீன்ரை தோட்டைக் குடுத்திட்டு இரண்டாயிரம் ரூபா வாங்கினனான். அதன் பெறுமதி மூவாயிரம் தான் வரும். இரண்டு மாதங்களுக்கு ன்னம் வட்டியும் முதலுமாக ஆறாயிரத்து எழுபது ரூபா கொடுத்து நகையை மீண்டனான். அந்த எழுபது ரூபாவைக் கூடக் கழிக்கச் சொல்லி நான் கேட்கவில்லை. அதை மீளாவிட்டால் நான் நல்லாயிருக்கிற காலத்திலை நான் ஏமாற்றியதாகக் கதைப்பினை: செல்லப்பா கதைத்துக் கொண்டு சேனாதிராசாவுடன் சென்று கொண்டிருந்தான்.

309. உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

ஒருவன் தன் மனதில் கோபத்திற்கு இடம் கொடுக்காமல் இருப்பானேயானால், அவன் நினைத்த நன்மைகள் எல்லாம் பெறுவான்.

## இறந்தவர்

கனகசபாபதிக்கு உதவியாக வைத்தியசாலையில் நின்றான் நடராசா. வறியவன் நடராசா. எனினும் மிகவும் நல்லவன்; நேர்மையாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றவன். அவன் கூலி வேலை செய்து வந்தான். கனகசபாபதி

மாதத்தில் பத்துப் பதினைந்து நாட்களுக்கு வேலை கொடுப்பார். ஒரு நாள் கனகசபாபதி சொன்னான்; ‘‘நடராசா நீ மிகவும் நல்லவன். அதனால் தான் உன்னைத் தவிர வேறு எவரையும் கொண்டு நான் வீட்டு வேலைகளைச் செய்விப்பதில்லை. செல்லப்பாவைத் தோட்டம் செய்து கஷ்டப்பட வேண்டா மென்று மருமகன் கூறி விட்டாராம். அதனால் எனது தோட்டத்தை விட்டு விட்டான். நீ அந்தத் தோட்டத்தைச் செய்’’.

நடராசா சந்தோசப்பட்டான். அன்று முதல் அவன் செல்லப்பா செய்த தோட்டத்தைச் செய்யத் தொடங்கினான். நடராசா தோட்டம் செய்யத் தொடங்கிய பின்பு வெளி வேலைகளை விட்டு விட்டு கனகசபாபதியின் தோட்ட வேலைகளையும் தனது தோட்ட வேலைகளையும் செய்து வந்தான்.

அதன் பின்பு தான் கனகசபாபதிக்கு யாரோ அடித்தமையால் வைத்தியசாலையில் தங்கி சிகிட்சை பெற்று வந்தான். கனகசபாபதியின் உறவினர்கள் எவரும் வைத்தியசாலைக்கு வந்து அவனைப் பார்க்கவில்லை. ஒரு நாள் நடராசாவைச் சந்தித்த கனகசபாபதியினது மூத்த சகோதரனான சிதம்பரேஸ்வரன் கேட்டார்; ‘‘கனகனுக்கு இப்ப எப்படி ...? அடித்தவங்கள் சாகிற மாதிரி அடித்திருக்க வேணும்’’.

‘‘ஏன் ஐயா அப்படிச் சொல்கிறீர்கள்’’.

‘‘அவன் மனிதனா...? அப்பு சாக முன்னம் அடிச்சேரிக் காணியை எனக்குத் தான் தாறதெண்டவர். நல்ல மாதிரி இருந்த அப்பு திடீரென்று காணிகளை எழுதாமல் செத்துப் போனார். அப்புக்கிருந்த காணிகளிலை எனக்கும் பங்கிருக்கென்று நினைச்சன். ஆனால் அப்புவை வற்புறுத்தி முழுக் காணியையும் தன்ரை பெயரிலை எழுதிப் போட்டான். கடைசி வரையும் அப்பு அவனுக்கு எழுதியிருக்க மாட்டார். இவன் அப்புவை மாதிரிக் கையெழுத்து போடுவன். அப்பிடி அவன் தான் அப்பூன்ரை கையெழுத்தைப் போட்டானே தெரியேல்லை. கேட்கப் போன என்னுடைய மனைவியின் கையை அடித்து முறித்தவன்’’ என்றான் சிதம்பரேஸ்வரன்.

நடராசா ஒன்றும் பேசவில்லை; ‘‘நடராசா அவன் முழு முட்டாள்; முன் கோபி; மனிசிக்காரிக்கும் ஒரே அடி குத்துத் தான். மனிசீன்ரை தகப்பனார் கொஞ்ச நாட்கள் இவனோடை வந்திருந்தவர். அந்த மனிசனுக்கும் அடிக்கிறவன். அந்தப் பழியெல்லாம் இப்ப சூழ்ந்திருக்கும். இனி இவன் தப்பியும் பிரயோசனமில்லை’’ என்றான் சிதம்பரேஸ்வரன்.

வைத்தியசாலைக்கு வந்த நடராசாவை அளவு கடந்த கோபத்துடன் ஏசினான் கனகசபாபதி; ‘‘நடராசா இவ்வளவு நேரமும் நீ எங்கை போனனீ. என்னால் எழும்ப முடியாது; நடக்க முடியாது என்று உனக்குத் தெரியும். காலமை எழும்பி வீட்டை போனனீ ஒன்பது மணிக்கு வாறாய். இராப்பகலாய் இங்கையே இருக்கிறதென்று கூறித்தான் சம்பளம் வாங்கிறனீ. இரண்டு மணித்தியாலமாய் நான் பட்ட கஷ்டம் கடவுள் ஒருவனுக்குத் தான் தெரியும். இனிமேல் நீ வீட்டை போகவே கூடாது’’ கர்ஜித்தான் கனகசபாபதி.

“என்னுடைய மகளுக்கு சுகமில்லை. மருந்து வாங்கிக் குடித்ததும் காய்ச்சல் நிற்கவில்லை..” நடராசா பேசிக் கொண்டிருக்கும் போது கடுங்கோபத்துடன் குறுக்கிட்டான் கனகசபாபதி; “டேய் உன்ரை பிள்ளைக்குக் காய்ச்சல் விடாட்டில் நீ அங்கை போய் என்ன செய்யப் போறாய். உனக்கு வைத்தியம் தெரியுமே. உன்ரை மனிசி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவள் தானே”.

“ஒரே ஒரு பிள்ளை இரவு முழுவதும் தூக்கம் வராமல் கஷ்டப்பட்டவளாம். அதோடை நாலைந்து நாட்களாக நான் வீட்டுக்குப் போகவில்லை...”

“சரி....சரி.... வா என்னைத் தூக்கி விடு கழிவறைக்குச் செல்ல வேண்டும். மிகவும் சிரமம்பட்டுத் தூக்கினான் நடராசா. தூக்கும் போது கனகசபாபதியின் கை கட்டில் சட்டத்துக்குள் அகப்பட்டு விட்டது. அதனால் குழறினான் கனகசபாபதி; “உனக்கு இப்ப என்ரை நினைவில்லை. வீட்டு நினைவில் தான் இருக்கிறாய். விடடா என்னை.... செய்யிற வேலையிலை அவதானமாக இருக்க வேண்டும். நீ சம்பளத்திற்குத் தான் வேலை செய்கிறாய்”.

கனகசபாபதியை மீண்டும் கட்டிலில் வழத்திய நடராசா சொன்னான்; “எனக்கு உங்கடை சம்பளமும் வேண்டாம்; தொழிலும் வேண்டாம்; முற்கோபத்திலை மிருகத்தைப் பேசுற மாதிரி நீங்கள் பேச நான் கேட்க வேண்டுமோ..?.” என்று கூறி விட்டுப் போனான் நடராசா.

கனகசபாபதி திகைத்துப் போனார். நடராசா இப்படிச் சொல்வான். என்று அவர் எதிர் பார்க்கவில்லை. அவருக்கு அருகில் இருந்த ஆசிரியர் ஒருவர் சொன்னார்; “நடராசா மிகுந்த பொறுமைசாலி நல்லவன். நீங்கள் ஆத்திரத்தாலை தினமும் பேசுவதை நான் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன். அளவு கடந்த கோபத்தைக் கொண்டவன் செத்தவரை ஒத்தவன். கோபங் கொள்ளாதவன் துறவியைப் போன்றவன். அவனது பிள்ளைக்கு வருத்தமென்றால் அவன் சென்று பார்க்கத் தானே வேண்டும். இது கூட உங்களுக்குப் புரியவில்லையா?” கனகசபாபதி வேதனையால் முனகினார்.

310. இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

கடுங்கோபம் கொள்பவர் இறந்தவனைப் போன்றவர். கோபத்தை அடியோடு விட்டவர் துறவிக்கு ஒப்பானவர்.

## மாசற்றவர் செயல்

கனகசபாபதியின் மனைவி சகுந்தலை தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தாள்; ‘‘அண்ணை நேற்று எனது கணவர் நடராசாவைக் கடுங் கோபங் கொண்டு ஏசி விட்டார். அதனால் நடராசா நேற்றுத் தொடக்கம் வைத்தியசாலையில் தங்கிச் சிகிட்சை பெறும் எனது கணவரைப் பராமரிக்க மறுத்து விட்டான். அதனால் நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் எல்லோருக்கும் எனது கணவர் துன்பம் செய்தமையால் எவரும் அவருடன் துணையாக இருக்க விரும்புகிறார்கள் இல்லை. இருந்த ஒரே ஒரு உதவியாளான நடராசாவையும் அவர் பகைத்தமையால் கஷ்டமாக இருக்கு. நீங்கள் சொன்னால் நடராசா கேட்பான். ஒருக்கால் சொல்லுங்கோ’’ என்றாள் சகுந்தலை.

தீமைகள் செய்பவன் தான் பிறர்க்குத் தீமை செய்வதாக நினைத்துத் தனக்குத் தானே தீமை செய்கிறான் என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம். என்பதை கனகசபாபதிக்குப் பலமுறை நான் எடுத்துக் கூறியும் அவன் கேட்பதாகத் தெரியவில்லை. நடராசா மிகவும் நல்லவன். ஏழை எனபதற்காக எவரும் அவனைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. நான் நடராசாவுடன் கதைக்கிறேன்’’ என்றார் தணிகாசலம்.

அன்று மாலை நடராசாவையும் அழைத்துக் கொண்டு தணிகாசலம் வைத்தியசாலைக்குச் சென்றார்; கனகு உன்னைப் போல மற்றவர்களையும் நீ நேசிகக் வேண்டும். சிறப்புக்கள் பல தருகின்ற பெரும் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் கூடப் பிறருக்குத் துன்பம் செய்யாமல் வாழ்வதே நல்லவர்களது பண்பாகும். உன்னுடைய பெட்டியை எடுத்துத் தந்தவனைப் பற்றி நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தாயா..? அவன் நீ கொடுக்க முன் வந்த சன்மானப் பணத்தையே பெற விரும்பவில்லை. இதற்குக் காரணம் அப்பணம் உன்னுடைய உழைப்பால் வந்தது. பிறரின் உழைப்பைச் சன்மான மென்ற பெயரில் பெறுவதும் பாவம் என்று கருதியமையால் தான் அவன் அதைப் பெறவில்லை. நீ மற்றவர்களுக்குச் செய்யும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமானவை அல்ல. கொடிய வார்த்தைகளைப் பேசுவதும் கொடிய செயல்கள் செய்வதற்குச் சமனானது’’.

‘‘என்னவோ தெரியவில்லை. என்னால் என்னை அடக்க முடியவில்லை. நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புவேன். மறுகணம் யாவற்றையும் மறந்து விடுகிறேன் அழுதான் கனகசபாபதி.

‘‘உனது வார்த்தைகளை நான் நம்பமாட்டேன். மனிதனுக்குக் கட்டுப்பட்டது தான் மனம். மிருகங்கள் கூட தனது இயல்பைப் பயிற்சியால் மாற்றிக் கொள்கின்ற இக்காலத்தில் அறிவுள்ள உன்னால் மனத்தை மாற்ற முடியவில்லை. என்று கூறுவது மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டது. நாம் ஒரு தீய செயலைச் செய்தால் அதற்குரிய துன்பத்தைக் கட்டாயம் அனுபவித்தே தீர வேண்டும். அதை எந்தச் சக்தியாலும் தடை செய்ய முடியாது. பணம் பொருட்களைக் கொடுத்தோ அல்லது கடவுளை வணங்கிப் பூசைகள் செய்தோ செய்த தீமையை விலக்கிக் கொள்ளலாமென்று பலர்

நினைக்கிறார்கள். அது மரணமடைந்தவனை உயிர்ப்பிற்பதற்கு ஒப்பானதாகும்''.

''நான் சுகவீன முற்றுப் பத்து நாட்களாக இவருக்கு அருகில் உள்ள கட்டிலில் படுத்திருக்கிறேன். இவர் நடராசாவுக்குக் கொடுக்கும் தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளவே முடியாது. பாவம் நடராசா'' என்றார் அருகில் இருந்த ஆசிரியர்.

''உனது மனைவி நடராசாவின் வீட்டிற்குச் சென்று கெஞ்சி மன்றாடியும் அவன் ஒப்புக் கொள்ள மறுத்து விட்டான். நான் தான் அவனைச் சம்மதிக்கச் செய்தேன். இனி அவன் உன்னைப் பராமரிக்க முடியாது என்று சென்று விட்டால் நான் சென்று நடராசாவைக் கேட்க மாட்டேன். பணமும் பொருளும் ஒரு மனிதனுக்கு இன்றியமையாதவை தான் ஆனால் உன் போன்றவர்களிடம் இருக்கும் பணத்திற்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு உனக்கு உதவிகள் செய்ய ஊரில் யாரும் தயாராக இல்லை. அப்படியான பணத்தால் உனக்கு என்ன பிரயோசனம். எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல் நன்மை செய்பவர்களின் துன்பத்துக்கு உதவி செய்யப் பலர் காத்திருக்கிறார்கள். அவனிடம் பணம் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, அவனுக்குதவப் பலர் காத்திருப்பர்.

எவ்வளவு தான் பணம் பொருள் இருந்த போதும் உதவி செய்யும் மனப்பாங்கு இல்லாவிட்டால் அவனை யாரும் மதிக்க மாட்டார்கள். நீ அற்ப பொருட்களின் மீது ஆசை கொண்டு அடுத்தவர்களுக்குத் துன்பங்கள் செய்கிறாய். நல்லதொரு மனிதன் எவ்வளவு பொருள் சேர்வதாக இருந்தாலும் கூட பிறருக்குத் துன்பஞ் செய்ய மாட்டான். இனி மேலாவது நீ திருந்தி நட'' என்று கூறி விட்டுச் சென்றார் தணிகாசலம்.

''ஐயா நான் தணிகாசலம் அண்ணை கூறியதற்காகத் தான் உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். கூலியாக நீங்கள் எதுவும் தர வேண்டாம்'' என்றான் நடராசா. கனகசபாபதிக்கு ஆத்திரமாக இருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது மனதுள் கறுவினார்.

311. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

பல்வேறு சிறப்புக்களைத் தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறருக்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவர்களின் குணமாகும்.

## கொள்கை

அன்று கனகசபாபதியை விசாரிப்பதற்காகச் சிவபாதசுந்தரம் வைத்தியசாலைக்கு வந்தார். கனகசபாபதியைப் பராமரித்துக் கொண்டிருந்த

நடராசாவை வெளியே செல்லுமாறு பணித்து விட்டுத் தனது விசாரனையை ஆரம்பித்தார்.

‘‘உங்களைத் தாக்கி இரண்டு மாதங்கள் முடிந்து விட்டன. இருந்தும் உங்களால் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. தாக்கியவர்கள் நன்கு திட்டமிட்டுத் தான் செயலாற்றியுள்ளனர். இவ்வளவு நாட்களுக்குள் உங்களைத் தாக்கியவர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?’’ என்று கேட்டார் சிவபாதசுந்தரம்.

‘‘எனக்கு வேண்டாதவர்கள் பலர் இருக்கிறார்கள். தில்லைநடராசாவும் நவராசாவும் சேர்ந்து செய்திருக்கலாம்.’’.

‘‘பலர் உங்களுக்கு வேண்டாதவர்களாக இருக்கிறார்கள் என்கிறீர்கள். தில்லை நடராசா மீதும் நவராசா மீதும் ஏன் சந்தேகிக்கிறீர்கள்’’.

‘‘மற்றவர்கள் ஏசுவார்களே தவிர அடிப்பன் என்று மிரட்ட மாட்டார்கள். நவராசாவும் தில்லைநடராசாவும் தான் அடித்துக் கொலை செய்வன் என்று மிரட்டுவார்கள். நான் தாக்கப்படுவதற்கு நாலைந்து தினங்களுக்கு முன்பு தில்லைநடராசா அருள்நேசனது காணி விடயமாக என்னை அடித்துக் கொலை செய்வன். மிரட்டினவன்’’ என்றார் கனகசபாபதி.

அன்று மாலை சிவபாதசுந்தரம் தில்லை நடராசாவையும் நவராசாவையும் அழைத்துப் பலமணி நேரம் விசாரனை செய்தார். பின் எச்சரித்து அனுப்பினர். தில்லை நடராசா காவல் நிலையத்தில் இருந்து விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றான். அங்கே தணிகாசலம் இருந்தார்.

‘‘வா தில்லை எல்லாம் நான் கேள்விப்பட்டனான். நீ கனகசபாபதிக்கு அடித்திருப்பாயென நான் நம்பவில்லை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தில்லை நடராசாவுக்கு தூக்கம் நெஞ்சை அடைத்தது. மனதில் உள்ளவற்றைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் மிகுந்த போதும் அவனால் பேசமுடியவில்லை.

‘‘நான் உத்தமமான மனிதர்கள் என்று நினைத்திருப் போரில் நீயும் ஒருவன் தொடர்ந்து பல தீமைகளைச் செய்யும் ஒருவனைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் தான் மனதில் எழும். தீமைகள் செய்யாதவனையே பழிவாங்கத் துடிக்கும். மனிதருள் நீ வித்தியாசமானவன் என்பது எனக்குத் தெரியும். அடுக்கடுக்காகப் பல துன்பங்களைக் கனகசபாபதி உனக்குச் செய்த போதும் அவனது பெறுமதி மிக்க ஆவணங்கள் அடங்கிய பெட்டியை நீ மனமுவந்து திருப்பிக் கொடுத்த செயலை என்னால் மறக்க முடியாது. அப்படியான நீ பழி வாங்க நினைத்திருக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘தில்லை, நீ தான் பெட்டியை எடுத்து கொடுத்தனியென்பதை கனகு அறிய வேண்டும்’’ என்றார் தணிகாசலம்.

‘‘நான் அதிகம் படிக்கவில்லை ஐயா என்றாலும் எனது தகப்பனார் நீதிக் கருத்துக்களை எனக்கு உபதேசித்திருக்கிறார். தன்மனமறியத் தீமைகள் செய்பவன் தனக்கு நன்மை செய்பவனையும் சந்தேகிப்பான். அப்படியானவன் நன்மை செய்தவர்களுக்கும் தீமை செய்வானே தவிர அந்த நன்மையின் தார்பரியத்தை உணர மாட்டான். உணர்ந்து கொண்டவன் பின் எவருக்கும் தீமை செய்ய மாட்டான் என்று எனது தந்தையார் சொல்வார். நான் கனகசபாபதிக்குப் பல நன்மைகள் செய்த போதும் அவன் எனக்குத் தொடர்ந்து தீமைகளே செய்து வருகிறான். பெறுமதியான பெட்டியைத் தவற விட்ட பின் தான் ஒரு போதும் தீமைகள் செய்ய மாட்டேன் என்று சொன்னவன் இன்று அதை மறந்து தீமைகள் பலவற்றைச் செய்கிறான். எனது தகப்பனார் இப்பொழுதும் சொல்கிறார்; ‘‘மகனே தீமைகள் ஒரு போதும் நிலைத்ததில்லை. ஒருவன் கடுங் கோபம் கொண்டு பெரும் துன்பங்களை உனக்குச் செய்தாலும் அதற்காக அவனுக்குத் துன்பஞ் செய்யாதே. ஒரு காலத்தில் அவனுக்கு அதற்குரிய தண்டனை கிடைக்கும். கொடிய செயல்களுக்குக்கூட நாம் தண்டனை வழங்கக் கூடாது. தண்டனை வழங்குவதற்கு மேலே ஒருவன் இருக்கிறான்’’ என்று சொன்னவர். நான் கனகனுக்கு அடிக்கவில்லை என்பதைத் தங்களுக்குச் சொல்லி விட்டுச் செல்லவே வந்தேன்’’ என்று கூறி விட்டுச் சென்றான்.

தணிகாசலமும் சென்று விட்டார். இரவு பத்து மணியாகியும் நித்திரை வராமல் அவஸ்தைப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

மறு நாள் காலை எழுந்ததும் காவல் துறை அலுவலகத்திற்குச் சென்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அவரைக் கண்டதும் திகைத்த சிவபாதசுந்தரம் தனது இருக்கையை விட்டெழுந்தார்.

‘‘நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள். யாரிடமாவது சொல்லியனுப்பியிருக்கலாம்.... எனது பிள்ளைகள் அங்கே தானே படிக்கிறார்கள்’’ என்றார் சிவபாதசுந்தரம்.

‘‘மிகவும் அவசரமான விசயம் இரவு முழுவதும் எனக்கு நித்திரை வரவில்லை’’ என்ற விக்னேஸ்வரமூர்த்தி தில்லை நடராசா கனகசபாபதியின் பெட்டியை கொடுத்ததில் இருந்து சகல விஷயங்களையும் சொன்னார்.

அதைக் கேட்டுத் திகைப்படைந்த சிவபாதசுந்தரம்; ‘‘நல்லவனான தில்லை நடராசாவை நான் கடுமையாக விசாரித்து விட்டேன். நான் ஆவன செய்கிறேன்’’ என்றார்.

விக்னேஸ்வரமூர்த்தி நிம்மதியுடன் விடை பெற்றார்.

312. கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா

செய்யாமை மாசுஅற்றார் கோள்.

ஒருவன் கோபம் கொண்டு செய்யக் கூடாதவற்றைச் செய்தாலும், அவனுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தலே நல்லவர்களின் பண்பாகும்.

## தீராத் துன்பம்

அன்று காலை நடராசா தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் தணிகாசலத்தின் மனதில் பல்வேறு விதமான எண்ணங்கள் முளை விட்டன. கனகசபாபதியுடன் கோபித்துக் கொண்டு வருகிறான் என்றே முதலில் தணிகாசலம் நினைத்தார்.

“அண்ணை உங்களோடு ஒரு முக்கியமான விஷயம் கதைக்கவேணு மெண்டு வந்தனான்; நேற்று காவல் துறை அதிகாரியான சிவபாதசுந்தரம் ஆஸ்பத்திரிக்கு வந்து என்னை வெளியே செல்லும்படி கூறிவிட்டு கனகரை விசாரணை செய்தவர். காவல் துறை அதிகாரி சென்ற பிறகு கனகன் எனக்குச் சொன்னவர்; “தில்லை நடராசா தான் தனக்கு அடிச்ச தென்று காவல் துறை அதிகாரிக்குச் சொன்னவராம். எனக்கெண்டால் தில்லை அண்ணையிலை ஐமிச்சமில்லை. அவர் பேசுவரே தவிர அடிக்கிற அளவிற்குப் போக மாட்டார். கனகற்றை தமையன் சிதம்பரம் தான் ஆள்வைச்சு அடிச்சிருப்பன்”.

“ஏன் அப்படிச் சொல்கிறாய்?”

“என்னைக் காணுற வேளையிலை யெல்லாம்; “ கனகனுக்கு இப்ப எப்பிடி...? செத்துப் போவனோ....? தப்பீடுவனோ...? இப்பிடியானவங்கள் உலகத்திலை வாழக்கூடாது. ஒருவன் தீமை செய்யாட்டிலும், அவன் தீமை செய்ததாய் நினைத்து கனகன் அவனுக்கு தீமை செய்யிறவன். அவன் வாழக் கூடாது” என்று என்னைக் காணுற போதெல்லாம் சொல்லுறவன். எனவே அவன் தான் கனகனுக்கு அடிப்பிச்சிருப்பன் என்று நான் நினைக்கிறன். ஒருவனைப் பற்றித் தவறாக சொல்லுறது பாவம். ஆனால் தீமை செய்யாதவன் தண்டிக்கப்படக் கூடாது”.

தணிகாசலம் எதுவும் பேசாது சில கணங்கள் நின்றார். பின்; “இப்ப கனகர் உன்னைப் பேசுவதில்லையா?” என்று கேட்டார்.

“ஒருவன் தனது சுபாவத்தை உடனடியாக மாற்றுவது கஷ்டம் இரண்டு மூன்று நாட்கள் கொஞ்சம் குறைவாக இருந்தது. பின் பழையபடி பேசுறார். என்ன செய்வது. ஒருவன் ஆராயாது தீமை செய்கிறான் என்றால் நாமும் அவனுக்குத் தீமை செய்வது பாவமான செயல். சிரமப்பட்டுப் பொறுத்துக் கொள்கிறேன். நான் கூறியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கோ; நான் வாறன்”. என்று கூறி விட்டுச் சென்றான் நடராசா.

நடராசா சென்ற பின்பு தணிகாசலம் வெளியே சென்றார். பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் நின்ற வேப்ப மரத்தின் கீழ் சிதம்பரேஸ்வரன் இருந்தான். அவனைக் கண்டதும் நடராசா சொன்ன விஷயத்தை விசாரிக்கலாமா என ஒரு கணம் எண்ணிணார் தணிகாசலம். சிதம்பரேஸ்வரன் அவ்வளவு மோசமானவன் அல்லன். அவரை மதிப்பவன். அதனால் சிதம்பரேஸ்வரனின் அருகில் சென்றார்; ‘‘என்ன தணிகாசலம் அண்ணை இந்த வேம்படியிலை உங்களை நான் காண்கிறேல்லை’’ என்றவாறு எழுந்தான்.

‘‘தேவையிருந்தால் வரத்தானே வேணும்... அது சரி கனகு ஆபத்தான நிலையிலை ஆஸ்பத்திரியிலை இருக்கு. உனது சகோதரன் தானே அடித்தவனைப் பிடிப்பதற்கு நீ உதவி செய்யாமல் இருப்பது நல்லதல்ல’’ என்றார் தணிகாசலம்.

‘‘அவன் சாகாமல் இருக்கிறது தான் எனக்கு மனவருத்தமாக உள்ளது’’.

‘‘என்னடாப்பா இப்படிப் பேசுகிறாய் உன்ரை சகோதரன். ஒருவருக்கு நாம் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை அவருக்குத் தீமை வரவேண்டும் என்று சொல்வது பாவமானது’’.

‘‘உண்மை தான் அண்ணை. எனக்கு அவன் செய்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும். எனக்கு அப்பு தாற தெண்ட காணிகளெல்லா வற்றிற்கும் அப்புலை மாதிரிக் கையெழுத்து வைத்து தனது உடமையாக்கிப் போட்டான். ஊர்ச்சனம் எல்லாரோடும் சண்டை. எல்லையை அகட்டுறத்திலை மகா கெட்டிக்காரன். நான் நேர்மையாக வாழுறனான். யாருக்காவது தீமை செய்ததாய் நீங்கள் கேள்விப்பட்டனீங்களே ? கனவிலை கூட நான் அவருக்குத் தீமை செய்ய நினைக்கிறேல்லை...’’

‘‘அப்படிச் சொன்னால் போதுமே அவன் சாகாமல் இருக்கிறது தான் எனக்கு மனவருத்தம் என்கிறாய். ஓர் உடன் பிறப்பைப் பற்றி இப்படிச் சொல்லலாமே ?’’

‘‘தவறு தான் அண்ணை, நானும் நான்கு பிள்ளைகளும் எவ்வளவு கஷ்டப்பர்றம். அப்பு தேடின சொத்திலை ஒரு சதம் என்றாலும் எனக்கு சேரவில்லை. பிறகு எப்படி நான் அவனைச் சகோதரம் என்று சொல்கிறது’’.

தணிகாசலம் யோசித்துப் பார்த்தார். அவன் சொல்வது நியாயமாகப்பட்டது; ‘‘நான் ஒரு விசயம் கேள்விப்பட்டனான். தான் குற்றம் செய்யாத போது தனக்கு ஒருவன் தீமை செய்தால் அதற்காக அவனை மன்னிக்காது அவனுக்கு தீங்கிளைப்பது துன்பத்தைத் தரும் என்று பெரியவை சொல்லுவினை. அப்படி இருக்க நீ தான் கனகுக்கு ஆள் வைத்து அடித்ததாக எனக்கு ஓராள் சொன்னவர்’’.

சிதம்பரேஸ்வரன் திடுக்கிட்டுப் போனான். அவனுக்கும் இன்னும் நம்பிக்கையான ஆட்கள் இருவருக்கும் தெரிந்த விஷயம் வேறொருவருக்கு எப்படித் தெரிந்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கேட்டான்; ‘‘உங்களுக்கு ஆர் அண்ணை சொன்னது’’.

‘‘உனக்கேன் சொன்ன ஆளை. நீ அடிச்சனியோ இல்லையோ...?’’

சிதம்பரேஸ்வரன் வெகு நேரம் பேசாமல் இருந்தான் பின்பு; ‘‘நான் பொய் சொல்ல விரும்பவில்லை. நான் தான் அடித்தனான்’’.

‘‘நீ தீங்கு செய்யாத போதும், உனது சகோதரன் உனக்குத் தீங்கு செய்து விட்டா னென்று நீ அவனைத் தாக்கியிருக்கிறாய். தற்செயலாக அவன் மரணமடைந்திருந்தால் உனது நிலை என்னவாகு மென்று யோசித்துப் பார்த்தாயா...? இப்பொழுதே கஷ்டப்படும் உனது குடும்பத்தினர் இன்னும் கஷ்டப் படுவார்கள். அது உனக்குத் தீராத துன்பத்தையே தரும்’’ என்றார் தணிகாசலம்.

சிதம்பரேஸ்வரன் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு நின்றான்.

313. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

தான் எவருக்கும் துன்பஞ் செய்யாதிருந்த போது, தனக்குத் தீங்கு செய்தவர்களுக்குத் துன்பஞ் செய்தால், அது செய்தவனுக்குத் தீராத துன்பத்தைத் தரும்.

## நன்றே செய்க

‘‘ அண்ணை தெரியாத்தனமாய் நான் அடிச்சுப் போட்டன். தயவு செய்து யாருக்கும் இதைச் சொல்லிப் போடாதைங்கோ. தான் குற்றம் செய்யா விட்டாலும் தனக்குத் தீங்கு செய்தவனைத் தண்டித்தால் அது தனக்குத் தீராத துன்பத்தையும் பழியையும் தருமென்பதை நான் முன்பு உணரத் தவறி விட்டேன். இப்பொழுது தான் அத்தவறால் வரும் பெருந்துன்பத்தைப் பற்றி அறிந்து கொண்டேன்’’ அழுதான் சிதம்பரேஸ்வரன்.

அப்பொழுது நடராசாவின் மனைவி கௌரி அவ்விடத்திற்கு வந்து சொன்னாள்; ‘‘கனகண்ணை உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறாராம். கோபதாபங்களை மறந்து தன்னை வந்து பார்க்கச் சொல்லி எனது கணவரிடம் சொல்லி அனுப்பினார். அவர் நேரமில்லாததால் என்னைச் சென்று உங்களிடம் சொல்லச் சொன்னார்’’ என்றாள்.

சிறிது நேரம் சிதம்பரேஸ்வரன் எதுவும் பேசாததால் கௌரி அவ்விடத்தை விட்டுச் சென்றாள். நீ உனது சகோதரனைத் தாக்கியதைப் பற்றி எனக்கு யாரும் சொல்லவில்லை. உனது கதையில் இருந்தே நான் அதைக் கண்டு கொண்டேன். இப்பொழுது உனது சகோதரனுக்கு நோய் ஓரளவு சுகமாகி விட்டது. ஆபத்து வராது. எனவே நான் யாருக்கும் இதைப் பற்றிச் சொல்ல மாட்டேன். நீ ஒரு முறை சென்று அவனைப் பார்'' என்றார் தணிகாசலம்.

''சரி'' என்று தலையாட்டினான் சிதம்பரேஸ்வரன். அன்று மாலை சிதம்பரேஸ்வரன் கனகசபாபதிக்கு இரவு உணவையும் கொண்டு சென்றான். அவனை அதிசயமாகப் பார்த்தான் நடராசா.

''நடராசா, நீ ஓய்வு ஒளிச்சல் இல்லாமல் இரண்டு மூன்று மாத காலமாக வைத்தியசாலையில் எனது அண்ணனுடன் தங்கி இருக்கிறாய். இன்று இரவு அவருடன் நான் தங்குகிறேன். நீ போய் வீட்டில் ஓய்வெடு'' என்றான் சிதம்பரேஸ்வரன்.

நடராசாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. வழமையாகச் சந்திக்கும் வேளைகளில்; ''கனகன் இருக்கிறானோ செத்துப் போனாணோ ?'' என்று கேட்கும் சிதம்பரேஸ்வரனா இப்படிக் கேட்பது?'' என்று நினைத்தான் நடராசா.

''அப்ப நீ போ நடராசா. சகுந்தலையிடடை இரவு எனக்குச் சாப்பாடு வேண்டாம் என்று சொல்லு'' என்றான் கனகசபாபதி.

நடராசா சென்று வெகு நேரமாகி விட்டது; ''வலக்காலைத் தூக்கி தலையணை மீது வை சிதம்பரி'' என்றார் கனகசபாபதி. சிதம்பரேஸ்வரன் அவரது வலது காலைத் தூக்கினான். அனுபவமில்லாததால் கனகசபாபதிக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

இரவு நித்திரையில் அவர் சிறு நீர் கழித்து விட்டார். உடல் குளிர்ந்த பின்பு தான் அவருக்குத் தான் நித்திரையில் சிறு நீர் கழித்தது தெரிந்தது. மெதுவாக எழுந்தார். வைத்தியசாலையில் நித்திரை வராது புரண்டு கொண்டிருந்த சிதம்பரேஸ்வரன் கனகசபாபதி எழும்பியதைக் கண்டதும் ''என்ன'' என்று கேட்டான்.

''இப்ப எனக்கு உணர்வில்லாமல்லாமல் இருக்கு'' படுத்த படுக்கையிலே சிறுநீர் கழித்து விடுகிறேன்'' என்றார்.

சிதம்பரேஸ்வரன் கனகசபாபதியின் வேட்டியை மாற்றினான். பின்பு குளிக்கும் அறைக்குச் சென்று கனகசபாபதியின் வேட்டியை தோய்த்துக் கொண்டு வந்தான். அதைப் பார்க்க கனகசபாபதிக்கு வேதனையாக இருந்தது. பொருள் மீதிருந்த ஆசையால் தான் தீமை செய்த போதும் அதைப் பொருட்படுத்தாது தனக்கு சேவகம் செய்யும் சகோதரனைப் பார்க்க அவருக்கு வெட்கமாக இருந்தது.

பொழுது விடியு முன் சிதம்பரஸ்வரனின் மூத்தமகன் பிரணவன் இருவருக்கும் காலை உணவும் தேநீரும் கொண்டு வந்தான்.

‘‘அப்பா, அம்மா உங்களை வரட்டாம். பெரியப்பாவுடன் என்னை இன்றைக்கு நிற்கட்டாம்’’ என்றான்.

கனகசபாபதி பாசத்துடன் தனது சகோதரனைப் பார்த்தார். பிரணவன் கா. பொ.த. உயர்தர வகுப்புப் படிக்கும் மாணவன்.

‘‘இன்று நீ பாடசாலைக்குச் செல்லவில்லையா? என்று கேட்பார் கனகசபாபதி.

‘‘இல்லை அப்பாவுக்கு இன்று அவசியமான தொரு வேலை இருக்கிறதென்று அம்மா வரச் சொன்னவா. உங்களைப் பராமரிப்பதற்காக நான் இன்று பாடசாலைக்குச் செல்லவில்லை’’ என்றான் பிரணவன்.

‘‘நடராசா வந்தாப்பிறகு நீ போ. பாடசாலைக்குச் செல்லாவிட்டால் படிப்புக் கெட்டு விடும்’’ என்றார் கனகசபாபதி.

‘‘அம்மா வீட்டுக்கு நான் சென்றால் ஏசுவா. நான் எனது தோழர்களிடம் என்னைக் கற்பித்த தென்று கேட்டுத் தெரிந்து கொள்வேன்’’ என்றான் பிரணவன்.

வைத்திய சாலைக்கு வந்த நடராசாவுக்கு தான் வீட்டுக்குச் செல்வதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது.

‘‘இவ்வளவு காலமும் வந்து பாராமல் இருந்த நீங்கள் இப்பொழுது ஏன் வந்து என்னைப் பார்க்கிறீர்கள்’’ என்று கேட்டார் கனகசபாபதி.

‘‘ஒருவர் எமக்கு எவ்வளவு தான் தீங்கு செய்தாலும் நாம் அவற்றை மறந்து தீங்கு செய்தவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று நேற்று எமது வீட்டுக்கு வந்த தணிகாசலம் மாமா அப்பாவுக்குச் சொன்னார். அப்பா தான் இரவு போவதாகவும் என்னைக் காலையில் வருமாறும் கூறினார்’’. என்றான் பிரணவன்.

கனகசபாபதிக்கு வெட்கமாக இருந்தது.

314. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

தனக்குத் தீமைகள் பல செய்தவனைத் தண்டிப்பதென்பது, அவன் வெட்கப்படும் படி அவனுக்கு நல்லுதவிகள் பல செய்து, அவன் செய்த தீமையை மறத்தலாகும்.

# அறிவின் பயன்

கனகசபாபதியின் மகள் பூரணி, நல்ல அழகி. பட்டணத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் தாதியாகப் பணி புரிந்து வந்தாள். மிகவும் நல்லவளான அவள் நோயாளிகளை அன்புடன் பராமரிப்பாள் அவர்களுடன் சீறிச் சினக்காது வேண்டிய உதவிகளைச் செய்வாள். தன்னுடன் வேலை செய்வோருடன் அன்பாகப் பழகுவாள். உதவிகள் செய்வாள். கனகசபாபதிக்கு நேர்மாறானவள். அவளது அன்பான பராமரிப்பினால் குணமடைந்து வீட்டுக்குச் சென்ற பலர் பின்பு அவளது வீட்டுக்கு வருவார்கள். இது கனகசபாபதிக்குப் பிடிப்பதில்லை. அவர்கள் சென்றதும் பூரணியைக் கனகசபாபதி ஏசுவான். பூரணி சொல்வாள்; ''அப்பா மனிதன் பிற உயிர்களின் மேல் அன்பும் கருணையும் காட்டுதல் வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும். நான் ஒரு மருத்துவத் தாதி. நோயாளர்களின் மீது கருணையும் பாசமும் காட்டுதல் வேண்டும். நோய்களில் பெரும்பாலானவை அன்பான பராமரிப்பினால் தான் குணமாகும். நீங்கள் ஏன் மனிதர்களை வெறுக்கிறீர்கள். எல்லோருடனும் அன்பாகப் பழகிப் பாருங்கள். பழகினால் தான் அன்பின் மகத்துவம் தெரியும்'' என்பாள்.

மகளுடன் எதிர்த்துப் பேச முடியாத கனகசபாபதி புறுபுறுத்துக் கொண்டு சென்று விடுவான். பூரணி கடமை செய்யும் மருத்துவமனையில் செல்லம்மாள் என்ற முதிய பெண் ஒருத்தி பல நாட்கள் தங்கிச் சிகிட்சை பெற்றாள். அவளது பிள்ளைகள் நால்வர் வெளிநாடுகளில் இருந்தனர். அதனால் அக்கறையுடன் பராமரிக்க அவளுக்கு யாரும் இருக்கவில்லை.

செல்லம்மாளுடைய அவல நிலையைக் கண்டு இரங்கிய பூரணி அவளுக்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளையும் அன்புடன் செய்து வந்தாள். அவளது கணவன் ஆதித்தியன். ஆதித்தியன் மூன்று வேளையும் தனது வீட்டில் உணவு தயாரித்துக் கொண்டு மருத்துவமனைக்கு வருவான். ஆதித்தியனுக்குச் சமைக்கத் தெரியாது. அதனால் அவன் தயாரிக்கும் உணவு வகைகள் சுவையுள்ளவையாக இருக்க மாட்டாது. அதனால் செல்லம்மாள் குறை கூறுவாள். மனைவியின் மீது அன்புள்ள ஆதித்தியன் தனது உயிர் நண்பனான தில்லை நடராசாவுக்கு அவ்விபரங்களைச் சொன்னான். அதனால் வேதனைப்பட்ட தில்லை நடராசா ஆதித்தியனுக்கும் செல்லம்மாளுக்கும் தனது வீட்டிலிருந்து தினமும் மூன்று வேளை உணவையும் கொடுத்து வந்தான்.

செல்லம்மாளுக்குப் பூரணியின் அன்பான பராமரிப்பும் அக்கறையான கவனிப்பும் நன்றாகப் பிடித்து விட்டது. அதனால் அவளைத் தனது நான்கு பிள்ளைகளுள் ஒருவனுக்குத் திருமணஞ் செய்து வைக்க விரும்பினாள். எனினும் அவள் வேறு கிராமத்தைச் சேர்ந்தவளென்பதால் அவளைப் பற்றி அறிய விரும்பினாள். அதனால் தனது விருப்பத்தை ஆதித்தியனுக்குச் சொன்னாள். ஆதித்தியனுக்கும் பூரணியின் நடத்தை பிடித்தமையால் பூரணியைப் பற்றி தனது நண்பனான தில்லைநடராசாவுக்குச் சொன்னார்.

கனகசபாபதியின் கெட்ட நடத்தையால் ஊரில் உள்ள எவரும் அவனது வீட்டில் திருமணம் செய்ய விரும்பவில்லை. வெளியூர்களில் இருந்து பூரணிக்குத் திருமணம் பேசி வந்தாலும் அதைக் குழப்பி விடுவார்கள். அதைப் பற்றிக் கனகசபாபதி கவலைப்படுவதில்லை. ஆனால் சகுந்தலைக்கு அது மிகுந்த கவலையைக் கொடுத்தது. காண்போரிடமெல்லாம் தனது மகளுக்குப் பேசி வரும் திருமணங்களைக் குழப்ப வேண்டாம் என்று மிகவும் உருக்கமாகக் கேட்பாள். ஊரில் உள்ள நல்ல மனிதர்களான தணிகாசலம், தில்லைநடராசா, தனபாலசிங்கம், வேலாயுதபிள்ளை போன்றவர்களுக்குச் சொல்வாள்.

ஆதித்தியன் கனகசபாபதியின் மகளைத் தனது மகனுக்கு திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறி அந்தக் குடும்பத்தைப் பற்றி விசாரித்ததும் தில்லை நடராசா தடுமாறிப் போனார். தான் துன்பம் செய்யாமல் இருக்கும் போது, தனக்கு தொடர்ந்து பல்வேறு விதமான துன்பங்களைச் செய்து வரும் கனகசபாபதியைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணமே தில்லைநடராசாவின் மனதில் மேலோங்கியது. ஒரு வாரத்திற்கு முன்பு சகுந்தலை அவனைக் கண்ட போது சொன்னாள்; ‘‘தில்லை அண்ணை உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். நீங்கள் கடைசி வரையும் எனது கணவரைத் தாக்கியிருக்க மாட்டீர்கள். எனது கணவன் செய்யும் கொடிய துன்பங்களுக்காக எனது மகளின் திருமணத்தை ஊரவர்கள் குழப்புகிறார்கள். பூரணிக்கு முப்பது வயதாகிறது. இனிமேலும் திருமணமாகாமல் இருந்தால் அவள் கன்னியாகத் தான் வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அப்படி ஒரு துன்பம் ஏற்பட நீங்கள் துணையாக இருக்காதீர்கள்’’ அழுதாள் சகுந்தலை.

‘‘என்ன தில்லை யோசிக்கிறாய்’’ ஆதித்தியன் கேட்டார்.

‘‘ஒன்றுமில்லை, பூரணி மிகவும் நல்லவள். அதை விட தாய் சகுந்தலை மிகவும் நல்லவள். பூரணி குடும்பத்திற்கு ஏற்ற குல விளக்கு. அவர்கள் வெளிநாட்டில் வாழப் போவதால் உனது மகன் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்’’ என்றான் தில்லை நடராசா.

ஆதித்தியன் மகிழ்வுடன் விடை பெற்றார். தில்லை நடராசாவின் மனம் அல்லற்பட்டது’’; ‘‘ஓர் உயிருக்கு உண்டாகும் துன்பத்தை நமக்கேற்பட்ட துன்பமாகக் கருதி அதை நீக்கா விட்டால் உனக்கு அறிவிருப்பதால் உண்டாகும் பயன் என்ன’’? என்று சுவாமியார் அருளுரையில் கூறியது தில்லை நடராசாவுக்கு நினைவுக்கு வந்தது; ‘‘கனகசபாபதி கொடியவனானாலும் பூரணியும் சகுந்தலையும் நல்லவர்கள். அவர்கக்குத் துன்பம் ஏற்படக் கூடாது’’ என்று நினைத்தான் தில்லை நடராசா.

315. அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
 தம்நோய்போல் போற்றாக் கடை.

மற்றய உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தைத் தனது துன்பத்தைப் போலக் கருதி காப்பாற்றா விட்டால், ஒருவன் பெற்ற அறிவால் பயன் எதுவும் இல்லை.

## தவிர்ப்பவை

ஆதித்தியன் தில்லைநடராசா வின் வீட்டுக்கு வந்தார்; ''தில்லை வாற திங்கட்கிழமை நல்ல நாள். அன்றைக்கு நானும் எனது மனைவியும் நீயும் உனது மனைவியுமாக கனகசபாபதியின் வீட்டுக்குச் சென்று பெண்கேட்கலாமென்று நினைக்கிறேன்''.

அதைக் கேட்டு அதிர்ந்து போனான் தில்லை நடராசா. சில கணங்கள் அவனுக்கு உணர்வே இல்லை; ''ஆதி என்னை என்னத்திற்கு நீயும் மனைவியும் உனது இனத்தவர்களுமாகச் சென்று பெண் கேட்பது தான் முறை. நான் உனது நண்பனே தவிர இனத்தவன் இல்லை. அவர்கள் சில சமயம் தவறாக நினைக்கக் கூடும்''.

''உன்னை நான் நண்பனாக வா இவ்வளவு காலமும் நினைத்திருந்தேன்'' உணர்ச்சி வசப்பட்டார். பின்; நான் உன்னை என்ரை உயிராகத் தான் நினைத்துப் பழகி வருகிறேன். கனகசபாபதியின் மகளை எனது மனைவி விரும்பியிருந்தாலும், நீ விரும்பியிரா விட்டால் நான் அந்தச் சம்பந்தத்தை செய்ய விரும்பியிருக்க மாட்டன். அப்படி நான் நினைத்திருக்க நீ...'' கலங்கினார் ஆதித்தியன்.

''தில்லை நடராசா உருகிப் போனான். ஆதித்தியனும் அவரது குடும்பமும் அவர் மீது வைத்திருக்கும் அன்பை அவர் புரியாதவர் அல்லர். இருந்தும் கனகசபாபதியின் வீட்டுக்கு எப்படிச் செல்வது என்று யோசித்தார்.

''நீ வர விரும்பாத அளவில் அவர்களுடன் நீ ஏதோ பிரச்சினைப் பட்டிருக்கிறாய் போலத் தெரிகிறது. உனக்கு விருப்பமில்லாவிட்டால் நான் இந்தச் சம்பந்தத்தைக் கைவிர்றன்''

''இல்லை..... இல்லை.... எனக் கொரு பிரச்சினையும் இல்லை. தற்செயலாக நான் உறவில்லாதவன் என்றறிந்தால் உங்களுக்குத் தான் மதிப்புக் குறைவாக இருக்கும்''

''உன்னைக் கூட்டிக் கொண்டு செல்வது எனக்கு மதிப்புக் குறைவா..? இல்லை நான் உன்னோடு வாறது உனக்கு மதிப்புக் குறைவா....''? என்று கேட்டார் ஆதித்தியன்.

மெதுவாக உதடுபிரியாது சிரித்தார் தில்லை நடராசா. அவரால் எதையும் சிந்தித்துக் கதைக்க முடியவில்லை.

‘‘தில்லை மனிசிதான் பூரணீலை ஆசைப்பட்டது. அதோடை தில்லை அண்ணை குடும்பத்தைப் பெண்கேட்கக் கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்றும் சொன்னது. உன்னோடு செல்லம் கதைக்கும்’’ என்று கூறிவிட்டுச் சென்றார் ஆதித்தியன்.

தில்லை நடராசாவால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. பல்வேறு நினைவுகள் மனதில் தோன்றி அவரை அலைக்கழித்தன. தீர்மானம் எதுவும் எடுக்க முடியாததால் தணிகாசலத்தைத் தேடிச் சென்றார்.

தணிகாசலம் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். தில்லை நடராசாவைக் கண்டதும் அவரின் அருகே வந்தார். இருவரும் ஆடுகாலின் அருகே சென்று அமர்ந்தார்.

தில்லை நடராசா முழுப் பிரச்சினைகளையும் சொன்னார். தணிகாசலம் கேட்டுக் கொண்டிருந்தார். தில்லை நடராசா யாவற்றையும் கூறி முடித்த பின்பும் தணிகாசலத்தால் பேச முடியவில்லை. அவரது மூளை சிந்திக்க முடியாமல் அவதிப்பட்டது.

‘‘என்னாலை முடிவெடுக்க முடியாததாலை தான் அண்ணை உங்களிட்டை வந்தனான். ஆதி என்னுடைய உயிர் நண்பன். நான் செல்லா விட்டால் கலியாணத்தை நிறுத்திவிடுவன். நான் எப்படிப் போறது. ஏராளமான தீமைகளை கனகன் எனக்குச் செய்த போதும் நான் அவன்ரை பிள்ளையைப் பழிவாங்க விரும்பேல்லை’’.

அப்பொழுதும் தணிகாசலம் பேசவில்லை. யோசித்துக் கொண்டிருந்தார். மூளை மரத்து விட்டதைப் போன்ற பிரமை. என்ன சொல்வ தென்று அவருக்குப் புரியவில்லை; ‘‘நீ ஓர் இக்கட்டான நிலைக்கு ஆட்பட்டிருக்கிறாய். பெரும்பாலான மனிதர்கள் தனக்குத் துன்பம் செய்பவர்களை மட்டுமன்றி அவர்களது குடும்பத்தினரையும் பழி வாங்குவதையே சிந்தனையாகக் கொண்டுள்ளனர். ஆனால் நீ மற்றய உயிர்களுக்கேற்படும் துன்பங்களை உனது துன்பமாக நினைத்து செயலாற்றி இருக்கிறாய். இத்தகைய பெருங்குணத்தை உடைய நீ ஏன் நண்பனான ஆதித்தியனின் மனதை வருத்த வேண்டும். எனவே நீ அங்கு செல்வது தான் நல்லது. எமக்கு எவையெவை நிகழக் கூடாதோ அது மற்றவர்களுக்கும் நிகழக் கூடாது என்று நினைப்பவன் நல்ல மனிதன். ஆனால் அது எதிரிக்குக் கூட வரக் கூடாது என்று நினைப்பவன் மகாத்மா. அப்படி நினைத்த நீ கனகனின் வீட்டுக்குச் செல்லாமல் விடுவது தான் குற்றமான செயல். ஆரம்பத்திலேயே நிலைமையைச் சொன்னால் திருமணம் குழம்பி விடும் என்று நினைத்த நீ, பெண் பார்க்கச் சொல்லா விட்டாலும் குழம்பி விடும் என்பதை நினைவில் வைத்துக் கொள். திருமணம் நடைபெற வேண்டும் என்று நீ நினைத்தால் செல்லத் தான் வேண்டும்’’.

‘‘என்னண்ணை விக்கிரமாதித்தன் கதை மாதிரிச் சொல்லுறியள். என்னால் தீர்மானிக்க முடியாததால் தான் நான் உங்களிடம் வந்தனான். நீங்கள் இப்படிச் சொன்னால் எப்படி...?’’

தணிகாசலம் சிரித்தார் பின்பு; ‘‘நீ பெண் பார்க்கப் போ’’ என்றார்.

‘‘சரி அண்ணை’’ என்று கூறி விட்டுச் சென்றான் தில்லை நடராசா. அவன் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றார் தணிகாசலம். அவன் கண்களை விட்டு மறைந்த பின்பும் அவரால் நிதானத்திற்கு வர முடியவில்லை.

316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

ஒருவன் துன்பமானவை என்று தன்து வாழ்க்கையில் கண்டு உணர்ந்த செயல்களை அவன் மற்றவர்களுக்குச் செய்யக் கூடாது.

## சிறப்பு

ஆதித்தியனும் செல்லம்மாளும் தில்லைநடராசாவும் கனகசபாபதியின் வீட்டுக்குச் சென்ற போது சகுந்தலை அவர்களை அன்புடன் வரவேற்றாள்; ‘‘வாருங்கோ.... உள்ளுக்கு வந்து கதிரையில் இருங்கோ’’.

மூவரும் உள்ளே சென்றனர். கனகசபாபதி சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான். அவர்களைக் கண்டதும் எழும்ப முயற்சித்தான். அவனது காலில் சேலை சுற்றப்பட்டிருந்தது.

‘‘நீங்கள் எழும்ப வேண்டாம் இருங்கோ.... இருங்கோ’’ என்றவாறு ஆதித்தியன் கனகசபாபதியின் அருகிற் சென்று அவரது தோளைப் பிடித்து இருத்தினார். தில்லை நடராசா நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தான்.

‘‘தில்லை என்னுடைய உயிர் நண்பன். என மனைவி ஆசைப்பட்டதற்காக நான் இந்தச் சம்பந்தத்தைச் செய்யவில்லை. மனிதனுக்கு காசு, பணம், பொருள் பெரிதில்லை. குணம் தான் பெரிது. எனது மகன் வெளிநாட்டில் இலட்சம் இலட்சமாகச் சம்பாதிக்கிறான். குணம் தான் எனக்கு முக்கியம். செல்லம் பூரணியைப் பற்றி வாயோயாமல் சொல்லிக் கொண்டே இருப்பாள். பூரணி நல்ல குணமான பெண் என்பதை நான் வைத்தியசாலையில் அறிந்து கொண்டேன். என்றாலும் குடும்பத்தைப் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகத் தில்லையை விசாரிச்சனான். தில்லை செய்யச் சொல்லி விட்டான். தில்லை யோடை எனக்கு நெடு நாட்பழக்கம். அதோடை அவன் என்னுடைய உயிர் நண்பன். எனக்குத் துரோகம் செய்ய மாட்டான்’’ ஆதித்தியன் கூறிக் கொண்டிருந்தார்.

கனகசபாபதிக்கு மனதுள் பயம் ஏற்பட்டது; ‘‘திருமணம் முடிந்த பின்பு தில்லை குழப்பி விட மாட்டான் என்று எப்படி நம்புவது’’ என்று எண்ணினார்.

‘‘அப்பா உங்களை மாதிரி ஒரு கேவலமான மனிதனை நான் இதுவரை காணவில்லை. உங்களைப் போல கொடிய துன்பங்களை மற்றவர்களுக்கு வேறு யாரும் செய்ததாகவும் நான் கேள்விப்படவில்லை. இந்த ஊர் மக்கள் நல்லவர்கள். அதிலும் தில்லை நடராசாஅண்ணையைப் போல ஓர் உத்தமரை நான் காணவில்லை. சிறிதளவு தானே என்று எண்ணிக் கூடத் தில்லை அண்ணை மற்றவர்களுக்குக் கெடுதி செய்ய மாட்டார். இன்று நான் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் வழியில் அவர் என்னைக் கண்டு சொன்னவர்; ‘‘பிள்ளை ஆதி என்னுடைய உயிர் நண்பன். உன்னைத் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்புகிறார். உனது தகப்பனார். எனக்குச் செய்த தீங்குகள் ஒன்று இரண்டல்ல. இருந்தாலும் நான் சிறிய தீங்கைக் கூட பிறருக்குச் செய்ய விரும்பவில்லை. ஆதி மிகவும் நல்லவன். நீயும் நல்ல முறையில் செல்லம்மாளுடன் பழகியிருக்கிறாய். இதே போல உன் வாழ் நாள் முழுவதும் அவர்களுடன் சந்தோசமாக வாழப் பழகு. பிறகு குணமில்லாத குடும்பத்தில் தனது மகனுக்குப் பெண்ணெடுக்க நான் காரணமாக இருந்து விட்டேன் என்று அவர்கள் சொல்லக் கூடாது’’ என்று பூரணி சொன்ன வார்த்தைகள் கனகசபாபதியின் காதில் ஒலித்தன.

அவருக்கு வியர்த்துக் கொட்டியது. தோளில் இருந்த சால்வையை எடுத்து முகத்தைத் துடைத்தார். மனதில் பூரணி அன்று காலை சொன்னவார்த்தைகள் அவரின் காதில் ஒலித்தன; ‘‘அப்பா எனக்கு முப்பது வயதாகிறது. இது பெண்களைப் பொறுத்த மட்டிலை. பெரும் வயது கிட்டத்தட்ட அரைக்கிழவியாகி விட்டேன். உங்களது தீய சொல்களால் தான் எனது திருமணம் இது நாள் வரையும் தடைப்பட்டது. இத்திருமணம் குழம்பினால் நான் நஞ்சருந்தி செத்துப் போவேன். கலியாணம் நடந்த பின் ஏதாவது குழப்பம் வந்தால் அன்றைக்கே தந்தை மகள் என்ற உறவு அற்றுப் போய்விடும். பின் நீங்கள் செத்தாலும் மரண வீட்டிற்குக்கூட நான் வர மாட்டேன்’’.

பூரணி தேநீர் கொண்டு வந்து ஆதித்தியனுக்குக் கொடுத்து விட்டு தில்லை நடராசாவுக்கு நீட்டினாள். தில்லை நடராசா ஒரு கணம் தயங்கினார்; ‘‘நான் உங்களை எனது தந்தையாகவே நினைத்திருக்கிறேன்...’’ அவள் கூறும் போது ஏதாவது விபரீதம் நடந்து விடுமோ என்று அஞ்சி அவசரப்பட்டு தேநீரை எடுத்தார் தில்லைநடராசா.

‘‘நல்லவர்கள் மற்றவர்களுக்குத் தீமை செய்யமாட்டார்கள். பிறர் தீமை செய்தாலும் அதைப் பொருட்படுத்தாது மற்றவர்களின் நல்வாழ்வுக்காகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்வார்கள்’’ சகுந்தலை அழுதழுது கூறியது கனகசபாபதியின் நினைவிற்கு வந்தது. அதைப் பூரணியின் வார்த்தைகள் நிரூபித்தன.

‘‘எங்களுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. சாதகமும் நல்ல பொருத்தம். நான் மகனுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். பூரணியின் படமும் அனுப்பியுள்ளேன். அது எப்படியும் இன்னும் இரண்டொரு தினங்களில் அவனுக்குக் கிடைத்து விடும். இராத்திரி தொலைபேசியில் கதைத்தவன். எனக்கு அழகைப் பற்றிப் பிரச்சினை இல்லை. உங்களுக்குப் பெண்ணைப் பிடித்தால் சரி என்றவன். அதோடை தில்லை மாமாக்குப் பெண்ணைப் பிடித்தால் அவள் நல்ல குணசாலியாகவும் அழகியாகவும் இருப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு’’ என்று சொன்னவன். எனவே நாங்கள் கலியாண நாளைத் தீர்மானிப்பம்’’ என்றார் ஆதித்தியன்.

சகுந்தலை பூரித்துப் போனாள். திருமணம் நடந்து முடிந்து விட்ட உணர்வில் மிதந்தாள். அவளது கண்கள் தில்லை நடராசாவின் முகத்தை கருணையுடன் நோக்கின அவரது விழிகளில் உள்ள சாந்தம் அவளது நம்பிக்கையை வலுப்படுத்தியது. தனது குடும்பத்தைக் காக்க வந்த தெய்வமாக மனதுள் நினைத்து வணங்கினாள்.

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான் ஆம்
மாணாசெய் யாமை தலை.

சிறிதளவானது என்று எண்ணிக் கூட நாம் யாருக்கும் எக்காலத்திலும் தீங்கு செய்யாமல் இருத்தல் வேண்டும்.

## காரணம் என்ன ?

கனகசபாபதியிடமிருந்து ஆதித்தியனும் செல்லம்மாளும் விடை பெற்றனர். தில்லை நடராசா சகுந்தலையிடம்; ‘‘நான் வாறன். கலியாணத்திற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்யுங்கோ என்று கூறினார்.

சகுந்தலை வாசல் வரை வந்து அவர்களை வழியனுப்பினாள். ஆதித்தியனும் செல்லம்மாளும் மோட்டார் வண்டியில் சென்றனர். தில்லை நடராசாவின் வீடு அருகில் இருந்ததால் அவர் நடந்து சென்றார்.

‘‘அண்ணை’’ செல்லம்மாள் அழைத்தாள். அவளது குரல் தழுதழுத்தது. தில்லை நடராசா நின்று திரும்பிப் பார்த்தார். அவனது கண்கள் நிரம்பி வழிந்தன. கதைக்க முடியாது சில கணங்கள் தடுமாறினான் பின்; ‘‘வயது சென்றும் திருமணமாகாதிருந்த எனது மகளுக்கு நல்வாழ்வு ஒன்றை அளித்துள்ளீர்கள். இப்படியான நல்ல தொரு இடத்தில் திருமணம் செய்ய நாம் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் இப்படியான திருமணத்திற்குத் தரகு காசாக இலட்சக் கணக்கில் வாங்குவார்கள். எவ்வளவு வேண்டும் என்று சொல்லுங்கோ’’.

தில்லை நடராசா அவள் அப்படிக் கேட்பாள் என்று எதிர்பார்க்கவில்லை; ‘‘நான் எதையும் எதிர் பார்த்து இந்த உதவியை உங்களுக்குச் செய்யவில்லை. ஆதி என்னுடைய குடும்ப நண்பர். அவர் கேட்டதற்காகத் தான் செய்தேன். இதில் தரகு வேலை நான் செய்யவில்லை. நட்புரிமையோடு பழகும் ஒருவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தேன். நீங்கள் அவர்களுடன் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இந்தாலே போதும். தற்செயலாக ஏதாவது பிரச்சினை வந்தால் எனது ஆருயிர் நண்பன் பணத்திற்காகத் தனக்குத் துரோகம் செய்து விட்டதாகத் தான் நினைப்பான். எனவே இனியாவது உங்கள் கணவரை நல்லவராக வாழச் சொல்லுங்கள். அவர் நல்லபடி வாழ்ந்தால் எனக்குப் பல இலட்சம் ரூபா தந்ததற்குச் சமமாகும். முன்பு நான் நிம்மதியாக இருந்தேன். இப்பொழுது எனது நிம்மதி குலைந்துள்ளது. அதற்குக் காரணம் உங்களது கணவன் ஏதாவது தீய செயல்களில் ஈடுபட்டு விடுவார் என்ற பயம் தான்’’.

சகுந்தலைக்கு அவமான மாக இருந்தது; ‘‘ஒருவனிடம் உள்ள தீய குணங்கள் அறியாமையாலும் மனப் பலவீனத்தாலுமே ஏற்படுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தி அதன் வழியில் செல்லாத மனிதன் ஒரு போதும் தீய செயல்களைச் செய்ய மாட்டான். சூழ்நிலைக் கேற்றவாறு மனதை அலைய விட்டுத் தனது காரியங்களை முடித்துக் கொள்பவனுக்கு வெற்றிகரமான வாழ்க்கை அமையாது. சூழ்நிலைக் கேற்ப நல்லவற்றைச் செய்பவனே வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்கிறான். தன் உயிருக்கு இவை துன்பமானவை. என அறிந்து அவற்றிலிருந்து விலகி வாழும் ஒருவன் மற்ற உயிர்களுக்கு அவற்றை என்ன காரணத்திற்காகச் செய்ய வேண்டும். இதை அறிவுள்ளவர்கள் செய்ய மாட்டார்கள் மற்றவர்கள் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்’’ என்று அடிக்கடி ஸ்ரீனிவாசன் சுவாமியார் கூறும் அறிவுரையை இவர் ஏன் நினைப்பதில்லை’’ என்று நினைத்தாள் சகுந்தலை.

‘‘நான் பல முறை அவருக்கு இவற்றையெல்லாம் கூறியுள்ளேன். அந்த நேரம் அவற்றைக் கேட்கும் அவன் பின் எல்லாவற்றையும் மறந்து விடுகிறார். தனக்குத் துன்பம் வந்த வேளையில் மட்டும் துயரப்பட்டு இனிமேல் நான் தீமைகள் எதுவும் செய்ய மாட்டேன் என்று கூறும் அவர் பின் அவற்றையெல்லாம் மறந்து விடுகிறார்’’ அழுதாள் சகுந்தலை.

அப்பொழுது அங்கே வந்த பூரணி சொன்னாள்; ‘‘மாமா நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு தான் நின்றேன். இனிமேல் எனது தந்தை தீய செயல்கள் ஏதாவது செய்தாரேயானால் நான் எனது உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று அவருக்குக் கூறி விட்டேன்.’’

‘‘அப்படியெல்லாம் செய்து விடாதை. உனது தந்தையின் செயல்கள் ஏதாவது உனக்குப் பிடிக்காவிட்டால் எனது வீட்டுக்கு வா. நான் உன்னை அழைத்துச் சென்று ஆதியின் வீட்டில் விடுகிறேன். எதற்கும் நீ யோசிக்க வேண்டாம்’’ என்றார் தில்லை நடராசா.

தில்லை நடராசாவை நிமிர்ந்து பார்த்தாள் பூரணி. அவரது ஒழுக்கத்தையும் பொறுமையையும் நினைக்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது; “நன்மை செய்து கொண்டிருப்பவன் தான் வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிறான். மற்றவர்களுக்கு நன்மை செய்யாதிருப்பவன் நடைப்பிணம். இப்பொழுது இந்த உலகில் வாழ்பவர்களில் பெரும்பான்மையானோர் நடைப்பிணங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையில் துன்பங்களும் துயரங்களும் மறைந்திருக்கின்றன. அவர்களது மரணமும் துயரம் மிகுந்ததாகத் தான் இருக்கும். அவர்கள் மரணமடைந்த பின்பு பிசாசுகளாகவே தாம் பிறந்த மண்ணில் உலாவுவார்கள். அவர்களைப் பற்றிக் கதைப்பதற்கு யாரும் இருக்க மாட்டார்கள். அவர்களது பிள்ளைகள் உற்றார் உறவினரே அவர்களைப் பற்றி சமூகத்தின் மத்தியில் கதைக்க வெட்கப் படுவார்கள். இந்த நிலை உங்களுக்குத் தேவையா..? சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு வரும் சிறிய துன்பத்தையே விரும்பாத நீங்கள் எப்படி மற்றவர்களுக்குத் துன்பம் செய்கிறீர்கள். இதைச் செய்ய உங்களுக்கு எப்படி மனம் வருகிறது” முதல் நாள் கோயிலில் ஸ்ரீனிவாசன் சுவாமிகள் கூறிய வார்த்தைகள் பூரணியின் நெஞ்சில் ஒலித்தது.

318. தன்உயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்?.

தனக்குத் துன்பமானவை இவை என்று உணர்கின்றவன், மற்றய உயிர்களுக்கு அத்துன்பங்களைச் செய்வது என்ன காரணத்தாலோ?.

## பிற்பகல்

“பூரணி மனிதத் தன்மையில் இருந்து பிறழாதவன். ஒரு போதும் தீமை செய்ய மாட்டான் அவன் எப்பொழுதும் நல்லவற்றையே சிந்தித்துக் கொண்டிருப்பான். அவனது இதயத்தில் இரக்கமும் அன்பும் எப்பொழுதும் குடியிருக்கும். நல்ல பணிகளில் ஈடுபடுபவனுக்கு யாரும் கெடுதல் செய்ய முடியாது. நல்ல செயல்கள் செய்வதன் மூலம் ஒருவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்”. என்று நம்புபவன் நான். அதனால் தான் எனக்குத் துன்பங்களை யாரும் செய்தாலும் அவை என்னை அணுகுவதில்லை. எனவே நீ கலங்காது உனது கடமையைச் செய். உனது திருமணத்தை இனிமேல் உனது தகப்பனாரால் கூடக் குழப்ப முடியாது” என்றார் தில்லை நடராசா.

அதைக் கேட்டுப் பூரணி உருகிப் போனாள். தனக்குப் பிறர் தீமை செய்தாலும் பிறருக்குத் தீமை செய்யாது நன்மை செய்தால், அந் நன்மையானது தனக்கே வந்து சேரும் என்று கூறும் தில்லை நடராசாவின் குணத்தைப் பற்றி அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை; “எனது தகப்பனார் அண்மையில் நீங்கள் தான் தன்னைத் தாக்கியதாகக் காவல் துறை அதிகாரிக்கு அறிவித்திருந்தார். அதன்படி காவல் துறை அதிகாரி

உங்களை அழைத்து விசாரித்ததாக நடராசா கூறினார். இருந்தும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது நீங்கள் எனது திருமணத்தை முன் நின்று நடத்துகிறீர்கள். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்'' என்றாள் பூரணி.

தில்லைநடராசா பலமாகச் சிரித்தார். இனிமேல் உனக்கும் கனகுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஒரு பெண் திருமணமானால் அவள் கணவரின் வீட்டாருக்குச் சொந்தமாகி விடுகிறாள். உனக்கு வரும் தீட்டுத் துடக்குகள் யாவும் உனது வீட்டில் உள்ள எவரையும் சாராது. கணவன் வீட்டாரையே சாரும். நான் உனது கணவனது வீட்டவன். அதனால் உனது நடத்தை மாறினால் சரி. ஒருவன் மற்றொருவனுக்கு முற்பகலில் துன்பம் செய்தால் அத்துன்பங்கள் பிற்பகலில் தாமே அவனைத் தேடி வந்து துன்பப்படுத்தும் என்று கர்ம யோக விதி கூறுகிறது. ஒருவன் செய்த தீமையானது. அது தனக்குரிய பயனைக் கொடுக்கும் வரை மறைந்திருந்து வேளை வரும் போது வந்து அவனை அடையும் இதை இறைவனால் கூடத் தடுக்க முடியாது. மனிதனை அறிவுள்ளவனாக இறைவன் படைத்துள்ளான். இந்த அறிவைப் பாவித்து மனிதன் நன்மை தீமைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது. தீமை செய்பவனைத் தான் துன்பங்கள் தொடர்ந்து தாக்குகின்றன. என்பதற்கு உனது தந்தையே சான்றாவார். அவர் எனக்குப் பல துன்பங்களைச் செய்ததாக நீ கூறுகிறாய். ஆனால் அவர் செய்த எந்தத் துன்பமும் என்னைத் தாக்கவில்லை. மாறாக அவரையே தாக்கிக் கொண்டிருக்கின்றன. காவல் துறை அதிகாரி என்னைக் கடுமையாக விசாரித்தது உண்மை தான். ஆனால் மறு நாள் என்னை அழைத்து; ''தவறுதலாக நான் தங்களை அழைத்துக் கடுமையாக விசாரித்து விட்டேன். அது தவறு என்று உணர்ந்ததால் உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்கிறேன்'' என்றார். இதை விட எனக்கு என்ன வேண்டும்'' பலருடன் உனது தந்தை பிரச்சினைப்பட்டார். இரவு யாரோ கடுமையாகத் தாக்கி விட்டார்கள். பல நாட்களாக நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். இதெல்லாம் எனக்கு இல்லையே... பிறகேன் நான் கவலைப்பட வேண்டும்'' என்றார் தில்லைநடராசா.

''இந்த எண்ணம் உலகில் யாருக்கு வரும்? உங்களைப் போல் எல்லோரும் இருந்தால் உலகம் எவ்வளவு இன்பமாக இருக்கும்'' என்றாள் பூரணி.

''உலகில் உள்ள எல்லோரும் ஒழுக்கமாக வாழ்வது சாத்தியப்படுமா என்ன? அப்படியான ஒரு நிலை இருந்தால் பல சாதனைகள் இடம் பெற்றிருக்காது'' என்றார் தில்லை நடராசா.

''நீங்கள் எதைச் சொன்னாலும், நீங்கள் எமக்குச் செய்த சேவையை எம்மால் மறக்க முடியாது'' என்றாள் சகுந்தலை.

“சரி சரி கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கோ. இன்னும் ஏதாவது உதவி தேவை யென்றால் கேளுங்கோ என்று கூறிவிட்டுச் சென்றார் தில்லை நடராசா.

319. பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒருவன் முற்பகலில் மற்றவர்களுக்குத் துன்பங்களைச் செய்தால், அத் துன்பங்கள் பிற்பகலில் தாமாகவே வந்து அவனைச் சேரும்.

## நிச்சயமானது

அன்று கனகசபாபதியின் வீட்டில் பூரணிக்கும் வருணனுக்கும் திருமணப் பதிவு செய்யும் வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பதிவாளர் இருவருக்கும் திருமணச் சட்ட விதிகளை வாசித்து விளங்கப்படுத்தி அவர்களிடம் கையொப்பம் பெற்றார். அதன் பின் சாட்சிகளாக தில்லை நடராசாவும் தணிகாசலமும் ஒப்பமிட்டனர். கனகசபாபதியின் இனத்தவர்கள் எவரும் அவ்வைபவத்திற்கு வரவில்லை. ஊர்ப் பிரமுகர்கள் சிலர் வந்திருந்தனர். ஆதித்தியனின் இனத்தவர்கள் மட்டுமன்றி அயலவர்கள், நண்பர்கள், ஊரவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

திருமணப் பதிவு முடிந்ததும் மதிய உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. பூரணியும் செல்லம்மாளும் வந்து தில்லைநடராசாவையும் தணிகாசலத்தையும் உணவு அருந்த வருமாறு அழைத்தனர்.

மதிய உணவு உண்டதும் மணமக்களை வாழ்த்தி விட்டு ஒவ்வொருவராகச் சென்று கொண்டிருந்தனர். தில்லை நடராசா வருணனும் பூரணியும் இருக்கும் இடத்திற்கு வந்தார். இருவரும் எழுந்து அவரை வணங்கி வரவேற்றனர்.

“பூரணி வருணனை எனது மகனாகவே நான் நினைத்திருக்கிறேன். பிறந்தன்றிலிருந்து அவனைத் தூக்கி வளர்த்தவன் நான். நல்லொழுக்கம் மிக்க அவன் இதுவரை எந்த ஒரு நிகழ்வுக்காகவும் கலங்கியது கிடையாது. இனியும் அவன் கலங்காது வாழ வேண்டும்” என்ற தில்லை நடராசா”. நான் போயிட்டு வாறன்” என்றார்.

“ஏன் அவசரப்படுறியள். நில்லுங்கோ எல்லோரும் சேர்ந்து போவம்” என்றான் வருணன்.

“போகப் போறியோ.?... இது உன்னுடைய வீட்டு விஷயம்” என்றார் ஆதித்தியன்.

திரும்பி ஆதித்தியனைச் சிலகணங்கள் பார்த்த தில்லைநடராசா பின் வருணனுக்கு அருகில் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார்.

திருமணப் பதிவுக்கு வந்த அனைவரும் சென்று விட்டனர். ஆதித்தியனின் குடும்பத்தினரும் தில்லைநடராசாவுமே அங்கு இருந்தனர். அப்பொழுது ஆதித்தியன் சொன்னார்; ''கனகு உங்களை எனக்குத் தெரியாது. வைத்தியசாலையில் எனது மனைவி தங்கிச் சிகிட்சை பெற்ற பொழுது உங்கள் மகளது அன்பான பராமரிப்பில் மகிழ்ந்த எனது மனைவி உங்கள் மகளைத் தனது மருமகளாக்க விரும்பினாள். ஆனால் உங்கள் ஊரவரான தில்லை நடராசாவை நான் உங்களது குடும்ப நிலையைப் பற்றிக் கேட்டேன். அவர் என்னிடம் கூறிய வார்த்தைகளை நான் கட்டாயம் உங்களுக்குக் கூற வேண்டும்; மற்றவர்களுக்குத் துன்பம் செய்பவன் நிச்சயம் துன்பம் அடைவான். தனக்குத் துன்பம் வருவதை விரும்பாதவன் பிறருக்குத் துன்பம் செய்யக் கூடாது'' என்று சொல்லி உங்களது வரலாறு முழுவதையும் கூறிவிட்டு பூரணியைத் திருமணம் செய்யுமாறு கூறினார். அதனால் தான் இத்திருமணத்திற்குச் சம்மதித்தேன். பூரணி நல்ல பெண் பிறருக்குத் தீமை செய்ய மாட்டாள் என்பது எமக்குத் தெரியும். இனிமேல் நீங்கள் மற்றவர்களுக்குத் துன்பஞ் செய்தால் நாம் உங்களின் தொர்பைத் துண்டித்துக் கொள்வோம். அது உங்களுக்கு வாழ் நாள் முழுவதும் துன்பமாக இருக்கும்'' என்றார் ஆதித்தியன்.

''தீய செயல்களை ஒருவன் செய்தால் அது வட்டியும் முதலுமாக அவனிடம் திரும்பிச் செல்லும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதே போல நன்மை செய்தால் அதுவும் வட்டியும் முதலுமாக வந்து சேரும் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்தும் தீய செயல்களைச் செய்யாதிருக்க என்னால் முடியவில்லை. அது பெருந்தவறு என்று தெரிந்து கொண்டேன். இனிமேல் நான் மற்றவர்களுக்குத் தீமை செய்ய மாட்டேன்'' என்றார் கனகசபாபதி.

அப்படியானால் சிதம்பரேஸ்வரனுக்குச் சேர வேண்டிய சொத்தைப் பிரித்துக் கொடு. கடை கட்டிய சிதம்பரம் சொத்துக்காணியை சின்னத்தம்பிக்குக் கொடு. அருள் நேசனின் காணியின் எல்லைப் பிரச்சினையைத் தீர். இன்னும் ஊருக்குள் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றையெல்லாம் நீக்கினால் நான் சந்தோசப்படுவன்'' என்றார் தில்லை நடராசா.

''தில்லை நடராசா மாமாவை நான் எனது தந்தையை மதிப்பது போலத் தான் மதிக்கிறேன். அவர் கூடாதவற்றைச் சொல்ல மாட்டார். மனிதன் தான் காணி, பூமி, பணம், பொருள், பண்டம் எல்லாவற்றையும் தேடிக் கொள்கிறானே தவிர பொருட்கள் மனிதனைத் தேடிக் கொள்வதில்லை. அவனால் இன்னும் தேடிக் கொள்ள முடியும். மற்றவர்களின் சொத்துக்களை நேர்மையீனமான முறையில் அபகரித்தால், அப்பொருட்கள் உள்ள பொருட்களையும் சேர்த்துக் கொண்டு போய்விடும் என்று அடிக்கடி தில்லை மாமா கூறுவார். அவரின் தோளில் வளர்ந்த நான் அவர் சொல்வதைத் தான்

வேதவாக்காக ஏற்பேன். எனவே தயவு செய்து நீங்கள் அபகரித்த பொருட்களை அவரவர்களுக்குக் கொடுத்து விடுங்கள்'' என்றான் வருணன்.

''எனது கணவர் சொல்வதைத் தான் நான் செய்தல் வேண்டும். மற்றவர்களுக்குத் துன்பம் செய்து அபகரித்த சொத்துக்கள் எனக்கு வேண்டாம். அதனால் எனக்குத் தீமையே வரும். எனக்குத் துன்பம் வருவதை நான் விரும்பவில்லை. அதனால் தில்லை மாமாவினதும் எனது கணவரினதும் விருப்பத்திற்கு இணங்கி மற்றவர்களின் சொத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் வீட்டை விட்டு வெளியேறி விடுவேன்'' என்றாள் பூரணி.

அதைக் கேட்டுத் திகைத்துத் திகிலடைந்து போயிருந்தான் கனகசபாபதி.

320. நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

துன்பங்கள் எல்லாம் துன்பஞ் செய்தவரையே சென்றடையும். அதலால் துன்பம் வருவதை விரும்பாதவர்கள், பிறருக்குத் துன்பஞ் செய்ய மாட்டார்கள்.

## அறம்

கனகசபாபதி வருமாறு சொல்லியனுப்பியதால் புஸ்பநாதனும் கிருஸ்ணனும் கனகசபாபதியின் வீட்டுக்கு வந்திருந்தனா். நடக்க முடியாது காலில் கட்டுப் போட்டபடி சாய்வுநாற்காலி யொன்றில் அமா்ந்திருந்த கனகசபாபதி புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் கண்டதும் மெதுவாக எழுந்தார்; ''புஸ்பா மகளுக்குத் திருமணப்பதிவு முடிவடைந்து விட்டது. இரண்டொரு வாரத்துள் திருமணத்தையும் முடிக்க வேண்டும் என்று மாப்பிளை பகுதியினா் கூறிச் சென்றுள்ளனா். திருமணம் முடிந்தவுடனை மாப்பிளை போயிடுவா். மேலை நாடுகளிலை விடுமுறை கொடுக்க மாட்டார்களாம். அவா் நல்ல வேலையிலை இருக்கிறார். அதாலை மாப்பிளை பகுதிக்கு நாளைக்குச் சாப்பாடு கொடுக்கப் போறன். நல்ல இறைச்சியாய் வேணும். ஒரு கடாவை விலை பேசி அவிழ்த்தந்து இஞ்சை வைத்து அடியுங்கோ. வேறை இடத்திலை வைத்தடித்தால் கலந்து போடுவியள்'' என்ற கனகசபாபதி புஸ்பநாதனிடம் காசு கொடுத்தார்.

மறுநாள் காலை புஸ்பநாதனும், கிருஸ்ணனும் ஓர் ஆட்டுக்கடாவுடன் கனகசபாபதியின் வீட்டுக்கு வந்தனா். அதை அறுத்து அதன் இரத்தத்தை எடுத்து சட்டியில் ஊற்றி வெண்காயம், பச்சைமிளகாய், மிளகாய்த்தூள் ஆகியன போட்டு சூடாக்கினான் கிருஸ்ணன். போத்தலில் கொண்டு வந்த சாராயத்தை எடுத்து வந்தான் புஸ்பநாதன்.

இருவரும் இரத்தவறுவலை உண்டு சாராயத்தைக் குடித்தனா். ஆடு பங்கு போட்டு முடிந்ததும் கனகசபாபதி இருவரையும் அழைத்து சாராயத்தைக் கொடுத்தான்; நான் குடிக்கிறேல்லை. உங்களுக்காக வாங்கி

வைத்திருக்கிறன். இதைக் குடிச்சிட்டு இறைச்சியை வெட்டித் தந்து விட்டுப் போங்கோ'' என்றான்.

''நோவுக்கு சாராயம் நல்லது. இன்றைக்கு இறைச்சியோடை குடியுங்கோ'' என்றான் கிருஸ்ணன்.

''புஸ்பா சிவராசாவுக்கும் சுந்தரத்திற்கும் நான் இறைச்சியைக் கொடுத்து விட்டு வாறன். நீ இறைச்சியை வெட்டு. கொஞ்சத்தை எடுத்துத் தாவன் வீட்டை கொண்டு போய்க் கொடுப்பம்'' என்றான் கிருஸ்ணன்.

சிவராசாவினதும் சுந்தரத்தினதும் இறைச்சியைக் கொடுத்து விட்டு கிருஸ்ணன் வீட்டுக்கு இறைச்சியுடன் சென்றான் கிருஸ்ணன். அவனது மனதில் நீண்டகாலமாக ஒரு திட்டம் இருந்தது நல்ல அழகியான புஸ்பநாதனின் மனைவி இலட்சுமியுடன் உறவு கொள்ள வேண்டுமென்று பல முறை அவன் முயற்சித்தும் கைகூடவில்லை. அதனால் இன்று எப்படியும் முடித்து விடவேண்டுமென நினைத்தான்.

கிருஸ்ணனைக் கண்டதும் இலட்சுமிக்கு விஷயம் புரிந்தது. முற்றத்திற்கு வந்தாள்; இறைச்சியை புஸ்பண்ணை கொடுக்கச் சொன்னார்''.

''திண்ணையிலை வைத்து விட்டுப் போ'' என்றாள் இலட்சுமி.

சில கணங்கள் பேசாமல் நின்றான் கிருஸ்ணன். பின்; இலட்சுமி என்றான்.

''திண்ணையிலை வைத்து விட்டுப் போ. உன்ரை குணத்தை அறியாமல் கூடிக் கொண்டு திரியுற அந்தாளுக்கு என்னமதி. உயிர்க் கொலை செய்கிற அன்றைக்கு வாய்க்கு ருசியாய் தின்னுறத்துக்காக சாராயத்தையும் குடிப்பியள். குடிச்சவுடனை நினைவு மாறி விடும். பிறகு பொம்பிளை தேவை. பொம்பிளையள் சம்மதித்தால் பொம்பிளைக்குக் கொடுக்க களவு எடுப்பியள். பிறகு உங்கடை குடும்பம் பட்டினியாலை வாடும். பிள்ளைகள் பள்ளிக் கூடத்திற்குப் போகாமல் வேலைக்குப் போகுங்கள். பிறகு தினமும் குடும்பச் சண்டைதானே. அடி பிடி சண்டை கடைசியாய் குடும்பப் பிரிவு... இப்படித்தானே உலகத்திலை நடக்குது.

''இப்ப நீ நல்லாய்க் கதைக்கப் பழகீட்டாய்'' என்று சிரித்தான் கிருஸ்ணன்.

''எங்கடை பரம்பரை உயிர்க் கொலை செய்வதில்லை. எனது தந்தையார் சொல்வார்; ''எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வது தான் அறம். உயிர்க் கொலை அறம் இல்லாத எல்லாச் செயல்களுக்கும் வழிவகுக்கும்'' என்று அது எவ்வளவு உண்மையானது என்று உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. எனது சாதகத்தில் எழில் செவ்வாய் இருந்ததால் எனக்குப் பேசி வந்த திருமணங்களெல்லாம் குழம்பிக் கொண்டிருந்தன. தனது பெண் வாழ வேண்டும் என்று அப்பா ஆசைப்பட்டதாலை தான் இவரைக் கட்ட வேண்டிய

நிலை ஏற்பட்டது. அதனால் அவா் மனம் வருந்தித் தான் செத்தவா்'' அழுதாள் இலட்சுமி.

கிருஸ்ணனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. திண்ணையில் இறைச்சியை வைத்து விட்டுத் திரும்பினான்; கிருஸ்ணா, தயவு செய்து உயிர்க் கொலை செய்யாதைங்கோ. நீ அவரை விட்டுப் பிரிந்தால் அவா் தனியச் செயலாற்ற மாட்டார். உயிா் கொலை செய்வது மகா பாவம். நீங்கள் உயிா் கொலை செய்யாத நாட்களில் பாவம் செய்வது குறைவு. உயிா்களைக் கொலை செய்து அதன் மாமிசத்தைப் புசிக்கத் தொடங்கிய பின்பு தான் ஒவ்வொரு பாவங்களாகச் செய்யத் தொடங்குகிறீர்கள். உயிா் கொலையை விடும் வரை மனிதன் செய்யும் பாவங்களுக்கு முடிவு வராது. மாமிசத்தின் சுவை பஞ்சமா பாதங்களைச் செய்யத் தூண்டும். உங்களையே எடுத்துப் பாருங்கள். உயிா் ஒன்றை கொலை செய்யும் எண்ணம் ஏற்பட்ட பின்பு தானே தகாத ஆசைகள் மனதில் தலை தூக்குகின்றன. தயவு செய்து இனிமேலாவது திருந்தி நடவுங்கள்'' என்றாள் ராணி.

கிருஸ்ணன் எதுவும் பேசாது திரும்பிச் சென்றான். அவனது மனதுள் ராணியின் எடுப்பான அங்கங்கள் தோன்றிச் சிரித்தன. மேலும் மோக மயக்கத்துக்குள்ளான அவன்; எப்படியும் உன்னை அடைந்தே தீருவேன்'' என்று தீா்மானித்தான்.

321. அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓா் உயிரையும் கொல்லாமை ஆகும். கொல்லுதல் அறமில்லாத எல்லாச் செயல்களையும் செய்ய வைக்கும்.

## உயா்ந்த அறம்

அன்று நாவலா் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வருணனும் பூரணியும் ஆதித்தியனும் செல்லம்மாளும் தில்லை நடராசாவும் வந்திருந்தனா். அன்று வருணன் மகா கணபதிக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருந்தான். அன்று வெள்ளிக்கிழமை. அதனால் ஏராளமான பக்தா்கள் கோயிலுக்கு வந்திருந்தனா். கோயில் பூசைகள் முடிவடைந்ததும் குருக்கள் வருணனிடம் வந்தார்; ''தம்பீ பூரணி மிகவும் நல்ல பெண். உயிா்களிடத்தில் அன்பு கொண்டவள். ஏழை எளியவா்களுக்குத் தன்னால் இயன்றளவு உதவிகள் செய்பவள். அவள் தனது உழைப்பு முழுவதையும் கோயிலில் இருக்கும் ஏழைகளுக்குக் கொடுப்பாள். கோயிலுக்குத் தருவாள். அவனைக் காணும் போதெல்லாம் இப்படியான நல்ல பெண்ணுக்கு ஏன் கடவுள் துன்பங்களைக் கொடுத்துள்ளாரோ என நினைத்துக் கவலைப்படுவேன்'' என்று குருக்கள் கூறிக் கொண்டிருக்கும் போது வருணன் குறுக்கிட்டான்; ''ஐயா, பூரணிக்கு அப்படி என்ன துன்பங்கள் நோ்ந்தன''.

‘‘பணம் பொருள் மட்டுமா வாழ்க்கை. வீட்டில் கனகு எந்த நாளும் பிரச்சினைப் பட்டபடி, சாப்பிடாமல் இருக்கலாம். ஆனால் நிம்மதியாக இருத்தல் வேண்டும்’’ என்றார் குருக்கள்.

‘‘உண்மை தான் ஐயா, தில்லை மாமா அவரைப் பற்றியெல்லாம் கூறி விட்டு, பூரணியைப் பற்றிக் கூறினார். மாமாவுக்கு பூரணியைப் பிடித்தமையால் தான் நான் அவளைத் திருமணம் செய்ய முடிவு செய்தேன். சிலரைத் திருத்தவே முடியாது. அதில் ஒருவர் பூரணியின் அப்பா. புதன்கிழமை என்னைச் சாப்பிட வருமாறு அழைத்தார். நாங்கள் குடும்பமாக வந்தோம். எனது அப்பாவுக்குச் சாராயம் வாங்கி வைத்திருந்தார். அத்துடன் ஒரு கடாவை வெட்டிச் சமைத்திருந்தார்கள். நாங்கள் பரம்பரைச் சைவம். பிராணிகளை எமது சகோதர உயிர்களாகவே கருதி வாழ்கிறோம். அப்படியிருக்க எம்மைக் கேளாமல் எப்படி மாமிச உணவைச் சமைக்கலாம். மாமியும் மாமிசமுண்ணாத குடும்பத்தைச் சேர்ந்தவர். பூரணியும் உண்பதில்லை. தான் உண்பதற்காக மாமிசம் சமைத்திருக்கிறார். தில்லை மாமிசம் உண்ணும் அதற்காகத் தான் சமைத்தேன். என்று சொன்னார். தில்லை மாமா மாமிசம் உண்டதாக நான் அறியவில்லை. அதனால் நான் பூரணியைப் பார்க்க வரும் போது சுடுநீர்ப் போத்தலில் தேநீரும் உணவும் கொண்டு வருகிறேன்’’ என்றான் வருணன்.

‘‘பூரணியின் சாதகம் நல்ல அதிட்டமுள்ளது. அதனால் தான் உம்மைப் போன்ற குணவான் ஒருவன் அவளுக்குக் கணவனாக அவளுக்குக் கிடைத்துள்ளான். கனகசபாபதியின் குணத்திற்கு உயிர்க் கொலைகள் செய்யும் குடிகாரன் கூடக் கிடைக்க மாட்டான்’’ என்றார் குருக்கள்.

அப்பொழுது அங்கே விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் வந்தனர். தில்லைநடராசா அவர்களை வருணனுக்கு அறிமுகப்படுத்தினார்.

‘‘தில்லை மாமா என்னுடன் தொலைபேசியில் கதைக்கும் போதெல்லாம் பாடசாலையைப் பற்றியும் கோயிலைப்பற்றியும் நிறையச் சொல்லுவார். உதவி செய்யும் படி வற்புறுத்துவார். உங்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்று சொன்னீர்களானால் செய்து தரலாம்’’ என்றான் வருணன்.

‘‘மிகவும் நன்றி. நான் நாளைக்குச் சொல்கிறேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘நான் நன்றாக உழைக்கிறேன். நான் உழைத்தவற்றை ஏழைகளுக்குக் கொடுத்துதவ விரும்புகிறேன். உங்கள் பாடசாலையில் கற்கும் பிள்ளைகள் எல்லோருக்கும் கற்றல் உபகரணங்கள் வாங்கித் தருகிறேன். ஏழை மாணவர்களின் உயர் கல்விக்கு நிதியுதவி செய்ய விரும்புகிறேன். அன்னதான மடத்தில் தினமும் உணவளிக்க நிரந்தர வைப்பு நிதியொன்றையும் வைப்பிலிட விரும்புகிறேன்’’ என்றான் வருணன்.

‘‘மிகவும் மகிழ்ச்சி தம்பி’’ என்றார் குருக்கள்

பூசை முடிந்ததும் மக்கள் வெளியே வந்தனர். ஸ்ரீனிவாசன் சுவாமியார் அரசமர நிழலில் இருந்தார். வருணனும் பூரணியும் சுவாமியாரின் அருகே சென்றனர். பூரணி சுவாமியாரின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தாள். வருணனும் நமஸ்கரித்தான்.

''ஆண்டவனுக்கு உதவவே மக்களில் பலர் விரும்புகிறார்கள். உலகத்தையும் உயிர்களையும் சகல போகங்களையும் படைத்தவனுக்கு உதவி செய்யப் பலர் போட்டி போடுகின்றனர். ஆனால் இறைவனின் குழந்தைகளாகிய ஏழைகளுக்கு உதவ யாரும் முன்வருவதில்லை. உயிர்களுக்கு உதவுவது தான் ஆண்டவனை அடையும் வழி. ஏழைகளுக்கு ஒரு பிடி அன்னமிட்டால் அந்த அன்னம் கடவுளின் வயிற்றைச் சென்றடையும். பூரணி ஏழைகளுக்கு எந்நாளும் உதவி செய்பவள். அதனால் தான் நல்ல ஒரு கணவனைப் பெற்றாள். தான் பெறும் பொருட்களைப் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து உண்டு வாழ்பவனே உலகில் உயர்ந்தவனாவான். கடவுள் உலகில் உள்ள அனைத்து உயிர்களிலும் கலந்திருக்கிறார். அவர் தனியாக எப்பொழுதாவது இருந்ததில்லை. பூமியில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் தமக்குள் இறைவன் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். கடவுள் குடியிராத பொருட்கள் எவையும் உலகில் இல்லை'' என்றார் சுவாமியார்.

''சுவாமி தங்களின் அருளுரையின் படி நான் வாழ்ந்ததால் தான் எனக்கு இந்த உயர்ந்த வாழ்வு கிடைத்தது. எனது தந்தை இப்பொழுதும் திருந்துகிறார் இல்லை. அதற்கு வழி செய்யுங்கள்'' என்றாள் பூரணி.

சுவாமியார் சிரித்தார்; ''பிடிவாதம், அகங்காரம், ஆணவம் மிக்கவர்களாக இருந்த அசுரர்களே திருந்தியிருக்கிறார்கள். உனது தந்தை ஒரு பொருட்டா'' என்றார் சுவாமியார்.

322. பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

கிடைத்தவற்றை எல்லோருக்கும் கொடுத்துத் தானும் உண்டு வாழ்வது, அறநூல்கள் கூறுகின்ற அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## நல்லவை

கனகசபாபதி சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தான். அதன் காலப்பகுதியில் நிலத்தில் அமர்ந்திருந்தான் நடராசா. பூரணிக்குத் திருமணப் பதிவு செய்வதற்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்தே நடராசாவும் அவனது மனைவியும் கனகசபாபதியின் வீட்டில் வந்து தங்கியிருந்தனர். நடராசா ஓடித்திரிந்து திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

‘‘நடராசா நீதான் எனக்கு இனி உதவி. போகிற போக்கைப் பார்த்தால் கலியாணம் முடிய சகுந்தலையும் பூரணியோடை போயிடுவள் போலை கிடக்கு... என்று கூறி விட்டுக் கண்ணாடிக்குவளையுள் இருந்த சாராயத்தை எடுத்துக் குடித்து விட்டு பொரித்து வைத்திருந்த இறைச்சித் துண்டொன்றை எடுத்துக் கடித்தான் கனகசபாபதி.

‘‘உங்களது மருமகனுக்கு இவை யெல்லாம் பிடிப்பதில்லை. அவர் போகுமட்டு மென்றாலும் இதுகளை விடலாம் தானே’’ என்றான் நடராசா.

‘‘ஊரிலை நான் ஒருத்தருக்கும் தலை வணங்கியது கிடையாது. மனிசியைத் தில்லை நடராசா ஏமாத்தி கலியாணம் ஒன்றைச் சரிப்படுத்திப் போட்டு திட்டமிட்டு என்னை அறுக்கப் பார்க்கிறான். என்னிலை அவற்றை திட்ட மொண்டும் அவியாது. மருமோன் அவரைத் தெய்வமாய் நினைக்கிறாராம். அதைப் பயன்படுத்தித் தில்லை தன்ரை காரியத்தைப் பார்க்கிறத்துக்காகத் தான் என்ரை வீட்டிலை சம்மந்தம் பேசினது. நான் கெட்டனான். எல்லோருக்கும் துன்பம் செய்கிறனான் என்று தெரிந்த பின்பும் ஏன் என்னுடைய மகளுக்கு சம்பந்தம் பேசினார். என்ரை பிள்ளை குமராய் இருந்தால் உவருக்கு என்ன?’’

நடராசா பேசாமல் இருந்தான். அப்பொழுது பூரணி அங்கே வந்தாள்; ‘‘அவர் வாறதெண்டவர். நடு வீட்டுக்கை இருந்து சாராயம் குடிச்சு இறைச்சியும் சாப்பிர்றியள். அவர் மச்சம் சாப்பிடுவதில்லை. பிற்பக்கமாய்ப் போங்கோ’’ என்றாள்.

‘‘பெத்து முப்பது வருடமாய் வளர்த்து வாற என்னை விட நேற்று வந்த அவர் உனக்கும் கொம்மாவுக்ம் பெரியவராகீட்டார். எல்லாம் அவன் தில்லை செய்த சதி வேலை. திட்டமிட்டுக் கழுத்தறுத்துப் போட்டான். அதோடை மருமகனுக்கு இல்லாதது பொல்லாத தெல்லாவற்றையும் சொல்லி என்ரை குடியைக் கெடுக்கப் பார்க்கிறான். ஊரவற்றை சொத்துக்களை யெல்லாம் நான் அசம்பாளிக்கிறனாம். சின்னத்தம்பி அருள்நேசன் எல்லாம் பிச்சைக்காரன்கள் இவங்கடை காணியை ஏன் எனக்கு என்ரை காணியைத் தான் அவங்கள் பிடிச்சு வைச்சிருக்கிறாங்கள்’’ என்றான் கனகசபாபதி கோபமாக.

‘‘எனக்கு நீங்கள் பொய் சொல்லுறியள். கடை கட்டின காணி சிதம்பர சொத்துக் காணி. அந்தக் காணியின்ரை உறுதியை எடுங்கோ பார்ப்பம். பிரக்கிராசியாரும் தான் உழைக்கிறத்துக்காக கள்ள உறுதி உங்களுக்கு எழுதித் தந்துள்ளார். நீங்கள் காசைக் கொடுத்து காவல் துறை அதிகாரிகளை மடக்கிப் போடுவியள். எனக்கு உந்தப் பழிச் சொத்துக்கள் ஒன்றும் வேண்டாம். நீங்கள் திருந்தாட்டில் நான் தில்லை மாமா வீட்டை போயிடுவன். திருமணம் முடியும் வரையும் மரியாதை கெடாமல் இஞ்சை என்னை இருக்க விடுங்கோ. இல்லா விட்டால் தில்லை மாமா வீடு தான் பெண் வீடாய் இருக்கும்’’ ஆத்திரத்துடன் சொன்னாள் பூரணி.

“அப்படியோ... ? அந்தளவிற்கு தில்லையன் உமக்கு ஓதிப் போட்டான். அவன் வீட்டை வந்து தேத்தண்ணீர் குடிக்கேக்கையே என்னைக் கெடுக்கப் போறான் என்று எனக்குத் தெரியும். நான் உனது திருமணத்திற்காக மாற மாட்டன். நீ விருப்பமில்லா விட்டால் போய் தில்லை வீட்டை இருந்து கலியாணத்தைச் செய். நான் செத்துப் போனதாய் நினை”.

“ஏன் இப்பிடிக் கதைக்கிறியள். பூரணி உங்கடை மகள் அதோடு முதல் முதல் வீட்டிலை நடக்கிற சுப காரியம். திருமணம் செய்து வாழ்க்கையை ஆரம்பிக்கிற ஒரு பெண்ணை தகப்பன் திட்டக் கூடாது. திருமணத்திற்கு இன்னும் மூன்று நாட்கள் தானே இருக்கு. அது வரையாவது பேசாமல் இருங்கோ” என்றான் நடராசா.

“எந்த உயிர்களையும் கொல்லாமல் இருப்பது தான் மிக உயர்ந்த அறச் செயல் உயிர்க் கொலை தான் எல்லாம் பாவங்களுக்கும் காரணியாகிறது. உயிர்க் கொலையுடன் பொய்யும் புரட்டும் களவும் செய்யிற இதுவரை எனது தந்தை என்று சொல்லவே வெட்கமாக இருக்கிறது” அழுதாள் பூரணி.

“உள்ளுக்கு வாம்மா. புது வாழ்க்கையை ஆரம்பிக்கிற நீ சந்தோசமாக இருக்க வேணும். இருந்தாள் கடைசி வரையும் திருந்த மாட்டாது. பிள்ளை குட்டிகளின் நலனை விரும்புறவன் ஒழுக்கமாக வாழ்வான். பிள்ளைகளின் நலனில் அக்கறை உள்ளவனாக இருப்பான். பிள்ளைகளின் நலன்களுக்காக எதையும் துறக்கத் தயாராக இருப்பான். ஆனால் இவர் தனது நலனுக்காகப் பிள்ளைகளையே கொல்லக் கூடியவர். நீ வா, உயிர்களின் மேல் அன்பில்லாதவனிடத்தில் பாசத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. பாசத்தைத் தொலைத்து விட்டு பாதகமான செயலில் ஈடுபட்டிருக்கும் ஒருவனிடம் மனிதாபிமானம் பற்றிப் பேசுவதால் நாம் தான் பலவீனர்களாவோம். வா வந்து சந்தோசமாக இரு. மருமகன் நல்லவர். அவர் உனது தந்தையின் நடத்தையைப் பற்றிக் குறை நினைக்க மாட்டார்” என்றாள் சகுந்தலை.

323. ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

மிக உயர்ந்த அறச் செயல் என்பது உயிர்களைக் கொல்லாமல் இருப்பது. அதற்கடுத்த அறம் பொய் சொல்லாமல் இருப்பது.

## நெறி

“ஐயா, உங்களது மனைவி மிகவும் பொறுமை சாலி; மிகவும் நல்லவன்; கணவனுக்கு அடங்கி நடக்கும் தன்மை உடையவள். அப்படிப்பட்ட பெண்ணை நீங்கள் துன்புறுத்தலாமா..? சகுந்தலையின் தகப்பனாரை எனக்குத் தெரியும். சமய பக்தி மிக்கவர்; கோயில்களுக்கும் ஏழை

மக்களுக்கும் அள்ளிக் கொடுப்பவர். எனது குடும்பம் அவருக்கு நிறையக் கடமைப் பட்டிருக்கிறது. உயிர்க் கொலை செய்ய மாட்டார். ஊனுண்ண மாட்டார். அவர் கோழி, ஆடு, மாடுகளை வீட்டில் வளர்ப்பதில்லை. ஏன் வளர்ப்பதில்லை என்று கேட்டால்; “ மிருகங்களை வளர்த்தால் அவற்றை விற்பனை செய்யக் கூடாது. நான் பிள்ளைகளைப் போல வளர்த்த மிருகங்களை விற்றால் வாங்குபவர்கள் அவற்றை அறுத்து உண்ணுதல் கூடும். ஒரு முறை எனது தகப்பனார் இரண்டு காளைகளை வளர்த்தார். வயல் உழுவதைத் தவிர வேறு வேலைகள் எவற்றையும் அவர் அவற்றைக் கொண்டு செய்விக்க மாட்டார். அதனால் அக்காளைகள் இரண்டும் எந்நேரமும் ஓய்வாகவே இருக்கும். அவரிடம் நாகராஜா என்றொருவன் வேலை செய்து வந்தான் அவன் அக்காளை மாடுகளை விலையாகக் கேட்டான். சகுந்தலை அம்மாவின் தந்தையான மாணிக்கவாசகர் நாகராஜாவுக்கு அக்காளை அன்பளிப்பாகக் கொடுத்து அவற்றை எக் காரணம் கொண்டும் விற்கக் கூடாது என்று சொன்னார். நாகராசா அவற்றை கசாப்புக் கடைக்காரனுக்கு விற்று விட்டு மாணிக்கவாசகர் ஐயாவுக்கு யாரோ திருடர்கள் அக் காளைகளைக் களவாக அவிழ்த்துச் சென்று கசாப்புக் கடைக்காரனுக்கு விற்று விட்டதாகப் பொய் சொன்னான். அதனால் மனம் வருந்திய அவர் அதன் பின் கால் நடைகளை வளர்ப்பதில்லை. அப்படியான ஓர் உத்தமருக்கு மகளாகப் பிறந்த சகுந்தலை அம்மா தனது கணவனின் மனம் கோணக் கூடாது என்பதற்காக மாமிச வகைகளை உங்களுக்குச் சமைத்துத் தருகிறார். இது எவ்வளவு கொடுமை” நடராசா கதைத்துக் கொண்டிருக்கும் போது கனகசபாபதி குறுக்கிட்டான்; “ நான் என்னுடைய பழக்க வழக்கங்களை யெல்லாம் சொல்லித்தான் கலியாணம் செய்தனான். சகுந்தலை மாமிசம் சமைத்துத் தருவாள் என்று சொல்லித்தான் எனக்குத் திருமணம் செய்து வைத்தவை. அப்பவே மாட்டன் என்று சொல்லியிருந்தால் எனக்கேற்ற ஒரு பெண்ணை நான் திருமணம் செய்திருப்பன். இப்ப இவ்வளவு கரைச்சல் வந்திராது”.

நீதி நூல்கள் எல்லாம் உயிர்களைக் கொல்லாமல் வாழ்வது தான் அறம் என்று கூறுகின்றன என்று சொல்லும் மாணிக்கவாசகர் ஐயாவின் வீட்டுக்குள் ஒரு நாள் இரவு பெரியதொரு நாகபாம்பு வீட்டுக்குள் நுளைந்து அவரது நாயைக் கடித்து விட்டது. அதைக் கண்ட நானும் அங்கு வேலை செய்யும் நல்லையாவும் பெரியதொரு தடி எடுத்து வந்து அதை அடித்துக் கொல்ல நினைத்தோம். ஆனால் ஐயா விடவில்லை; “நடராசா கொடிய பிராணியானாலும் அதை அடித்துக் கொல்வது பாவம். அதைத் துரத்திவிடு என்றாள்.

“ஐயா யாருக்காவது கடித்து விடும்..” என்றேன் நான்.

“நடராசா, விதியை நாம் புதிதாக உருவாக்க முடியாது. அவனவன் செய்த பாவ புண்ணியங்களுக் கேற்பத் தான் வாழ்க்கை அமைகிறது. மரணம் என்பது பிறந்தன்றே நிட்சயிக்கப்பட்டது. நிட்சயிக்கப்பட்ட தினத்தன்று அது நிட்சயமாக நடைபெறும். அதை எந்த வொரு சக்தியாலும் தடுக்க முடியாது. இந்தக் கொடிய நாகம் இங்கு தான் எங்கோ ஒரு மூலையில் வாழ்கிறது. ஆனால் இதுவரை இதனால் யாரும் கடியுண்டதில்லை. எமது

மனதில் உள்ள ஆற்றல்களை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். மனதை ஆன்மீக சக்தியுடன் இணைத்துக் கொண்டால் உயிர்க் கொலை செய்வதில் நம்பிக்கை ஏற்படாது. எனவே அப்பாம்பைத் துரத்தி விடுங்கள்'' என்று சொன்னார். அப்படியான தர்மவானுக்குப் பிறந்த மகள் இன்று உங்களுக்குத் தனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாகக் கணவனே தனது கண்கண்ட தெய்வமென நினைத்து பணிவிடை செய்யிறாள். அதை நீங்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்'' என்றான் நடராசா.

''மாணிக்க வாசகரோடு சேர்ந்து நீயும் போதனை செய்யத் தொடங்கி விட்டாய்'' என்றான் கனகசபாபதி.

''உயிர்களெல்லாவற்றையும் இறைவன் மனிதனுக்கு உதவி செய்வதற்காகப் படைத்தானே தவிர கொன்று உணவாக பயன்படுத்தப் படைக்கவில்லை'' என்று மாணிக்கவாசகர் ஐயா அடிக்கடி சொல்லுவார்'' என்றான் நடராசா.

''நீ வந்தால் சொல்லுற வேலைகளைச் செய்து விட்டுச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போ. அதை விட்டு விட்டு உபதேசம் செய்தால் வேலை இல்லாமல் போய் விடும்'' என்ற கனகசபாபதி சாராயம் நிரம்பிய கண்ணாடிக் குவளையை எடுத்து வாயில் வைத்து உறிஞ்சினான்.

''பாவம் சகுந்தலை அம்மா'' என்று நினைத்தான் நடராசா.

324. நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

உயிர்கள் எதையும் கொல்லாமல் வாழும் வாழ்க்கை தான் மிகச் சிறந்த அறவாழ்க்கை என்று நீதி நூல்கள் பலவும் கூறுகின்றன.

## உயர்ந்தவர்கள்

வருணனின் திருமணம் பூரணியின் வீட்டில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது. கனகசபாபதியினது உறவினர்களில் பெரும்பான்மையானோர் திருமண விழாவுக்கு வரவில்லை. வந்தவர்களும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளாமல் சென்று விட்டனர். சிதம்பரேஸ்வரன் குடும்பத்துடன் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட போதும் மதிய உணவு உண்ணவில்லை. ஆதித்தியன் வந்து சிதம்பரேஸ்வரனை மதிய உணவு உண்ணுமாறு கேட்டார்.

''ஐயா, உங்களை எனக்குத் தெரியாது. சற்று முன்பு தான் மாப்பிளையின் தந்தை என்று அறிந்தேன். அத்துடன் மாப்பிளையின் நல்ல குணங்கள் பலவற்றையும் அறிந்து கொண்டேன். எனது சகோதரன் மிகவும்

கேவலமானவர். அவரின் நடத்தையால் நான் பாதிக்கப்பட்டதற்காகச் சொல்லவில்லை. அவரின் நடத்தையால் பண்பான ஒரு குடும்பப் பெண்ணின் வாழ்வு பாழாகி விட்டது. எனது மைத்துணியின் குடும்பத்தினர் மாமிசம் உண்பதில்லை. உயிர்க் கொலை செய்ததில்லை. எனது மாமனாரான மாணிக்கவாசகர் மிருகங்களை வீட்டில் வளர்ப்பதில்லை. அதற்குக் காரணம் தான் வளர்த்த விலங்குகளை விற்க நேர்ந்தால் அவற்றை வங்குபவர்கள் கொன்று விடுவார்கள் என்ற எண்ணம் தான். அப்படியான ஒரு குடும்பத்தில் பிறந்த பெண்ணைக் கொண்டு மாமிசம் சமைப்பிக்கும் வீட்டில் மாமிசம் உண்ணாத நான் எப்படிச் சாப்பிட முடியும். உங்களது மகன் சுடுநீர்ப் போத்தலில் தேநீரும் பொதியாக உணவு கொண்டு வந்து உண்பதாகக் கேள்விப்பட்டேன். அது தான் சரி. மாமிசம் உண்ணும் வீடுகளில் திருமகள் வாழமாட்டாள். மாமிசத்தின் துர்நாற்றமே நல்ல தெய்வங்களை வீட்டில் இருந்து துரத்தி விடும். அதனால் தான் சாப்பிட எனக்கு மனம் வரவில்லை. சாப்பிடுவதை நினைக்க வயிற்றைப் புரட்டுகிறது. உங்களின் வீட்டில் மாப்பிளை பொம்பிளையுடன் வந்து சாப்பிடுகிறேன்’’ என்றான் சிதம்பரேஸ்வரன்.

அதன் பின் ஆதித்தியன் எதுவும் கூறவில்லை. அவன் கூறுவது அவருக்கு நியாயமாகப்பட்டது. எனினும் கனகசபாபதியின் வீட்டாரை அவமதிக்கக் கூடாது என்று எண்ணி கல்யாணப் பந்தியில் இருந்து சாப்பிட்டார். சிதம்பரேஸ்வரன் கூறியது போல் அவருக்கு வயிற்றைப் புரட்டியது.

பெண்ணும் மாப்பிளையும் ஆதித்தியனின் வீட்டுக்கு வந்த போது கனகசபாபதியின் உறவினர் அனைவரும் அங்கிருந்து அவர்களை வரவேற்றனர். ஊர்ப்பிரமுகர்கள் ஊரவர்கள், அயலவர்கள் எல்லோரும் அங்கு வந்து மணமக்களை ஆசீர்வதித்துப் பரிசுகள் கொடுத்தனர்.

திருமணம் முடிந்து மூன்று தினங்கள் கழிந்ததும் மணமக்கள் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திற்குச் சென்றனர். குருக்கள் மணமக்களை அன்புடன் வரவேற்று ஆசீர்வதித்தார். பின்பு அர்ச்சனை தட்டை வாங்கிச் சென்று மகா கணபதிக்கு அர்ச்சனை செய்தார். பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு வருணனும் பூரணியும் சுவாமியாரிடத்தில் வந்து அவரை நமஸ்கரித்தார்.

‘‘மகனே உலகில் மனித ஜீவன் தான் மேலானது. தேவர்களை விட துறவிகளை விட ஏன் கடவுளை விடக் கூட மனிதன் உயர்ந்தவன் மேலாவன் என்பதைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை. கோயில்களுக்குச் சென்று பூசைகள் செய்து, கட்டடங்களைக் கட்டி தொண்டுகள் செய்வது தான் ஆன்மீக வாழ்வாகும். அது தான் மனிதனின் வளர்ச்சி; நாகரிகம்; மன ஒருமைப்பாடு உயிர்களைக் கொலை செய்யாதவன் தீய செயல்களைச் செய்ய மாட்டான். ஆனால் நீ உயிர் கொலை செய்யும் வீட்டில் அன்பானவர்களின் மன விருப்பை ஏற்று திருமணம் செய்த போதும் இது வரை அந்த வீட்டில் நீ பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. உனது மனவலிமையை நான் பாராட்டுகிறேன். சொல்லப் போனால் உனக்கிருக்கும் அந்த மனவலிமை எனக்கில்லை. துறவிகள் பலர் வாழ்க்கையில் ஏற்படும்

துன்பங்களுக் கஞ்சியே துறவிகளாகிறார்கள். உன்னைப் போன்ற பலர் இல்லற வாழ்வில் இருந்து கொண்டு கொல்லாமையைக் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் தான் துறவிகளை விட உயர்ந்தவர்கள். அப்படியானவர்களிடம் தான் துறவியான நான் ஆசீர்வாதம் பெறல் வேண்டும்'' என்றார் ஸ்ரீனிவாசன் சுவாமியார்.

''வருணன் பதை பதைத்தான். சுவாமி தாங்கள் வாயிலிருந்து இப்படியான வார்த்தைகள் வரலாமா... இதைக் கேட்பதே பாவம்''

சுவாமியார் சிரித்தார்; ''மகனே இறைவன் உயிர்கள் மேலுள்ள மட்டற்ற கருணையினால் கேவலமான பிறவிகள் எடுத்து வந்து அவ்வுயிர்களுக்கு உதவியதை நீ அறியவில்லையா.... அடியார்க்கு அடியவன் இறைவன். மெய்யன்போடு தொழுபவர்களின் ஏவலன் இறைவன். அதே போல் உயிகளைக் கொல்லாமல் வாழ்பவன் இறைவனிலும் பெரியவன். இதை நான் கூறவில்லை மகனே நீதி சாஸ்திரம் கூறுகிறது'' என்றார் சுவாமியார்.

வருணனின் உடல் சிலிர்த்தது. கண்கள் கலங்கின.

325. நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

வாழ்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சி துறவறம் மேற் கொண்டவர்களை விட, இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு கொல்லாமையைக் கடைப்பிடிப்பவர்கள் உயர்ந்தவர்கள்.

## மரணமில்லாதோர்

நாலாம் சடங்கிற்கு வந்தவர்கள் எல்லோரும் சென்று விட்டனர். திருமண வேலைகளைக் கவனித்தமையால் ஆதித்தியன் மிகவும் களைத்துப் போனார். ஆயிரம் பேருக்கு மேல் மதிய உணவு உண்டனர். வேலையாட்களோடு சேர்ந்து கடுமையாக ஆதித்தியன் வேலை செய்தார்.

மாலையானதும் களைப்பு மிகுதியால் ஓர் இடத்தில் அமர்ந்தார். அவருக்கு உடலெல்லாம் வலித்தது. தலையைச் சுற்றியது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. அருகில் இருந்த தில்லை நடராசாவுக்குச் சொன்னார்; ''தில்லை என்னால் இயலாமல் இருக்கு. கண்கள் இருண்டு கொண்டு வருகின்றன. தலையைச் சுற்றுகிறது'' என்றவர் மெதுவாகக் கண்களை மூடினார்.

பரபரப்புடன்; ''ஆதி.... ஆதி...'' என்று பலமாக அழைத்தார் தில்லை நடராசா. அவரது சத்தம் கேட்டு வருணனும் பூரணியும் செல்லம்மாள் ஓடி வந்தனர். செல்லம்மாள், ''ஐயோ கடவுளே'' என்று கத்தினாள்.

வருணன் செம்பில் நீர் கொண்டு வந்து ஆதித்தியனது முகத்தில் தெளித்தான். தில்லை நடராசா பனை ஓலையால் செய்த விசிறி ஒன்றை எடுத்து வந்து விசுக்கினார்.

ஆதித்தியனை மோட்டார் வண்டியில் ஏற்றினார்கள். தில்லை நடராசாவும் தணிகாசலமும் அவருடன் கூடச் சென்றனர். வருணன் மோட்டார் வண்டியில் ஏறினான்; ‘‘தம்பி நான் போறன் நீ நிண்டு கொள். பலர் உங்களைப் பார்க்க வருவார்கள்’’ என்றார் தில்லை நடராசா.

‘‘மாமா’’... என்று எதையோ கூற முற்பட்டான் வருணன் அதற்கு முன் தில்லை நடராசா சொன்னார்; ‘‘ஆதிக்கு ஒரு வருத்தமும் இல்லை. இரண்டு மூன்று தினங்களாகச் சாப்பிடாமல் கடுமையாக வேலை செய்ததால் ஏற்பட்ட மயக்கம் தான். பயப்படத் தேவையில்லை. நீ இரு’’.

வருணன் அதன் பின் பேசவில்லை. திரும்பிச் சென்று பந்தலுள் இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டான். பூரணி அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

‘‘அவனுக்கு ஒன்றும் ஆகாது செல்லம். நீ ஏன் நல்ல நாளில் அழுகிறாய். என்னுடைய தகப்பனார் நூற்றிப்பத்து வயது வரை வாழ்ந்தவர். எனக்கு இப்ப எண்பத்தெட்டு வயது. இப்பவும் இளைஞன் மாதிரி இருக்கிறன். வருணன் வந்தாப்பிறகு ஆதி சாப்பாட்டைக் கவனிப்பதில்லை. வேலை வேலை என்று ஓடித்திரிந்தவன். ஒரு கிழமைக்குள்ளை இப்படியான பெரியதொரு திருமணத்தைச் செய்வது எவ்வளவு கஷ்டம்’’ என்றார் ஆதித்தியனின் தந்தை திருநாவுக்கரசு.

திருநாவுக்கரசு ஆறுதல் வார்த்தைகள் கூறிய போதும் செல்லம்மாளின் மனம் சாந்தியடையவில்லை. அதனால் விக்கி விக்கி அழுதாள்.

திருநாவுக்கரசிற்குக் கோபம் வந்தது’’ நல்ல நாளிலை ஆட்கள் வர்ற இடத்திலை தூக்கமான சம்பவம் நடந்தாலும் அழக்கூடாது. ஆதிக்கு எந்த வருத்தமும் இல்லை. இப்ப பார் வருவன். ஆயுள் குறுகியதாக இருந்தாலும் கொல்லாமை என்கின்ற அறத்தைக் கைக் கொண்டு வாழ்பவனை உலகத்து உயிர்களைக் கவர்ந்து செல்லும் எமன் கூட நெருங்க மாட்டான். உயிர்களைக் கொல்பவன் எமன். அவனது தொழிலை உலகில் வாழ்ந்து கொண்டு ஒருவன் செய்வானே யானால் அவனைக் கொல்ல எமன் விரைந்து வருவான். உயிரைக் கொல்லாதவனை எமன் விருப்புடன் நோக்குவான். எமது பரம்பரையில் ஒருவர் கூட உயிர்க் கொலை செய்ததில்லை. பிறகேன் நீ அழுகிறாய்?’’ என்று கேட்டார் திருநாவுக்கரசு.

இரவு எட்டுமணிக்கு தில்லைநடராசாவும் ஆதித்தியனும் மோட்டார் வண்டியில் வந்தனர்.

‘‘இந்தாள் சொல்லுறத்தைக் கேட்டால் தானே நேற்று இரவு சாப்பிடேல்லை. காலமையும் சாப்பிடேல்லை. மத்தியானமும் சாப்பிடேல்லை. தேத்தண்ணியைக் குடிச்சுக் கொண்டு இருந்திருக்கு. வைத்தியர் எல்லா சோதனைகளும் செய்து பார்த்து விட்டு ஒரு வருத்தமும் இல்லை. என்று சொன்னாப் பிறகு தான் ஆதி தான் சாப்பிடாத விசயத்தைச் சொன்னது. வைத்தியர் ஏசிவிட்டு போகச் சொன்னவர். சாப்பாட்டைக் கொண்டு வாருங்கோ’’ என்றார் தில்லைநடராசா.

‘‘நேற்றிரவும் காலமையும் சாப்பிட மறந்திட்டன். வேலைப் பராக்கில் அது எனக்குத் தெரியவில்லை’’ என்றார் ஆதித்தியன்.

‘‘கொஞ்ச நேரம் எல்லாரையும் பயமுறுத்திப் போட்டியள்’’ என்றாள் செல்லம்மாள்.

‘‘அப்பா சாப்பிடவில்லை என்று உங்களுக்குத் தெரியாதே...’’ என்றான் வருணன்.

‘‘வேலைப் பழுவாலை நானும் கவனிக்கேல்லை’’ என்றாள் செல்லம்மாள்.

‘‘கொடிய விபத்து ஏற்பட்டாலும் உயிர்க் கொலை செய்யாமை என்னும் அறத்தைக் கைக் கொண்டு வாழ்பவனை மரணம் நெருங்காது. அவன் பிழைத்து விடுவான். எனது தந்தையார் எண்பது வயதில் வாகன விபத்தொன்றில் அகப்பட்டு செத்துப் போனார் என்று நினைத்தம். பதினைந்து நாட்கள் பேச்சு மூச்சின்றிக் கிடந்தவர்கள் அதிலை தப்பி முப்பது வருடம் வாழ்ந்தவர். அந்த நம்பிக்கையில் தான் நான் அப்படிச் சொன்னனான்’’ என்றார் திருநாவுக்கரசு.

செல்லம்மாள் உணவு கொண்டு வந்து குளைத்துக் கொடுக்க ஆதித்தியன் கையில் வாங்கியுண்டார்.

‘‘உதை நேற்றுச் செய்திருந்தால் இவ்வளவு பிரச்சினையும் வந்திராது’’ என்றான் வருணன்.

326. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணும் கூற்று.

கொல்லாமை என்ற அறத்தினைக் கைக் கொண்டு வாழும் ஒருவனின் வாழ்நாளில் உயிரைக் கவர்ந்து செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

## செய்யக் கூடாது

திருமணம் நடை பெற்ற பின்பு வருணனும் பூரணியும் கனகசபாபதியின் வீட்டுக்குச் செல்லவில்லை. திருமண வைபவம் முடிந்த பின் வீட்டுக்ச் செல்லும் போது வருணன் சொன்னான்; ‘‘மாமா நான் சொன்ன எதையும் நீங்கள் கருத்தில் கொள்ளவில்லை. படுபாதகமான செயல்களையே மிண்டும் மீண்டும் செய்து வருகிறீர்கள். உயிர்களை கொலை செய்து அதன் ஊனை உண்ணக் கூடாது. என்று நான் சொன்ன பின்பும் வீட்டில் ஆடு வெட்டிச் சாப்பிட்டுள்ளீர்கள். ஊன் உண்பதன் மூலம் வேறு பல தீமைகளையும் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஊன் உண்பவனின் வீட்டில் உண்பது பாவம் என்பதற்காகத் தான் நான் இன்றும் உங்கள் வீட்டில் உணவு உண்ணவில்லை. நான் உங்கள் வீட்டில் உணவு உண்ண வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் ஊன் உண்ணும் செயலைக் கைவிடுங்கள். இல்லாவிட்டால் இது தான் நான் உங்கள் வீட்டுக்கு வரும் இறுதி நாள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்’’ என்று கூறி விட்டுச் சென்றான்.

திருமணமாகி ஐந்தாம் நாள் வருணனும் பூரணியும் வெளிநாடு செல்ல விருந்தனர். அவர்கள் வெளிநாட்டிற்குச் செல்லும் செய்தியை ஆதித்தியன் கனகசபாபதியின் வீட்டுக்குச் சென்று சொன்னார். அன்று சகுந்தலையும் சிதம்பரேஸ்வரன் குடும்பத்தினரும் ஆதித்தியனின் வீட்டுக்கு வந்து பூரணியையும் வருணனையும் வழியனுப்பினர்.

வருணனும் பூரணியும் வெளிநாடு சென்று ஒரு வாரம் கழிந்து விட்டது. அவர்கள் வந்து பயணம் சொல்லாது சென்றது கனகசபாபதிக்குக் கடுங் கோபத்தை வரவழைத்தது. இவற்றிற் கெல்லாம் காரணம் தில்லைநடராசா என்று நினைத்தான். அதற்காக அவனைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்த கனகசபாபதி புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் வீட்டுக்கு அழைத்து வந்து சாராயம் கொடுத்தான்.

‘‘புஸ்பா என்ரை குடும்பத்தைத் தில்லை சின்னா பின்ன மாக்கிப் போட்டான். அவன் திட்டமிட்டுச் செயலாற்றி என்னுடைய மகளைப் பிரித்து வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டான். அதோடை முப்பத்தைந்து வருடமாய் வாய் பேசாத என்னுடைய மனைவி என்னைக் கண்டபடி பேசுறாள் அது மட்டுமே கலியாணத்திற்குப் பிறகு அவள் என்னோடை கதைக்கிறேல்லை. இதுக்கெல்லாம் காரணமான தில்லை நடராசாவை நான் சும்மாய் விட மாட்டன். எனக்கு நீங்கள் தான் உதவவேணும். எவ்வளவு காசென்றாலும் தருவன் அவனை அடிச்சு முறிக்க வேணும்.’’

‘‘தில்லைக்கு அடிக்கிறது அவ்வளவு சுலபமான நவராசாவும் சேனாதியும் நாங்கள் தான் அடித்தது என்று கேள்விப்பட்டால் எங்களைச் துலைச்சுப் போடுவங்கள்’’ நடுங்கினான் புஸ்பநாதன்.

‘‘அவங்களுக்குத் தெரிய ஏன் அடிக்கிறாய். மூன்று மாசத்துக்கு முன்னம் என்னை அடிச்சு முறிச்சவங்கள். இன்று வரை ஆரெண்டு தெரியாது. இந்தா இதைப் பிடி. இதிலை இரண்டாயிரம் ரூபா இருக்கு. விஷயத்தை முடித்துப் போட்டு வா. இன்னும் இரண்டாயிரம் தாறன்’’

கிருஸ்ணன் காசை வாங்கினான். மூன்று தினங்களுக்குப் பின்பு ஆதித்தியனின் வீட்டுக்கு இரவு சென்று விட்டுத் திரும்பும் வழியில் தில்லை நடராசா தாக்கப்பட்டு விடியும் வரை வீதியில் கிடந்தான்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தில்லைநடராசா மூன்று தினங்களுக்குப் பின்பு தான் மயக்கம் தெளிந்தார். தில்லை நடராசா தாக்கப்பட்ட செய்தியைத் தொலைபேசி மூலம் அறிந்து கொண்ட வருணன் உடனே நாடு திரும்பினான்.

‘‘எனக்கென்றால் இது மாமாவினுடைய வேலையாகத் தான் இருக்கும். அவா் பாவங்களுக்கு அஞ்சாதவா். காவல் துறையில் அறிவித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் தாக்குவதற்கு எத்தனிப்பாா்’’ அதனால் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்றான் வருணன்.

‘‘அவன் காவல் துறையைக் காசாலை மடக்கிப் போடுவன். அவனை அடித்துக் கொலை செய்ய வேண்டும்’’ என்றாா் ஆதித்தியன்.

‘‘தம்பீ, தனது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தாலும் அதைத் தடுப்பதற்காக பிற உயிா்களை வருத்துவதோ அல்லது கொல்வதோ கூடாது. உனக்குத் தெரியும் தானே. எனது காளை மாடு ஒன்று இரண்டு முறை என்னைக் இடித்தது தற்செயலாகப் பலமாக இடித்திருந்தால் நான் இறந்திருப்பன். இருந்த போதும் அதை நான் கசாப்புக் கடைக்காரனுக்குக் கொடுக்கவில்லை. நீயே பல முறை அதை விற்கும் படி சொன்னனீ. வாங்குபவன் அதன் முரட்டுக் குணத்திற்காகக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்று விடுவான். அதாலை தான் நான் விற்காமல் அதற்குக் கொடுக்கும் உணவைக் குறைத்தேன். அதிக வேலை வாங்கினேன். காலப்போக்கில் அக்காளை தனது குணத்தை மாற்றிக் கொண்டது’’ என்றாா் திருநாவுக்கரசு.

அதன் பின் ஆதித்தியன் எதுவும் பேசவில்லை. வருணன் ஆத்திரப் பட்டான்; ‘‘பாவம் பாா்க்க முடியாது. நான் கட்டாயம் காவல் நிலையத்திற்குச் சென்று புகாரிடுவேன்’’ என்று கூறி காவல் நிலையத்தில் புகாரிட்டான். கனகசபாபதியைக் கைது செய்து விசாரித்த காவல் துறையினா் தகுந்த சாட்சியங்களின்மையால் அவனை விடுதலை செய்தனா்.

‘‘வருணா, எந்த ஒரு செயலுக்கும் முடிவு இருக்கிறது. கனகன் ஒரு நாளைக்குத் தான் செய்த தீமைகளுக்காகக் கட்டாயம் வருத்தப்படுவான். அவனுடன் நீ சண்டைக்குச் செல்லாதே. பின்பு நான் தான் உன்னை ஏவி விட்டதாக ஊராா் பழிப்பா். தன்னைக் கொல்ல நினைப்பவனையும் மன்னிப்பது தான் தா்மம்’’ என்றாா் தில்லை நடராசா.

327. தன்உயிா் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிா் நீக்கும் வினை.

தன்னுடைய உயிர் உடம்பில் இருந்து நீங்கிப் போவதாக இருந்தாலும், அதைத் தடுப்பதற்காக தான் இன்னொரு உயிரை நீக்கும் செயலைச் செய்யக் கூடாது.

## இழிவானது

ஆலடிக் கிராமத்தின் ஓரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் முனி ஒன்று குடியிருப்பதாகவும் அம்முனி கேட்ட வரங்களை கொடுக்கும் என்றும் அக்கிராம மக்கள் நம்பியிருந்தனர். அதனால் சித்திரை மாத வருடப்பிறப்புக்கு முன் வரும் சனிக்கிழமைகளிலும் வருடப் பிறப்பிற்குப் பின் வரும் சனிக்கிழமைகளிலும் அக்கிராம மக்கள் காட்டுக்குச் சென்று இரவு பொங்கிப் படைப்பார்கள். மறுநாட்காலை அக்கிராம மக்கள் முனிக்கு தாம் நேர்ந்து வளர்த்த கடாக்களையும் சேவல்களையும் பலியிடுவார்கள் பலியிடப்பட்ட கடாக்களையும் சேவல்களையும் விலை கொடுத்து வாங்க ஏராளமான அயல் கிராம மக்கள் முனி கோயிலுக்கு வருவார்கள்.

கடந்த பல வருடங்களாக தனபாலனும் புஸ்பநாதனும் சின்னத்தம்பியும் கிருஸ்ணனுமே கடாக்களையும் சேவல்களையும் வெட்டி வந்தனர். சுமார் அயிரம் கடாக்களும் ஆயிரத்திற்கு மேற்பட்ட சேவல்களும் அன்று முனி கோயிலில் பலியிடப் படும். வெட்டுவதற்காக ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா கொடுப்பார்கள். அத்துடன் அன்று முழுவதும் குடிப்பதற்குச் சாராயமும் உண்ண உணவும் கொடுப்பார்கள்.

வெள்ளிக்கிழமை மாலை வேளையில் பூசை தொடங்கும். பூசை தொடங்கிய நேரத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குப் பறை மேளம் அடிப்பார்கள். இரண்டு சனிக்கிழமைகளிலும் கடாக்களை வெட்டுவதன் மூலம் தனபாலனுக்குப் பத்தாயிரம் ரூபா கிடைக்கும். கோயில் பொங்கல் தொடங்குவதற்கு இருபத்தெட்டு நாட்களுக்கு முன் முனிக்கு விளக்கு வைப்பார்கள். அன்று பலியிடுவோர் அனைவரையும் அழைத்துப் பூசை செய்து முனிக்குப் பொங்கிப் படைப்பார்கள். அன்றிலிருந்து வேள்வி முடியும் வரை பூசை நடைபெறும். பின் அடுத்த வருடமே பூசைகள் ஆரம்பமாகும்.

முனி கோயிலில் பூசை தொடங்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு நாள் தனபாலனும் சின்னத்தம்பியும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். தனபாலன் நோயுற்ற பின்பு அடிக்கடி மகா கணபதி ஆலயத்திற்கு வருவான். சின்னத்தம்பி தினமும் வருவான். தனபாலனுக்கு கோயிலுக்கு வந்த பின்பு நோய் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டு வந்தது. அதனால் அவன் தோட்ட வேலைகளில் ஈடுபட்டான். சாரதாவும் முன்போலில்லாமல் அவன் மீது அன்பு சொரிந்து வந்தாள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் சுவாமியாரும் அவனை மதித்து வந்தனர்.

பூசை முடிந்தவுடன் தனபாலனும் சின்னத்தம்பியும் சுவாமியாரின் அருகில் வந்து இருந்தனர். முனி கோயிலில் வேள்விக்கான ஆயத்தங்கள்

நடைபெறுவதைச் சுவாமிகள் அறிந்திருந்தார். நல்ல வருமானம் கிடைப்பதால் தனபாலனும் சின்னத்தம்பியும் ஆடுகளை வெட்டச் சென்று விடுவார்கள். என்ற எண்ணிய சுவாமியார் சொன்னார்; ‘‘தனபாலுவும் சின்னத்தம்பியும் இப்பொழுது திருந்தி விட்டார்கள். இனிமேல் உயிர்களுக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒருவனது நடத்தை சிறந்ததாகவும் தூய்மை உடையதாகவும் இருந்தால் மட்டும் தான் அவனது வாழ்க்கை சிறப்படையும். சொல்லில் மட்டும் ஒருவன் தூயவனாக இருப்பதால் பயன் எதுவும் வந்து விடாது. செயலும் தூய்மை உடையதாக இருத்தல் வேண்டும். உயிர்களைக் கொல்வதால் எவ்வளவு பெருந்தொகையான செல்வம் வந்தாலும் அச் செல்வம் நல்ல பயனைத் தராது. அறிவுள்ளவர்கள் ஆன்ம சுத்தியுள்ளவர்கள் கற்றறிந்தவர்கள் உயிர்களைக் கொல்வதை விரும்ப மாட்டார்கள். எந்த ஒரு மனிதனும் முன்பு செய்த தீமைகளை உணர்ந்து விட்டானேயானால் அவன் மீண்டும் தீமைகளைச் செய்ய எண்ண மாட்டான். ஒழுக்கம் என்பது மீண்டும் மீண்டும் செய்கின்ற நற் செயல்களால் தான் உண்டாகிறது. எனவே நீங்கள் இருவரும் முனி கோயில் வேள்வியின் போது மிருகங்களைப் பலியிடச் சொல்ல மாட்டீர்கள் என்று நம்புகிறேன்’’ என்றார் சுவாமியார்.

‘‘நான் கடைசி வரையும் போக மாட்டேன். இது சத்தியம் என்றான் தனபாலன்.

‘‘நானும் சத்தியமாகப் போகமாட்டேன்’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘மனிதன் சத்தியம் செய்து பழகுதல் ஆகாது. வார்த்தைகள் உயிருள்ளவை. அவை வித்துப் போன்று முளைத்து எதிர் காலத்தில் பயன் தரவல்லவை. எனவே நாம் பேசும் வார்த்தைகளில் கண்ணியத்தைப் பேணுவதைப் போல செயலிலும் தூய்மையைப் பேணுதல் வேண்டும்’’ என்றார் சுவாமியார்.

மறு நாள் முனி கோயில் பூசாரியும் புஸ்பநாதனும் கிருஸ்னனும் தனபாலனது வீட்டுக்கு வந்தனர். அப்பொழுது அங்கே சின்னத்தம்பியும் இருந்தான்.

‘‘வாற வெள்ளிக் கிழமை முனியப்பருக்கு விளக்கு வைக்கப் போறன். வழமையாக வந்து செய்யிற மாதிரி செய்து வேள்வியைச் சிறப்பியுங்கோ’’ என்றான் பூசாரி.

‘‘நான் வரமாட்டன்’’ என்றான் தனபாலன்.

‘‘நானும் வரமாட்டான்’’ என்றான் சின்னத்தம்பி.

‘‘வழமையாகத் தாறத்தை விடக் கூடத்தாறன்’’

‘‘அண்ணை நான் உந்தக் கொலைத் தொழிலை விட்டுட்டன். நீங்கள் இலட்சம் இலட்சமாகப் பணம் தந்தாலும் இனிமேல் நான் மிருகங்களைப்

பலியிர்ற தொழிலைச் செய்ய மாட்டன். அதாலை பட்ட கஷ்டங்கள் போதும்'' என்றான் தனபாலன்.

சின்னத்தம்பி நீ என்ன சொல்லுறாய்'' என்று கேட்டார் பூசாரி.

''நானும் தனபாலண்ணை சொன்னதைத் தான் சொல்லுறன்'' என்றான் சின்னத்தம்பி.

பூசாரியார் திகைத்துப் போனார். புதிதாக யாரைத் தேடுவது என்ற எண்ணம் அவரின் மனதில் தலை தூக்கியது.

ஒரு கோயிலுக்குப் பூசை செய்யும் சான்றோரான உங்களுக்கு உயிர்க் கொலை செய்வது மகா பாவம் என்று தெரியாதா. ஒரு உயிரைக் கொல்வதால் ஆத்ம ஈடேற்றம் கிடைக்கு மென்று நீங்கள் நினைப்பது தவறு. அதனால் நீங்காத பழிதான் வரும்'' என்றான் சின்னத்தம்பி.

328. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

ஓர் உயிரைக் கொல்வதால் வரும் நன்மை பெரிதாக இருந்தாலும், சான்றோர்க்குக் கொலையால் வரும் ஆக்கம் மிக இழிவான தாகும்.

## தாழ்ந்தவர்

தனபாலனும் சின்னத்தம்பியும் வேள்வியன்று மிருகங்களைப் பலியிட மறுத்ததால் புஸ்பநாதன் சற்றுக் கலக்கமடைந்தான். அதனால் அவன் பூசாரிக்கு உறுதியான வார்த்தைகள் எதையும் கூறவில்லை. அதனால் கலக்கத்துடன் சென்ற பூசாரி மறு நாள் சாராயப் போத்தலுடன் புஸ்பநாதனின் வீட்டுக்கு வந்தான்.

''புஸ்பா, கோயில் காரியம். பல வருடங்களாகச் செய்து வரும் கோயில் கைங்கரியத்தைத் திடீரென்று விட்டால் முனியப்பர் கோபித்துக் கொள்வார். எனவே இந்த முறை செய். வேறு சிலரையும் கேட்டுள்ளேன். வழமையாகச் செய்பவர்கள் செய்தால் தான் வேள்வி சிறக்கும்'' என்ற பூசாரி சாராயப் போத்தலைத் திறந்து, சாராயத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் குடித்து விட்டு, பின் சாராயத்தை ஊற்றிப் புஸ்பநாதனுக்குக் கொடுத்தான். புஸ்பநாதன் அதை வாங்கிக் குடித்து விட்டுப் பாத்திரத்தை நிலத்தில் வைத்தான். பூசாரி மீண்டும் அதற்குள் சாராயத்தை ஊற்றி விட்டுக்; ''குடி என்றார். புஸ்பநாதன் அதை எடுத்துக் குடித்தான்.

''தனபாலனும் சின்னத்தம்பியும் இப்ப பெரும் பக்தராகி விட்டாங்கள். உவங்களை முனியப்பர் தண்டிக்காமல் விடமாட்டார். ஒவ்வொருவரும் நேர்த்தி வைத்துத் தானே கடாவை வளர்க்கிறார்கள். நம்பிக்கை இல்லாவிட்டால்

அயிரக்கணக்கிலை வளர்ப்பார்களா....? நேர்த்தி வைத்துக் கடாய் வளர்த்து கோயிலடிலை வெட்டின ஆர் குறைவாக இருக்கினை'' பூசாரி கேட்டார்.

''நேர்த்தி வைக்கிறவை கையோடை ஒரு கத்தியையும் கொண்டு வந்து வெட்டுறது தானே. நேர்த்தி வைக்கிறது ஓராள். வெட்டறது இன்னொராளே'' புஸ்பநாதன் கேட்டான்.

அதற்குப் பூசாரியால் உடனே பதில் கூற முடியவில்லை. சில கணங்கள் யோசித்தார்; ''கோயில் அலுவல். கண்டபடி கதைக்கக் கூடாது. விருப்பமில்லா விட்டால் விடு நான் முனியப்பரோடை நோகிறன். முனியப்பர் விரும்பினால் வேள்வியைச் செய்யட்டும் அனால் அவர் காட்டுவர்'' என்றார் பூசாரி.

நிலத்தில் இருந்த சாராயப் போத்தலை எடுத்து பாத்திரத்தில் நிறைத்த புஸ்பநாதன் அதைக் குடித்து விட்டுச் சொன்னான்; '' எனக்கு விருப்பம் தான். பத்தப் பதினைந்து வருடங்களாக அயிரக்கணக்கான உயிர்களை வெட்டி முனியப்பருக்குப் படைச்சனான். ஆனால் நீங்கள் சொல்லுற மாதிரி எதுவும் நடக்கவில்லை. கஸ்டத்துக்கு மேலை கஷ்டம் தான் வருது. வேள்வியால் பலன் இருக்கு தென்றால் நான் இத்தறுதீலை கோடிஸ்வரனாகி இருக்க வேண்டும். இப்ப கோடீக்கை பூனை தான் படுதிருக்கு.... தனபாலனும் சின்னத்தம்பியும் சுவாமியாரிட்டைப் போனதாலை நல்லாய் இருக்கிறாங்கள். சின்னத்தம்பிக்கு சகோதரியாலை நல்ல உதவி. நாலு மருமக்கள் வெளிநாடுகளிலை இருக்கிறாங்கள். அவன் திருந்தினாப் பிறகு இலட்சம் இலட்சமாய் அனுப்புறாங்கள். அதாலை தான் சின்னத்தம்பி உயிர்க் கொலையையும் களவையும் கைவிட்டது. என்றைக்கு அவற்றை அவன் விட்டானோ அண்டையிலை இருந்து நல்லாய் இருக்கிறான். முந்தி என்னோடை சேர்ந்து குடித்து விட்டுக் களவெடுத்தவன் இப்ப எனக்குப் புத்திமதிகள் சொல்லுறான்'' என்ற புஸ்பநாதன் சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான்.

பூசாரியார் எதுவும் பேசத் தோன்றாது புஸ்பநாதனையே பார்த்துக் கொண்டிருந்தார்.; ''நீங்கள் நேற்றுப் போனாப் பிறகு சின்னத்தம்பி வீட்டை வந்து சொன்னான்; ''புஸ்பா, நானும் உன்னோடு சேர்ந்து வேள்வியில் பல உயிர்களைப் பலி கொண்டனான். அந்த நேரம் அது சரியெனப்பட்டது. இப்போது யோசித்துப் பார்க்கும் பொழுது பயமாகவும் கவலையாகவும் இருக்கிறது. அநியாயம் செய்பவர்களுக்கே தீமை செய்யக் கூடாது. பாவம் ஒன்றும் அறியாத உயிர்களைப் பிள்ளைகளைப் போல வளர்த்து விட்டு மாலைகள் தோரணங்கள் கட்டிப் பிரமுகர்களை அழைத்து வருவது போல அழைத்து வந்து பலியிடுவது எந்த வகையில் நியாயமானது. அதனால் எமது குடும்பத்துக்கு மட்டுமல்ல குலத்திற்கே ஈன மேற்படும். உயிர்க் கொலை செய்பவர்களை இனத்தவர்கள், அயலவர்கள், உறவினர்கள் எவரும் மதிப்பதில்லை. அவர்கள் எம்மைப் புலையர் என்றே கருதுகின்றனர். இத் தொழிலை விட்டு விட்டு மனிதனாக வாழ்ந்து பார். அப்பொழுது தான்

இல்வாழ்க்கையின் சிறப்பு உனக்குத் தெரியும்'' என்றான். அது உண்மை என்று இப்ப தான் எனக்குப் புரிகிறது'' என்றான் புஸ்பநாதன்.

சாராயம் கொடுத்தால் புஸ்பநாதன் சம்மதிப்பான் என்று சாராயத்தை வாங்கி வந்தார் பூசாரி. ஆனால் புர்பநாதன் அதைக் குடித்து விட்டுத் தத்துவம் பேசிக் கொண்டிருந்ததை அவரால் சகிக்க முடியவில்லை; ''ஏதோ யோசிச்சுச் சொல்லு. கோயில் கைங்கரியம்'' என்று கூறி விட்டு எழுந்து நடந்தார் பூசாரி.

பூசாரி சென்றதும் இலட்சுமி மகிழ்வுடன் புஸ்பநாதனின் அருகில் வந்தாள்; ''நீங்கள் சம்மதித்து விடுவீர்கள் என்று பயந்தேன். நீங்கள் மறுத்தது எனக்குச் சந்தோசமாக உள்ளது. உயிர்களை நீங்கள் சொல்லுறத்தாலை கோயிலிலை எனக்குப் பக்கத்தில் நிற்க யாரும் வருவதில்லை. கீழ் சாதிப் புலையர் என்று நினைத்து என்னை ஒதுக்கி விடுகிறார்கள்'' என்றாள் இலட்சுமி.

329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

கொலைத் தொழிலின் இழிவை அறிந்த பெரியவர்கள் கொலை செய்து வாழ்பவர்களைப் புலையராகவே கருதுவார்கள்.

## துன்பநிலை

புஸ்பநாதன் வேள்வியில் கலந்து கொள்ள மறுத்ததால் வேதனைப்பட்ட பூசாரி, கிருஸ்ணனை அழைத்து முன்பிலும் பார்க்க அதிக பணங் கொடுத்து அவனைச் சம்மதிக்க வைத்தார்.

வேள்வியன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடாக்கள் பலியிடுவதற்காக வந்திருந்தன. வெள்ளிக்கிழமை இரவு கிருஸ்ணன் மனம் மாறி விடுவான் என நினைத்த பூசாரி அவனுக்கு அளவுக்கு அதிகமாகச் சாராயத்தைக் கொடுத்தார். அதனால் அவனால் சனிக்கிழமை காலை எழுந்து நிற்க முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடி வந்தான். அவனால் கடாக்களை வெட்டும் கத்தியைத் தூக்க முடியவில்லை. வெளியிடத்தில் இருந்து மூவரைப் பலியிடுவதற்காக அழைத்து வந்திருந்தார் பூசாரி. கிருஸ்ணன் கடாவின் தலையைப் பிடிக்க இன்னொருவன் கடாவை வெட்டினான். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட கடாக்கள் பலியிடப் பட்டன.

கிருஸ்ணன் கடாவின் தலையைப் பிடிக்க வெளியூரில் இருந்து வந்தவன் வெட்டும் போது கத்தி தவறி கிருஸ்ணனின் கையை வெட்டி விட்டது. பலத்த காயத்துக்குள்ளான கிருஸ்ணனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

கையில் கிருஸ்ணனுக்குப் பத்துத் தையல்கள் போடப்பட்டன. இரத்தம் அதிகம் வெளியேறியதால் இரத்தம் ஏற்றப்பட்டது. புஸ்பநாதன் வைத்தியசாலைக்கு வந்து இரத்தம் கொடுத்தான்.

பத்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெற்ற கிருஸ்ணன் பதினொராம் நாள் வீட்டுக்கு வந்தான். வைத்தியசாலையில் தங்கிச் சிகிட்சை பெற்ற கிருஸ்ணனை அவனது மனைவியோ பிள்ளைகளோ சென்று பார்க்கவில்லை. வயதான அவனது தகப்பன் பொன்னையாவே அவனைச் சென்று பார்த்தார்.

வீட்டுக்கு வந்த கிருஸ்ணன் கோபத்துடன் தனது மனைவியான ஆதிரையை ஏசினான்; ''பத்து நாட்கள் நான் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெற்றேன். புரிசன் என்ற முறையில் ஒப்புக்காவது நீயும் உன்னுடைய பிள்ளைகளும் ஒரு முறையென்றாலும் வந்து பார்த்திருக்கலாம். வரிசம் முழுக்க நான் உழைத்துத் தாறன். ஒரு வேளையென்றாலும் சாப்பாடு கொண்டு வந்து தந்தீர்களா ?''

''உங்களுக்குச் சமைத்துக் கொண்டு வருவதற்கு வீட்டில் ஏதாவது பொருட்கள் இருக்க வேண்டும். நாங்கள் அப்பாவின் வீட்டுக்குச் சென்று விட்டோம். இன்று நீங்கள் வீட்டுக்கு வந்து விட்டதாக அறிந்து வந்தோம். இங்கிருந்து நாம் என்ன செய்வது. மீண்டும் எனது தந்தையாரின் வீட்டுக்குச் செல்லப் போகிறோம். நீங்கள் உங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் ஆதிரை.

''உயிர்க் கொலை செய்யிறவன் எந்நாளும் வறுமையில் வாடுவான். அவன் நோய் மிகுந்த உடம்போடு துன்பப்படுவான் என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது எவ்வளவு உண்மை என்பது உண்னைப் பார்த்தால்த் தெரிகிறது'' என்றார் பொன்னையா.

''இரத்தச் சேற்றை மிதித்ததால் இரண்டு கால்களும் புண்ணாகி விட்டன. மருந்து கட்டினாலும் வேதனையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று அழுதான் கிருஸ்ணன்.

''அம்மா ஆதிரை வயது போன நேரத்தில் இவனை என்னால் பராமரிக்க முடியுமா...? சற்று யோசித்துப் பார். என்னாலை முடிந்தளவில் ஏதாவது பொருட்கள் தருகிறேன். அவனுக்குச் சமைத்துக் கொடு'' என்றார் பொன்னையா.

''பழி பாவங்களுக்கு அஞ்சாது உயிர்களைக் கொல்லும் இவருடன் வாழ்ந்து நான் பட்ட கஷ்டங்கள் போதும். இனிமேலும் என்னால் இவரின் தொல்லைகளைத் தாங்க முடியாது. அவர் எக்கேடு கெட்டாலும் எனக்குக் கவலை இல்லை. நான் எனது தந்தையின் வீட்டுக்குச் சென்று கூலி வேலைகள் செய்து எனது பிள்ளைகளை வளர்ப்பேன். இவரோடு வாழ்ந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் பாழாகி விடும். பத்து வயதுடைய எனது மூத்த

மகன் இவரைப் போல ஆட்டின் மேல் ஏறியிருந்து ஆட்டை வெட்டுகிறான். தனக்கு உதவியாக அவர் சின்னஞ் சிறு பாலகனைக் கூட்டிச் செல்கிறார். நாளைக்கு அவன் வளர்ந்த பின்பும் தந்தை செய்த தொழிலைத்தானே செய்வன்'' அழுதாள் ஆதிரை.

பொன்னையாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. விழிகள் நீரைச் சொரிந்தன; ''எமது பரம்பரையில் இல்லாத தொழிலை இவன் செய்கிறான். பழி பாவங்களுக்கு அஞ்சாத இவன் உணவில்லாமல் கஷ்டப்பட வேணும். சொற்களை விட செயல்கள் சக்தி வாய்ந்தவை. செயல்களால் தான் ஒருவனைத் திருத்த முடியும். உனது பிள்ளைகளின் எதிர்காலம் நல்லதாக இருக்க வேண்டு மானால் நீ இவனை விட்டுப் பிரியத் தான் வேண்டும்'' என்றார் பொன்னையா.

நாட்கள் சில நகர்ந்தன. காலில் உள்ள புண்கள் வலித்தன. கை அசைக்க முடியாது நொந்தது. பொன்னையாவால் அவனுக்குச் சுவையாகச் சமைத்துக் கொடுக்க முடியவில்லை. அத்துடன் நேரத்திற்கும் சமைத்துக் கொடுக்க முடியவில்லை. அதனால் பசியுடன் வெகு நேரம் காத்திருந்தான். புஸ்பநாதனைப் போல தானும் மறுத்திருந்தால் இவ்வளவு துன்பங்கள் நேர்ந்திராது எனக் கவலைப் பட்டான் கிருஸ்ணன்.

330. உயிர்உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

நோய் மிகுந்த உடம்போடு வறுமையால் வாடும் இழிவான நிலை, முன்னர் உயிர்க் கொலை செய்தவர்களுக்கு ஏற்படும்.

## இழிந்த நிலை

நவராசா காந்திமதியை உயிருக்குயிராகக் காதலித்தான். காந்திமதி அவளுடன் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றவள். எந்நேரமும் படித்துக் கொண்டே இருப்பாள். ஆனால் நவராசா படிப்பதில்லை. விளையாட்டுக்களிலும் பொழுது போக்குக்களிலும் தனது நேரத்தைக் கழிப்பான். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் காந்திமதி சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குச் சென்றாள். நவராசா நான்கு பாடங்களிலும் சித்தியடையாததால் பாடசாலையை விட்டு வெளியேறி கமமும் வியாபாரமும் செய்து வந்தான்.

நவராசா தன்னை காதலிக்கும் விஷயம் காந்திமதிக்குத் தெரியும். இருந்தும் அவன் கல்வியில் அக்கறை இல்லாமல் இருந்ததால் அவள் அவ்விஷயத்தை பெரிது படுத்தவில்லை. பாடசாலையால் விலகிய பின் ஒரு நாள் நவராசா காந்திமதியைத் தனிமையில் சந்தித்தான். இருவரும் சிலகணங்கள் பேசவில்லை. தலையைக் குனிந்து கொண்டு நின்றனர்.

வெகு நெரம் கழித்து நவராசாவே கதைத்தான்; “ உங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கிறதோ தெரியவில்லை. நீங்கள் பல்கலைக் கழகத்தில் படிக்கிறீர்கள். நான் கமம் செய்கிறேன்”.

காந்திமதி சிரித்தாள்; “பத்துப் பன்னிரண்டு வருடங்கள் ஒன்றாகப் படித்த உங்களை நான் எப்படி மறக்க முடியும். என்னுடன் படித்த அனைவரையும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். அதிலும் உங்களின் நினைவு சற்று அதிகமாக உள்ளது” என்றாள் காந்திமதி.

“நவராசா எதுவும் பேசவில்லை. அதனால் காந்திமதி சொன்னாள்; “பல்கலைக் கழகத்தில் கற்பிக்கப்படும் பாடங்களில் நான் கூடுதலான புள்ளிகள் பெற்று வருகிறேன். இந்த முறையும் கூடுதலான புள்ளிகள் பெற்றால் எனக்கு விரிவுரையாளர் பதவி கிடைக்கும். நல்ல சம்பளமும் கிடைக்கும்”.

“எவ்வளவு சம்களம் கிடைக்கும்” நவராசா கேட்டான்.

“மாதம் பதினையாயிரம் ரூபா வரை கிடைக்கும். காலஞ் செல்லச் செல்லக் கூடக் கிடைக்கும்”.

“பல்கலைக் கழகத்தில் ஐந்து வருடங்கள் படித்துப் பதினையாயிரம் ரூபா சம்பளமாகப் பெறுகிறீர்கள். நான் படிக்காமல் பதினையாயிரம் ரூபாவுக்கு மேல் சம்பாதிக்கிறேன். சென்ற மாதம் ஒரு மோட்டார் வண்டி விற்பனை செய்ததில் இருபதினாயிரம் ரூபா இலாபமாகக் கிடைத்தது. வெண்காயச் செய்கை மூலம் இருபத்தையாயிரம் ரூபா வருமாணமாகக் கிடைத்தது. இதை விட வேறு வருமானங்களும் எனக்கு இருக்கு” என்றான் நவராசா பெருமையாக.

“நிலை இல்லாதவற்றை நிலையானவை என்று தவறாக நீங்கள் எண்ணுகிறீர்கள். இது உங்களுக்குத் தீமையைத் தான் தரும். உலகில் நிலையான பொருட்கள் நிலையில்லாத் பொருட்கள் என இருவகையான பொருட்கள் உண்டென்று பெரியவர்கள் கூறுவார்கள். பணம், பொருள், பூமி, நகை நட்டு, போன்ற மனிதன் தேடும் பொருட்களும் அழகு, இளமை, பலம், வலிமை போன்ற மனித சக்திகளும் நிலையில்லாதவை. இன்றிருக்கும் செல்வம் நாளை அழிந்து விடும். இளமையில் உடலில் குடி கொண்டிருக்கும் அழகு, வனப்பு, பலம் போன்றன நாளடைவில் அற்றுப் போய்விடும். நிலையான பொருளான கல்வியைத் தேடுங்கள். அது ஒரு பொழுதும் அழியாது. உங்கள் பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வரும். அது போல நாம் செய்யும் தான தருமங்களும் அழியாது. நிலையாக எம்முடன் வரும். எனவே நீங்கள் நிலையான செல்வத்தைத் தேடுங்கள் விரும்பிய இன்பங்களைப் பெறுவீர்கள்” என்றாள்.

நவராசா சிரித்தான்; ‘‘உலகில் பணத்தால் வாங்க முடியாதது எதுவும் இல்லை. காசு தான் கடவுள். பணம், பொருள் உள்ளவனைத் தான் உலகம் மதிக்கும். பணக்காரன் தான் உலகில் உள்ள இன்பங்கள் அத்தனையையும் அடைகிறான்’’ என்றான் நவராசா.

காந்திமதி எதுவும் சொல்லவில்லை. வருடம் ஒன்று கழிந்தது. காந்திமதி விரிவுரையாளராகப் பல்கலைக்கழகத்தில் பதவி ஏற்றாள். நவராசா கொழும்பில் இருந்து தரகர் ஒருவர் கொண்டு வந்த மோட்டார் வண்டியை விலைக்கு வாங்கினான். பல இலட்சரூபா கொடுத்து வாங்கிய அந்த மோட்டார் வண்டியைப் பலரும் வந்து பார்த்து விட்டுச் சென்றனர். அதை விற்றால் எப்படியும் ஒரு இலட்சரூபா இலாபம் கிடைக்கு மென்று நம்பியிருந்தான் நவராசா. அன்று காலை காவல் துறை அதிகாரி சிவபாதசுந்தரம்; ‘‘கொழும்பில் திருடிய மோட்டார் வாகனம்’’ என்று கூறி நவராசாவைக் கைது செய்தனர். பல முறை வழக்கிற்காகக் கொழும்புக்குச் சென்று வந்தான் நவராசா. அவனிடமிருந்து வாகனத்தைப் பறி முதல் செய்யுமாறு நீதிபதி காவல் துறைக்குக் கட்டளையிட்டார்.

நவராசா கடனாளியானான். அன்று மாலை காந்திமதி விரிவுரையாளராகப் பதவி ஏற்றமைக்காக கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில் விக்னேஸ்வரமூர்த்தி பேசினார்; ‘‘காந்திமதியைப் போல எமது மாணவர்கள் கற்றுத் தேற வேண்டும். செல்வம் இன்று வரும் நாளை சென்று விடும். கல்வி நிலையான செல்வம். மனிதன் இறந்த பின்பும் தொடர்ந்து வரும் மக்களில் பலர் அறியாமையால் நிலையற்றவற்றை நிலையானவை என்று நினைக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும்’’ என்றார்.

காந்திமதி தனக்கு அளித்த கௌரவத்திற்கு நன்றி கூறினாள்; ‘‘நிலையான செல்வத்தைத் தேடுவதன் மூலம் நாம் இம்மையிலும் மறுமையிலும் குறைவில்லாத இன்பத்தைப் பெறலாம். எனக்களித்த இந்த வரவேற்பை நான் மறக்க மாட்டேன். என் கல்லூரித் தாய்க்கும் சமூகத்திற்கும் நன்றி’’ என்றாள்.

நவராசா ஒரு மூலையில் இருந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

331. நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையில்லாதவற்றை நிலையானவை என்று எண்ணுவது அறியாமை ஆகும். அது இழிவையே தரும்.

## கூத்தாடுகளம்

நவராசா தனக்கு பணம் சேர்ந்த விதத்தை நினைத்துப் பார்த்தான். மோட்டார் வாகனத் தரகரான துரைசிங்கம் ஒரு நாள் வந்து சொன்னார்; ‘‘தம்பி நல்ல தொரு மோட்டார் வண்டி நிற்கிறது. என்னிடம் போதியளவு

பணம் இல்லை. எண்பதினாயிரம் ரூபா சொல்கிறான் அறுபது அறுபத்தையாயிரம் ரூபாவுக்கு வாங்கலாம். அவசரமாக அவருக்குக் காசு தேவைப்படுகிறது. உன்னிடம் காசிருந்தால் இருபத்தையாயிரம் ரூபா தா. வாங்கித் தாறன். ஒரு மாதத்திற்குப் பிறகு மிச்சத்தைக் கொடுக்கலாம்''.

நவராசாவுக்கு மோட்டார் வாகனம் ஒன்று வாங்க வேண்டும் என்று வெகு நாளாக ஆசை. அதனால் அதை வாங்க விரும்பிச் சென்று பார்த்தான். அவனுக்குப் பிடித்திருந்தது. அதனால் தன்னிடமிருந்த இருபத்தையாயிரம் ரூபாவைக் கொடுத்து அவ் வாகனத்தை வாங்கினான். ஒரு வாரத்தால் மீண்டும் துரைசிங்கம் அவனிடம் வந்தார்; ''தம்பி அந்த வாகனத்தைக் கொடுப்பம். ஒருத்தன் நல்ல விலை கேட்கிறான். உனக்கு இருபதினாயிரம் ரூபா வாங்கித் தாறன்'' என்றார்.

நவராசா அந்த வாகனத்தைக் கொடுத்தான். அவனுக்கு இருபதினாயிரம் ரூபா அதிகமாக வாங்கிக் கொடுத்தார் துரைசிங்கம். அவன் தரகு காசாக துரைசிங்கத்திற்கு ஐயாயிரம் ரூபா கொடுத்தான். அதன் பின் துரைசிங்கம் அவனுக்கு வாகனங்களை வாங்கிக் கொடுப்பதும் பின் அவற்றை வாங்கி விற்பதுமாக இருந்தார். மாதத்தில் மூன்று அல்லது நான்கு வாகனங்கள் அவன் வாங்கி விற்பான். ஒவ்வொன்றிற்கும் அவனுக்கு ஐயாயிரம், முதுல் பத்தாயிரம் ரூபாவரை கிடைக்கும். அத்துடன் அவன் தோட்டம் செய்தான். முன்பென்றால் இருபத்து நான்கு மணிநேரமும் தோட்ட வேலை செய்வான். தோட்டத்தில் உள்ள எல்லா வேலைகளையும் அவனே செய்வான். அதனால் தோட்டத்தில் இருந்து நல்ல வருமானம் வந்தது.

வாகனம் வாங்கி விற்பனை செய்யத் தொடங்கிய பின்பு அவன் தோட்ட வேலை செய்வதற்கென கூலியாட்களை அமர்த்தினான். காசு கையில் பிளங்கியமையால் வெண்காயம், புகையிலை போன்ற பயிர்களை அதிகமாக நட்டான். அதனால் முன்பை விட அதிகமான வருமானம் கிடைத்தது.

அந்த முறை வெண்காயச் செய்கை மூலம் ஐம்பதினாயிரம் ரூபாவும் புகையிலைச் செய்கை மூலம் ஒரு இலட்ச ரூபாவும் வருமானமாகக் கிடைத்தது. அவன் இரவு பகலாக தோட்டமும் வாகன வியாபாரமும் செய்தான். நாட் செல்லச் செல்ல அவன் வாகனத் தரகரான துரைசிங்கத்திடம் செல்லாது தானே நேரில் சென்று வாகனங்களைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்தான்.

அந்த ஊரில் சிவபாதசேகரம் என்றொரு நிலச் சுவாந்தர் இருந்தார். அவரது நான்கு பிள்ளைகளும் வெளிநாட்டிற்குச் சென்றதால் அவர் தனது தோட்ட நிலங்களைக் குத்தகைக்குக் கொடுக்க விரும்பினார். அந் நிலங்களைப் பொறப் பலர் போட்டி போட்டனர். நவராசா அத்தோட்ட நிலத்திற்கு அதிக குத்தகை கொடுத்துப் பெற்றான். பெற்ற தோட்டம் முழுவதற்கும் அந்த முறை வெண்காயம் பயிரிட்டான். வெண்காயம் நன்றாக விளைந்தது. இலாபமாக பல இலட்சரூபாக்களைப் பெற்றான் நவராசா. படிக்கும் போது காந்திமதியை விரும்பிய நவராசா பணம் அளவுக்கதிகமாகச் சேர்ந்ததும் காந்திமதியின் தகப்பனோடு சிநேகிதம் வைத்தான். நவராசாவின்

உள் நோக்கத்தை அறியாத காந்திமதியின் தகப்பன் நாராயண சுவாமி தனக்குப் பணத் தேவை ஏற்படும் போது அவனிடம் பணம் கேட்பார். நவராசா அவர் கேட்டளவு பணத்தைக் கொடுப்பான். நவராசா பணக்காரனாக இருந்த போதும் படிக்காததால் காந்திமதி அவனை மதிப்பதில்லை.

நவராசா பல வழிகளாலும் பணம் சேர்பதைக் கண்டு மகிழ்ந்த அவனது பேரனான கதிரேசன் ஒரு நாள் சொன்னார்; "தம்பி ஒருவனுக்கு அதிஸ்டமிருந்தால் கூத்தாடும் இடத்தில் நிறைய மக்கள் வந்து சேர்வதைப் போலப் பெருஞ் செல்வம் வந்து சேரும். வந்து சேர்ந்த பணத்தை நாம் அவதானமாகச் செலவு செய்தல் வேண்டும். அது நிலைப்பதற்குரிய முறையில் தான தருமங்களைச் செய்ய வேண்டும். பெரும் அரசர்களுக்குக் கூட நாடும் பொருளும் பொன்னும் நிலைத்ததில்லை. கூத்தாடும் இடத்தில் வந்து சேர்ந்த மக்கள் கூத்து முடிந்ததும் கலைந்து செல்வதைப் போலப் பணமும் போய்விடும். எனவே அவதானமாக இரு" என்றார்.

உள்ளூரில் வாகனங்களை வாங்கி வியாபாரம் செய்த நவராசா வெளியூர்களில் இருந்து தரகர்கள் கொண்டு வரும் வாகனங்களையும் கொள்வனவு செய்து விற்று வந்தான். அவனது வீட்டில் எந்நாளும் நாலைந்து வாகனங்கள் நிற்கும். அன்று கொழும்பில் இருந்து தரகன் ஒருவன் மோட்டார் வண்டியொன்றைக் கொண்டு வந்தான். அழகான நவீன முறையில் அமைத்த அம் மோட்டார் வண்டியை நவராசா பதினைந்து இலட்ச ரூபா கொடுத்து வாங்கினான். அவ்வாகனத்தைப் பல வாகன வியாபாரிகள் வந்து பார்த்து விட்டுச் சென்றனர். துரைசிங்கம் பதினாறு இலட்சரூபா கேட்டார். நவராசா பதினேழு இலட்சரூபா சொன்னான். எப்படியும் அதில் ஒன்றரை இலட்சரூபாவாவது இலாபமாகக் கிடைக்கும் என எண்ணினான் நவராசா.

அன்று இரவு வந்த காவல் துறையினர் அது கொழும்பில் களவாடிய வாகனமெனச் சொல்லி நவராசாவைக் கைது செய்து வாகனத்துடன் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றனர். நீதிபதி வாகனத்தைப் பறி முதல் செய்ததோடு களவாடிய வாகனத்தைக் கொள் முதல் செய்ததற்காக இரண்டு இலட்சரூபா அபதாரம் விதித்தார். தான் தேடிய பணம் முழுவதையும் இழந்த நவராசாவின் காதுகளில் கதிரேசன் சொன்ன வார்த்தைகள் எதிரொலித்தன.

332. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்;
போக்கும் அதுவிளிந் தற்று.

பெருஞ் செல்வம் சேர்வது, கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது, அச்செல்வம் நீங்கிச் செல்வது, கூத்தாடுமிடத்தில் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

## நிலையான அறம்

ஓய்வாக இருக்கும் நேரங்களில் நவராசா கதிரேசனோடு கதைப்பான். கதிரேசன் பெரிதாகப் படிக்காவிட்டாலும் நீதி நூல்களைக் கற்றவர்.

கோயில்களில் அறிஞர்கள் பிரசங்கம் செய்யும் போது அங்கு சென்று அவதானமாகக் கேட்பார். பட்டி மன்றங்கள், விவாத அரங்குகள், நாடகங்கள் நடைபெற்றால் சென்று கேட்பார்; பார்ப்பார். ஓய்வான நேரங்களில் திருக்குறள், நாலடியார், மகாபாரதம், இராமாயாணம் போன்ற நூல்களை வாசிப்பார். அதனால் அவர் இருக்கும் இடத்தில் எப்பொழுதும் நாலைந்து பேர் இருப்பார்கள். ஓய்வான நேரங்களில் கதிரேசன் கதைக்காவிட்டாலும் நவராசா அவருக்கு அருகில் சென்று இருந்து கதைப்பான்.

‘‘தம்பீ, மனிதனால் செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை. செய்ய முடியாது என்று நீ நினைத்தால் ஒரு துரும்பைக் கூட உன்னால் தூக்க முடியாது. பணமோ, பொருளோ அல்லது வேறெந்தச் செல்வத்தாலோ மகிழ்ச்சியைத் தரமுடியுமே தவிர நிம்மதியைத் தரமுடியாது. பணமில்லாதவன் வாழ முடியாது. தான் ஆனால் பணம் மட்டும் தான் வாழ்க்கை இல்லை. பணம் நிலையில்லாதது. இன்று உன்னிடம் இருக்கும் நாளை இன்னொருவரிடம் அது சென்றடையும். மாரிகாலத்தில் மழை பெய்வதைப் போல ஒருவனுக்கு அதிஸ்ட மேற்பட்டால் பணம் மழை போல் கொட்டும். அந்த நேரங்களில் தான் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும். நாம் முயற்சித்தாலும் செல்வம் சேர வேண்டும் என்ற பலன் இல்லா விட்டால் சேராது. சேரும் செல்வத்தைப் பெருக்குவதோடு நிலையான காரியங்களுக்காக அதைப் பயன்படுத்த வேண்டும்’’.

நவராசா, கதிரேசன் சொல்வதை அவதானமாகக் கேட்பான். ஒரு நாள் அவ்வூர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஊரில் வீடு வீடாகச் சென்று வைத்திய சாலையின் குடி நீர் தேவையைப் பூர்த்தி செய்யப் பணம் சேர்த்தார். அவர் நவராசாவிடம் வந்து சொன்னார்; ‘‘ஊரில் உள்ள வைத்தியசாலையைக் கட்டி முப்பது வருடங்களாகிறது. வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும், அங்கு தங்கிச் சிகிட்சை பெறும் நோயாளிகளும் மிகவும் சிரமப்பட்டு கிணற்றில் நீர் எடுக்கிறார்கள். வைத்தியசாலையில் ஒரு நீர்த்தாங்கி அமைக்க விரும்புகிறோம். அதற்கு உதவி செய்யுங்கள்’’.

நவராசா ஒப்புக் கொண்டான். ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தான். வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அவனை வாழ்த்தி விட்டுச் சென்றார். அவர் சென்ற பின்பு கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார்; ‘‘இன்று நீ வைத்தியசாலைக்குப் பெருந் தொகைப் பணத்தைக் கொடுத்ததை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. செல்வம் உள்ள பொழுது நாம் நிலையான அறங்களைச் செய்தல் வேண்டும். நீ தினமும் உழைக்கும் பணத்தின் ஒரு பகுதியை தான தர்மம் செய்வதற்கென்று ஒதுக்கி வை. பத்துரூபா உழைத்தால் ஐம்பது சதத்தையாவது அறச் செயல்களுக்காக ஒதுக்கு. நாம் ஏழைகளாக இருந்த பொழுது பலர் உதவி செய்ததால் தான் இன்று நீ இந்த நிலைக்கு வந்தாய் என்பதை மறந்து விடாதே’’.

இன்னொரு நாள் கதிரேசன் சொன்னார்; ‘‘தம்பி என்னுடன் அன்னதான மடத்தில் இருந்த அருளம்பலத்தின் மகன் மிகவும் கஷ்டப்படுகிறான். அவனது குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்.’’

நவராசா மாதா மாதம் ஒரு தொகைப் பணத்தை கதிரேசனிடம் கொடுத்து அதை அருளம்பலத்தின் மகனுக்குக் கொடுக்கச் சொன்னான்.

''மகனே வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் அளவற்ற முயற்சி எடுத்தல் வேண்டும். அந்த முயற்சி நேர்மையானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் முயற்சியால் பெறும் செல்வத்தின் மூலம் நிலையான அறங்கள் பலவற்றைச் செய்தல் வேண்டும். அதை உன் வாழ்க்கையில் கொள்கையாகக் கடைப்பிடி'' என்றார்.

தேடிய பணம் முழுவதையும் இழந்து விட்டு வீட்டில் பித்துப் பிடித்தவனைப் போல இருந்த நவராசாவின் அருகே சென்று அமர்ந்தார் கதிரேசன். அவனைப் பார்க்கக் கதிரேசனுக்குக் கவலையாக இருந்தது. அவரின் கண்கள் கலங்கின.

''நவம் பாடு பட்டுத் தேடிய பணம் முழுவதும் பறி போய் விட்டதே என்று கவலைப்படாதே. ஒருவருடத்திற்கு முன்பு உன்னிடம் பெருந்தொகையான பணம் இருக்கவில்லை. நீ தேடினாய். அதில் ஒரு பகுதியை நிலையான அறம் செய்து வைப்பிலிட்டுள்ளாய். அறம் உயிர் உள்ளது. தன்னைக் காத்தவனைக் காக்கும் செயற்திறன் மிக்கது. ஏதே ஒரு கெட்ட நேரம் உனக்கு வந்துள்ளது. நேர்மையாக உழைப்பவன், சுயநலமில்லாமல் தான தர்மம் செய்பவன், ஒரு போதும் கெட்டதில்லை. அதனால் கவலைப் படாது தொடர்ந்து முயற்சி செய் கட்டாயம் வெற்றியடைவாய். மனம் தளர்வது தான் ஒரு மனிதனின் அழிவுக்கு முதல் காரணி. மனம் தளர்ந்தால் நீ மட்டுமில்லை உனது குடும்பமே அழிந்து விடும். தைரியமாக எழுந்து சென்று தோட்ட வேலைகளைச் செய். நீ செய்யாத தவறுக்காகவே நீ காவல் துறையால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளாய். அது தவறு என்று ஒரு நாள் தீர்மானிக்கப்படும். அது வரை கவலையோடு சோம்பியிருந்தால் உனக்குத் தான் கேடு'' என்றார்.

''அப்பு, நான் உழைக்கும் போது நீங்கள் கூறிய படி செயற்பட்டேன். இன்று பணத்தை இழந்த போதும் நீங்கள் சொன்னபடி செய்வேன்'' என்றான் நவராசா.

செல்வம் நிலையான தல்ல. அது எந்நேரமும் எம்மை விட்டுச் சென்று விடும் என்று நீ நினைத்தால் கவலைப்பட மாட்டாய். உற்சாகத்துடன் செயற்படுவாய். தான தர்மங்களும் செய்வாய்'' என்றார் கதிரேசன்.

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

நிலையில்லாதது செல்வம்; அத்தகைய நிலையில்லாத செல்வத்தைப் பெற்றால் அதன் மூலம் நிலையான அறங்களைச் செய்தல் வேண்டும்.

# வாள்

மணிவண்ணன் நவராசாவைத் தேடி வந்தான். நவராசா சிவபாத சேகரத்தின் தோட்டக் காணிக்குள் நின்றான்.

‘‘நவம் வியாபாரம் என்பது பந்தய ஓட்டக் குதிரையைப் போன்றது. சில சமயம் இலாபம் வரும். சிலசமயம் உள்ள செல்வத்தையும் கொண்டு போய்விடும். நட்டம் வந்து விட்டதென்பதற்காகத் தொழிலைக் கைவிடக் கூடாது. இழந்த பணத்தைச் செய்த தொழிலில் இருந்து தான் சம்பாதித்துக் கொள்ளல் வேண்டும். பணம் வரும் போது எவ்வளவு தைரியமாக இருந்தோமோ அதே போல் பணம் சென்ற பின்பும் தைரியமாக இருந்தால் தான் நாம் இழந்த பணத்தை மீட்க முடியும். கவலைப்படுவதன் மூலம் மனிதன் பலவீன முள்ளவனாகிறனே தவிர பலசாலியாவதில்லை. அத்துடன் இழந்த பணத்தையிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் செயலாற்ற முடியாது. எனவே மகா கணபதி மீது பாரத்தை ஒப்படைத்து விட்டுத் தொழிலைச் செய். உனக்குத் தேவையான அளவு பணம் நான் தருகிறேன். தொழில் செய்யும் போது நேர்மையாக இரு. சுயநலம் பாராதே. பொருளுக்குரியவனை ஏமாற்ற நினைக்காதே. வணிகன் என்பவன் பிறருடைய பொருட்களை தன்னுடைய பொருட்களாகக் கருதுதல் வேண்டும். அத்துடன் உழைக்கும் பணத்தின் ஒரு பகுதியைத் தான தருமம் செய்ய வேண்டும். வங்கியில் பணத்திற்கு வட்டி சேர்வதைப் போல நாம் தான தர்மம் செய்யும் செல்வத்திற்குப் புண்ணியம் சேரும்’’ என்றான் மணிவண்ணன்.

‘‘இவற்றை யெல்லாம் எனது பேரனார் எனக்கு அடிக்கடி கூறியுள்ளார். அதனால் நான் மிகவும் அவதானமாகத் தான் இருந்தேன். இருந்த போதும் இந்நிலை ஏற்பட்டு விட்டது’’.

‘‘நடந்து முடிந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் நடந்து விடாது. எமது சக்தி தான் வீணாகும். நடந்ததை மறந்து முழுமூச்சுடன் ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபடுவது தான் அறிவுடைய மனிதனின் செயல். ஒருவனுக்கு எது எது கிடைக்க வேண்டுமோ அது அது கிடைத்தே தீரும். அதைத் தடுக்க ஒருவராலும் முடியாது. அதே போல் எமது கையை விட்டு எது எது செல்ல வேண்டுமோ அது அது சென்றே தீரும். இது தான் உலக நியதி இதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. எனது வாழ்விலும் எத்தனையோ சோதனைகள் வந்தன. பல இலட்ச ரூபாக்களைப் பல முறை நான் இழந்துள்ளேன். அப்படி இழந்த போது நான் விரக்தியுற்றுச் சோர்ந்திருந்தால் இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியாது. எந்த நாளும் நாம் இருட்டையோ ஒளியையோ எதிர் பார்க்க முடியாது. இரவும் பகலும் வந்தே தீரும். எனவே கலங்காதே’’ என்றான் மணிவண்ணன்.

மணிவண்ணன் சென்ற பின்பு நவராசா நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் ஆலயத்திற்குச் சென்றான். பூசை முடிந்து மக்கள் அரசமரத்தின் கீழ் இருந்தனர். நவராசா குருக்களிடம் திருநீறு வாங்கிப் பூசிக் கொண்டு வெளியே வந்தான். காந்திமதி சுவாமியாரின் அருகில் இருந்தாள். அவளைப்

பார்க்க நவராசாவுக்குத் துக்கமாக இருந்தது. ஏராளமான பணத்தைச் சம்பாதித்த பின் காந்திமதியின் வீட்டுக்குச் சென்று பெண் கேட்கலாம் என்று நினைத்திருந்தான். அது கனவாகிப் போனதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது.

சுவாமியாரின் அருகில் சென்று அவரின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு அவரின் அருகில் அமர்ந்தான்.

சுவாமியார் புன்னகைத்தார். பின் சொன்னார்; “துயரமான வேளைகளில் இருதயத்தை இரும்பாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் எதற்கும் கவலை கொள்ளுதல் ஆகாது. பிறக்கும் போது எல்லோரும் நிர்வாணமாகவே பிறக்கிறார்கள். அதன் பின் தான் ஆடை அணிகள் வந்து சேர்கின்றன. பின் பொருள் பண்டம் வருகிறது. பிறந்தன்றில் இருந்து எல்லோரும் சாவை நோக்கித் தான் பயணம் செய்கிறோம். ஒவ்வொரு தினமும் வாரமாகி மாதமாகி வருடமாகக் கழியும் போது எமது வாழ்நாள் ஒரு வருடம் குறைகிறது. இப்படியே தினமும் நாள்கள் கழியும் போது எமது வாழ்நாள் குறைவடைகிறது. அதனால் நாம் எந்நாளும் இன்பமாக இருக்க முயற்சித்தல் வேண்டும். மனவேதனைப் பட்டு மாற்றானுடன் மாறுபட்டு வாழ்வதில் என்ன பயன் இருக்கிறது. யோசித்துப் பாருங்கள் நாள் என்பது ஒரு கால அளவு. அது உடம்பில் உள்ள உயிரைப் பிரித்து அறுக்கும் வாள்”.

சுவாமியார் நவராசாவைப் பார்த்தார். பின்பு காந்திமதியைப் பார்த்தார். சிறிது நேரம் பேசாமல் இருந்தார் பின்; “துன்பங்களும் துயரங்களும் உயிர்களுக்குச் சொந்தமானவை. அவற்றை இறைவனிடம் கையளித்து விட்டு மகிழ்வாக வாழப் பழகுங்கள். உடலை விட்டு உயிர் பிரிவது தவிர்க்க முடியாது. ஆனால் மனதை விட்டுத் துயரை அகற்றுவது இலகுவானது. உங்களுக்குக் கிடைப்பவை யாவும் இறைவன் கொடுப்பவையே என்று நினையுங்கள் துயரம் பறந்து விடும். பொருள் இழப்பினால் மட்டுமா துயரம் வருகிறது. துயரம் வருவதற்கு ஆயிரம் வழிகள் உள்ளன. அவற்றைக் கடவுளின் மேல் வைக்கும் நம்பிக்கையால் அடைத்து விட்டுக் கருமமாற்றுங்கள், வெற்றியடைவீர்கள். உங்கள் உயிரை நாளாகிய வாள் அறுத்துக் கொண்டே இருக்கிறது. அதைப் பற்றிச் சிந்தித்தீர்களானால் கவலைப்பட இடமில்லை. துயரங்களால் வாடும் மனதைத் தேற்றி உழையுங்கள் முன்னேறுவீர்கள்” என்றார் சுவாமியார். அவ்வார்த்தைகளைக் கேட்ட பின்பு நவராசாவுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டது.

334. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.

வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால், நாள் என்பது ஒரு கால அளவு. அது உயிரை உடம்பில் இருந்து பிரித்து அறுக்கும் வாளாகும்.

## விரைந்து செய்

நவராசா முன்பு போல உற்சாகத்துடன் தொழில் செய்தான். காவல் துறை அதிகாரி அடிக்கடி அவனது வீட்டுக்கு வந்து சென்றார். மணிவண்ணன் அவனது தோட்டச் செய்கைக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தான். அந்த முறை நவராசாவுக்கு வெண்காயம் நன்றாக விழைந்திருந்தது.

கொழும்பில் குழுவாக இயங்கி வந்த கள்ளர் குழுவொன்றை கொழும்பில் உள்ள காவல் துறையினர் பிடித்தனர். அவர்கள் மோட்டார் வண்டிகளையும் பிற வாகனங்களையும் திருடி விற்பனை செய்ததாக ஒப்புக் கொண்டனர். அவர்களிடமிருந்து திருட்டுப்போன பல வாகனங்களும் ஆபரணங்களும் பெருந்தொகைப் பணமும் மீட்கப்பட்டது. அப்பணத்தை கொழும்பு மாவட்ட நீதிபதி உரியவர்களுக்குக் கொடுக்கும் படி கட்டளையிட்டார். அதனால் நவராசாவுக்கு ஒரு தொகைப் பணம் கிடைத்தது. முழுப்பணமும் கிடைக்காவிட்டாலும் பெருந்தொகைப் பணம் மீண்டும் கிடைத்ததையிட்டு மகிழ்ந்தான் நவராசா.

அன்று அவன் கதிரேசுவின் அருகில் சென்று அமர்ந்தான்; ‘‘நவம் கடவுள் மீது நீ வைத்த நம்பிக்கை தான் உன்னை வாழ வைத்தது. நிலையில்லாத செல்வம் தொலைந்ததற்காகக் கவலைப்பட்டுத் தொழிலைச் செய்யாமல் இருந்தால் நீ இன்று பழைய நிலையை அடைந்திருக்க முடியாது. துன்பத்தால் வாடுகிறவர்களுக்கு இரக்கப்பட்டு உதவி செய்பவர்களின் வாழ்வில் சோதனை வரத்தான் செய்யும். அது வேதனையாக இருக்க மாட்டாது. தன் நம்பிக்கை தான் உயர்வுக்கு முதல் காரணி. பலவீனமும் கவலையும் தான் முன்னேற்றத்திற்கு எதிரிகள். உன் வாழ்நாளில் இரப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாதே. அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதோடு அவர்களின் துயரங்களை நீக்குமாறு நீ பிரார்த்தனை செய். உனக்கு என்ன தேவை இருக்கிறது. என்பது கடவுளுக்குத் தெரியும். கடவுளுக்குச் செய்யும் சேவையைத் தொண்டாகவே நினைத்துக் கொள். அவரிடம் உனக்காக எதுவும் கேட்காதே. யாருக்கு எது எது கொடுக்க வேண்டும் என்று கடவுளுக்குத் தெரியும். பிறரின் நன்மைக்காக நீ கடவுளை வேண்டும் போது அவையெல்லாம் உன்னை வந்தடையும். அதன் மூலம் நீ தருமவானாவாய். எம்மால் ஆவது ஒன்றுமில்லை. முயற்சி செய்யத்தான் உன்னால் முடியும். முடிவெடுப்பவன் எங்கோ இருக்கிறான். மனதில் ஒரு போதும் வெறுப்பும் கோபமும் உண்டாகக் கூடாது. அவை தான் மனிதனை அழிக்கும் காரணிகள். இவை நாம் செய்யும் நற்செயல்களைச் செய்யவிடாமல் தடுத்து விடுகின்றன எனவே ஒவ்வொருவரும் தன் நாவைஅடக்கி விக்கல் எழுந்து சாவு நெருங்குவதற்கு முன்பு நல்ல அறச் செயல்களைத் தம்மால் முடிந்த அளவிற்கு விரைந்து செய்து விடல் வேண்டும்’’ என்றார் கதிரேசன்.

‘‘அப்பு நான் நீங்கள் சொன்ன படி எந்நாளும் நடப்பேன். ஆனால் எனது மனம் ஒரு விஷயத்திற்காகக் கவலை கொள்கிறது’’

‘‘என்ன’’ பரபரத்தார் கதிரேசன்.

சில கணங்கள் பேசாமல் இருந்த நவராசா சொன்னான்; நான் காந்திமதியை விரும்புறன். அவள் நான் படிக்கவில்லை. என்று என்னை வெறுக்கிறாள். அவளின் பிரிவை என்னால் தாங்க முடியவில்லை’’.

‘‘யார்? நாராயண சுவாமியின் மகளா...?’’

‘‘ம்’’ என்றான் நவராசா.

சிலகணங்கள் பேசாதிருந்த கதிரேசன் சொன்னார்; ‘‘காதல் தான் வாழ்க்கை காதலால் தான் பற்றுப் பாசம் ஏற்படுகிறது. குடும்பத்தில் அன்னியோன்னியம் நிலவுகிறது. சுருங்கச் சொன்னால் காதல் தான் வாழ்வு. ஆனால் ஒருவர் கொள்வதை அப்படிக் காதல் என்று ஏற்பது ஒருவரின் மனதில் எதையும் ஏற்படுத்தலாம். காதலை ஏற்படுத்த முடியாது. அது தானாக வரவேண்டும். உனது பேச்சின் படி அவள் உன்னை விரும்பாவிட்டால் இன்னொரு வரை விரும்பலாம் தானே. காதல் என்ற உணர்வு உலகத்தில் உள்ள எதையும் மதிப்பதில்லை. இன்னொரு இதயத்தின் உணர்வையே மதித்து அதனுடன் சங்கமமாகும். இதை அன்பால் மட்டுமே உருவாக்கலாம். நான் நாராயண சுவாமியோடு கதைக்கிறேன். அவனுடன் எப்படிக் கதைப்பது. பெண் என்பவள் ஆணுக்குக் குறைந்தவள் என்று நாம் எண்ணக் கூடாது. அவள் சில சமயங்களில் ஆண்களிலும் உயர்ந்தவளாக இருப்பாள். அதை நாம் மதிக்கத் தான் வேண்டும்’’.

‘‘உண்மை தான் என்னால் அவனை மறக்க முடியவில்லை. அவள் இல்லாத வாழ்க்கையைப் பற்றி என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை’’.

‘‘அப்படிச் சொல்லாதே மகனே. உனது வார்த்தைகள் என்னை சொல்லொணா வேதனைக் குள்ளாக்குகின்றன. அவள் விரும்பாமல் நாம் என்ன செய்ய முடியும். வாழ்க்கை நிலையில்லாதது. உடல் எக்கணமும் அழியக் கூடியது. அதனால் நாம் வாழும் போது நற்செயல்களைச் செய்ய வேண்டுமே தவிர கிடைக்காதவற்றை எண்ணிக் கவலை கொள்ளக் கூடாது. நீ எவ்வளவு உற்சாகமாகப் பணத்தைத் தேடினாய். அதே உற்சாகத்துடன் நீ படித்திருந்தால் அவனை விடக் கல்வியறிவாளனாகியிருப் பாய். காலம் கடந்த பின்பு நாம் யோசிப்பதால் பயன் இல்லை. ஒருவர் விரும்பாததை வற்புறுத்திச் செய்ய முடியுமா? என்றாலும் அவளின் விருப்பத்தை நான் அவனின் தந்தை மூலம் அறிந்து சொல்கிறேன்’’ என்றார் நாராயணசுவாமி.

நவராசா பேசாமல் இருந்தான். அவர் சொல்வது அவனுக்கு நியாயமாகப் பட்டது.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

நா அடங்கி விக்கல் மேலெழுந்து இறப்பு நேருவதற்கு முன்பு நல்ல அறச் செயல்களை விரைவாகச் செய்தல் வேண்டும்.

## நிலையாத பெருமை

கதிரேசன் தணிகாசலத்தின் வீட்டுக்கு அதிகாலையில் சென்றார். தணிகாசலத்தை வீட்டில் சந்திப்பதானால் விடியு முன்பு சந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் இரவு பத்துமணிக்கு மேல் தான் வீட்டில் சந்திக்கலாம். என்பது கதிரேசனுக்குத் தெரியும். அதனால் விடியு முன்பே அங்கு வந்தார். எனினும் தணிகாசலம் அங்கு இல்லை. அதனால் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார்.

தணிகாசலம் வெளிவீதியைத் துப்புரவு செய்து கொண்டிருந்தார். அவரின் அருகில் வந்த கதிரேசன்; ‘‘தம்பீ’’ என்றார்.

‘‘கனநாளாய் நான் உங்களைக் காணேல்லை. ஏன் ஏதும் சுகமில்லையா’’ என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘இல்லைத் தம்பி வயது போயிட்டுது பகல் பத்து மணிப்பூசைக்கு தினமும் வாறனான். பிறகு வீட்டாலை வெழுக்கிடுறேல்லை. எனக்கு ஓர் உதவி செய்ய வேணும்’’.

‘‘சொல்லுங்கோ’’ என்றார் தணிகாசலம்.

‘‘நவராசா நாராயண சுவாமியின் மகள் மீது காதல் கொண்டுட்டான். ஒரு தலைக் காதல் தான் அவர் படித்த படிப்புக்கு இவன் படிக்கேல்லைத் தான். ஒன்றாய்ப் படிக்கேக்கை ஆசை வைத்து விட்டான். நீங்கள் ஒருக்கால் கேட்டுப் பாருங்கோ’’ என்றார் கதிரேசன்.

தணிகாசலம் உடனே பேசவில்லை. சற்று நேரம் தாமதித்தார்; ‘‘அதனால் கதிரேசன் சொன்னார். அவள் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறாள். கேடகக் கூடாது தான். ஆனால் இவன் ஆசை வைத்து விட்டான். நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கிறான் இல்லை...’’ சிரித்தார். பின்; ‘‘காதலிக்கிறவை உலகத்தைப் புரிந்து கொள்வதில்லை. மேதாவியையும் முட்டாளாக்கி அலைய வைக்கிறது காதல். மேதாவிக்கே புரியாத காதல் உலகைப் படிக்காத நவராசா புரிந்து கொள்வானா?’’

‘‘அதுக்காக நான் யோசிக்கவில்லை. நவராசா படிக்கும் போதே காந்திமதிக்குப் பின்னாலை திரிந்தவன். இரண்டொரு முறை அவளோடு பிரச்சினையும் பட்டவன். அவள் உவனை விரும்பவில்லை. அத்துடன் அவளுக்குக் கலியாணம் நிட்சயமாகிவிட்டது’’ என்றார் தணிகாசலம்.

அதைக் கேட்டுத் திகைத்துப் போனார் கதிரேசன். அவருக்கு தனது வாழ்வில் தோல்வி ஏற்பட்டதைப் போன்ற துயரம் உண்டானது.

தணிகாசலம் பேசிக் கொண்டிருந்தார். அவையொன்றும் கதிரேசனுக்கு விளங்கவில்லை; " பல்கலைக்கழகத்திலை அவளோடு விரிவுரையாற்றும் ஒரு விரிவுரையாளர் அவளை விரும்பிக் கேட்டாராம். நாராயண சுவாமி சம்மதித்து விட்டார். இவள் விரிவுரையாளராகக் கடமையாற்றினாலும் கலியாணம் என்று பேசினால் சீதனம் கொடுக்கத் தானே வேண்டும். நாராயணசுவாமியிடம் பெரிசாய் ஒன்றுமில்லை அதாலை சம்மதித்திட்டார்'' என்ற தணிகாசலம்; ''என்ன திகைத்துப் போய் இருக்கிறியள்'' என்று கதிரேசனது தோளைத் தொட்டார். திடுக்கிட்ட கதிரேசன் தடுமாறியபடி; ''நான் அப்ப வாறன்'' என்று கூறி விட்டு நடந்தார்.

வழியில் நாராயண சுவாமியின் வீடு இருந்தது. அவ்வீட்டின் வாசலில் நின்று ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தார். உந்து உருளி வண்டியில் வந்த காந்திமதி; ''என்ன கதிரப்பூ களைச்சுப் போனியளே வீட்டை வாங்கோவன் தேநீர் தருகிறேன்'' என்றாள்.

கதிரேசன் அவளது வீட்டுக்குச் சென்றார்; ''முன்பென்றால் அடிக்கடி வீட்டை வாறனீங்கள். இப்ப காணவில்லை. ஏன் ஏதாவது எம்மீது கோபமா...?'' என்று கேட்டாள் காந்திமதி.

''ஒரு கோபமும் இல்லைப் பிள்ளை வயது போய் விட்டது'' என்று பெருமூச்சு விட்டார் கதிரேசன்.

காந்திமதி தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை வாங்கிப் பருகி விட்டு எழுந்தார் கதிரேசன்.

''கதிரேசப்பா அடிக்கடி வீட்டை வாருங்கோ. உங்களோடு கதைத்தால் பொழுது போவதே தெரியாது'' என்றாள் காந்திமதி.

வீட்டுக்கு வந்த கதிரேசனின் கண்களுக்குள் காந்திமதி தோன்றிச் சிரித்தாள். கதிரேசனுக்குத் தாங்க முடியாத வேதனையாக இருந்தது. நவராசாவை அழைத்து விபரமாகச் சொன்னார். நவராசா எதுவும் பேசவில்லை. கண்கள் கலங்கின. வெகுநேரத்தின் பின்; நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்'' என்றான்.

''உன்னை விரும்பாத ஒருத்தியைப் பற்றி நீ நினைத்துக் கவலைப்படுவது வீணாண செயல் அதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை; ''இட்டாதாயின் வெட்டென மற'' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது தான் நிம்மதியாக வாழ்வதற்கு வழி'' என்றார் கதிரேசன்.

நவராசா எதுவும் பேசவில்லை. வெகுநேரம் அசையாமல் இருந்தான். கதிரேசனும் பேசவில்லை. சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின் எழுந்து வெளியே சென்றான்.

மறு நாட்காலை நவராசா பதைபதைத்தபடி ஓடி வந்தான்; “ அப்பூ காந்திமதி வாகன விபத்திலை செத்துப் போனாளாம். இரவு பத்து மணி போல் அவளும் அவளது காதலனும் உந்துருளியில் வந்திருக்கிறார்கள். எதிர்திசையில் வேகமாக வந்த பயணிகள் வாகன மொன்று அவர்களை மோதி விட்டது. காந்திமதி அந்த இடத்திதிலேயே இறந்து விட்டாளாம் அவளது காதலனைக் கடுங்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதித்திருக்கிறார்களாம்”.

“நேற்று எனக்கு தேநீர் தந்து உபசரித்தவள் இன்று இல்லை. இந்த உலகம் இப்படித்தான் அடுத்தகணம் என்ன நடக்குமென்று தெரியாது சந்தோசப்படும் மனிதர்களின் வாழ்க்கை நிலையில்லாதது” என்று பெருமூச்சு விட்டார் கதிரசன். நவராசாவால் காந்திமதியின் இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விம்மி விம்மி அழுதான். அதைப் பார்த்துக் கொண்டு செயலற்றுப் போய் இருந்தார் கதிரேசன்.

336. நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

நேற்று உயிரோடு இருந்த ஒருவன், இன்று இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை என்னும் பெருமை உடையது இவ் உலகம்.

## அறிவில்லாதவர்

நாராயண சுவாமியின் வீட்டு முற்றத்திற்குச் சிறிது தொலைவில் வேலி அருகே நின்ற பெரிய வேப்ப மர நிழலில் இருந்து பறை மேளம் அடிப்பவர்கள், பறை மேளம் அடித்துக் கொண்டிருந்தனர். பல்கலைக்கழக மாணவர்கள் ஏராளமாக வந்திருந்தனர்.

காந்திமதியின் தாய் பிரேதத்தின் அருகே இருந்து தனது தலையை நிலத்துடன் மோதி மோதி அழுது கொண்டிருந்தாள். அவள் நிலத்தில் தலையைப் பல முறை மோதியதால் அவளது நெற்றிப் பகுதி வீங்கியிருந்தது. அந்த நோவையும் பொருட்படுத்தாமல் பலமாக உடலை அசைத்துக் குளறினாள். அவளை நாலைந்து பெண்கள் பிடித்திருந்த போதும்

அவள் திமிறினாள். அப் பெண்களால் அவளைப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை. அவர்கள் களைத்துப் போனார்கள்.

நாராயணசுவாமி செயலற்றுப் போயிருந்தார். அவரைச் சுற்றிப் பலர் இருந்தனர்; ‘‘நான் கடவுளுக்கு என்ன குறை விட்டனான். கேட்பவர்களுக்கெல்லாம் என்னாலான உதவிகள் யாவற்றையும் செய்து கொடுத்தேனே... என்னை ஏன் இப்படிக் கடவுள் சோதிக்கிறார்’’ என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருந்தார் நாராயணசுவாமி.

‘‘காந்திமதி அம்மா மிகவும் நல்லவர். மாணவர்களுக்குத் தேவையான உதவி செய்பவர். அவர் கற்பித்தால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஒரு விறு விறுப்பான திரைப்படம் பார்ப்பதைப் போல அவரது கற்பித்தல் இருக்கும். பலரிடம் நான் கல்வி கற்றிருக்கிறேன். ஆனால் காந்திமதி அம்மாவைப் போல நல்லதோர் ஆசிரியையை நான் காணவில்லை’’ பல்கலைக்கழக மாணவி ஒருத்தி அழுதழுது சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவற்றைக் கேட்க கதிரேசனுக்குத் துக்கமாக இருந்தது. இளம் வயதில் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான கனவுகளுடனும் கற்பனைகளுடனும் வாழ்ந்த காந்திமதியின் அவலச் சா அக்கிராமத்தை வேதனையில் ஆழ்த்தியது. நவராசா காந்திமதியின் பிரேதத்தை வந்து பார்த்தான். முகம் தெரியாதபடி தலையைத் துணியால் கட்டியிருந்தார்கள். தேவதை போல உலாவித் திரிந்த அவள் உருக்குலைந்து கிடப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நாராயண சுவாமியின் குடும்பம் துயரத்தில் மூழ்கியிருந்தமையால் தணிகாசலமே முன் நின்று காரியங்களைப் பார்த்தார். கணபதி மத்திய மகா வித்தியால மாணவர்களும் ஆசிரியர்களும் வந்தனர். அந்த வீடு முழுவதும் சனக் கூட்டமாகவே காணப்பட்டது.

‘‘புஸ்பநாதனும் கிருஸ்ணனும் கனகசபையும் இருந்து கதைத்துக் கொண்டிருந்தனர்; பெம்பிளைப் பிள்ளை களைக் கவனமாக வளர்க்க வேணும். என்னுடைய மகள் இருந்தவள் இரவிலை வெழுக்கிட மாட்டாள். பெண்பிள்ளைகளுக்கு இரவிலை என்ன வேலை’’ என்றார் கனகசபை.

‘‘தற்செயலாக நடந்திட்டுது. உதைப்பற்றிக் கதைக்கிறது சரியில்லை. கதைக்காதைங்கோ’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘காந்திமதியின்ரை செல்வாக்கைப் பார்த்தியளே. முறையாக அவள் வாழ்ந்ததாலை ஊரும் பாடசாலையும் பல்கலைக்கழகமும் அவளின்ரை செத்தவீட்டிலை கூடி நிற்கு. ஊரிலை வேறு யாராவது செத்தால் இப்படிச் வனம் வருமே’’ என்றான் கிருஸ்ணன்.

“நல்ல முறையிலை வாழ்ந்ததால் மக்கள் அவர்களை மதிப்பார்கள். அதை விட்டு விட்டு தன்னைப் பற்றியும் தனது பொருளைப் பற்றியும் கதைத்துக் கொண்டு தன்னையும் தன் பொருட்களையும் பாதுகாத்து மற்றவர்களுக்குத் தீமைகள் புரிந்து பொருள் சேர்த்து வாழ்பவர்களின் நிகழ்வுகளுக்கு ஊரவர்களும் வரமாட்டார்கள்”

நிலையில்லாத வாழ்கையை நிலையானது என்றெண்ணி பல கோடி எண்ணங்களுடன் அறிவில்லாதவர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை நிலையில்லாதது என்றெண்ணி ஒரு வேளையாவது முறையோடு வாழ வேண்டும். காந்திமதி நல்லவள்; கற்றவள்; கற்றபடி ஒழுகுபவள். அவள் எவ்வளவு திட்டமிட்டிருப்பாள். அவையெல்லாம் கனவாகப் போய் விட்டன. பாவம்” என்று பெருமூச்சு விட்டார் கதிரேசன்.

“தன்னைத் தான் கதிரேசு குறை கூறுகிறார் என்று நினைத்து கனகசபாபதி ஆத்திரப்பட்டான். எனினும் மற்றவர்களின் மத்தியில் பேச அவனுக்குத் துணிவு வரவில்லை.

“கதிரேசப்பூ சுவாமியாற்ரை பேச்சைக் கேட்டுக் கேட்டு சுவாமியார் போலப் பேசக் கற்றுக் கொண்டு விட்டார். அவர் சொல்லுறத்திலை நிறைய நியாயம் இருக்கு. நாங்களெல்லாம் தினமும் எத்தினையாயிரம் திட்டம் போர்றம். ஒன்றும் நடக்கிறேல்லை” என்றான் புஸ்பநாதன்.

“திட்டமிட்டது ஏன் நடக்காமல் போகிறது. திட்டமிட்டால் அது நடக்க வேண்டும். நல்ல முறையிலை திட்டமிடவேணும். நேர்மையான வழியிலை முயற்சிக்க வேணும். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். பிறரின் உயர்ச்சியில் பொறாமை கொள்ளாதிருத்தல் வேண்டும். அப்படி இருந்து கொண்டு திட்டமிட்டால் திட்டமிட்டது நடைபெறும். நீ ஒரு நாளாவது முறையோடு வாழ்ந்து பார். உனது எண்ணம் நிறை வேறும்” என்றார் கதிரேசன். கனகசபாபதி எழுந்து வேறு இடத்திற்குச் சென்றான்.

337. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

ஒரு வேளையாவது முறையோடு வாழவேண்டும் என்பதை அறியாதவர்கள் வீணாகப் பல கோடி எண்ணங்களை எண்ணுகிறார்கள்.

## உறவு

காந்திமதி அகால மரணம் அடைந்தமையால் வழமையாக மரணிப் பவர்களுக்குச் செய்யப்படும் கிரிகைகள் செய்யப்படவில்லை. அதனால் தேவார திருவாசகங்கள் ஓதப்பட்டன. பின்பு இரங்கலுரை நிகழ்த்தப்பட்டது.

முதலில் விக்னேஸ்வரமூர்த்தி இரங்கலுரை நிகழ்த்தினார்; ‘‘காந்திமதி எமது பாடசாலையின் பழைய மாணவி. படிப்பிலும் விளையாட்டிலும் மிகுந்த திறமை உள்ளவர். பாடசாலையில் அவர் நிறையப் பரிசுகளைப் பெற்றுப் பாடசாலைக்கும் கிராமத்திற்கும் புகழைத் தேடித் தந்துள்ளார். அவர் படிக்கும் காலங்களில் ஆசிரியர்களைத் தெய்வங்களாக மதித்தவர். மாணவர்களை நண்பர்களாகவும் உடன்பிறப்புக்களாகவும் நினைத்தவர். அவரிடம் ஒரு கற்றல் உபகரணம் இருந்தால் அது பாடசாலை முழுவதற்கும் பயன்படும். பாடசாலையில் விழாக்கள் நடைபெறும் வேளைகளில் காந்திமதி தனது வீட்டு வைபவங்களாகவே அவ்விழாவைக் கருதிச் செயலாற்றுவார். அவருடன் கற்ற ஒரு பிள்ளை மிகவும் ஏழ்மையானது. காலையில் உணவு உண்ணாமலே பாடசாலைக்கு அப்பிள்ளை வந்து விடும். இதை அறிந்த காந்திமதி வீட்டில் இருந்து தினமும் உணவுப் பொதி கொண்டு வந்து அப்பிள்ளைக்கு கொடுப்பாள். இன்று வரை இவ்விடயம் யாருக்கும் தெரியாது. காந்திமதியிடம் உணவு பெற்று உண்ட பிள்ளை இன்று காலை எனக்ச் சொல்லி சொல்லி அழுதாள். அதை விடப் பல மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களும் பேனாக்களும் வேறு பல கற்றல் உபகரணங்களும் வாங்கிக் கொடுத்துள்ளாள். இத்தனைக்கும் காந்திமதி வசதியானவள் அல்லள். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத் தனது நலன்கள் பலவற்றைத் துறந்து வாழ்ந்தவர். இத்தகைய ஒரு பண்பாளர் திடீரென்று எம்மை விட்டுப் பிரிந்தது எமக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் பாதார விந்தங்களைத் தொழுகிறேன்.

அடுத்து பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் உரையாற்றினார்; ‘‘நான் காந்திமதியின் பல்கலைக்கழக ஆசிரியர். ஒரு மாணவனுக்கு உரிய குணங்கள் அத்தனையையும் காந்திமதி கொண்டிருந்தாள். கல்வியில் ஆர்வமுடையவராகவும் நற்பண்பாளராகவும் இருந்தமையால் தான் அவரை உயர்ந்த பதவி தேடி வந்தது. பதவியில் இருந்த போதும் ஆசிரியர்களை நன்கு மதித்தார். மாணவர்களை அன்புடன் நேசித்தார். தனது கடமையில் கண்ணியமாக இருந்தார். அவர் கல்வியில் பல சாதனைகளை நிகழ்த்துவார் என்று நாம் நினைத்திருந்த வேளையில் நாம் அதிர்ந்து நிற்க எம்மையெல்லாம் விட்டுச் சென்றது கல்விச் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். பிறந்தவர்கள் இறப்பது உறுதி என்ற விதியை நினைத்து நொந்து கொள்வதைத் தவிர எம்மால் என்ன செய்ய முடியும்? அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறேன்’’

அடுத்துப் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் உரையாற்றினான்; ‘‘காந்திமதி அம்மா ஒரு விரிவுரையாளர் போல எம்முடன் பழகுவதில்லை. ஒரு தாயாகவும் சகோதரியாகவுமே பழகினார். எமக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்தார். இன்று நாம் உறவில்லாமல் தவிக்கிறோம். பாசம் கொள்ள ஆளின்றிப் பரிதவிக்கிறோம். இப்படி ஏன் செய்தாய் இறைவா. இனி இப்படிச் செய்யாதே என்று மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக’’ என்று முடித்தான்.

அடுத்ததாக சுவாமியார் பேசினார்; ‘‘இந்தப் பிரபஞ்சத்திலே நன்மையைச் செய்வோர் மிகவும் குறைவானவர்களாகவே இருக்கின்றனர். பிறருக்கு உதவிகள் செய்யச் செல்வம் தேவையில்லை. நல்ல மனமே தேவை. நல்ல மனதுள்ளவன் பிறர்க்கு வரும் துன்பங்களைத் தனக்கு வரும் துன்பங்களாக எண்ணிச் செயற்படுவான். துன்பப்படும் உயிர்களின் வயிற்றிற்கு உணவளிப்பதற்கு முன் மனதிற்கு உணவளிக்க வேண்டும். காந்திமதி அவர்கள் துன்பப்படுபவனின் மனதிற்கே முதலில் உணவளித்து வந்தார். மனதைத் தைரியப் படுத்துவதன் மூலம் உடல் தைரியப்படும். உடற் தைரியம் தான் தன்நம்பிக்கை ஆகும். தன்நம்பிக்கையை வளர்த்து விடுவதன் மூலம் ஒருவன் வாழ்நாள் முழுவதும் இன்பமாக வாழச் செய்ய முடியும். நொந்த உடலுக்கு ஒத்தடம் கொடுப்பது போன்றது நல்ல ஆலோசனைகளை வழங்குவது. பாடசாலையிலும் சரி பல்கலைக்கழகத்திலும் சரி காந்திமதி துன்பப்பட்டவர்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறிவந்தாள். இந்த ஆலோசனைகள் அவர்களை மனிதர்களாக வாழ வைத்தன. இந்தக் கைங்கரியத்தைச் செய்த காந்திமதி என்றும் பல்லாயிரக் கணக்கான உள்ளங்களில் வாழ்வாள்’’ என்று கூறி சிறிது நேரம் மௌனமாக இருந்தார் சுவாமியார்.

‘‘உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவை அறிஞர்கள் பலவாறு கூறியுள்ளனர். உயிர் மரணத்தின் மூலம் புதிய சட்டையை அணிந்து கொள்கிறதென்றும், உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள உறவென்பது கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பைப் போன்றது என்றும், கூட்டை விட்டுப் பறவை எந்த நேரத்திலும் பறந்து சென்று விடும் என்றும் அறிஞர்கள் கூறியுள்ளனர்’’ சுவாமியார் பேசிக் கொண்டிருந்தார். அங்கு கூடியிரந்த பலர் விம்மி விம்மி அழுதனர்.

338. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

உடம்போடு உயிருக்குள்ள உறவானது, கூட்டோடு பறவைக்குள்ள உறவை ஒத்தது.

## உறக்கமும் விழிப்பும்

‘‘ வாழ்க்கையில் பல துறைகளில் வெற்றி கொள்ளும் மனிதனால் மரணத்தை வெற்றி கொள்ள முடியாது. மரணம் இன்பமானது. விடுதலையைத் தருவது. உலகப் பந்தங்களில் இருந்து உயிரை விடுவிப்பது. ஒர் மனிதன் நல்ல முறையில் வாழ்ந்தால் பிறப்பு இல்லை என்று எமது மதம் சொல்கிறது. மனிதனை நல்ல முறையில் வாழச் செய்வது மதம். ஒருவனுக்கு நித்திய இன்பத்தை அடையும் வழியை வகுத்துக் கொடுப்பது மதம். மறு உலகத்திலும் ஒரு ஆத்மாவிற்கு இன்பம் கிடைக்க வேண்டும் என்று செயற்படுவது மதம். எனவே ஒருவன் தான் வாழுங்காலத்தில் துன்பங்களை அனுபவிக்காது இன்பங்களை அனுபவிக்க மதம் வழி

வகுக்கிறது. மனிதர்களில் பல்வேறு விதமான ஆற்றல்கள் புதைந்து கிடக்கின்றன. அவ்வாற்றல்களை கல்வி வெளிப்படுத்துகிறது. மதம் அதைச் செப்பனிடுகிறது. காந்திமதி நல்ல கல்வியறிவு உள்ளவளாக இருந்தவள்.அவளின் மனதில் மதக் கருத்துக்கள் வேரூன்றி இருந்தமையால் தான் பல சமூகத் தொண்டுகளைச் செய்தாள். மரணம் என்பது ஒருவன் உறங்குவதைப் போன்றது. பிறப்பு என்பது அவன் உறங்கி விழிப்பதைப் போன்றது. பிறப்பும் இறப்பும் என்றும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நாமெல்லோரும் தினமும் ஒவ்வொரு அடியாக மரணத்தை நோக்கியே எடுத்து வைக்கிறோம். இதை உணர்ந்ததால் பிறருக்குத் தீமை செய்ய மனம் வர மாட்டாது. நிலையில்லாத பொருட்களின் மீத பற்று ஏற்பட மாட்டாது. உயிர்கள் அழிவதில்லை. உடனே பிறப்பெடுத்து விடும் என்கிறார்கள். அத்துடன் உயிரானது ஒரு கணம் கூட உடலில்லாமல் இருக்கமாட்டாது என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். அதன் படி காந்திமதி பிறப்பெடுத்திருப்பார். அவளது பிறப்பு நல்ல பிறப்பாக அமைய எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி அருள் செய்வாராக'' என்று கூறி முடித்தார் சுவாமியார்.

காந்திமதியின் பிரேதம் இருந்த பெட்டியின் மூடியை எடுத்து மூடினார்கள். பலர் மூடியை மூடவிடாது தடுத்தனர். எனினும் அவர்களின் தடைகளையும் மீறி பெட்டி மூடப்பட்டது. காந்திமதியின் தாயார் மயங்கி விழுந்தார். பலர் விம்மி விம்மி அழுதனர். பெட்டியைத் தூக்கி பாடையில் வைத்துப் பாடையைத் தூக்கினர். பல பெண்கள் தம் நெஞ்சில் அடித்த படி பாடையை வலம் வந்தனர்.

பெருந்திரளான மக்கள் சூழ்ந்து செல்ல பிரேத ஊர்வலம் ஆரம்பமானது. கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் முன் சில நிமிடங்கள் ஊர்வலம் நின்றது. அம் மகாவித்தியாலய மாணவர்கள் பூக்கள் சொரிந்து தமது இறுதிமரியாதையைக் காந்திமதிக்குச் செலுத்தினர். பாடசாலைக் கொடி அரைக்கம்பத்தில் பறந்து கொண்டிருந்தது. பாடசாலையைச் சுற்றிக் கறுப்புக் கொடிகள் பறந்தன. பாடசாலை ஒலி பெருக்கியில் பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டது.

மகா கணபதி சனசமூக நிலையத்திலும் முன்பள்ளியிலும் பெருந்திரளான மக்கள் கூடி நின்று அஞ்சலி செய்தனர். முன்பள்ளி ஆசிரியை விம்மி விம்மி அழுதாள்; ''என்னுடைய பிள்ளையொன்றை இழந்து விட்டேனே'' என்று கதறினாள் அவள்.

விக்னேஸ்வரமூர்த்தி தணிகாசலத்திற்குச் சொன்னார்; ''பகீரதிக்கு மாதாந்தச் செலவுக்குக் காந்திமதி பணம் கொடுக்கிறவள். இனியாராவது ஒரு வரைப் பிடித்தல் வேண்டும். பகீரதிக்குத் தகப்பன் இல்லை. தாய் நோயாளி. அதை விட காந்திமதி நூலகத்திற்கு உதவி செய்வதாகச் சொன்னவள். எல்லாம் போயிட்டுது'' என்றார்.

''யாராவது ஒரு புண்ணியவான் வருவான். அது வரை பகீரதிக்கு நாம் ஏதாவது உதவி செய்வோம்'' என்றார் தணிகாசலம்.

அவர்களின் கதையைக் கேட்டுக் கொண்டு வந்த நவராசா சொன்னான்; வாத்தியார் காந்திமதி செய்வதாகச் சொன்ன எல்லா உதவிகளையும் நான் செய்கிறேன். நூலகத்திற்கு எவ்வளவு பணம் தேவை என்று சொல்லுங்கள். முடிந்தால் நூலகத்திற்கு காந்திமதியின் பெயரைச் சூட்டுங்கள். அதற்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன்.''

விக்னேஸ்வரமூர்த்தி அவனைத் திரும்பிப் பார்த்தார்; ''ஐயா சுவாமியார் இன்று சொன்னதைப் போல நான் இரவு நித்திரைக்குச் சென்று விழிக்காவிட்டால் என்ன செய்வது. நாம் விழித்திருக்கும் வேளையில் நல்லதைச் செய்வோம்'' என்றான் நவராசா.

விக்னேஸ்வரமூர்த்தி தாங்க முடியாத வேதனையில் வந்த போதும் அதை ஒரு கணம் மறந்து மகிழ்ந்து சிரித்தார். பிரேத ஊர்வலம் மயானத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

339. உறங்கு வதுபோலும் சாக்காடு; உறங்கி
 விழிப்பது போலும் பிறப்பு.

இறப்பு எனப்படுவது ஒருவன் உறங்குவதைப் போன்றது; பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது.

## நியைான இடம் இல்லாதது

காந்திமதி இறந்து முப்பத்தொரு தினங்கள் கழிந்து விட்டன. அன்று வீட்டில் துடக்குக் கழித்தனர். அன்று மாலை காந்திமதியின் நினைவாகக் கணபதிமத்திய மகா வித்தியாலய நூலகத்திற்கு அவளின் பெயரிடப்பட்டது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மாணவர்களும் பெருந்தொகையாகக் கலந்து கொண்டனர்.

காந்திமதியுடன் விபத்துக்குள்ளான அவனது காதலன் பரதன் ஐந்து இலட்ச ரூபா பெறுமதியான நூல்களை வாங்கி அன்பளிப்புச் செய்தான். அவனுக்குக் கடுங் காயங்கள் ஏற்பட்ட போதும் தெய்வாதீனமாக அவன் உயிர் தப்பி விட்டான். நவராசா நூலக கட்டிடத்தைப் புனரமைப்புச் செய்து கொடுத்தான். அத்துடன் காந்திமதி உதவி செய்த மாணவிக்கு மாதா மாதம் உதவி செய்ய ஒப்புக் கொண்டான்.

நூலகத்திற்குப் பெயர் சூட்டும் நிகழ்வு பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமானது. மங்கல விளக்கை ஸ்கந்ததேவா ஏற்றி விழாவைத் தொடக்கி வைத்தார். அடுத்துக் கல்லூரி மாணவர்களால் தேவாரமும் புராணமும் பாடப்பட்டது. இரண்டு நிமிடம் காந்திமதியின் ஆத்ம சாந்திக்காக எல்லோரும் மௌனமாக நின்று பிராத்தித்தனர். அந்நிகழ்வு முடிந்ததும் பரதன் நூலகக் கட்டிடப் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

விழா ஆரம்பமானது அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி தலைமை வகித்து உரையாற்றினார்; ''ஒரு மாதத்திற்கு முன்பு மரணித்த எமது கல்லூரியின் பழைய மாணவியின் நினைவாக இந்நூல் நிலையத்திற்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மிகவும் விருப்புடன் சமூக சேவைகள் செய்து வந்த அமரர் காந்திமதி அவர்கள் படிக்கும் போதே தன்னால் இயன்ற உதவிகளைக் கல்லூரிக்கும் நண்பர்களுக்கும் செய்து வந்தவர். உயர்தரப் பரீட்சை எழுதும் காலங்களில் கூட ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடங்களை கற்பித்தவர். பின்பு அவர் பல்கலைக்கழகத்தில் கற்கும் போதும் இக்கிராம மக்களின் நலன் கருதி விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களைக் கற்பித்தவர். தேவையில்லாத விடயங்களில் தனது நேரத்தைச் செலவு செய்யாமல் அமைதியுடன் ஆக்க பூர்வமான கல்விப்பணியில் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்டவர். அதனால் எமது கிராமத்தில் பலர் காந்திமதியினது மாணவர்களாக இருக்கின்றனர். யார் ஒருவருக்கு என்ன உதவி தேவையோ அவர் அஞ்சாது சென்று காந்திமதியிடம் கேட்கலாம். அந்தளவிற்கு அவர் எளிமையானவராகவும் வாழ்ந்தவர். தன்னிடம் உள்ள அறிவை மற்றவர்களின் வளர்ச்சிக்காக உதவிய பெருந்தகையின் பெயரை இந்நூல் நிலையத்திற்குச் சூட்டி அவரை இக்கல்லூரி மாதா கௌரவிப்பதில் பெருமை கொள்கிறாள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அடுத்து கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்கள் பேசினார்; ''காந்திமதியுடன் எனது மகன் ஒன்றாக இப்பாடசாலையில் உயர்தர வகுப்பில் கற்று வந்தான். உயர்தரப்பிரிவில் கற்கும் மாணவர்கள் தாம் எழுதிய கற்றல் சம்பந்தமான குறிப்புக்களை இலேசில் மற்றவர்களுக்கு கொடுக்க மாட்டார்கள். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. மிக முக்கியமான காரணம் தமிழில் விஞ்ஞான நூல்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஆனால் காந்திமதி தான் எழுதிய குறிப்புக்களை யார் கேட்டாலும் கொடுத்து விடுவாள். அத்துடன் காந்திமதி ஆங்கிலத்தில் புலமை மிக்கவளாக இருந்தமையால் மேலை நாட்டார் எழுதிய விஞ்ஞானப் புத்தகங்கள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்து வைத்திருந்தாள். அதையும் அவள் கேட்பவர்களுக் கெல்லாம் கொடுப்பாள். அத்துடன் காந்திமதிடம் ஓர் ஆசிரியருக்குரிய ஆளுமை இருந்தது. அதனால் அவளுடன் கற்கும் மாணவர்கள் அவளிடம் தமக்கு விளங்காதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். அப்படியான ஓர் அறிவாளியை நாம் இன்று இழந்து நிற்கிறோம். இவ்விழப்பை ஈடு செய்வது இயலாத காரியம். இந்நிகழ்வின் மூலம் காந்திமதியின் நினைவுகள் என்றும் மனதில் இருக்கும். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.''

அடுத்ததாக ஸ்ரீனிவாசன் சுவாமிகள் பேசினார்.; ''நேற்றுப் போல் இருக்கிறது. ஆனால் ஒரு மாதகாலம் முடிவடைந்து விட்டது. இதிலிருந்து நாம் வாழும் காலம் குறைந்து கொண்டு செல்வது உங்களுக்குப் புரியும். ஒவ்வொருவரும் தாம் வாழுங் காலத்தில் காந்திமதியைப் போலச் சேவை செய்தல் வேண்டும். இன்று காரியாலயங்களில் பலர் நாற்காலிகளுக்குப் பாரமானவர்களாகவே இருக்கிறார்கள். சட்டங்களைக் காட்டி உரிமைகளை மறுக்கிறார்கள். ஒருவன் தன்னால் சேவை செய்ய முடியாது என்று

நினைத்தால் தான் வகிக்கும் பதவியில் இருந்து விலகி விட வேண்டும். காந்திமதி தன் கிராமத்தில் வாழ்ந்த ஏழை மாணவர்களுக்குக் கல்வி அறிவை ஊட்டியவள். பல துறை சார்ந்த நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவள். அவள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்து பல ஆங்கில விஞ்ஞான நூல்களை மொழி பெயர்த்த போதும் கடவுள் நம்பிக்கை உள்ளவளாகவும் கீழ்ப்படிவுள்ளவளாகவும் வாழ்ந்தாள். விஞ்ஞானத்தை விட ஆத்மீக ஞானத்தில் அதிக நம்பிக்கை வைத்திருந்தாள். நோய்கிடமான இந்த உடம்பின் ஒரு மூலையில் தங்கியிருக்கும் உயிரின் இருப்பிடத்தை இதுவரை எவரும் கண்டு பிடிக்கவில்லையே என்று என்னிடம் சொல்லிச் சிரிப்பாள். சுவாமி அதை உங்களால் தான் கண்டு பிடிக்க முடியும் என்பாள். உமது உடலில் உயிர் எங்கே தங்கியுள்ளது. உயிரின் வடிவம் என்ன? இது உயிரைத் தாங்கி வைத்திருக்கும். உடலுக்கும் தெரியாது. உடலைப் பரிசோதித்து மருந்து கொடுக்கும் வைத்தியருக்கும் தெரியாது. தெரிந்திருந்தால் காந்திமதியின் உயிரைப் போகவிட்டிருக்க மாட்டார்கள்'' சுவாமிகள் பேசிக் கொண்டிருந்தார். மக்கள் அமைதியாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு?.

நோய்க்கு இடமாகிய உடம்பின் ஒரு மூலையில் குடியிருக்கும் உயிருக்கு, நிலையானதொரு வீடு இதுவரையில் அமையவில்லையோ?.

## பொருளாசை

நவராசாவால் காந்திமதியை மறக்க முடியவில்லை. அவள் அவனது விழித்திரைக்குள்த் தோன்றிச் சித்திரவதை செய்து கொண்டிருந்தாள். பத்தாம் வகுப்புப் படிக்கும் போது தான் அவளின் மீது அவனுக்கு இனம் புரியாத ஓர் உணர்வு மனதுள் ஏற்பட்டது. சிறுவயது முதல் சேர்ந்து விளையாடும் போது ஏற்படாத வித்தியாசமான ஓர் உணர்வு உடலெங்கும் உண்டாகி அவனை எதையோ செய்தது. அடிக்கடி அவளைப் பார்ப்பான். இது நாள் வரையும் அவளுள் மறைந்திருந்த பல விடயங்கள் அவனுக்குத் தெரிவதைப் போலிருந்தன. அதனால் அதைப்பற்றி தனது நண்பர்களுக்குச் சொன்னான். அவன் அடிக்கடி தனது நண்பர்களுக்குக் காந்திமதியைப் பற்றிக் கூறியமையால் நண்பர்கள் அவனை 'காந்தி' என்று அழைக்க ஆரம்பித்தனர் அதை அவன் விரும்பினான்; அதனால் அவன் மகிழ்ந்தான். சில காலம் செல்ல அப்பெயர் அவனுக்கு நிலைத்து விட்டது. வீட்டார் ஏதோ பட்டப் பெயர் என்று நினைத்தனர். காந்திமதிக்கு அது தெரிந்த போதும் அவள் அதைப் பெரிது படுத்தவில்லை. பதினொராம் வகுப்புடன் பாடசாலை வாழ்வை முடித்துக் கொண்ட நவராசா தோட்டம் செய்யத் தொடங்கினான். அவன் தோட்ட வேலைகளுக்குச் சென்றாலும் ஒரு நாளைக்கு ஒரு தரமாவது அவன் காந்திமதியைச் சந்திக்கத் தவறுவதில்லை. காந்திமதி வழியில் அவனைக்

கண்டால் தலையைக் குனிந்தபடி செல்வாள். சிறுவயதில் அவள் அவனைக் கண்டால்; ''டேய் நவம்'' என்று அழைத்தவாறு அவனின் அருகில் வந்து அடித்து விட்டு ஓடுவாள். நவராசா அவளைக் கலைத்துச் சென்று கையில் பிடிப்பான். ஆனால் அடிக்கமாட்டான். காந்திமதி மறுகையால் கூச்சம் காட்டுவாள். கூச்சத்தால் அவஸ்தைப்படும் நவராசா அவனது கையை விட்டு விடுவான். அவள் கைகொட்டிச் சிரிப்பாள்.

பல்கலைக்கழகத்திற்கு அவள் தெரிவானபோது ஒரு நாள் வழியில் சந்தித்த போது அவள் சிரித்தாள். பின்; நான் பல்கலைக் கழகத்திற்குச் செல்கிறேன். இந்தாருங்கோ இனிப்பு'' என்று ஒரு பொட்டலத்தை நீட்டினாள். நவராசாவால் தனது கண்களை நம்ப முடியவில்லை. நிமிர்ந்து அவளின் முகத்தைப் பார்த்தான். அவளது அழகான கண்கள் மெல்ல அசைந்து சிரித்தன; ''நன்றி, நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும்'' என்று வாழ்த்தினான்.

காந்திமதி உதடுகள் பிரியாமல் சிரித்தாள். அந்தச் சிரிப்பை இன்று வரை அவனால் மறக்க முடியவில்லை. இது நாள் வரையும் சாம்பருள் நெருப்புப் போல மறைந்திருந்த காதல் தீ அவள் இறந்ததும் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அதனால் அவனால் இயங்க முடியவில்லை. எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. அதனால் வீட்டிலேயே இருந்தான். அவன் தோட்டத்திற்குச் சென்று பல நாட்களாகி விட்டன. அன்று காலை உணவைக் கூட உண்ணாது வீட்டின் முற்றத்தில் நின்ற வேப்ப மரத்தின் கீழ் இருந்தான். அவனது உடல் இளைத்துக் களைத்திருந்தது. முகத்தில் முடி வளர்ந்திருந்தது.

கதிரேசன் அவனின் அருகில் வந்து இருந்தார். நவராசா அவர் வந்திருந்ததைக் கவனிக்கவில்லை; ''மகனே'' மெல்ல அழைத்தவாறு அவனது முகத்தைத் திருப்பினார் கதிரேசன். அவனது கண்கள் குளமாகக் காட்சி தந்தன; ''தம்பி, நீ காந்திமதி இறந்த பின்பு இப்படி இருப்பது அவளது கற்பிற்குக் களங்கத்தை உண்டு பண்ணும். அவள் இன்னொருவரின் மனைவியாகிவிட்டவள். அவள்மீது நீ காதல் கொண்டிருந்த போதும் அவள் உன்னைக் காதலிக்கவில்லை. அதனால் அவளை நீ மதிப்பதாக இருந்தால் இப்படியான நிலையில் நீ இருக்கக் கூடாது. அதனால் ஊரவர் அவளைச் சந்தேகிப்பர். ஒரு பெண்ணுக்குக் களங்கத்தை உண்டாக்குவது பாவமான செயல். நீ அவளைக் காதலித்திருந்தாலும் அவள் இன்னொருவனுக்கு மனைவியாகி விட்டாள் அவளைப் பற்றி நினைப்பது பாவம். அத்துடன் உன்னை அவள் விரும்பவில்லை. அப்படியிருக்க நீ அவளை நினைத்து இயங்காமல் இருப்பது அவளுக்குச் செய்யும் துரோகமாகும்''.

நவராசா கதிரேசனை நிமிர்ந்து பார்த்தான். அவரின் வார்த்தைகளில் உள்ள நியாயம் அவனைச் சுட்டது; ''அறியாமையினால் பெருந்தவறு செய்து விட்டேன். என்று நினைத்தான்.

''நாம் அன்பு கொள்பவர்களை விட எம்மில் அன்பு கொள்பவர்கள் தான் எம்மை விசுவாசுப்பவர்கள். அவளுக்காக எதையும் செய்ய நீ சித்தமாக இருக்கிறாய். என்பதை உனது செயல்களைக் கொண்டு நான் அறிந்து

கொண்டேன். ஆனால் அவள் உன்மீது அன்பு கொள்ளவில்லையே.... அதனால் உனது அன்பை வெளிக்காட்டிக் கொள்ளாதே. ஒருவன் எந்தெந்தப் பொருள்களில் இருந்து ஆசையை நீக்கிக் கொள்கிறானோ, அவனுக்கு அந்தந்தப் பொருட்களால் துன்பம் வராது. பொருட்களின் மீதுள்ள ஆசைகளை நீக்கினால் மட்டும் தான் உலகில் இன்பமாக வாழலாம். எமக்குக் கிடைக்காத பொருட்கள் மீது ஆசைவைப்பதால் தான் அவா, பொறாமை, பகை எல்லாம் ஏற்படுகிறது. நீ தொழிலைச் செய்வதானாலும் பற்றின்றிச் செய்; நேர்மையாகச் செய் இலாபம் கிடைக்கு மென்று ஆசைப்படாதே. உனது நியாயமான முயற்சிக்குப் பயன் கிடைக்கும். இலாபமாக இருந்தால் மகிழ்வடை. நட்டமாக இருந்தால் பொறுமையுடன் மீண்டும் முயற்சி செய். நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் மற்றவர்களைப் பாதிக்காமல் இருத்தல் வேண்டும். இந்த நிலையில் செயற்பட்டால் செயலில் பற்று வராது. இச் செயலானது உரிய பயனைத் தரும்'' என்றார் கதிரேசன்.

நவராசாவின் மனதின் ஒரு மூலையில் லேசசான ஓர் ஒளி தென்பட்டது.

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஒருவன் எந்தெந்தப் பொருள்களின் மீதிருந்த பற்றை நீக்கிக் கொள்கிறானோ, அவன் அந்தந்தப் பொருள்களால் துன்பம் அடைய மாட்டான்.

## நீக்கினால் இன்பம்

''வாழ்வில் ஏற்படும் துன்பங்களில் இருந்து நாம் தப்பி ஓடி விட முடியாது. எப்படித்தான் கவனமாக நாம் வாழ்ந்தாலும் துன்பங்கள் எம்மை நோக்கி வரத்தான் செய்யும். அதைத் திடமான மனத்துடன் எதிர்பதன் மூலம் நாம் இன்பத்தைப் பெறலாம். துன்பங்கள் தான் மனிதனைச் செம்மைப்படுத்துகின்றன. அனுபவத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு குழந்தைக்கு நெருப்புச் சுடும் என்று நாம் சொன்னால் அதற்குப் புரியாது. சுட்டால் தான் அது அனுபவப்படும். மிருகங்கள் கூட அனுபவத்தால் தான் உணர்ந்து கொள்கின்றன. வேட்டை நாய்கள் உள்ள தோப்புக்குள் காட்டு மிருகங்கள் மேய்வதற்காக உள்ளே செல்ல மாட்டா. எனவே நீ அவனை மறப்பதற்கு ஒரு வழி இன்னொருத்தியைத் திருமணம் செய்வது தான்'' என்றார் கதிரேசன்.

இதை நவராசா எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியுடன்; ''அப்பூ' என்று பலமாக அழைத்தான்.

''மகனே துன்பமில்லாத நிலை உனக்கு வேண்டு மென்று நீ விரும்பினால் காந்திமதியின் மீதுள்ள ஆசையை நீ நீக்குதல் வேண்டும். எந்த ஒரு பொருளின் மீது நீ ஆசை வைத்தாலும் அதனால் துன்பங்கள் தான் வரும்.

அழகான மோட்டார் வண்டியின் மீது ஆசைவைத்தாய். அதனால் எவ்வளவு துன்பங்கள் வந்தன. காந்திமதியின் மீது ஆசை வைத்தாய். அதனால் உன்னால் இயங்கவே முடியவில்லை. சிவபாதசேகரத்தின் தோட்டத்தின் மீது ஆசை வைத்தாய் அதனால் உனக்கு நிம்மதி இல்லை. அத்தோட்டத்தால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சினைகளைச் சந்திக்கிறாய். உனக்கு நல்ல விளைச்சல் வருகிறது. என்று பொறாமைப் படுவோர் சிவபாதசுந்தரத்திடம் சென்று அத்தோட்டத்தைத் தமக்குத் தரும்படி வற்புறுத்துகின்றனர். இதற்கெல்லாம் காரணம் ஆசை தானே. இவ்வளவு காலமும் போதிய பராமரிப்பின்மையால் விளையாதிருந்த அந்த நிலம் உனது திறமையாலும் முயற்சியாலும் நல்ல பயனைத் தருகிறது. அதை அவர்கள் உனது அதிட்டம் என்று நினைக்கிறார்கள். முயற்சிக்காமல் பொருட்கள் மீது ஆசை வைப்பவன் அதிட்டம் என்கிறான். எனவே காந்திமதியின் மீதுள்ள பற்றை நீக்கி விட்டுத் திருமணம் செய். அது உனக்கும் நல்லது. காந்திமதிக்கும் நல்லது''.

நவராசாவால் உடனே எதையும் தீர்மானிக்க முடியவில்லை. ''அப்பு எனக்குச் சிறிது கால அவகாசம் தாருங்கள்'' என்றான்.

''சரி நீ ஆறுதலாக யோசித்து முடிவைச் சொல்லு. சிந்தனை தான் பல பிரச்சினைகளுக்கு விடையைத் தேடித் தரும். நீ திருமணம் செய்வதானால் எனது உயிர் நண்பனான சிவகுருநாதனின் பேர்த்தி வாசுகியைத் திருமணம் செய். அவர்களிடம் சீதனமாகப் பெரிதாக எதுவும் எதிர்பார்க்க முடியாது. நானும் சிவகுரு நாதனும் பாலிய நண்பர்கள். தனது தங்கையை எனக்குத் திருமணம் செய்து தந்து என்னை உறவினனாக்க விரும்பினான். ஆனால் அவள் விசம் தீண்டி இறந்து போனாள். இன்னும் என்மீது குறைவில்லாத அன்பை வைத்திருக்கும் அவனை எனது உறவினர் ஆக்க நான் ஆசைப்படுகிறேன்'' என்றார் கதிரேசு.

''நவராசா எதுவும் பேசவில்லை. ஒரு கணம் வாசுகியை நினைத்துப் பார்த்தான் காந்திமதியைப் போல அழகில்லாவிட்டாலும் சுமாரான அழகி அவள்.

''நவம் என்ன யோசிக்கிறாய். எமது இனம் இன்று, முன்னோர் அன்று புனிதமானவை என்று கருதியவற்றை யெல்லாம் வியாபாரப் பொருளாக்கி விட்டது. திருமணம் என்ற புனிதமான சடங்கை இன்று சந்தைப்படுத்தி ஏலத்தில் விற்பனை செய்கிறார்கள். கசாப்புக் கடைக்காரன் மிருகத்தை அங்கம் அங்கமாகப் பரீட்சித்து வாங்குவதைப் போல இன்று பெண்ணையும் மாப்பிளையையும் பரீட்சித்துப் பார்த்து வாங்கும் அவல நிலை தோன்றியுள்ளது. குடும்பத்தின் பணத்தைப் பரிசீலனை செய்கிறார்களே தவிர குணத்தைப் பரிசீலனை செய்வதில்லை. உனக்கும் பிறர் கஷ்டப்பட்டுத் தேடும் பொருள் மீது ஆசை வந்து விட்டதா....?'' முன்பு நாம் நன்றாக உண்டு உடுத்து அனுபவித்து மகிழ்ந்தோம். ஆனால் இன்றுள்ளவர்கள் பெண்களுக்குப் பொருள் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால் தமது தேவைகளைச் சுருக்கி வாழ வேண்டிய அவல நிலைக்குத்

தள்ளப்பட்டுள்ளார்கள். உனக்குச் சீதனம் வேண்டுமா? இல்லை குணவதியான பெண் வேண்டுமா?''

நவராசாவுக்குக் கோபம் வந்தது. நான் கவலையோடு இருக்கத் தேவையில்லாத கதைகளைக் கதைக்கிறார்'' என்று நினைத்தான். எனினும் கோபத்தை வெளிக்காட்டிக் கொள்ளாது சொன்னான்; ''இப்ப தயவு செய்து திருமணத்தைப் பற்றிக் கதைக்காதீர்கள். நீங்கள் கூறியது போல எனக்கு எந்தப் பொருளின் மீதும் ஆசை இல்லை. ஆசை தான் துன்பங்களுக் கெல்லாம் காரணி என்பதை நான் காந்திமதியை விரும்பியதிலிருந்து அறிந்து கொண்டேன். தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். இனிறிலிருந்து நான் எனது வேலைகளைத் தொடங்கப் போகிறேன்'' என்றான்.

அப்பொழுது அங்கே தணிகாசலம் வந்து சொன்னார்; ''நவம் ஏன் வெண்காயத்திற்கு இறைக்கவில்லை. பயிரெல்லாம் எரிந்து போயிருக்கு''.

''அழகனை இறைக்கச் சொன்னனான். ஏன் இறைக்காமல் விட்டான்'' ஆச்சரியப்படு வதைப் போலச் சொன்னான் நவராசா.

''கூலியாட்களை இந்த நாளையிலை நம்பக் கூடாது போ. போய் பார்'' என்றார் கதிரேசன். நவராசா மன உறுதியோடு வெளியே சென்றான்.

342. வேண்டின்உண் டாகத் துறக்க; துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.

துன்பம் இல்லாத நிலை வேண்டுமானால், ஒருவன் எல்லாப் பொருள்களிலும் உள்ள ஆசையை நீக்கி விடல் வேண்டும். நீக்கி விட்டால் அவனுக்குப் பல இன்பங்கள் கிடைக்கும்.

## வெற்றி

வீட்டில் இருந்து புறப்பட்ட நவராசா சிகை அலங்கரிப்பு நிலையத்திற்குச் சென்று தனது முகத்தைச் சவரம் செய்வித்தான். தினமும் தனது சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு வந்து முகச்சவரம் செய்து அழகாகத் தன்னைச் சிங்காரிக்கும் நவராசா ஒரு மாத காலமாக வருகை தராதிருந்தது. சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரான இந்திரனுக்கு வியப்பை அளித்தது. அதற்கான காரணத்தை அவன் ஊரவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''பாவம் காந்திமதி அம்மா. நல்ல கெட்டிக்காரி. இளமையிலை செத்தது பெரும் இழப்பு. அதோடை அவாவின்ரை காதலனும் படுகாயப்பட்டுட்டார்'' என்றான் இந்திரன். அவன் தொழில் செய்யும் போது ஊாக் கதைகளைக்

கதைப்பான். சிகை அலங்காரம் செய்ய வருவோர் அவனிடம் ஊர்க் கதைகளைக் கதைப்பது வழக்கம்.

ஆறியிருந்த புண் மீண்டும் தாக்கப்பட்டதைப் போன்று மனம் வலித்தது. எனினும்; ‘‘எல்லாம் விதி; ஊழிவினை; ஒவ்வொருவரின் தலையிலும் என்னென்ன எழுதியிருக்கோ யாருக்குத் தெரியும்’’ என்றான் நவராசா.

‘‘அவா செத்தாலும் புகழோடை தான் செத்தவா. செத்த வீட்டுக்கு எவ்வளவு சனம். நேற்றுப் பள்ளிக் கூடத்திலை பெரிய விழாச் செய்தவை நூல் நிலையத்திற்கு அவான்ரை பெயரை வைச்சவை. இது லேசான காரியமே’’ என்றான் இந்திரன்.

‘‘மனிதரில் பலர் ஐம்புலன்களின் ஆசைகளால் அவாவுற்று அதைத் திருப்திப்படுத்த சுயநலத்துடன் தீமையான காரியங்களைச் செய்கிறார்கள். ஒரு சிலர் ஐம்புலன்களால் வரும் ஆசைகளையும் அடக்கி பல நல்ல காரியங்களைச் செய்து வெற்றியடைகிறார்கள். காந்திமதியும் தனது ஆசைகளை அடக்கி ஊருக்குத் தொண்டு செய்தாள். அதில் வெற்றியும் பெற்றாள். அதனால் தான் நேற்றுப் பாடசாலையில் அந்தப் பொன்னான நிகழ்வு நடை பெற்றது’’ என்றான் நவராசா.

அது இந்திரனுக்குப் புரியவில்லை. சில கணம் தடுமாறினான். பின்; ‘‘என்ன தம்பி, நீர் சொன்ன தொன்றும் எனக்கு விளங்கவில்லை’’ என்றான்.

‘‘ஆறுதலாக இருந்து யோசித்துப் பார் உனக்கு விளங்கும்’’ என்ற நவராசா தலையைச் சீவி விட்டு வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொண்டு வெளியே சென்றான்.

அவன் தோட்டத்திற்கு வந்த பொழுது வெண்காயத்திற்கு நீர் பாய்ச்சப் பட்டிருந்தது; ‘‘அழகன் தான் நீர்பாய்ச்சியிருப்பான்’’ என்று நினைத்தவாறு வெண்காயப் பயிரைப் பார்த்தான். பயிரின் நுனிகள் லேசாகக் கருகி இருந்தன. நான்கு தினங்களுக்கு ஒரு முறை வெண்காயப் பயிருக்கு நீர் பாய்ச்சல் வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன் நீர் பாய்ச்ச வேண்டிய பயிருக்கு இன்று தான் பாய்ச்சியிருக்கிறான் என்று நினைத்தான் நவராசா.

அப்பொழுது அழகன் மண்வெட்டியுடன் வந்தான்; ‘‘இரண்டு தினங்களுக்கு முன்பு நீர்பாய்ச்சச் சொன்னனான். எங்கை போனனி. உனக்கு இயலாவிட்டால் இயலாது என்று சொன்னால் நான் வேறு யாரையாவது ஒழுங்கு செய்திருப்பேன்’’ என்றான் நவராசா கோபமாக.

‘‘மனைவிக்குச் சுகமில்லை காலமை இறைப்ப மென்று வந்தனான் சிவகுரு நாதன் அண்ணை நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். நான் நீங்கள் தான் சொல்லியிருப்பீர்கள் என்று நினைத்தேன்’’ என்றான் அழகன்.

நவராசாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்; ‘‘நீ குடித்தால் மனிசிக்கு வருத்தம் வந்து விடும். உன்னால் எனக்கு எவ்வளவு நட்டம். இனிமேல் நீ வேலைக்கு வர வேண்டாம்’’ என்றான் நவராசா.

‘‘இனிமேல் நான் பிழை விடமாட்டன் தம்பி இந்த ஒரு முறை மட்டும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ’’ அழுதான் அழகன்.

நவராசா எதுவும் பேசாமல் நடந்து சென்று தனது மோட்டார் வண்டியில் ஏறிச் சென்றான். மோட்டார் வண்டியைச் சிவகுருநாதனின் வீட்டுப் படலையில் நிறுத்தி விட்டு இறங்கி சிவகுருநாதனது வீட்டின் உள்ளே சென்றான் நவராசா.

‘‘வாரும் தம்பி, வெண்காயப் பயிருக்கு நீர் பாய்ச்சா விட்டால் எரிந்து போம். அழகன் நீர்பாய்ச்சேல்லை. அவனை நம்பி விட்டு விட்டு நீர் பல தொழில் செய்யிறது. எத்தனை தொழில்கள் செய்தாலும் ஒவ்வொன்றிலும் கவனம் இருக்க வேணும். இல்லாவிட்டால் நட்டம் தான் வரும். பயிர் எரிந்து கிடக்கிறத்தைப் பார்க்கப் பொறுக்கவில்லை. அதனால் தான் இறைத்தனான்’’. என்றார் சிவகுருநாதன்.

‘‘மிகவும் நன்றி அப்பா’’ என்றவாறு பணத்தை எடுத்தான் நவராசா.

‘‘தம்பி உம்முடைய பேரனார் எனது உயிர் நண்பர். அவர் எனக்காக எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார். நானும் அவரும் கணக்குப பார்ப்பதில்லை. பிரித்தும் பார்ப்பதில்லை. அவருடைய பேரனான உன்னையும் என்னுடைய பேரனாகவே நினைத்திருக்கிறேன்.’’ என்றார்.

‘‘பல்வேறு விதமான ஆசைகளால் பொறமைப்பட்டு கெடுக்க நினைப்பவர்கள் தான் பலர். இப்படி ஓர் ஆசையில்லாத உயர்ந்த மனிதனா…?’’ என்று சிந்தித்தான் நவராசா.

‘‘இரு பேரா…. வந்தனி தேநீர் குடித்து விட்டுப் போ. பிள்ளை வாசுகி…’’ என்று அழைக்கு முன்பே; ‘‘கொண்டு வாறன் தாத்தா’’ என்றாள் வாசுகி.

சிவகுருநாதனுக்கு அருகில் நிலத்தில் அமர்ந்தான் நவராசா; ‘‘தம்பி கதிரையில் இரும்’’ என்றார் சிவகுருநாதன். வாசுகி ஒரு தட்டில் தேநீர் கொண்டு வந்து நீட்டினாள். முதல் முதலாக வாசுகியைப் பார்த்தான் நவராசா. அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது.

‘‘சிவகுருநாதனைப் போல நான் ஒரு மனிதனைச் சந்தித்ததில்லை. பயிர் வாடினதே அவனுக்குப் பொறுக்கவில்லை யென்றால் மக்களை அவன் எப்படி நேசிப்பான். அவன் தன் வாழ்நாளில் எப்பொருளின் மீதாவது ஆசைப்பட்டதை

நான் காணவில்லை. ஒருவரின் நலனுக்காக துறக்க வேண்டிய எல்லாவற்றையும் துறப்பான்'' என்றார் கதிரேசு.

கதிரேசு சொல்வது உண்மையானது என்று நினைத்தான் நவராசா.

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

ஐந்து புலன்களுக்குரிய ஆசைகளையும் வெல்லுதல் வேண்டும். அவ் ஆசைகளுக்கு மூலமான பொருள்களை யெல்லாம் ஒன்றாய்த் துறத்தல் வேண்டும்.

## மயங்க வழி

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் இரவுப்பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. தனபாலசிங்கத்தின் சகோதரியின் மகன் ஆரூரன் குடும்பத்துடன் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தான். அவன் அன்று இரவு மகா கணபதி ஆலயத்தில் விசேட பூசை செய்வித்தான்.

அவனது தந்தை பூரணம் பிள்ளை மிகவும் வறியவர். அத்துடன் தீராத நோயாளி. அவரால் கஷ்டப்பட்டு உழைக்க முடியாது. அதனால் சிறிய அளவில் ஒரு கடை வைத்திருந்தார். ஆரூரன் சிறு பையன். அதனால் அவனால் அவருக்கு எந்த உதவியும் செய்ய முடியாதிருந்தது. பூரணம் பிள்ளை துவிச்சக்கர வண்டி ஓட மாட்டார். அதனால் பாரமான பொருட்களை மாட்டு வண்டியில் ஏற்றி வருவார். சந்தைக்குத் தினமும் நடந்து சென்று பொருட்களை வாங்கி வந்து விற்பனை செய்வார். ஊரில் பல கடைகள் இருந்தமையால் பூரணம் பிள்ளையின் கடையில் பெரிதாக வியாபாரம் நடைபெறுவதில்லை. ஆரூரன் எப்பொழுதும் கிழிந்த உடைகளையே அணிந்து கொண்டு பாடசாலைக்கு வருவான்.

ஒரு நாள் அவன் பாடசாலைக்கு வரவில்லை. ஸ்ரீனிவாசன் அவனது ஆசிரியராக அப்பொழுது கடமையாற்றிக் கொண்டிருந்தார். ஆரூரன் தொடர்ந்து ஒரு வாரகாலமாகப் பாடசாலைக்கு வரவில்லை. அதனால் அவன் பாடசாலைக்கு வராத காரணம் பற்றி விசாரிப்பதற்காக அவனது வீட்டுக்குச் சென்றார் ஸ்ரீனிவாசன்.

பூரணம்பிள்ளை நோய்வாய்ப்பட்டு பாயில் படுத்திருந்தார். அவரது மனைவி கலைவாணி அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். ஸ்ரீனிவாசனைக் கண்டதும் எழுந்து வந்து வரவேற்றார்.

''வாருங்கோ வாத்தியார். இவருக்குக் கடந்த ஒரு வாரகாலமாகச் சுகமில்லை. அதனால் ஆரூரனை பட்டணத்தில் உள்ள ஒரு கடையில் வேலைக்குச் சேர்த்து விட்டோம்'' என்றாள் கலைவாணி.

ஸ்ரீனிவாசன் எதுவும் பேசாமல் பூரணம் பிள்ளையைப் பார்த்துக் கொண்டு இருந்தார். பின்; ‘‘ஐயா உங்கள் நிலைமை எனக்குப் புரிகிறது. அதனால் என்னாலான உதவிகளை நான் உங்களுக்குச் செய்கிறேன். ஆரூரன் படிக்க வேண்டும்’’ என்று கூறி விட்டு ஒரு தொகைப் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டுச் சென்றார்.

மறு நாள் ஸ்ரீனிவாசன் பட்டணத்திற்குச் சென்று கடை முதலாளியுடன் கதைத்தார். கடை முதலாளி சொன்னார்; ‘‘ஐயா சிறு குழந்தையை வேலைக்கு அமர்த்துவது தவறு என்று எனக்குத் தெரியும். ஆனால் பூரணம் பிள்ளையின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. அவரை எனக்குப் பல வருடங்களாகத் தெரியும். அவருக்கு சிறு நீரகத்தில் வருத்தம் உள்ளது. அதைச் சுகப்படுத்துவது கஷ்டம். அதனால் தான் அவரது மகனை வேலைக்குச் சேர்த்தேன். அவனது மூன்று மாதச் சம்பளத்தையும் செலவுக்காகக் கொடுத்து விட்டேன். நான் ஒரு சிறிய வியாபாரி. எனக்குக் கூலிக்காரர் தேவையில்லை. இவனை வேறோர் இடத்தில் வேலைக்கமர்த்த யோசிக்கிறேன்’’ என்றார்.

ஸ்ரீனிவாசன் கடை உரிமையாளன் பூரணம் பிள்ளைக்குக் கொடுத்த முற்பணத்தைக் கொடுத்து விட்டு ஆரூரனை அழைத்து வந்தார். கல்வியில் வல்லவனான ஆரூரன் நன்றாகப் படித்துப் பொறியியலாளனானான். அவனது சகல செலவுகளையும் ஸ்ரீனிவாசனே ஏற்றுக் கொண்டார். ஆரூரன் கற்றுக் கொண்டிருந்த காலத்தில் பூரணம்பிள்ளை இறந்து விட்டார். அவரது மரணச் சடங்கிற்கான செலவுகளையும் ஸ்ரீனிவாசனே ஏற்றார்.

இரவு பூசை முடிந்ததும் ஆரூரனும் அவனது மனைவி பிள்ளைகளும் கலைவாணியும் சுவாமியாரிடம் வந்தனர். ஆரூரன் பெறுமதிமிக்க ஒரு தங்கச் சங்கிலியை எடுத்து சுவாமியாரின் கழுத்தில் போடச் சென்றான். சுவாமியார் அதைத் தடுத்தார்.

‘‘மகனே தவம் செய்பவனுக்கு பற்றெதுவும் இருக்கக் கூடாது. பற்றிருந்தால் மீண்டும் மயங்குவதற்கு வழி உண்டாகும். இவ்வளவு காலமும் நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமில்லாமல் போய் விடும்.’’

‘‘சுவாமி அப்படி நீங்கள் சொல்லக் கூடாது. எனது தந்தை கடையில் என்னை விட்ட பொழுது தாங்கள் என்னைக் கூட்டி வந்து எனது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து கல்வியூட்டாதிருந்தால் நான் இன்றுள்ள இந்த நிலையை அடைந்திருக்க முடியாது. தயவு செய்து நான் அன்பளிப்பாகத் தரும் இச் சிறு பொருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்’’ என்று இரந்தான் ஆரூரன்.

‘‘மகனே கற்ற உன்னால் கூட எனது நிலைமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆசை உள்ளவர்களுக்குத் தான் பொருட்களால் இன்பம் கிடைக்கும். ஆசைஇல்லாதோருக்குப் பொருள்கள் எதற்கு. ஒருவன் இன்னொருவரிடம் தான் பெற்ற உதவியை மறக்காமலிருப்பதே கோடி ரூபா

அன்பளிப்புச் செய்ததற்குச் சமமானதாகும். உன்னை நான் அறிவேன். உனது குணம் எனக்குத் தெரியும். இக்கிராமத்தில் உள்ள எந்த ஓர் ஏழைக்கு நீ பொருள் உதவி செய்தாலும் அது எனக்குச் செய்ததற்குச் சமம்'' என்றார் சுவாமிகள்.

'' யாருக்குச் சுவாமி கொடுப்பது''

''அது பற்றி நான் சொல்லக் கூடாது. அதுவும் பற்றேற்பட்டு மயக்கமுண்டாக வழி வகுக்கும். நீயே அதையும் தீர்மானித்துக் கொடு'' என்றார் சுவாமியார்.

344. இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

தவம் செய்பவர்கள் பற்றுக்கள் எதுவும் இல்லாமல் இருத்தல் வேண்டும். பற்றுடையவராக இருந்தால் மீண்டும் மயங்குவதற்கு வழி உண்டாகும்.

## மிகுதியான பொருள்

ஆரூரன் தனது மனைவி பிள்ளைகளையும் தாயையும், மனைவியின் தகப்பனாரின் வீட்டில் கொண்டு சென்று விட்டு விட்டு தான் வந்து சுவாமியாருடன் கோயில் மடத்தில் தங்கினான்.

''மகனே நான் பற்றுக்களைத் துறந்தவன். கல்லிலும் முள்ளிலும் மண்ணிலும் படுத்து உறங்கிப் பழக்கப்பட்டவன். நீ உயர்ந்த உத்தியோகத்தன்; வெளிநாட்டில் பஞ்சனை மெத்தையில் படுத்துறங்கியவன்; சகல வசதிகளோடும் வழ்ந்து பழக்கப்பட்டவன். எனவே நீ சென்று உனது மனைவி பிள்ளை குட்டிகளுடன் தங்கு. உனது மனைவியின் பெற்றோர் உன்னை உபசரிக்க விரும்புவர். அது என்னால் கெட்டு விடக் கூடாது'' என்றார் சுவாமியார்.

ஆரூரன் சிரித்தான். பலமாகச் சிரித்தான். சுவாமியார் எதுவும் பேசாமல் அவன் சிரிப்பதைப் பார்த்து இரசித்தார். பசு ஒன்று தனது கன்று துள்ளி விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற பிரமை அவரின் மனத்துள் எழுந்தது.

''சுவாமி நீங்கள் சொன்னவையெல்லாம் எனக்கு எப்போது வந்தன? ஒரு நேரச் சாப்பாட்டுக்குக் கூட வசதியில்லாமல் வாழ்ந்த காலத்தை நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்து விட்டது. வெளிநாடுகளில் நாம் சுகபோக வாழ்வை அனுபவிக்க முடியாது. ஒரு நாளைக்கு வேலை செய்யாவிட்டால் அந்த நாளின் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க ஒரு மாதத்திற்கு கூடுதலாக வேலை செய்தல் வேண்டும். நான்கு அல்லது ஐந்து மணித்தியாலங்கள்

தான் அங்குள்ளோர் நித்திரை செய்வார்கள். அதனால் கல்லிலோ முள்ளிலோ இல்லை கட்டாந் தரையிலோ படுத்தாலும் எனக்கு நித்திரை வரும்'' என்றான் ஆரூரன்.

''நன்றாகப் பேசப் பழகி விட்டாய்'' என்றார் சுவாமியார்.

''நான் வெளிநாட்டுக்குச் செல்லும் வரையும் உங்களுடன் தங்கியிருந்து உங்களுக்குரிய கடமைகள் அனைத்தையும் செய்ய என்னை அனுமதித்தல் வேண்டும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் என்னை நீங்கள் குளிப்பாட்டினீர்கள். தினமும் சுவையான உணவு வகைகளை எனக்குச் சமைத்துத் தந்தீர்கள். நீங்கள் என்னை அன்னியனாகக் கருதாது பெற்ற பிள்ளைக்குச் சேவகம் செய்வதைப் போல் செய்தீர்கள். அதை நான் உங்களுக்குத் திருப்பிச் செய்தல் வேண்டும் என்றான் ஆரூரன்.

சுவாமியார் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றார். ஆரூரனும் அவருடன் கூடச் சென்றான். அவரை நிலத்தில் இருத்தி விட்டுக் கிணற்றில் நீரை மொண்டு சுவாமியாருக்குக் குளிக்க வார்த்தான். ஊத்தை தேய்த்து விட்டான். அதைத் தணிகாசலமும் வேறுபலரும் வந்து நின்று வேடிக்கை பார்த்தனர்.

''சுவாமியார் தான் பிறருக்கு வேலை செய்து கொடுப்பாரே தவிர பிறரைக் கொண்டு தனக்கு ஒரு போதும் வேலை செய்விக்க மாட்டார். எனக்கும் சுவாமியாருக்குக் குளிக்க வார்க்க வேண்டும் என்று நெடுநாளாக ஆசை'' என்றார் தணிகாசலம்.

''நான் வளர்த்த பிள்ளை. அவனது வார்த்தைகளை என்னால் தட்ட முடியவில்லை'' என்றார் சுவாமியார். சுவாமியார் குளித்ததும் அவரது ஆடைகளைத் துவைத்துக் காயவிட்டான். அவரின் உடலில் இருந்த நீரைத் துடைத்து விட்டுச் சமைக்கச் சென்றான் ஆரூரன்.

''மகனே நான் சமைக்கிறேன்'' என்று தடுத்தார் சுவாமியார்.

'' சுவாமி; வெளிநாடுகளில் வசிப்போரின் மனைவி மாரும் வேலைகளுக்குச் செல்வதால் ஆண்களும் சமைப்பார்கள். எனக்குச் சுவையாகச் சமைக்கத் தெரியும்'' என்ற ஆரூரன் பலவிதமான காய்கறிகளைச் சுவையாகச் சமைத்தான்.

உண்ணும் போது கூசுவாமியார் சொன்னார்; ''மகனே நீ இங்கிருந்தால் எனது தவ வாழ்வு போய்விடும். பிறவித்துன்பத்தை நீக்கிக் கொள்ள விரும்புகிறவனுக்கு உடம்பே பாரமானது. நிலையில்லாத இந்த உடலுக்கு நீ சமைத்துத் தரும் உணவு வகைகளும் செய்யும் சேவைகளும் மிகுதியானவை. எனவே தயவு செய்து நீ இங்கிருந்து போய்விடு'' என்றார் சுவாமியார்.

இரவு இடி மின்னலுடன் பெரு மழை கொட்டிக் கொண்டிருந்தது. சுவாமியார் வழமையாக உடுத்தியிருக்கும் நான்கு முழ வேட்டியுடன் வெளியே இருந்தார். கம்பளிச் சட்டை அணிந்திருந்த ஆரூரனுக்குக் கடுமையாகக் குளிர்ந்தது. அதனால் ஒரு கம்பளிச் சட்டையும் கம்பளிப் போர்வையும் கொண்டு வந்து சுவாமியாருக்குக் கொடுத்தான்.

சுவாமியார் சிரித்தார்; ‘‘மகனே இந்த மரக்கட்டையை நீ பாரத்தை சுமக்க வைக்கப் பார்க்கிறாய். நீ என்னைத் தந்தையாக நினைத்து உதவி செய்தாலும் அது எனது ஆசையைத் தூண்டி விடும். உடலின் பாரத்தையே சுமக்க முடியாது. அல்லற்படும் எனக்கு வேறு பொருட்களையும் உடலுக்களித்து பாரத்தைக் கூட்டாதே. அது தான் நீ எனக்குச் செய்யும் சேவை. துறவியாகிய என்மீது அன்பு செலுத்தாதே; அக்கறை காட்டாதே. உனது அன்பும் அக்கறையும் நான் அழித்து விட்ட ஆசைகளைத் தூண்டி விடும். உடலைப் பாரமாகக் கருதும் துறவிகள் லௌகீகப் பொருட்களின் மீது ஆசைப்படக் கூடாது’’ என்றார் சுவாமியார்.

ஆரூரனுக்கு அதைக் கேட்கத் துக்கமாக இருந்தது. அவனது கண்கள் கலங்கின. அதை அவதானித்த சுவாமியார் சொன்னார்; ‘‘தேவை ஏற்பட்டால் தான் உரிய பொருட்களைப் பாவித்தல் வேண்டும். உனக்குக் குளிர்கிறது. கம்பளிச்சட்டை அணிந்து கம்பளிப் போர்வையால் போர்த்திருக்கிறாய். எனக்குக் குளிரவில்லை. நான் ஏன் போர்க்க வேண்டும்?’’ என்று கேட்டார் சுவாமியார். ஆரூரன் எதுவும் பேசவில்லை.

345. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை?.

பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவனுக்கு உடம்பே பாரமாகும். அப்படியிருக்க வேறு பொருள்களின் மீது ஆசை வைப்பது ஏனோ?.

## உயர்ந்த நிலை

அன்று ஆரூரன் வெளிநாட்டுக்குச் செல்வதற்குப் புறப்பட்டான். சுவாமியாரின் ஆச்சிரமத்தில் இருந்து புறப்பட விருந்த அவனை ஊரவர்கள் வழியனுப்புவதற்காக ஆச்சிரமத்திற்கு வந்திருந்தனர்.

‘‘நான் சுவாமியாரோடு தங்கியிருந்த ஒரு வாரமும் மட்டில்லாத இன்பத்தை அனுபவித்தேன். அத்துடன் சுவாமியாரின் அருகில் இருந்து அவருக்குச் செய்த சேவையை எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகிறேன். இவ்வூர் மக்கள் பலர் தாம் சுவாமியாருக்குச் சேவை செய்யக் கொடுத்து வைக்கவில்லையே என்றும் நீ கொடுத்து வைத்தனி என்றும் சொன்னார்கள். அதை நினைக்க எனக்குப் பெருமையாக உள்ளது. நான் கற்ற பாடசாலைக்கு என்னாலான உதவிகளைச் செய்துள்ளேன். இன்னும் நான் செய்யவுள்ளேன். என்போன்ற மாணவர்கள் கற்பதற்கு நான் வழிவகைகளைச் செய்வேன். ஏழை மாணவர்கள் எவரும் வறுமை காரணமாகத் தங்களுடைய

கல்வியைக் கைவிடக் கூடாதென்பதே எனது இலட்சியமாகும்'' என்றான் ஆரூரன்.

ஆரூரன் மிகவும் நல்ல செயல்களை மனமுவந்து செய்துள்ளான். இந்தக் கோயிலிலே ஒரு கல்யாண மண்டபம் கட்டுதல் வேண்டும். இதற்கான உதவிகளை இவ்வூர் மக்கள் செய்தல் வேண்டும்'' என்றார் சுவாமியார்.

''நான் பத்தாயிரம் ரூபா தருகிறேன்'' என்றான் தனபாலசிங்கம்.

''நானும் பத்தாயிரம் ரூபா தருகிறேன்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''கூரை வேலையை எனது பொறுப்பில் விடுங்கள்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''நான் ஓர் இலட்சம் ரூபா தருகிறேன்'' என்றான் மணிவண்ணன்.

'' ஓட்டுக்கான முழுச் செலவையும் எனது கணக்கில் வையுங்கள்'' என்றான் நவராசா.

''நானும் ஏதாவது தரத்தானே வேண்டும்'' என்றார் குருக்கள்.

அப்பொழுது அங்கு வந்த ஸ்கந்ததேவா; ''நான் எனது செலவில் கல்யாண மணட்பத்தைக் கட்டித் தருகிறேன்'' என்றான்.

''விக்னேஸ்வரமூர்த்திக்கும் தணிகாசலத்திற்கும் சுவாமியாரின் கோரிக்கை ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் பகிரங்கமாக இது வரை எதையும் செய்யச் சொன்னதில்லை. கோயில் பரிபாலன சபையின் தலைவரான விக்னேஸ்வரமூர்த்தியை அழைத்துச் சொல்வார். இல்லாவிட்டால் தணிகாசலத்திடம் சொல்வார். ஏன் என்றுமில்லாதவாறு கூட்டத்தில் சொல்கிறார். அதுவும் சம்மந்தமில்லாத இடத்தில் கூறுகிறார் என்று நினைத்தனர்.

''சுவாமியாரின் பேச்சு இன்று வித்தியாசமாக இருக்கிறது. ஏதோ புதிதாக ஒன்றைச் செய்யப் போறார்'' என்றார் தணிகாசலம்.

''அப்படித்தான் எண்ணுகிறேன். பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

திடீரென்று சுவாமியார் மணிவண்ணனிடம் கேட்டார்; ''மணி நீ இது வரை கோயில் புனருத்தாபன வேலைகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்திருப்பாய்''.

''எனக்கு ஞாபகமில்லைச் சுவாமியார். சிறிது நேரம் பொறுங்கள் சொல்கிறேன்'' என்ற மணிவண்ணன்; தேர் செய்ய நான் இரண்டு இலட்சரூபா

கொடுத்தனான். மடம் திருத்த எனக்கு எழுபத்தையாயிரம் ரூபா முடிந்தது. தீர்த்தக் கேணி திருத்தப் பத்தாயிரம் ரூபா கொடுத்தனான். மஞ்சம் செய்ய ஐம்பதினாயிரம் ரூபா கோபுரம் கட்ட இரண்டு இலட்சரூபா.... மொத்தமாய் ஐந்து இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா நான் கொடுத்திருக்கிறன்''.

''சுவாமியார் மாறாட்டமாய்க் கதைக்கிறார்'' என்றான் சின்னத்தம்பி.

சுவாமியார் சிரித்தார் பின்; ''தணிகாசலம் நீ கோயில் நிதிக்கு எவ்வளவு கொடுத்திருப்பாய்.''

''கணக்கு வைத்திருக்கும் பழக்கம் அடியவனுக்கு இல்லை. வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது என்பார்கள். அதைப் பின்பற்றி வருகிறேன்'' என்றார் தணிகாசலம்.

மீண்டும் சிரித்தார் சுவாமியார்; ''இன்று சுவாமியார் மாறாட்டமாகப் பேசுகிறார். சுவாமியாருக்கு வாக்கு மாறி விட்டது என்று பலர் நினைக்கலாம். அது வல்ல உண்மை. நான் எனது என்னும் அகங்காரத்தை அழிப்பவன் தேவர்களும் அடைய முடியாத வீட்டின்பத்தை அடைவான். என்று நீதி நூல்கள் சொல்கின்றன. இன்று ஆரூரனும், ஆரூரனை வழியனுப்ப வந்தவர்களும் நான் எனது என்ற அகங்காரங் கொண்டவர்களாகவே இருந்தனர். தானதர்மங்கள் செய்வதையோ, தொண்டுகள் புரிவதையோ கோயிலுக்குச் செலவு செய்யும் பணத்தையோ ஒருவன் பிறருக்குச் சொல்லக் கூடாது. அது மட்டுமல்ல அதை நினைவிலும் வைத்திருத்தல் ஆகாது. வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது. என்று சொல்வதன் அர்த்தம் என்ன வென்றால் எமக்கு இடப்பாகத்தில் இருக்கின்ற இருதயத்தில் கூட அந்நினைவு இருக்கக் கூடாது அத்துடன் ஒருவனின் இடப்பக்கம் மனைவிக்குச் சொந்தமானது. எனவே மனைவிக்குக் கூட தான தர்மம் செய்வதைப் பற்றிச் சொல்லக் கூடாது என்பதாகும். நீங்கள் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளாமையால தான் அப்படிக் கூறினீர்கள். இனி அப்படிக் கூறாதீர்கள்'' அப்படி வாழ்ந்தீர்களானால் தேவருக்குக் கூடக் கிடைக்காத இன்பமான வாழ்வு உங்களுக்குக் கிடைக்கும்'' என்றார் சுவாமியார்.

இன்று தான் நான் வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது என்பதன் கருத்தைப் புரிந்து கொண்டேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

346. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

நான் எனது என்னும் செருக்கை அழிப்பவன், தேவர்களும் அடைய முடியாத பேரின்பத்தை அடைவான்.

## விடாதவை

வெளிநாட்டில் வசித்து வந்த வருணனுக்கும் பூரணிக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. உடனே வருணன் தொலை பேசியில் தனது தந்தையுடன் தொடர்பு கொண்டான்; ‘‘அப்பா இன்று பகல் பன்னிரண்டு மணி பதினெட்டு நிமிடத்தில் உங்களுக்கு ஒரு பேரன் பிறந்திருக்கிறான். முகம் உங்களை மாதிரித்தான் இருக்கிறது’’

‘‘அப்படியா மிகவும் சந்தோசம்’’ என்றார் ஆதித்தியன்.

‘‘அப்பா தயவு செய்து எமக்குப் பிள்ளை பிறந்த விஷயத்தை பூரணியின் அப்பாவுக்குச் சொல்லாதைங்கோ. அவர் முன்பு இருந்த மாதிரியே இப்பவும் இருக்கிறார். நாங்கள் இங்கு வந்து ஒரு வருடமாகிறது. ஒரு கடிதம் கூட எழுதவில்லை. பூரணி நாங்கள் சுகமாக வந்து சேர்ந்து விட்டதாகக் கடிதம் எழுதினவள். ஆனால் அவை பதில் போடவில்லை. இப்பவும் அவர் ஊரில் அடாவடித்தனங்கள் செய்யிறதாய் அறிந்தன்’’.

‘‘சரியில்லை அவனுக்குத் தான் மனிதாபிமானம் இல்லை. எமக்கும் இல்லையா..? பூரணிக்காகவாவது சொல்ல வேண்டும்’’.

‘‘பூரணிதான் அவைக்கு சொல்ல வேண்டாம் என்று சொன்னது’’ என்றான் ஆதித்தியன்.

பேரன் பிறந்த விஷயத்தை செல்லம்மாளுக்கும் தகப்பனுக்கும் சொன்னார் ஆதித்தியன்.

‘‘எனக்குப் பீட்டன் பிறந்திட்டான். நான் அவனைப் பார்க்க வேணும்’’ மகிழ்வுடன் சொன்னார் திருநாவுக்கரசு.

செல்லம்மாளின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவள் அக்கம் பக்கத்தினருக்கும் நன்பர்களுக்கும் சொல்லப் புறப்பட்டாள்.

‘‘வருணன் கனகசபாபதிக்குச் சொல்ல வேண்டா மென்றான்’’ என்று ஆதித்தியன் கூறும் போது திருநாவுக்கரசு குறுக்கிட்டுச் சொன்னார்; ‘‘அவன் சின்னப்பிள்ளை. விபரமறியாதவன். எப்படிச் சொல்லாமல் விடுவது. நாளைக்கு ஊரார் பழிப்பினை. அத்துடன் துடக்கு விஷயம். அவர்கள் கோயில் குளங்களுக்குப் போனால் பழி எங்களில் தான் வரும். போய்ச் சொல்லிப் போட்டு வா’’ என்றார் திருநாவுக்கரசு.

தகப்பன் சொன்னது நியாயமாக இருந்தமையால் கனகசபாபதியின் வீட்டுக்குப் புறப்பட்டார் ஆதித்தியன்.

கனகசபாபதியின் வீட்டில் பலர் குழுமி நின்றனர். அருள்நேசனும் வேறுபலரும் கொட்டன்களுடனும் கத்திகளுடனும் வாள்களுடனும் நின்றனர்.

சகுந்தலை முற்றத்தில் நின்று கை கூப்பிய படி அழுது கொண்டு நின்றாள். கனகசபாபதி வீட்டுக்குள் பூட்டி விட்டு இருந்தான்.

‘‘அண்ணை நீங்கள் நியாயத்தைச் சொல்லுங்கோ. காலமை புஸ்பநாதனையும் கிருஸ்ணனையும் கொண்டு என்ரை எல்லை வேலியை வெட்டிப் போட்டான். சின்னத்தம்பி செய்த சிதம்பர சொத்துக் காணியைத் தன்ரை காணியென்று சொல்லி அவனைக் கலைத்து விட்டுக் கடையைக் கட்டின மாதிரி என்னையும் நினைச்சிட்டான். இவனைத் தொலைக்காவிட்டால் ஊரிலை ஒருத்தரும் நிம்மதியாக வாழ முடியாது’’ ஆத்திரத்துடன் கத்தினான் அருள்நேசன்.

‘‘ஆதிஅண்ணை ஊரிலை உள்ள எல்லாரோடையும் இவர் பிரச்சினைப்படுறார். உள்ளது ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. அந்தப் பிள்ளை சொத்தும் வேண்டாம் சுகமும் வேண்டாம் என்று சொல்லி விட்டு போட்டுது. இவர் ஆருக்குத் தேடுறார். எல்லாக் காணீலையும் தனக்குப் பங்கிருக்கென்று சொல்லுறார். யாராவது நீதி நியாயத்தைச் சொன்னாலும் கேட்கிறாரில்லை. இவரோடை என்னாலை வாழ முடியேல்லை. தயவு செய்து என்னை என்னுடைய பிள்ளையிட்டைக் கூட்டிக் கொண்டு போய் விடுங்கோ’’ என்று அழுதாள் சகுந்தலை.

‘‘தம்பி எனது மகன் கனகின்ரை சொத்து ஒரு சதம் கூட வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். இவன் ஏன் இப்படிச் செய்கிறான் என்று எனக்குப் புரியவில்லை. வீணாக அவனை அடித்துப் பழியைத் தேடாதீர்கள். அதனால் உங்கள் பிள்ளைகளுக்குத் தான் துன்பமேற்படும். பலாத்காரத்திற்கு பலாத்காரம் வழியல்ல அமைதியாகப் போங்கோ’’ என்றார் ஆதித்தியன்.

அருள்நேசன் சிறிது நேரம் அங்கே நின்றான். பின்பு சென்று விட்டான்.

‘‘கனகு உனக்கு ஒரு பேரன் பிறந்திருக்கிறான். பூரணி உங்களுக்குப் பிள்ளை பிறந்த விஷயத்தை சொல்ல வேண்டாம் என்று சொன்னது அப்பாவுக்கு மனம் கேட்கவில்லை. அவர் சொல்லச் சொன்னதால் தான் வந்தேன். எனக்கு இங்கு வர வெட்கமாக இருக்கிறது. தற்செயலாக உனக்கேதாவது நேர்ந்திருந்தால் நானும் கோடு கச்சேரி ஏற வேண்டி வந்திருக்கும். நீ ஏன் இப்படி மக்களோடு பழகுகிறாய். நான் என்ற அகங்காரத்தையும் எனது என்ற பற்றையும் விடாதிருப்பவனைத் துன்பங்கள் விடாது பற்றிக் கொள்ளும். உனக்கு எதற்குச் சொத்து. எனது மகன் உன்னிடம் எந்தச் சீதனமும் கேட்காமல் தான் திருமணம் செய்தவன். தயவு செய்து அவனின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக வென்றாலும் உனது அகங்காரத்தை அடக்கி வாழ். நாளைக்கு உன்னை யாராவது கொலை செய்தால், அந்த அவமானம் எமது குடும்ப கௌரவத்தையும் பாதிக்கும். அவனை மதிப்பவர்களின் முன்னால் அவன் செல்ல முடியாத நிலை ஏற்படும்’’ என்றார் ஆதித்தியன்.

‘‘அதற்காக நான் அடங்கி வாழ முடியுமே? என்னுடைய சொத்துக்களை அபகரிக்கப் பார்க்கிறார்கள்’’ என்றான் கனகசபாபதி.

‘‘உனக்குக் கஷ்ட காலம் தான். நான் வாறன்’’ என்று கூறி விட்டு எழுந்து நடந்தார் ஆதித்தியன்.

‘‘தேநீர் குடித்து விட்டுப் போங்கோ’’ என்று சகுந்தலை சொன்னது கேட்டும் அவர் திரும்பி வரவில்லை.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

நான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் விடாதவரை, துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்ளும்.

## தவிக்காதவர்கள்

அன்று இரவு அருள்நேசனது தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிய வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. விவசாய உபகரணங்களை வைக்கவும், விவசாய உள்ளீடுகளையும் கிருமிநாசினி தெளிகருவிகள், விதைகள் போன்றவற்றை வைக்கவுமென அமைக்கப்பட்ட சிறிய வீட்டுக்கு அன்று இரவு யாரோ தீவைத்து விட்டனர். அதனுள் இருந்த ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகி விட்டன. இரவு பன்னிரண்டுமணி போல அருள்நேசனின் தோட்டத்திற்கு அருகில் இருந்த தில்லை நடராசாவும் வேறு சிலரும் தீயை அணைக்கப் போரடினர். கிடுகால் வேயப்பட்டிருந்த அவ்வீட்டை அவர்களால் அணைக்க முடியவில்லை. அதனால் எரிந்து கொண்டிருக்கும் போது தில்லை நடராசா அருள்நேசனிடம் ஓடி வந்தார்.

அருள்நேசன் தோட்டத்திற்கு வந்த போது, வீடு முற்றாக எரிந்து விட்டது. கூரை மரங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அருள்நேசனுக்குத் துக்கமாக இருந்தது. அவனால் அதைத் இனித் திருப்பிக் காட்ட முடியாது. அருள்நேசன் வசதியானவன் அல்லன். அதனால் ஆடுகாலுக்குக் கீழ் போய் அமர்ந்தான்.

‘‘கனகனுக்குக் கெடு காலம் நெருங்கீற்றுது. அவன் அழியப் போறான்’’ என்றான் தில்லைநடராசா.

‘‘புஸ்பநாதனுக்கும் கிருஸ்ணனுக்கும் சாராயத்துக்குக் காசைக் கொடுத்தால் பஞ்சமா பாதகங்கள் முழுக்கச் செய்வங்கள். இவனாலை ஆதித்தியன் குடும்பத்திற்குத் தான் அவமானம். அந்தாள் நேற்று வந்து உன்ரை சொத்து ஒன்றும் எங்களுக்கு வேண்டாம். நீ நல்லபடி வாழ்ந்தால் அது போதும் என்றும். உனது நடத்தைகளால் எனது மகனுக்கும்

குடும்பத்திற்கும் அவமானம் என்று சொல்லி விட்டு தேத்தண்ணி கூடக் குடிக்காமல் போனது'' என்றான் சின்னத்தம்பி.

''வெக்கம், ரோசம், மானம் இல்லாத அந்த மனிசன் வேட்டி கட்டிக் கொண்டு எப்படித்தான் வீதியிலை திரியுதோ... ஆதித்தியன் வெளீலை சொல்லாட்டிலும் என்னைப் பற்றி உள்ளுக்குள்ளை என்ன நினைக்கிறாரோ தெரியேல்லை. நான் அந்தக் கலியாணத்தைச் செய்ய வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். மடைத்தனமாய் முன்நின்று செய்து போட்டன். ஒன்று இரண்டு தீமைகளைச் செய்தால் பொறுத்துக் கொள்ளலாம். நூற்றுக்கணக்கான தீமைகளைச் செய்தால் எப்படிப் பொறுப்பது'' கவலைப்பட்டார் தில்லை நடராசா.

''இவன் சாகமாட்டான். அழுந்தித்தான் சாவன். உலகத்திலை உள்ள எல்லாப் பொருட்களிலையும் ஆசை. சாக முன்னம் எல்லாப் பொருட்களையும் முலைப்பாலிலை கரைத்துப் பருக்க வேணும்'' என்றான் பொன்னையா.

''எதைப் பருக்கினாலும் உயிர் போகாது'' என்றான் சின்னத்தம்பி.

விடியற்காலை தணிகாசலம் அருள்நேசனின் வீட்டுக்கு வந்து, அருள்நேசனைச் சுவாமியார் வரும்படி அழைப்பதாகக் கூறினார்.

அருள்நேசன் கோயிலுக்கு வந்த போது சுவாமியாருடன் கனகசபாபதியும் சகுந்தலையும் விக்னேஸ்வரமூர்த்தியும் இன்னும் பலரும் இருந்தனர்.

''அருள், கனகசபாபதி தான் ஆளை வைத்து உனது கதிகால்களை வெட்டவில்லை என்றும், வீட்டுக்குத் தீவைப்பிக்க வில்லை என்றும் கூறுகிறான். தன்னைச் சாட்டி தன்னில் கோபமுள்ள யாரோ இதைச் செய்கிறார்கள். என்றும் கூறுகிறான். அது பொய்யாக இருந்தாலும் அவன் சொல்வதை நீ கேட்டு அமைதியாக இரு. ஒருவன் செய்யும் செயல்கள் உயிருள்ளவை என்றும். அவை வித்தைப் போன்றவை என்றும் பெரியவர்கள் கூறியதை உங்களுக்கு நான் அடிக்கடி நினைவு படுத்தியிருக்கிறேன். செயல்கள் வினையாக வந்து சூழும் போது அவனைக் காப்பாற்ற யாராலும் முடியாது. பொருட்களின் மீதுள்ள பற்றுக்களை யெல்லாம் நீக்கியவர்கள் துறவிகளிலும் பார்க்க உயர்ந்தவர்கள் மற்றவர்கள் நிலையில்லாத பொருட்களை நிலையான பொருட்கள் என்று நம்பி அறியாமை என்னும் வலையில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். அமைதியாக இரு'' என்றார் சுவாமியார்.

பலர் கூடி நின்ற போதும் யாரும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து அருள்நேசன் சொன்னான்; ''சுவாமி இவன் பயங்கரமானவன். குள்ள நரி செய்யும் செயல்கள் எல்லாம் செய்பவன். செய்து விட்டு நாடகமாடுகிறான்''.

''நீ சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஒருவன் சொல்வதை முதலில் நம்பவேண்டும். பின்பு தான் அதை ஆய்வு செய்தல் வேண்டும். முன்பே நாம்

அதைப் பற்றி விமர்சிக்கக் கூடாது. பொறுப்பு முழுவதையும் மகா கணபதியிடம் ஒப்படைத்து விட்டுச் செல். அவர் யாவற்றையும் தீர்த்து வைப்பார்'' என்றார் சுவாமியார்.

மக்கள் கலைந்து சென்றனர். தணிகாசலம் கனகசபாபதியின் அருகில் வந்தார். '' அண்ணை வீணாக ஏன் துன்பங்களையும் துயரங்களைம் விலைக்கு வாங்குகிறீர்கள். உங்களுக்கு என்ன பொறுப்பு இருக்கிறது. அருள்நேசனின் பிரச்சினையைத் தீர்த்து விடுங்கோ. பிறகு நிம்மதியாக நீங்கள் வாழலாம். பொருட்களில் பற்றுள்ளவனுக்கு நீதி நியாயம் விளங்காது. மனிதாபிமானம் இருக்க மாட்டாது. அதனால் அவன் வாழ்க்கையில் எந்நாளும் பிரச்சினைப்பட்டுத் துன்பங்களையே அனுபவித்துக் கொண்டிருப்பான். இன்றுள்ள சூழ்நிலையில் நீங்கள் சுவாமியாரைப் போல இருக்கலாம்'' என்றார்.

கனகசபாபதி மனைவியுடன் சென்று கொண்டிருந்தான். தணிகாசலம் சொன்னது அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

ஆசைகள் அனைத்தையும் துறந்தவர்களே உயர்ந்தவர்கள் ஆவர். அவ்வாறு துறக்காத மற்றவர்கள், அறியாமையாகிய வலையில் அகப்பட்டவராவர்.

## நிலையற்றவை சேரும்

நடந்து சென்ற கனகசபாபதி திரும்பிப் பார்த்தான். சுவாமியார் அரசமரத்தின் கீழ் இருந்தார். வேறு யாரும் அங்கிருக்கவில்லை. அதனால் சற்று நேரம் நின்று யோசித்த கனகசபாபதி; ''சகுந்தலை நான் ஒருக்கால் சுவாமியாரிடத்தில் சென்று வருகிறேன். சிறிது நேரம் நில்'' என்று கூறி விட்டு சகுந்தலையின் பதிலை எதிர்பாராது சுவாமியார் இருந்த அரசமரத்தை நோக்கி நடந்தான்.

''சுவாமி நான் தங்களுடன் சற்று நேரம் தனிமையாக உரையாட விரும்புகிறேன். அதனால் தான் திரும்பி வந்தேன்'' என்றான்.

சுவாமியார் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தார். கனகசபாபதி சுவாமியாரைப் பார்த்தான். அவரின் முகத்தில் ஓர் ஒளி தென்பட்டது. அவ்வொளி கனகசபாபதியை நோக்கி வருவதைப் போல இருந்தது. கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தான் ஒளி பிழம்பாகத் தெரிந்தது. அவனுக்குப் பயமாக இருந்தது.

''சுவாமி எனக்குப் பயமாக இருக்கிறது'' அவனது குரல் பிசிறியது.

‘‘காரணமில்லாமல் ஏன் பயப்படுகிறாய்? ஒருவன் மற்றவர்களுக்குத் தீமைகள் செய்தால் தான் பயம் கொள்ளல் வேண்டும். நீ தான் எதையும் செய்யவில்லை என்று கூறுகிறாயே. அதை அருள் நம்பிச் செல்கிறான். பிறகேன் பயம்’’ என்றார் சுவாமியார்.

கனகசபாபதி உடனே பதில் கூறவில்லை. சிறிது நேரம் யோசித்தான். சுவாமிகள் கனகசபாபதியின் முகத்தைப் பார்த்தார். அவனது முகம் விகாரமடைந்திருந்தது. அவன் ஆறுதலாக எல்லாவற்றையும் தீர்மானிக்கட்டும் என்று நினைத்துக் கண்களை மூடினார்.

வெகுநேரத்தின் பின் கனகசபாபதி ‘‘சுவாமி’’ என்றழைத்தான்.

கண்களைத் திறக்காது; ‘‘சொல்லு’’ என்றார் சுவாமியார்.

மீண்டும் தயங்கிய கனகசபாபதி; ‘‘நான் பல தீமைகளைச் செய்தது உண்மை தான். சின்னத்தம்பி செய்த சிதம்பர சொத்துக் காணீக்கை கடை கட்டினது பிழை. பாடசாலைக் காணிக்கு வழக்காடியது பிழை. நான் தான் கிருஸ்ணனையும் புஸ்பநாதனையும் கொண்டு அருள்நேசனின் கதிகால்களை வெட்டுவித்தேன். அவனது தோட்ட வீட்டுக்கும் தீவைப்பித்தேன்..’’

சுவாமியார் கண்களைத் திறந்தார். கனகசபாபதி அவரது கண்களைப் பார்த்தான். அவனுக்குப் பயமாக இருந்தது.

‘‘நீ செய்த தீமைகள் எல்லாம் இப்பொழுது திரண்டு வந்து உன்னை மிரட்டுகின்றன. அதனாலேயே நீ சித்திரவதைப்பட்டு இறந்து விடுவாய். ஆசைகள் தான் பிறவிக்குக் காரணம். ஆசைகள் இல்லாதவன் மகிழ்வாக வாழ்வான். அதனால் அவனுக்குப் பிறவிகள் இருக்க மாட்டாது. ஓர் ஆன்மா தனது ஆசைகளைப் பூர்த்தி செய்யாது போனால், அவ்வாசைகளை நிறைவு செய்ய பிறவி எடுக்கும். எடுத்த பிறவியிலும் அது தன் ஆசைகளை நிறைவேற்றாது விட்டால் மீண்டும் பிறப்பெடுக்கும். ஆசைகள் இல்லாதவனுக்குப் பூமியில் என்ன வேலை இருக்கிறது. நாடகம் பார்க்க விரும்பாத ஒருவன் நாடகசபாவுக்கு ஏன் செல்ல வேண்டும். ஊன் உண்ணாதவன் சந்தையில் மாமிசத்தை வாங்குவானா. அதைப் போன்றது தான் பிறவி. ஒரு பழத்தை உண்ண வேண்டும் என்று ஆசைப்படும் ஒருவன் அப்பழத்தைத் தேடிப் பிடித்து உண்ணாமல் இருக்க மாட்டான். கள் உண்ணும் ஒருவனுக்கு தினமும் கள் உண்ணும் நினைவு வருவது போல ஆசைகள் உள்ளவனுக்குப் பிறப்புத் தொடர்ந்து வருவதைத் தடுக்க முடியாது. வாழ்க்கை என்பது பொருள் தேடவும் தான் இன்பமாக வாழவும் என்று நினைக்காதவனுக்கு பூமியில் என்ன வேலை இருக்கிறது’’ என்றார் சுவாமியார்.

கனகசபாபதிக்குப் பயமாக இருந்தது. அவனது உடல் நடுங்கியது. அந்த அதிகாலை வேளையிலும் வியர்த்துக் கொட்டியது; ‘‘அறியாமையால் நான் பல தவறுகளைச் செய்து விட்டேன்’’ அழுதான்.

‘‘அச்சம் தான் நல்வாழ்வுக்கான முதல்படி. நீ இப்பொழுது தீமைகள் செய்ததற்காக அச்சப்படுகிறாய். இது காலங் கடந்த ஞானம். ஒருவன் தீமை செய்வதற்கு அஞ்ச வேண்டும். பணம் படைத்தவர்கள் மீண்டும் மீண்டும் ஏன் பணத்தைத் தேடிப் புதைத்து வைத்தல் வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் உனக்கேன் செல்வம். உனது மகளும் மருமகனும் உனக்குத் தேவையானவற்றை அனுப்பக் காத்திருக்கிறார்கள். அதை விட நீ தேடிய பணம், உனது தந்தையால் தேடப்பட்ட செல்வம் யாவும் உன்னிடம் நிறைந்து காணப்படுகிறது. அவற்றின் சுமையையே உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்தச் செல்வம் உனது மூன்று தலை முறைக்குக் காணும். இப்பொழுது நீ உன்னால் எதுவும் செய்ய முடியாதென்று இங்கே வந்திருக்கிறாய். இங்கு கேட்டவற்றில் உனக்கு நம்பிக்கை இருந்தால் கேட்டபடி நட. அது போதும். அப்படி நடந்தால் நிட்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும். உனது உறவினர்களும் நண்பர்களும் நீ செய்த தீமைகளை மறந்து உன்னுடன் மகிழ்வுடன் உறவாடுவார்கள். ஒருவனுக்கு வரும் பெருங் கொடுமை என்ன வென்றால் அவனது பிள்ளைகள் தொடர்புகளை அறுத்தலே. ஒரே ஒரு மகள் பிள்ளை பிறந்தும் உனக்கு அறிவிக்கவில்லை யென்றால் உனது நிலை என்ன...? சற்றுச் சிந்தித்துப் பார். இதற்கு மேலும் நீ வாழ்வதால் யாருக்காவது இலாபம் இருக்கிறதா..? சுவாமியார் சொல்லிக் கொண்டிருந்தார்.

கனகசபாபதிக்குத்தலை சுற்றியது.

349. பற்றற்ற கண்ணே பிறப்புஅறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்.

பற்றை அறுத்தாலே பிறப்பு அறும். இல்லா விட்டால் பிறப்பு மாறி மாறி வந்து நிலையாமை காணப்படும்.

## விடாத பற்று

‘‘ஒருவன் தான் செய்த குற்றங்களை நினைத்து வருந்தினால் அவன் திருந்த ஆரம்பித்து விட்டான் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்த வருத்தம் இதயத்தில் இருந்து வந்ததாக இருத்தல் வேண்டும். உலகமே நாடக மேடை. நாம் எல்லாம் நடிகர்கள். நடிகர்களுக்குள்ளேயே போலியாக நடிப்பவர்கள் இருக்கிறார்கள். மெய்மையின் வெளிப்பாடு தான் மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு இரங்குதல் இரக்கப்படுதல் தான் சமய வாழ்க்கையின் ஆரம்பநிலை. மக்கள் துன்பப்படுவதைக் கண்டு இறைவன் இரங்குகிறான். அவர்களுக்கு உதவி செய்ய மனித உருவை நாடுகிறான். அந்த வகையில் மனிதன் கடவுளாகிறான். கடவுளை எங்காவது பிரித்துக் காணமுடியாது.

அவர் உயிர்களுடனேயே இருக்கிறார். துன்பங்கள் ஒருவன் செய்யும் பாவத்தினால் ஏற்படுகின்றன. செயல்கள் தான் பாவபுண்ணியங்களின் விளை நிலமாகும். உனக்கு ஏன் துன்பம் வர வேண்டும். துன்பங்கள் ஒருவனுக்குத் தானாக வந்து சேர்வதில்லை. அவன் துன்பங்களை வருந்தி அழைத்துத் தன் தோளில் ஏற்றி வைத்துக் கொண்டு அல்லற்படுகிறான். வெறுங்கையுடன் செல்பவன் எங்கும் பயமின்றிச் செல்கிறான். மடியில் செல்வத்தை வைத்துக் கொண்டு செல்பவன். நித்திரையின்றி அவலப்படுகிறான். இது தான் உலகத்தவர்களின் நிலை''.

''சுவாமி நான் எனது தவறை உணர்ந்து கொண்டேன். எனது மருமகன் சொன்னது போல எனக்குச் சொந்தமில்லாதவற்றை கொடுக்கச் சம்மதிக்கிறேன்'' என்றான் கனகசபாபதி.

''உனது விருப்பப்படி செய். உலகத்தில் உள்ள எல்லாப்பற்றுக்களையும் விடுவது இலேசான காரியம் என்று நீ நினைக்காதே. முற்றும் துறந்த துறவிகளே சில சமயங்களில் ஆசைப்பட்டு அல்லற்படுகிறார்கள். பற்றுக்களை விட வேண்டுமானால் பற்றற்ற இறைவனின் பாதங்களைப் பற்றுதல் வேண்டும். அவன் மேல் வைத்த பற்றை விட்டு விடாமல் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனையும் தெய்வத் தன்மை நிறைந்தவனாகவே இறைவன் படைக்கிறான். அதை வலியுறுத்தத் தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கிறார்கள். குழந்தை வழரும்போது தெய்வத் தன்மையும் வளர வேண்டும். முழுமனிதனாகிய பின் அவன் தெய்வமாகி விட வேண்டும். அதை விட்டு விட்டு கோயில்களையும் கோபுரங்களையும் கட்டிப் பூசைகள் செய்வதாலும் வணங்குவதாலும் தொண்டுகள் செய்வதாலும் எப்பயனும் ஏற்படப் போவதில்லை. ஒரு மனித ஆத்மா துயரத்தால் அழும் பொழுது அதைக் கவனிக்காது வாழ்வதில் அர்த்தமில்லை. இறைவன் பற்றற்றவன்; விருப்பு வெறுப்பில்லாதவன். அதே போல் மனிதனும் பற்றற்றும் விருப்பு வெறுப்புக்கள் இன்றியும் வாழ்ந்தால் அவனும் இறைவனாகி விடுவான். துன்பங்களையும் துயரங்களையும் போக்கச் சிறிந்த வழி கடவுள் வழிபாடு தான். நீ உனது துன்பங்களைப் போக்கி இன்பமாக வாழ விரும்பினால் பற்றற்ற இறைவனைப் பற்றிக் கொள். பாவங்கள் யாவும் தீரும். மனதில் நிம்மதி ஏற்படும். பற்றுக்கள் விலகும். பிறப்புக்கள் மறையும்'' என்றார் சுவாமியார்.

கனகசபாபதியின் கண்களில் இருந்து கண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஆதித்தியன் அங்கே வந்தார்; '' சுவாமி தெரியாத் தனமாக எனது நண்பனின் சொல்லைக் கேட்டு இத்தீயவனின் குடும்பத்தில் பெண் எடுத்து விட்டேன். ஊரில் மதிப்போடு வாழ்ந்த என்னை இப்பொழுது மக்கள் பரிகசிக்கிறார்கள். இன்று காலையில் ஊரவர் ஒருவர் எனது வீட்டுக்கு வந்து உமது சம்மந்தி யாரோ ஒருவனின் வீட்டைக் கொழுத்தி விட்டான். என்று சொன்னான். அப்பொழுதே என் உயிர் போய்விட்டது'' என்றார்.

சுவாமியார் சிலகணங்கள் பேசாமல் இருந்தார்; ''கனகு ஒருவன் தனக்காக மட்டும் வாழ்வதில்லை. குடும்பத்தில் உள்ள ஒருவனது தீய செயல் பலரைப் பாதிக்கும். ஆதித்தியன் உனது வீட்டில் சம்பந்தம் செய்ய முன் மதிப்போடும்

மரியாதையோடும் வாழ்ந்தார். உனது வீட்டில் சம்பந்தம் செய்த பின்பு தனது மானம் மரியாதை போய் விட்டதாகக் கூறுகிறார். உனது தீய செயல் எத்தனை பேரைப் பாதிக்கிறதென்று நினைத்துப் பார்த்தாயா? அவர் செய்த பாவம் தான் இப்பொழுது உன்னுருவில் அவருக்கு வந்திருக்கிறது. என்று நீ நினைக்கலாம். அது உண்மையாக இருந்தாலும் நீ அதில் சம்பந்தப் பட்டிருப்பதால் முழுக் குற்றமும் உன்னையே சாரும். ஒருவனின் நடத்தை மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும் நன்மை விளைவிப்பதாகவும் இருக்க வேண்டுமே தவிர ஒருவனைக் கெடுப்பதாகவோ அல்லது அவனுக்குத் தீமையளிப்பதாகவோ இருக்கக் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்'' என்றார் சுவாமியார்.

அறிவுள்ள ஒருவனுக்கு அறிவுரைகள் கூறத் தேவையில்லை. அறிவுரை கூறியும் கேட்காதவனுக்கு அறிவுரை கூறுவதும் தீமையைத் தான் தரும். இவன் திருந்த மாட்டான் சுவாமி. இவனைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல் வேண்டும்'' என்றார் ஆதித்தியன்.

''கொடிய மிருகங்களைக் கூட்டில் அடைத்து வைத்திருப்பதும் ஆபத்தான செயல் தான். தற்செயலாக அவை கூட்டைப் பிரித்தால் எல்லோரையும் கொன்று விடும். எனவே அடித்துக் கொலை செய்ய வேண்டும்'' என்றான் தில்லை நடராசா.

''தில்லை'' என்று அன்புடன் அழைத்தார் சுவாமியார்.

''ஆத்திரத்தால் அறிவிழந்து விட்டேன். என்னை மன்னியுங்கள்'' என்று கூறிச் சுவாமியாரின் கால்களில் விழுந்தான் தில்லை நடராசா.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றுக்கள் இல்லாத இறைவனின் மீது பற்று வைத்தால், எம்மைப் பற்றிய பற்றுக்கள் விலகி விடும்.

## உயர்வு இழப்பு

கனகசபாபதி தீமைகள் செய்பவன் மட்டுமல்ல துன்பத்தை அனுபவிக்கும் உயிர்களுக்கு உதவி செய்யாதவன். அவனது சகோதரன் சிதம்பரேஸ்வரனின் மகளுக்கு கடும் சுகவீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். சிதம்பரேஸ்வரன் வறியவன். அவனிடம் பெருந்தொகையாகப் பணம் பிழங்குவதில்லை. அறுவடை காலத்தில் மட்டும் பணம் புழங்கும். அவன் வாழைத் தோட்டம் செய்து வந்தான். தினமும் இரண்டு மூன்று வாழைக் குலைகளை வெட்டிச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்று விட்டு அன்றைக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவான்.

சிதம்பரேஸ்வரனின் மகள் ஆரணி கடும் சுகவீன முற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவளின் மருத்துவச் செலவுக்குப் பெருந்தொகையான பணம் தேவைப்பட்டது. அதனால் சிதம்பரேஸ்வரன் சேமித்து வைத்திருந்த பணத்தை முதலில் எடுத்துச் செலவு செய்தான். பின் ஆரணியினுடைய நகைகளையும் மனைவியினுடைய நகைகளையும் விற்றுச் செலவு செய்தான். அப்படி இருந்தும் பணம் போதவில்லை. அதனால் மனைவியின் தாலிக் கொடியை விற்பதற்காகக் கொண்டு சென்றான். வழியில் மணிவண்ணனைச் சந்தித்து தனது நிலையைச் சொன்னான்.

‘‘அண்ணை துன்பங்கள் துயரங்கள் எல்லாம் ஊழ்வினையாலும் வரும். கவலைப் படாதைங்கோ. மகா கணபதி உங்களைக் கட்டாயம் காப்பாற்றுவார். இதில் பத்தாயிரம் ரூபா இருக்கு கொண்டு போங்கோ. பிறகு நீங்கள் வெண்காயம், உருளைக்கிழங்கு தரேக்கை கழிக்கிறன்’’ என்றான்.

அந்தப்பணமும் முடிந்து விட்டது. ஆரணிக்கு அவசரமாக இரத்தம் ஏற்ற வேண்டும் என்று வைத்தியர்கள் சொன்னார்கள். அதனால் தில்லைநடராசாவையும் கூட்டிக் கொண்டு கனகசபாபதியின் வீட்டுக்குச் சென்றான் சிதம்பரேஸ்வரன்.

ஒப்புக்குக் கூட ‘வா’ என்றோ அல்லது ‘‘ ஏன் வந்தாய் ?’’ என்றோ கனகசபாபதி கேட்கவில்லை. அதனால் தனது நிலையைச் சொன்னான் சிதம்பரேஸ்வரன்.

கனகசபாபதி வெகுநேரம் யோசித்து விட்டுச் சொன்னான்; ‘‘எனக்கு வயது போய்விட்டது. என்னில் இரத்தம் எடுக்க மாட்டார்கள். இப்ப என்னட்டைக் காசு இல்லை’’ என்றான்.

அன்று மாலை தில்லை நடராசாவைச் சந்தித்த பூரணி சிதம்பரேஸ்வரனிடம் கொடுக்கச் சொல்லிப் பத்தாயிரம் ரூபா கொடுத்தாள்.

பின்பு ஒரு நாள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலய இராஜகோபுரம் கட்டுவதற்காக நிதி வசூலிக்க தில்லை நடராசாவும் தணிகாசலமும் தனபாலசிங்கமும் வேலாயுத பிள்ளையும் கனகசபாபதியின் வீட்டுக்குச் சென்றார்கள்.

‘‘எனக்கு இப்ப சரியான கஷ்டம். கடன் வாங்கியவர்கள் தலை மறைவாகத் திரியுறாங்கள்’’ என்றான் கனகசபாபதி.

‘‘இப்ப நீங்கள் காசு தரத்தேவையில்லை. எவ்வளவு தாறதெண்டு எழுதுங்கோ வசதியுள்ள வேளை தாருங்கோ’’ என்றார் தணிகாசலம்.

எழுதினால் தரவேணும். ஊரிலை கொஞ்சப் பேருக்கு வேறை வேலைகள் இல்லை. அதாலை கோயில் பள்ளிக்கூடம் சனசமூக நிலையம்

கட்டவேணுமெண்டு நிதிவசூலித்துத் திரியுறாங்கள். மகா கணபதி இருக்க ஒரு சிறு கட்டிடம் காணும். பெரிய அரன்மனை மாதிரிக் கட்டியிருக்கிறியள். இப்ப இராஜகோபுரம் கட்டப் போறன் என்கிறியள். இது எல்லாம் மகா கணபதிக்குத் தேவையே''?

''ஊருக்கை எல்லாருடைய வீட்டுக்கும் போனனாங்கள். உங்கடை வீட்டை விலத்தி வாறது சரியில்லை யென்று தான் வந்தனாங்கள். வசதியில்லா விட்டால் போறம்'' என்றார் தணிகாசலம்.

''நீ எனக்கு ஆலோசனை சொல்லுறாய். கையிலை நாலு காசிருந்தால் பரவாயில்லை. கோயிலையும் பள்ளிக் கூடத்தையும் சாட்டி வாழுறது. பிறகு கஷ்டப்பட்டு உழைக்கிறவனுக்குக் கதை சொல்லுறது'' என்றான் கனகசபாபதி.

தணிகாசலம் எதுவும் பேசவில்லை. கொப்பியை வாங்கிக் கொண்டு நடந்தார். வெளியே வந்த பின்பு தில்லை நடராசா சொன்னான்; கனகனுக்கு இரண்டு அடி போட்டிருக்க வேணும். பேசாமல் வாறியள். நாங்கள் எல்லாரும் பேசாமல் இருக்கிறதாலை தான் இவன் எழும்பி ஆடுறான்''.

நாங்கள் முட்டாள்களுக்கு ஆலோசனைகள் சொல்லக் கூடாது. அடிக்கவும் கூடாது. அதனால் பின்பு நாம் தான் வருத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். உண்மையான நிலையை உணர மறுப்பவனுக்கு ஆலோசனைகள் சொல்வதால் தீமை உண்டாகுமே தவிர நன்மை உண்டாக மாட்டாது''. என்றார் தணிகாசலம்.

சுவாமியாரின் முன்பு தலை குனிந்த வண்ணம் நின்ற கனகசபாபதியைப் பார்த்துத் தில்லை நடராசா சொன்னான்; ''நீ வாழ்ந்த காலத்திலை ஒரு நன்மை செய்ததாகச் சொல்லு பார்ப்பம். உன்னுடைய சகோதரனின் பிள்ளை உயிராபத்தான நிலையிலை இருக்கேக்கை ஒரு சதம் கொடுத்தனியா? கோயில் கட்டிட நிதிக்குக் குடுத்தியா? இல்லை ஓர் ஏழைக்கு ஒரு பிடி உணவு கொடுத்தியா...? என்ன செய்தனி சொல்லு.. உண்மையானவற்றை யெல்லாம் பொய்யானவை என்று நீ நினைத்ததாலை தான் இண்டைக்கு நீ இந்த இழிந்த நிலையை அடைந்திருக்கிறாய். இனியாவது நீ திருந்தி வாழ். உன்னைப் போல மெய்யானவற்றைப் பொய்யானவை என்று நான் கருதியிருந்தால் பூரணிக்குத் திருமணம் முடிந்திராது. அறமும் நீதியும் மெய்யானவை என்று யாரோ ஒருவன் நினைத்தால் தான் தொலைந்த உனது பெட்டி கிடைத்தது. மெய்யானதை பொய்யானதென்று கருதித்தான் நீ அருளின் வீட்டுக்குத் தீ வைத்தனீ...'' தில்லைநடராசா உணர்ச்சி பொங்கப் பேசிக் கொண்டிருந்தான்.

351. பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மானாப் பிறப்பு.

மெய்ப் பொருள் அல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று தவறாக எண்ணுவதால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

## இன்பநிலை

கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபரின் அறையில் அதிபருக்கு முன்னால் இருந்த கதிரையில் அமர்ந்திருந்தார் தில்லை நடராசா. அதிபருக்கு முன்னால் உள்ள ஆசனத்தில் அதிபருக்கு சரிசமமாக இருக்க அவருக்குக் கூச்சமாக இருந்தது. மேலே பொருத்தப்படடிருந்த மின் விசிறி லேசான காற்றை கொடுத்துக் கொண்டிருந்தது. மிகவும் அழகாக இருந்த அறையுள் பொருட்கள் யாவும் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. அதிபரின் மேசையில் இருந்த இரண்டு நாய்க் குட்டிப் பொம்மைகள் தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. அலுவலகத்திற்கு வெளியே பல மாணவர்கள் நின்று கலகலப்பாகக் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அலுவலகத் தொழிலாளியுடன் தில்லைநடராசாவின் மகன் பிரதீபன் வந்தான். அவன் வந்ததும் அதிபர் சொன்னார்; ‘‘தில்லை உமது மகன் இந்த வருடம் நடைபெற்ற கா. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வணிகப் பிரிவில் முகாமைத்துவக் கல்விக்கு அகில இலங்கை ரீதியாக மிகவும் கூடிய புள்ளிகளைப் பெற்று முதல் மாணவனாகச் சித்தியடைந்துள்ளான். மிகவும் நல்ல பெறுபேற்றைப் பெற்ற மாணவனின் தந்தையைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே உங்களை வரச் சொன்னேன். ஒரு தந்தையின் கடமை பிள்ளைக்கு கல்வியறிவைக் கொடுத்தல் மட்டுமல்ல அவனைச் சிறந்த ஒழுக்க முடையவனாக உருவாக்குதலுமாகும். நல்ல ஒழுக்கமுள்ள ஒரு பிள்ளையைப் பெற்ற உங்களை எப்படிப் பாராட்டுவதென்று எனக்குப் புரியவில்லை. அதை விட உங்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று கூறலாம். என்ற விக்னேஸ்வரமூர்த்தி பிரதீபனின் பக்கம் திரும்பி, பிரதீபன் உமது வாழ்வு சிறக்க எனது ஆசிகளும் பாராட்டுக்களும்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘நன்றி ஐயா’’ என்ற பிரதீபன் அருகில் வந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டுச் சொன்னான்; உங்களைப் பார்த்துத் தான் நான் ஒழுக்கத்தைக் கற்றுக் கொண்டேன். அதற்கு எனது தந்தையார் உதவியாக இருந்தார்’’ என்றான்.

‘‘மிகவும் மகிழ்ச்சி நீர் வகுப்புக்குச் செல்லும்’’ என்ற விக்னேஸ்வரமூர்த்தி தில்லை நடராசாவின் பக்கம் திரும்பிச் சொன்னார்; ‘‘வீட்டுச் சூழலில் தான் பிள்ளைகள் அதிகமான நேரம் இருக்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளின் அறிவில் மட்டும் கவனம் செலுத்தாது ஒழுக்கத்திலும் கவனம் செலுத்துதல் வேண்டும். நீங்கள் ஒழுக்கமானவர்; பண்பானவர்; மயக்கம் நீங்கிய குற்றமில்லாத அறிவை உடையவர். அதனால் உங்களுக்குத் துன்பங்கள் எவையும் வரமாட்டாது. உங்கள் மகன் வணிகத் துறையில் நன்கு பிரகாசிப்பான்; வளமுடன் வாழ்வான்; பேரும் புகழும் அடைவான்’’.

விக்னேஸ்வரமூர்த்தி சொல்வதைக் கேட்க தில்லைநடராசாவுக்கு சந்தோசமாக இருந்தது. கனகசபாபதி தனக்கு அடித்தது நான் தான் என்று புகாரிட்ட போது சிவபாதசுந்தரம் அவரை அழைத்துச் சென்று கடுமையாக விசாரித்தார்; மிரட்டினார்; அடித்தார். தில்லை நடராசா பயந்து போனான். கடவுளின் மீது அவனுக்கு வெறுப்பாக இருந்தது; “மகா கணபதியே உண்மையாக நீ இருந்தாயேயானால் உனது பக்தனான எனக்கு இவ்வளவு துன்பம் வருமா. நான் கனகனுக்கு அடிக்க வேண்டும் என்று மனதால் கூட நினைக்கவில்லை. அப்படியிருக்க என்னைத் துன்புறுத்துகிறாய். இது நியாயமா..”? என்று கேட்டு அழுதார்.

மறு நாள் அவர் காவல் நிலையத்திற்குச் சென்ற போது காவல் துறை அதிகாரியான சிவபாதசுந்தரம் அவரைச் சிரித்த முகத்துடன் வரவேற்றார்; “வாருங்கோ தில்லைநடராசா. காலமை உமக்காக அதிபர் இஞ்சை வந்திட்டார். பஞ்சமாபாதங்களைச் செய்யிறவை தான் இஞ்சை வாறவை. அதிபர் வந்ததை என்னால் நம்ப முடியவில்லை. வந்து சொன்னார்; சிவா, தில்லைநடராசா மிகவும் நல்லவன்; ஒழுக்க சீலன், அவன் கடைசி வரையும் கனகசபாபதிக்கு அடித்திருக்க மாட்டான். இரண்டொரு விஷயத்தில் நான் அவரை அவதானித்துள்ளேன். தில்லை நடராசா மீது எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அவரின் விஷயத்தில் நான் எதற்கும் பொறுப்பாக நிற்பேன். தயவு செய்து அவரைத் தண்டிக்காதீர்கள்” என்றார். அதற்கு மேல் எனக்கு எதற்குப் பொறுப்பு. நேற்று எனது விசாரனையில் ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். நாங்கள் குற்றவாளிகளுடன் பழகுவதால் எல்லோரையும் சந்தேகிப்போம். அத்துடன் குற்றவாளிகள் பொய்கள் தான் சொல்வார்கள். அவர்களை வெருட்டி, மிரட்டி, அடித்துத் தான் உண்மைகளை வெளிக் கொண்டு வருதல் வேண்டும்”.

காவல் துறை அதிகாரி சொன்னது அவரின் காதில் ஒலித்தது; “மிகவும் நன்றி வாத்தியார். உங்களின் ஆசியும் அனுக்கிரகமும் இருக்கும் வரைக்கும் பிரதீபனுக்கு எந்தக் குறையும் வராது. நான் வரப் போகிறேன்”. என்றார் தில்லை நடராசா.

“க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பாராட்டு விழாவைப்போம். அப்பொழுது சிறந்த மாணவனைப் பெற்றமைக்காக உங்களையும் மனைவியையும் அழைப்போம்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தில்லைநடராசா பூரித்துப் போனார். வானத்தில் பறப்பதைப் போன்ற உணர்வு. இதற்கு மேல் எனக்கு என்ன வேண்டும்?” என்று நினைத்தார்.

352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு.

அறியாமையாகிய இருளில் இருந்து நீங்கிய குற்றமற்ற மெய் உணர்வை உடையவர்களுக்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்பத்தைக் கொடுக்கும்.

# அண்மையில் உள்ளது

அன்று கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் அந்த வருடம் கா.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கும், அவர்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பாராட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெருந்தொகையான பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

சரியாக இரண்டு மணிக்கு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் இருந்து அதிபரையும் ஆசிரியர்களையும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களையும் பழைய மாணவர் சங்கத்தினர் மாலை சூடி கௌரவித்தனர். அன்றைய விழாவுக்கு கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியரின் மகன் ஸ்கந்த தேவாவும் மனைவியும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மகா கணபதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் பாடசாலையை வந்தடைய நான்குமணியாயிற்று வீதி மிகவும் அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. வீடுகள் தோறும் கும்பம் வைத்து மாலைகள் சூடி அதிபரையும் ஆசிரியர்களையும் மக்கள் வரவேற்றனர்.

விழாவுக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமை வகித்தார்.

கல்விப்பணிப்பாளர் திரு.சுந்தரலிங்கம் அவர்களே பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் கடவுள் சுப்பிரமணியத்தின் மகன் கொடை வள்ளல் ஸ்கந்ததேவா அவர்களே அவரது பாரியாரே மற்றும் என்மீது அன்பும் பாசமும் கொண் நல் உள்ளங்களே. இன்று மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு பொன்னான நாளாகும். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அதிபரும் ஆசிரியர்களும் பாடசாலைச் சமூகமும் அயராது உழைத்தமையால் தான் இன்று இந்த விழாக் கொண்டாடப்படுகிறது. வணிகத் துறையில் இலங்கையிலே முதலாவது மாணவனாக இப்பாடசாலையைச் சேர்ந்த பிரதீபன் என்ற மாணவன் சித்தியடைந்திருக்கிறான். அதை விட ஆறு மாணவர்கள் மருத்துவத் துறைக்கும் ஒன்பது மாணவர்கள் பொறியியல் துறைக்கும் நாற்பத்தியொரு மாணவர்கள் ஏனைய துறைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் புலமைப் பரிசில் பரீசைகளில் சித்தியடைந்த மாணவர்களை மட்டும் சேர்க்கும் மிகப் பிரபலமான பாடசாலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு பாடம் கூடச் சித்தியடையவில்லை. இந்த நிலை எமது பாடசாலைசாலைக்கு நேராமைக்குக் காரணம் அதிபரினதும் ஆசிரியர்களினதும் தன் நலம் கருதாத அர்பணிப்பாகும். எதையும் சந்தேகமில்லாமல் தெளிவாக அறியக் கூடியவர்களுக்கு சொர்க்கம் அருகில் இருக்கிறது என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இறைவன் எமக்கு மிக மிக அருகில் இருக்கிறார். நாம் மனதில் நினைத்தவுடன் எம்மருகே

அவர் வருகிறார். நாம் இரகசியமாகக் கூப்பிட்டாலும் அவர் வந்து விடுவார். எனவே உணர்ந்தவர்களுக்கு இறைவன் அருகில் இருப்பது தெரியும்.

சொர்க்கம் என்பது எமக்கு அருகிலேயே உள்ளது. இக்கிராமத்து மக்களுக்கு இப்பாடசாலை தான் சொர்க்கம். நட்பைப்பற்றி அறிந்தவர்களுக்கு நல்ல நண்பனே சொர்க்கம். நல்லதோர் இல்லாள் கிடைப்பது கணவனுக்குச் சொர்க்கம். ஒழுக்கமான அறிவுள்ள பிள்ளைகள் கிடைப்பது பெற்றோருக்கும் கிராமத்தவர்க்கும் சொர்க்கம். ஸ்ரீனிவாசகன் சுவாமிகளைப் பற்றி அறிந்தவர்களுக்கு சுவாமியாரே சொர்க்கம். இப்படி மெய் உணர்வு பெற்றவர்களுக்கு இன்பத்தைத் தரும். உலகமாகிய சொர்க்கம் மிகம் அருகிலேயே உள்ளது''.

''ஏழைப் பிள்ளைகள் வாழும் இக்கிராமத்தின் வளர்ச்சிக்காக அதிபரும் ஆசிரியர்களும் தம்மை அர்பணித்துச் சேவை செய்வதால் தான் இப்பெறு பேற்றை மாணவர்கள் பெற முடிந்தது. அதற்காக அவர்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்'' என்றார்.

அடுத்துக் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்கள் பேசினார்; ''வைத்தியக் கலாநிதி தியாகராசா அவர்கள் மிகவும் அருமையான ஒரு கருத்தைச் சொன்னார். சொர்க்கம் எமக்கு அருகில் தான் இருக்கிறது. அதை உணர்ந்து கொள்ளாமல் இருப்பவர்கள் மிகவும் தொலைவிலே உள்ள வானுலகத்திற்கு அப்பால் தான் சொர்க்கம் இருப்பதாக நம்புகினறனர். இப்பாடசாலை மக்களுக்குச் சொர்க்கமாக உள்ளது போல் இப்பாடசாலையின் தேவைகளை உணர்ந்து உதவி செய்வோர் எல்லோரும் பாடசாலைக்குச் சொர்க்கமாக உள்ளனர். அதற்குதாரணமாகக் கடவுள் சுப்பிரமணியம் ஆசிரியரையும் அவரது மகன் ஸ்கந்ததேவாவையும் சொல்லலாம். பயனை எதிர்பாராது உதவி செய்யும் ஸ்கந்ததேவா அவரின் மனைவிக்கும் பாடசாலைக்கும் அதன் சமூகத்தினருக்கும் சொர்க்கமாகத் திகழ்கிறார். இதை தியாகராசா அவர்கள் சொல்லத் தவறியதால் அவரின் சார்பாக நான் சொல்கிறேன். கடமை உணர்வுடன் செயற்படும் அதிபரினதும் ஆசிரியர்களினதும் சேவையை நான் மனமாரப் பாராட்டி விடை பெறுகிறேன்'' என்றார் சுந்தரலிங்கம்.

அடுத்து அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி பேசினார்; ''இன்று சொர்க்கத்தைப் பற்றி இங்கு பெரியவர்கள் உரையாற்றினார்கள். நல்ல மாணவர்களும், பாடசாலையை முழுமையாகச் சந்தேகங்கள் இன்றி அறிந்து கொண்ட பெற்றோரும் நலன் விரும்பிகளும் பழைய மாணவர்களும் பாடசாலைக்குச் சொர்க்கம் தான். தெளிவாக உணர்ந்து கொண்டவர்களுக்கு இயலாதது என்று எதுவும் இல்லை. உன்னால் முடியாது என்றால் அதை யார் செய்வது. ஒவ்வொருவரும் பேராற்றல் படைத்தவர்கள். வலிமையும் நம்பிக்கையும் தான் ஒரு செயலை முடித்து வைப்பவை. சோம்பலையும், பலவீனத்தையும் அவநம்பிக்கையையும் கைவிட்டால் எவனும் எதையும் செய்வான். உயிரே போவதாக இருந்தாலும் தெளிவாக அறிந்து சந்தேகமில்லாமல் செயலைச் செய்யத் துணிந்தவர்களுக்கு செய்ய முடியாதது. எதுகும் இல்லை. என்பதை எமது ஆசிரியர்களும் மாணவர்களும் செய்து காட்டியுள்ளனர்.

353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

அறியாமையிலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு இவ்வுலகை விட, அடைய வேண்டிய மேலுலகம் மிகவும் அண்மையில் உள்ளதாகும்.

## பயன்இல்லை

புஸ்பநாதனும் கிருஸ்ணனும் கனகசபாபதியின் வீட்டுக்கு ஆத்திரத்துடன் வந்து கனகசபாபதியைக் கூப்பிட்டனர். சகுந்தலை வெளியே வந்து; அவர் இல்லை'' என்று சொன்னாள்.

'' எங்கை போட்டான்'' என்று கேட்டான் கிருஸ்ணன்.

''காலமை கோயிலாலை வந்து தணிகாசலம் அண்ணை வீட்டை போறதெண்டவர்''.

''உள்ளுக்கு இருந்து கொண்டும் இல்லை என்று சொல்லச் சொல்லியிருப்பன். அவன் அப்படியான ஆள். நாங்கள் மாட்டம் மாட்டம் என்று சொல்ல வற்புறுத்தி எங்களை அனுப்பி அருள்நேசன்ரை தோட்டத்து வீட்டைக் கொழுத்தச் சொல்லிப் போட்டு, சுவாமியாரிட்டைப் போய் நாங்கள் தான் கொழுத்தினது என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் இவரைப் பற்றிச் சொல்ல வெழுக்கிட்டால் எவ்வளவு சொல்லுவம் என்று தெரியுமே?'' என்று கேட்டான் புஸ்பநாதன்.

''நான் உங்களோடு ஒரு போதும் கதைத்ததில்லை. நீங்கள் வீட்டை வந்து அவரோடை கதைத்துத் திட்டம் போட்டு எல்லாம் செய்யிறனீங்கள். உங்களுக்கு என்னைப் பற்றியும் என்னுடைய குடும்பத்தைப் பற்றியும் நன்கு தெரியும். தயவு செய்து என்னோடு கதைக்காமல் அவர் வந்தாப் பிறகு வந்து கதையுங்கோ'' சகுந்தலை விம்மினாள்.

புஸ்பநாதனுக்கு ஒரு மாதிரியாகப் போய் விட்டது. சகுந்தலையின் தகப்பனார் மிதித்த இடத்துப் புல்லுக் கூடச் சாகாது. நல்ல குடும்பத்துக்கை பிசாசு நுளைந்த மாதிரி நுளைந்து அந்தக் குடும்பத்தின்ரை மானத்தைக் கெடுக்கிறான். பாவம் சகுந்தலை. நீ வா அவனைக் கண்டு கதைப்பம். ஒளிச்சிருக்கிற தெண்டாலும் எத்தனை நாளைக்கு ஒளித்திருப்பர்'' என்றான் கிருஸ்ணன்.

''அவர் இஞ்சை இல்லை. நம்பாவிட்டால் உள்ளுக்குப் போய்த் தேடிப் பாருங்கோ'' என்றாள் சகுந்தலை.

‘‘வேண்டாம் நாங்கள் தணிகாசலம் அண்ணை வீட்டை போய்ப் பார்க்கிறம்’’ என்றான் புஸ்பநாதன்.

தணிகாசலம் வீட்டிற்கு அவர்கள் இருவரும் வந்த போது கனகசபாபதி தணிகாசலத்துடன் ஏதோ கதைத்துக் கொண்டு இருந்தார். கிருஸ்ணனையும் புஸ்பநாதனையும் கண்டதும்; ‘‘தணி, இவங்கள் வாறாங்கள். எனக்குப் பயமாக இருக்கிறது.’’ என்றார்.

‘‘நீ செய்தது சரியோ என்று கேட்கிறேன். முந்த நாள் இரவு நாங்கள் மாட்டம் மாட்டம் என்று வற்புறுத்திச் சொல்லியும் நீ கேட்கேல்லை. எங்களது பலவீனத்தைப் பயன்படுத்திச் சாராயத்தையும் காசையும் கொண்டந்து தந்து அருள்நேசனது தோட்டத்து வீட்டைக் கொழுத்தச் சொன்னாய் அப்படியான நீ பேசாமல் இருந்திருக்கலாம். பிறகேன் போய்ச் சுவாமியாரிட்டைச் சொன்னனீ. சொல்ல முன்னம் எம்மோடு கதைத்திருக்கலாம் தானே. நாங்களும் வந்திருப்பம். இப்ப சனம்; ‘‘நாங்கள் காசுக்கும் சாராயத்திற்கும் ஆசைப்பட்டு செய்தனாங்கள் என்று சொல்லுது. அதை விட கனகன் சொன்னால் செய்தவங்களுக்கு மதியென்ன என்றும் கதைக்குதுகள்’’ என்றான் புஸ்பநாதன்.

கனகசபாபதி தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தான்; ‘‘நீ படித்து ஆசிரியராய் இருந்தனி. உன்ரை வாழ்நாளிலை யாருக்காவது படிப்பித்து உத்தியோக மாக்கியிருக்கிறியே சம்பளத்தை எடுத்துக் கொண்டு உன்ரை வேலையைப் பார்த்தனி. படித்தவன் மக்களின்ரை அறியாமையை நீக்க வேணும். அதை விட்டு விட்டு படிக்காத சனங்களை ஏமாற்றி உன்னுடைய நன்மைக்காக மற்றவர்களுக்குத் தீமை செய்விக்கிறாய். உலகத்தின் போக்கை அறியாதவர்கள் படித்தும் என்ன பயன்...?’’ ஆத்திரத்துடன் கத்தினான் கிருஸ்ணன்.

‘‘படிச்சவங்கள் விக்னேஸ்வரமூர்த்தி வாத்தியார் மாதிரி இருக்க வேணும். மக்களுக்கு உதவி செய்ய வேணும். தீமைகள் செய்பவர்களைத் திருத்த வேணும். நீ படித்த படிப்பைக் கொண்டு மற்றவர்களுக்குத் தீமை தானே செய்கிறாய். ஒரு நல்ல இலட்சியத்துடன் சேவை மனப்பான்மையோடு மாணவர்களையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்துவதை விட்டு விட்டு பழியையும் பாவத்தையும் நல்ல குடும்பங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறாய் ஆதித்தியன். மாதி ஒரு நல்லவனின் வீட்டில் பெண் எடுத்த பிறகாவது நீ திருந்தியிருக்க வேண்டும். உன்னுடைய கள்ள உறுதிகளும் கள்ளப் பத்திரங்களையும் எடுத்த யாரோ ஒருவன் அதைத் திறந்து கூடப் பாராது விக்னேஸ்வரமூர்த்தி வாத்தியாரிடம் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறான் என்றால் அவர் கற்ற கல்வியின் மகத்துவத்தைக் கிராமத்தில் உள்ள படிப்பறி வில்லாதவன் புரிந்து கொண்டளவிற்கு நீ புரிந்து கொள்ளவில்லை. அவர் கற்ற கல்வி ஐம்புலன்களின் உணர்வுகளையும் மெய்யுணர் வாக்கியுள்ளது என்றால் அக்கல்வி உனக்கேன் மெய் உணர்வை உண்டாக்கவில்லை. மெய் உணர்வு இல்லாதவர்கள் கற்ற கல்வியால் எந்தப்

பயனும் இல்லை என்று சுவாமியார் அடிக்கடி சொல்வார். நீ அதைக் கேட்கவில்லையா.?'' என்று கேட்டான் புஸ்பநாதன்.

''கோயிலையே கொள்ளையடிக்கலாம் என்று எண்ணுபவனுக்கு மெய்யுணர்வு எப்படி ஏற்படும். எங்களுக்கும் இது வேணும். உன்ரை காசுக்கும் சாராயத்திற்கும் அடிமையாகி ஆயிரக்கணக்கான தீய செயல்களை நாம் செய்திட்டம். எம்மைக் காவல் துறையினர் கைது செய்தால் அத்தனையும் சொல்லி விடுவோம்'' என்றான் புஸ்பநாதன்.

கனகசபாபதியின் உடல் நடுங்கியது. அதைக் கேட்க அவனுக்குப் பயமாக இருந்தது.

354. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்உணர்வு இல்லா தவர்க்கு.

மெய்யுணர்வு இல்லாதவர்களுக்கு ஐம்புலன்களின் வாயிலாக வரும் ஐந்து வகை உணர்வுகளும் முழுமை பெற்றிருந்தாலும் அவற்றால் பயன் இல்லை.

## உண்மை நிலை

''இவ்வளவு நேரமும் நீங்கள் சொல்வதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இனி நான் கேட்கப் போகும் கேள்விகளுக்கு மறுமொழியை நீங்கள் சொல்லுங்கள். உண்மையிலேயே உங்கள் மனச் சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள் இது வரை காலமும் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை நேர்மையானதா?'' என்று கேட்டு விட்டு நிறுத்தினார் தணிகாசலம்.

கனகசபாபதி திகைத்துப் போனான். தன்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்து நீதிபதி கேட்பதைப் போல இருந்தது. அவனால் பேசமுடியவில்லை. தடுமாறினான். புஸ்பநாதனும் கிருஸ்ணனும் தணிகாசலம் அப்படிக் கேட்பார் என்று எதிர்பாராமையால் தலையைக் குனிந்து கொண்டனர். அவர்களால் பதில் கூற முடியவில்லை.

''மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்குள்ளும் அறிவும் ஆற்றலும் இருக்கிறது. சக்தியும் இருக்கிறது. இதை அவர்கள் ஒழுங்கான முறையில் பயன்படுத்துதல் வேண்டும். சத்தியை நாம் தீமையான செயல்களுக்கும் பயன்படுத்தலாம்; நன்மையான செயல்களுக்கும் பயன்படுத்தலாம்.

கனகசபாபதி விம்மி விம்மி அழுதான். அதைக் கண்ட புஸ்பநாதன் சொன்னான்; ''இவன் அழுவதை நம்பக் கூடாது. நம்பியதால் தான் நாங்கள் இந்த நிலைக்கு ஆட்பட்டோம். இவனின் ஏவலால் நாம் செய்த பாதகங்கள் அனேகம். இவன் தான் அண்ணை தில்லை நடராசாவின் காளை மாடுகளை

அவிழ்க்கச் சொன்னது. அதை அவிழ்த்து விற்றால் தில்லைநடராசா கமம் செய்ய முடியாது தடுமாறுவான். அவனது குடும்பம் பணத்திற்குக் கஷ்டப்படும் என்று நினைத்தான். அத்துடன் நாங்கள் களவெடுக்கும் அதிகமான பொருட்களை வாங்குவதும் உவன் தான் யாராவது நன்றாக வாழ்வது இவனுக்குப் பிடிக்காது. நீங்களும் அதிபரும் தனபாலசிங்கண்ணையும் வேலாயுதபிள்ளை அண்ணையும் ஊருக்குள் மதிப்போடு இருப்பது இவனுக்குப் பிடிப்பதில்லை. அதனால் உங்களுக்குத் தீமை செய்வதற்காக நேரம் வரும் வரை காத்திருந்தவன்'' என்றான் புஸ்பநாதன்.

''சுவாமியாரையும் இவனுக்குப் பிடிக்காது. கோயில் கட்டுவதும் பிடிக்காது. அதனால் சிவசுந்தரமூர்த்தியோடு சேர்ந்து பல தீய செயல்களைச் செய்தவன். இப்ப சிவசுந்தரமூர்த்தி திருந்தியமையால் அவரது வீட்டுக்குப் போவதில்லை. சிவசுந்தரமூர்த்தியோடு சினேகிதமாக இருக்கிற காலத்திலையே அவளுடைய மகளுக்குப் பேசி வந்த பல திருமணங்களைக் குழப்பியவன். நாவலடீலை இருந்து வந்த சம்பந்தத்தை நானும் இவனும் தான் வீட்டை போய்க் குழப்பினனாங்கள்.'' என்றான் கிருஸ்ணன்.

''கோயில் நிர்வாகத்தைப் பிடிக்காதத்தாலை கோயிலில் நின்ற குரங்குகளைப் பிடித்து வெட்டிப் பங்கு போட்டு ஆட்டுக்கடா இறைச்சி என்று விக்கச் சொன்னது உவன் தான்'' என்றான் புஸ்பநாதன். அவற்றைக் கேட்ட தணிகாசலம் திகைத்துப் போனார். கிருஸ்ணனும் புஸ்பநாதனும் பல விடயங்களைச் சொல்லச் சொல்ல கனகசபாபதிக்குப் பயமாக இருந்தது. இது வரை காலமும் வெளிப்படாமல் இருந்த விஷயங்கள் பல அம்பலத்திற்கு வந்ததால் அவனுக்குத் தலை சுற்றியது. இதயம் வலித்தது.

தணிகாசலம் பெருமூச்சு விட்டார்; ''நீங்கள் உண்மை சொல்கிறீர்களோ அல்லது கனகசபாபதி அருள்நேசனின் தோட்ட வீட்டை நீங்கள் தான் கொழுத்தினீர்கள் என்று கூறியதால் அவனைப் பழிவாங்குவதற்காகக் கூறுகிறீர்களோ தெரியவில்லை. உங்களுக்கு அறிவு இருக்கிறது. பகுத்தறியும் தன்மை இருக்கிறது. ஒருவன் சொல்லி விட்டான் என்பதற்காக வீட்டைக் கொழுத்த முடியுமா..? அல்லது கலியாணத்தைக் குழப்ப முடியுமா? இல்லை கோயில் குரங்குகளை அறுத்து விற்க முடியுமா...? சொல்லுங்கள்...? உங்களுக்குச் செய்யக் கூடிய செயல்களையும் செய்யக் கூடாத செயல்களையும் பகுத்தறியத் தெரியாதா...?"

சிறிது நேரம் பேசாமல் இருந்த புஸ்பநாதன் சொன்னான்; வற்புறுத்தியமையாலும், காசுக்காகவும் செய்திட்டம்; ''வற்புறுத்தலுக்காகவும் காசுக்காகவும் செய்வதானால் அவன் உனக்குக் காசு தந்து உனது பிள்ளையைக் கொலை செய்யச் சொன்னால் செய்வியா..?தணிகாசலம் கேட்டார்.

இருவரும் பேசாமல் நின்றனர்; ''படித்தவன் புத்திமதிகள் சொல்வதை விட்டு விட்டு....'' புஸ்பநாதன் பேசிக் கொண்டிருக்கும் போது தணிகாசலம் கோபத்துடன் குறுக்கிட்டார்; ''சாட்டுகள் எதுவும் சொல்லாதை.

எல்லாவற்றிற்கும் மற்றவர்களைக் குறை சொல்வதானால் உனக்கேன் அறிவை ஆண்டவன் தருவான். நன்மை தீமைகளைப் பகுத்தறியக் கல்வி தேவையில்லை. ஒருவன் எதைச் சொன்னாலும் அதன் உள்நோக்கத்தையும் அதனால் உண்டாகும் நன்மை தீமைகளையும் பகுத்தாராய்ந்த பின்பே செயலில் ஈடுபடல் வேண்டும். பொருளாக இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காமல் அப்பொருளின் உண்மையான தன்மையை அறிந்து கொள்ளல் வேண்டும். அது தான் அறிவு. கண்ணாடிக் கற்கள் முத்துக்களையும் மாணிக்கங்களையும் இரத்தினங்களையும் விடக் கவர்ச்சியானவை. என்பதை நினைவில் வைத்து இனியாவது நல்லவர்களாக நடந்து கொள்ளுங்கள்'' என்றார் தணிகாசலம்.

355. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வதே மெய்மையான அறிவாகும்.

## பிறவா நிலை

அருள் நேசனை வரும்படி சொல்லியனுப்பியதால் தணிகாசலத்தின் வீட்டுக்கு அருள்நேசன் தில்லைநடராசாவுடன் வந்தான். அப்பொழுது அங்கே கனகசபாபதியும் கிருஸ்ணனும் புஸ்பநாதனும் இருந்தனர். கனகசபாபதியைக் கண்ட தில்லை நடராசாவும் அருள்நேசனும் வெளியே நின்றனர். கனகசபாபதிக்கு அவர்களைப் பார்க்கப் பயமாகவும் வெட்கமாகவும் இருந்தது. புஸ்பநாதனும் கிருஸ்ணனும் வீட்டின் பின்பக்கம் சென்றார்கள். அவர்களுக்கு பயமாக இருந்தது.

''உள்ளுக்கு வாங்கோ'' என்றார் தணிகாசலம்.

''என்னை வற்புறுத்தாதைங்கோ. இவன்ரை முகத்திலை விழிக்கவே எனக்கு விருப்பமில்லை'' என்ற அருள்நேசன் முற்றத்தில் நின்ற வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்தான். தில்லை நடராசாவும் அவனுக்கு அருகில் சென்று அமர்ந்தான். தணிகாசலம் வெளியே வந்து அவர்கள் இருவருக்கும் அருகில் அமர்ந்தார்.

''அண்ணை சொல்லுறன் என்று குறை நினைக்காதைங்கோ கனகன் சொல்லுறது ஒன்று செய்யிறது ஒன்று. முந்திப்பல விஷயங்களிலை இவன் சமாதானத்திற்கு வந்தவன். பிறகு தேவைக்கேற்ற மாதிரி மாறிவிட்டான். அதாலை நாங்கள் எவ்வளவோ கரைச்சல் பட்டனாங்கள். இவன் தனக்கெண்டு ஒரு பிரக்கிராசியை வைத்திருக்கிறான். அவன் பழி பாவங்களுக்கு அஞ்ச மாட்டான். தான் பணம் சேர்க்கிறத்துக்காகக் குறுக்கு வழிகளைச் சொல்லிக் குடுப்பன். அவன்ரை குடும்பம் நாசமாய்த் தான் போகும். ஏதோ ஒரு திட்டத்தோடை தான் விடிய முன்னம் வந்து சுவாமியாரிட்டைச் சொல்லியிருக்கிறான். புஸ்பநாதனும் கிருஸ்ணனும் காவல்

நிலையத்திற்குப் போனால் உண்மையைச் சொல்லி விடுவங்கள் என்பதற்காக இப்ப நாடகமாடுகிறான். அதை நான் நம்பமாட்டன்'' என்றான் அருள்நேசன்.

''அருள், உன்னுடைய காணி வேலியை உறுதிப்படி அடைக்கச் சம்மதிக்கிறான். அதோடை வீட்டைக் கொழுத்தியதற்கும் நட்ட ஈடு தாறானாம்'' என்றார் தணிகாசலம்.

அருள்நேசன் சிரித்தான்; ''நான் கடைசிவரையும் உவனை நம்ப மாட்டன். உங்களுக்கு முன்னாலை இப்பிடி எத்தனை தரம் சொல்லியிருப்பன். பிறகு நீதிமன்றத்திற்குப் போயிடுவன். காணி வழக்கிலை நான் நீதிமன்றத்திலை பிரக்கிராசிக்கு ஒவ்வொரு தவணைக்கும் காசு கட்ட முடியாததாலை தானே வழக்கைக் கைவிட்டனான். சிதம்பர சொத்துக் காணிக்கும் சின்னத்தம்பி வழக்காட முடியாததாலை தானே கைவிட்டவன். இவனுக்கு நீதிமன்றத்திற்குச் செல்வது கோயிலுக்குச் செல்லுற மாதிரி'' என்றான் அருள்நேசன்.

''அண்ணை இந்த விஷயத்திலை நீங்கள் தயவு செய்து தலையிடாதைங்கோ. காவல் துறையிலை தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்'' என்றான் தில்லை நடராசா.

''அப்பிடிச் சொல்லாதை தில்லை. ஒரு மனிதன் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது. கற்க வேண்டியவற்றைக் கற்ற போதும் உணர வேண்டியவற்றை கனகு உணராததாலை தான் இவ்வளவு துன்பங்களும் நடந்தது. கற்க வேண்டியவற்றைக் கற்றும் மெய்ப் பொருளை உணராதவர்களுக்குப் பிறவிகள் தொடர்ந்து வரும் என்று சொல்வார்கள். இவன் தன் வாழ்நாளில் ஆயிரம் பிறவிகள் எடுத்த துன்பத்தை அடைந்து விட்டான். தனது செயல்களால் உண்டான துன்பங்களுக்கான காரணத்தை உணர்ந்து விட்டதாகச் சொல்கிறான். எனவே இந்த ஒரு முறை அவனை மன்னித்து விடுங்கள்'' தணிகாசலம் பேசும் போது அருள்நேசன் குறுக்கிட்டான். எனினும் தணிகாசலம் விடவில்லை; ''நீ வீட்டுக்கு நட்ட ஈடாய் எவ்வளவு காசு வேண்டும் என்று சொல்லு, இப்பவே வாங்கித் தாறன்''.

''ஐந்து இலட்சம் ரூபா வாங்கித் தாங்கோ'' என்றான் அருள்நேசன்.

''ஐந்து இலட்சமோ..?'' அதிந்தார் தணிகாசலம்.

''ஓம் கற்க வேண்டியவற்றைக் கற்றாலும் அதன் மெய்ப் பொருளை உணராதவனுக்கு நாம் உணர்த்த வேண்டும். கல்வி என்பது ஏட்டில் படிப்பதல்ல. அனுபவத்தால் பெற்றுக் கொள்வது. அனுபவம் செயல்கள் மூலம் தான் வரும். பாமரரான ஏழை மக்களுக்கு உதவி செய்யாது தீமைகளைச் செய்வது தான் கல்வி என்று கனகசபாபதி நினைக்கிறான். இது இல்லை என்பதை அவன் உணர வேண்டும். எனது வீட்டின் பெறுமதி எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. அழிந்தது அழிந்தே போகட்டும். நான் இவனிடம் வாங்கும் ஐந்து இலட்சத்தையும் எமது சனசமூக நிலையத்தின்

சார்பில் இயங்கும் அனாதை விடுதிக்குக் கொடுக்கிறேன்'' என்றான் அருள்நேசன்.

''நாங்கள் உங்களின் பக்கம் நிற்போம்'' என்றான் புஸ்பநாதன்.

''போடா; போ உங்களை ஏன் எனக்கு, நீதியும் நியாயமும் தெய்வமும் என்னுடைய பக்கம் இருந்தால் போதும். நீங்கள் எப்போவாவது சொன்னபடி நடந்திருக்கிறீர்களா...? நாளைக்கு சாராயத்தையும் கள்ளையும் காசையும் கண்டால் மனம் மாறி விடுவீர்கள். இன்பமும் துன்பமும் சொர்க்கமும் நரகமும் பக்கத்திலை தான் இருக்கு. வாழ்க்கையின் உண்மையைப் புரிந்தவன் இந்த உலகிலேயே இன்பமாகச் சொர்க்கத்தில் வாழ்கிறான். உன்போன்றவர்கள் நரகத்தில் தான் வாழ்கிறார்கள். பிறப்புப் பல என்பது இங்கு அனுபவிக்கும் துன்பத்தின் அளவைப் பொறுத்தது. இன்னும் ஏழேழு பிறப்பில் அனுபவிக்கக் கூடிய துன்பத்தை சாகமுன்னம் நீங்கள் அனுபவிப்பியள்'' என்றான் அருள்நேசன். அப்பொழுது உள்ளே இருந்து கனகசபாபதி சொன்னான்; ''நான் ஐந்து இலட்ச ரூபா கொடுக்கிறேன்''.

356. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி.

கற்க வேண்டியவற்றைக் கற்று, மெய்பொருளை உணர்ந்தவர்கள், மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடைவர்.

## மெய்ப்பொருள் உணர்தல்

அன்று இரவு எட்டுமணிப் பூசை முடிந்த பின்பு கனகசபாபதி தணிகாசலத்திடம் ஐந்து இலட்சரூபா பணத்தைக் கொடுத்தான். தணிகாசலம் அப்பணத்தைப் பெற்று அருள்நேசனிடம் கொடுத்து விட்டுச் சொன்னார்; ''அருள் நீ வறியவன். தீயிடப்பட்ட உனது வீட்டை திரும்பவும் உன்னால் கட்ட முடியாது. அவ்வீட்டுள் எரிந்து நாசமாய்ப் போன விவசாய உபகரணங்களை வாங்கவும் உன்னால் முடியாது. எனவே தயவு செய்து அதற்கான பணத்தை எடுத்து விட்டுக் கொடு. அது பாவம் அல்ல'' என்றார்.

அருள்நேசன் யோசித்தான். விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ''அருள் சில சமயங்களில் நாம் யோசிக்காமல் கதைத்து விடுகிறோம் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் உனக்கு நட்ட மேற்பட்டிருக்கிறது. அந்த நட்டத்தை ஈடு செய்யும் படி சொல்கிறோமே தவிர அன்பளிப்பாகவோ தானமாகவோ பெற்றுக் கொள்ளச் சொல்லவில்லை. நாளைக்கு உபகரணங்களுக்கு என்ன செய்யப் போகிறாய். எரிந்த வீட்டைப் புணரமைக்க உன்னால் முடியுமா? எனவே ஐம்பதினாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு மிகுதியைக் கொடு'' என்றார்.

‘‘தணிகாசலம் அண்ணையும் அதிபரும் சொல்வது சரியென்று எனக்குத் தோன்றுகிறது. எனவே நீ ஐம்பதினாயிரம் ரூபாவை எடு’’ என்றார் தில்லை நடராசா.

அருள்நேசன் அதற்குச் சம்மதித்தான். ஐம்பதினாயிரம் ரூபாவை எடுத்துக் கொண்டு மிகுதியை விக்னேஸ்வரமூர்த்தியிடம் கொடுத்தான். அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தியின் கையடக்கத் தொலைபேசி இராகம் பாடியது. விக்னேஸ்வரமூர்த்தி; ‘‘யாரது, விக்னேஸ்வரமூர்த்தி கதைக்கிறேன்’’ என்றார்.

‘‘நான் பூரணி ஐயா எனது தகப்பனார் இன்றிரவு அருள்நேசனுக்கு ஐந்து இலட்சரூபா கொடுப்பதென்றும் அவர் அதை அநாதை இல்லத்திற்குக் கொடுக்கப் போவதாகவும் தில்லை மாமா சொன்னார். அப்பாவை நம்ப முடியாது. கடைசி நேரத்தில் ஏமாற்றி விடுவார். ஒருவனது உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உறுதியாய் நம்பினால் தான் அவன் திருந்துவான். அப்பாவுக்குத் தீமையானவை தான் உண்மையானவையாகத் தோன்றும். பாவம் அருள்நேசன். நான் பணம் அனுப்பி விடுவேன். அது அப்பாவை மேலும் மேலும் தீமைகளைச் செய்யத் தூண்டும்’’ என்றாள்.

‘‘நாமும் அப்படித்தானம்மா நினைத்தோம். ஆனால் கனகசபாபதி அருள்நேசனுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டார். அது இப்பொழுது அனாதை இல்லத் தலைவரான என்னிடம் தரப்பட்டுள்ளது. நாளைக்கு நான் வங்கியில் வைப்பிலிடுவேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘அப்படியா...? மிகவும் சந்தோசம். அப்பாவுடன் நான் ஒரு முறை கதைக்க விரும்புகிறேன்’’.

விக்னேஸ்வரமூர்த்தி கையடக்கத் தொலைபேசியை கனகசபாபதியிடம் கொடுத்தார்; ‘‘பூரணி அம்மா..’’ நெகிழ்ந்தார் கனகசபாபதி.

பூரணி சில கணங்கள் பேசவில்லை. அழுதாள் அவள் அழுவது கனகசபாபதிக்குத் துக்கமாக இருந்தது; ‘‘அப்பா இன்றைக்குத் தான் வாழ்வில் மகிழ்ந்த நாள். தயவு செய்து இனிமேலாவது திருந்தி நல்லவராக வாழுங்கள் அப்பா. வாழ்க்கையில் ஆசை மிகுதியால் தான் துன்பங்களும் துயரங்களும் கஷ்டங்களும் வந்தடைகின்றன. ஆசையை விட்டால் பேரின்பம் கிடைக்கும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனது கணவர் நிறையச் சம்பாதிக்கிறார். எமது வீட்டுக்கு அடுத்த வீட்டில் தான் கடவுள் சுப்பிரமணியத்தின் மகன் ஸ்கந்ததேவா இருக்கிறார். அவருக்குப் பணத்தில் ஆசையே இல்லை. ஆனால் தொழில் மூலம் பணம் கோடிக் கணக்கில் சேர்கிறது. சேரச் சேர அப்பணத்தைத் தரும் காரியங்களுக்காகச் செலவு செய்கிறார். தற்பொழுது அவர் நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக பதினைந்து இலட்சரூபா அனுப்பியிருக்கிறார். தயவு செய்து நீங்களும் தானதருமம் செய்து இன்பத்தை அடையுங்கோ. பிறப்பென்பது துன்பமானது. அதை இன்பப்படுத்த

வேண்டுமானால் உண்மைப் பொருளை உணர்ந்து செயலாற்றுங்கள்'' என்று அழுதாள்.

''செய்கிறேன் அம்மா... செய்கிறேன் அம்மா'' அழுதார் கனகசபாபதி.

சுவாமியார் சொன்னார்; ''நாம் பொருளின் தோற்றத்தைக் கண்டு மயங்கக் கூடாது அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிதல் வேண்டும். காணியும் பூமியும் பொன்னும் பொருளும் தாம் தாம் கஷ்டப்பட்டுத் தேடினால் தான் நாம் அவற்றால் இன்பமடையலாம். அவற்றின் போலியான தோற்றத்தைக் கண்டு மயங்கி ஆசைப்பட்டு அநீதியான முறையில் நடந்து தேடும் பொருளால் துன்பம் தான் ஏற்படும். துன்பத்தின் வடிவம் பிறப்பு உண்மைப் பொருள் எது வென உணராத ஒருவனுக்குத் தன் வாழ்நாளில் படும் துன்பம் பல பிறப்பெடுத்துப் படும் துன்பத்திற்கு சமமானதாக இருக்கும். நாம் காண்பவையெல்லாம் போலியானவை என்று உணர்பவனுக்குப் பிறப்பில்லை என்று எமது மதம் கூறுகிறது. நீ மதத்தை இது வரை நம்பியது கிடையாது. நீ மதத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய். மதம் என்பது காசுபறிக்கும் ஒரு நிறுவனம் என்றா நினைக்கிறாய்? மனிதனை ஒழுக்கமுள்ளவனாக்குவதும், ஒழுக்கமுள்ளவனைத் தெய்வமாக்குவதும் தான் மதத்தின் கடமை. சுயநலமில்லாமல் வாழுதல் மத வாழ்க்கை; நம்பிக்கையோடு வாழ்தல் மதவாழ்க்கை; பிற உயிர்கள் படும் துன்பங்களைக் கண்டு இரங்குதல் மதவாழ்க்கை; அயலவர்கள், நண்பர்கள், உறவினரோடு அன்னியோன்னியமாக வாழுதல் மதவாழ்க்கை. கிடைத்ததைப் பகிர்ந்துண்டு ஒற்றுமையாக வாழுதல் மதவாழ்க்கை. இது தான் மதம். இதை உணர்வது தான் மெய்யுணர்வு. இதை நீ புரிந்து கொண்டால் என்றும் உன்னைத் துன்பங்கள் தொடராது''.

357. ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.

ஒருவனுடைய உள்ளம் உண்மையான மெய்பொருளை ஆராய்ந்து உணர்ந்து கொண்டால், அவனுக்கு மீண்டும் பிறப்பென்பதே இல்லை.

## அறிவு

தணிகாசலமும் கனகசபாபதியும் கோயிலுக்கு வெளியே வந்த போது ஸ்கந்த தேவா உள்ளே வந்தான். அவன் தணிகாசலத்தைக் கண்டதும் கேட்டான்; ''அதிபர் வீட்டை போனனான் அவர் கோயிலில் நிற்பதாகக் கூறினார்கள். உள்ளே நிற்கிறாரா''.

''ஓம் உள்ளே தான் நிற்கிறார்''

அதிபரைச் சந்திக்க வேணும்'' என்றான் ஸ்கந்ததேவா.

தணிகாசலமும் கனகசபாபதியும் உள்ளே சென்றனர். மகா கணபதியை ஸ்கந்ததேவா விழுந்து வணங்கினான். பின் சுவாமியாரின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். குருக்கள் வீபூதியும் சந்தனமும் கொடுத்தார். வீபூதியைப் பூசி விட்டு பொட்டு வைத்த ஸ்கந்த தேவா அதிபரைப் பார்த்துக் கூறினான்; ‘‘ஐயா, உங்கள் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுள் போரினால் தந்தையை இழந்தவர்கள், ஊனமடைந்தவர்கள் வருமானம் குறைந்தவர்களின் பிள்ளைகள் இருந்தால் கூறுங்கள். அவர்களின் கல்விக்கான பொறுப்புக்கள் முழுவதையும் நான் ஏற்கிறேன்’’.

கனகசபாபதி ஸ்கந்ததேவாவை நிமிர்ந்து பார்த்தான். அவனது மனச் சாட்சி முதல் முறையாக விழித்துக் கொண்டது. அவனிடம் கற்ற சிவகுமார் என்ற மாணவன் பாடசாலை மைதானம் வாங்குவதற்காக ஐந்து இலட்ச ரூபா அனுப்புவதாகச் சொல்லி விட்டு வெளிநாடு சென்றான். கனகசபாபதி அவனை அழைத்துச் சொன்னான்; ‘‘சிவகுமார் பாடசாலையில் அதிபர் பெரிதாக எதையும் செய்யவில்லை. நான் கற்பித்த உன் போன்ற பல மாணவர்கள் இன்று நன்றாக இருக்கவில்லையா? உவர் வந்து எதையும் செய்யவில்லை பெறுபேறுகள் முன்பு வந்தது போலத் தான் வந்து கொண்டிருக்கின்றன. அதிபரும் அவருடைய ஆட்களுமாகச் சேர்ந்து பணத்தைக் கொள்ளை அடிக்கிறார்கள். நீ கடைசி வரையும் பணத்தை அனுப்பாதை’’ என்றார்.

அவரின் சொல்லைக் கேட்டு சிவகுமாரன் பணம் அனுப்பவில்லை. அதனால் மனச் சாட்சி அவரைச் சுட்டது. மற்றவர்கள் மனமுவந்து எவ்வளவைக் கொடுக்கிறார்கள். நான் கொடுப்பவர்களைக் கெடுத்து விட்டேன். அத்துடன் எனது மைத்துனன் வெளிநாட்டில் இருந்து அம்மன் கோயிலுக்கு அனுப்பிய பணத்தைக் கொடுக்காமலும் விட்டு விட்டேன்’’ என்று நினைத்தார்.

‘‘நல்லவர்கள் எப்பொழுதும் மற்றவர்களுக்காகத் தான் வாழ்கிறார்கள். என்று உங்களது செயல்கள் காட்டி நிற்கின்றன. மிகவும் மகிழ்ச்சி. நான் உங்களுக்கு மாணவர்களின் பெயர்ப் பட்டியலை அனுப்பி வைக்கிறேன்’’ என்ற விக்னேஸ்வரமூர்த்தி அருகில் நின்ற கனகசபாபதியை ஸ்கந்த தேவாக்கு அறிமுகம் செய்தார். இவர் கனகசபாபதி வெளிநாட்டில், உங்களது வீட்டுக்கு அருகில் வசிக்கும் வருணனின் மாமா பூரணியின் தந்தை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘அப்படியா...? வருணன் எனது நண்பன் மிகவும் அருமையானவன். கடந்த சில தினங்களுக்கு முன் வருணனின் வீட்டுக்குச் சென்றேன். பூரணி தான் எனது பிள்ளைகளின் தமிழ் ஆசிரியர். எனது பிள்ளைகள் ஓய்வான நேரங்களில் எல்லாம் அங்கே தான் சென்று விளையாடுவார்கள். மிகவும் நல்ல பெண்’’ என்றார் ஸ்கந்ததேவா; ‘‘உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள். கொடுக்க வேண்டுமானால் தாருங்கள். வருணனுக்கு மகன் பிறந்த போது நாமெல்லாம் அங்கு சென்றோம். அவர்கள் எமது அயல்

வீட்டில் இருப்பதற்கு நான் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். பேரனைப் பார்க்க நீங்கள் வரவில்லையா..?'' என்று கேட்டான் ஸ்கந்ததேவா.

'கனகசபாபதி சிரித்தார். பின்பு; ''மகள் இப்ப என்னுடன் கதைத்தவள்'' என்றார்.

''மகா கணபதி மிக்க சக்தியுள்ளவர். நான் வெளிநாட்டில் இருந்து கொண்டு எதை நினைத்தாலும் அதை நிறைவேற்றி வைப்பவர். எனது கடைசிக் காலத்தை இங்கு வந்து சுவாமியாரோடு கழிக்கத் தான் விரும்புகிறேன்'' என்றான் ஸ்கந்ததவா.

''சுவாமியார் சிரித்தார்; ''கடவுள் எம்முள்ளேயே இருக்கிறார். அதை அறியாமையால் உணராதவர்கள் தான் பிறப்புக்களால் துன்பப்படுகிறார்கள் கடவுளின் மீது நம்பிக்கை வைத்தால் அவர் எமக்கு வரும் துன்பங்களுக்கெல்லாம் அரனாக நிற்பார். பன்றிக் குட்டிகளின் அழுகுரலும், முதலையால் பிடிக்கப்பட்ட யானையின் அவலக் குரலும் கடவுளுக்குக் கேட்டதனால் தானே உடனே வந்து அவற்றைக் காப்பாற்றினார். எனவே துன்பங்கள் ஏற்படாதிருக்க வேண்டு மானால் கடவுளின் மீது அசையாத நம்பிக்கை வைத்தல் வேண்டும்'' என்றார் சுவாமியார்.

358. பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமையை நீக்கும், செம் பொருளைக் காண்பதே மெய்யுணர்வாகும்.

## திரும்பவரா

புஸ்பநாதனும் கிருஸ்ணனும் வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்து கற்பூரமும் தேங்காயும் கொண்டு நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதியின் ஆலயத்திற்கு வந்தனர். அவர்கள் வரும் போது கோயிலடியில் தணிகாசலம் கூட்டிக் கொண்டிருந்தார். இருவரும் வெளிமண்டபத்திற்கு வெளியே இருந்த கற்பூரம் கொழுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த இரும்பாலான சட்டிக்குள் கற்பூரத்தை வைத்து விட்டுக் கொழுத்தினர். பின் அதைத் தொட்டுக் கும்பிட்டனர். அதன் பின் தேங்காயை உடைத்தனர்.

''மகாகணபதியே இவ்வளவு காலமும் நான் அறியாமையால் பல தீமைகளைச் செய்து விட்டேன். அதற்கான துன்பங்களையும் அனுபவித்து விட்டேன். இனிமேல் என்னால் துன்பப்பட முடியாது. பட்ட துன்பங்களெல்லாம் போதும். இனி நீ தான் எனக்குத் துணை. நான் இனித் துன்பங்கள் செய்ய மாட்டேன். மனிதர்களை அதுகும் தீய மெய்யுணர்வில்லாத தீயவர்களை நம்பி அவர்களின் கைப் பொம்மையாக இருந்து தீய செயல்கள் பலவற்றைச் செய்து விட்டேன். இனிமேல் என்னைத் தீய செயல்கள் செய்யாது காப்பாற்றி

அருளல் வேண்டும்'' என்று அழுதான் புஸ்பநாதன். அவன் சொன்னது தணிகாசலத்திற்குக் கேட்டது.

''அப்பனே பிள்ளையாரப்பா எவ்வளவோ தீமைகளை நான் செய்து விட்டேன் அதனால் தினமும் எனக்குத் துன்பந்தான் கிடைத்தது. இனிமேல் நான் தீமைகள் செய்ய மாட்டேன். நான் திருந்த எனக்கு வழி செய்து தா தந்தையே'' என அழுதான் கிருஸ்ணன்.

இருவரும் வெகுநேரமாகக் கும்பிட்டுக் கொண்டு நின்றனர்.

''தணிகாசலம் அண்ணை இண்டையிலை இருந்து நாங்கள் இருவரும் குடிப்பதில்லை என்று தீர்மானித்து விட்டோம். ஒரு நாளைக்கு நூறு ரூபாவுக்குக் குடித்தால் மாதம் மூவாயிரம் ரூபா வேணும். இவ்வளவு நாளும் நான் குடித்த காசு பல இலட்சரூபா வரும். இவ்வளவு காசையும் சேமித்திருந்தால் நான் இலட்சாதிபதியாக இருப்பன். கேவலம் இந்தக் குடிக்கு. அடிமைப்பட்டதாலை தான் தீய செயல்களைச் செய்தனான். கனகசபாபதி குடிக்கத் தந்து விட்டுத் தனது திட்டத்தைப் பற்றிக் கதைப்பான். அதாலை குடியை விட்டால் தான் திருந்தலாம். அதோடு வெளிநாட்டில் இருக்கிற மச்சான்மார் நான் குடிக்கிறத்தாலை காசு அனுப்புறேல்லை. இனிமேல் நான் உங்களோடை சேர்ந்து கோயில் தொண்டுகள் செய்யப் போறன்'' என்றான் புஸ்பநாதன்.

''நானும் அப்படித்தான் அண்ணை யோசிச்சிருக்கிறன். இப்ப இரண்டு மூன்று நாட்களாகக் குடிக்கவில்லை. மனமும் சுத்தமாக இருக்கிறது. உடலும் லேசாக இருக்கிறது. காலமை எழும்பினால் கோயில், பிறகு வேலை. வேலை முடிந்தாப் பிறகு கோயில் என்று நினைச்சிட்டன். கோயிலடீலை இருந்தால் தீய எண்ணங்கள் வராது. தீயவர்களும் வந்து எம்மோடு கதைக்க மாட்டார்கள்'' என்றான் கிருஸ்ணன்.

''மிகவும் நல்லது. எல்லோரும் நன்றாக வாழ வேண்டும். பிறருக்குத் துன்பங்கள் செய்யக் கூடாது. என்று நினைத்தால் எமக்குத் துன்பங்கள் வராது. எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு மனதைச் சுத்தமாக வைத்திருந்தால் எல்லா நன்மைகளும் எம்மைத் தேடி வரும். கடவுளை உணர்ந்து பொருட்கள் மீது பற்றில்லாமல் வாழ்ந்தால் ஒருவனைச் சார்வதற்குரிய துன்பங்கள் மறுபடியும் வந்து அடையாது. பள்ளத்தை நோக்கி நீர் செல்வது போலவும், காந்தத்தை நோக்கி இரும்பு செல்வதைப் போலவும் தீய செயலைச் செய்பவனை நோக்கித் துன்பங்கள் செல்லும். அதைத் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாது. அவற்றைத் தடுக்க வேண்டுமானால் கடவுளைச் சரணடைய வேண்டும்'' என்றார் தணிகாசலம்.

''இவ்வளவு காலமும் நான் அதை உணரவில்லை. துன்பங்களின் கொடுமையும் நம்பியவர்களின் துரோகச் செயலும் எனது அறிவை விழிப்படைய வைத்துள்ளது'' என்றான் புஸ்பநாதன்.

கிருஸ்ணா, உனது மகளின் பெயரை அதிபர் ஸ்கந்ததேவாக்குக் கொடுத்துள்ளார். இனிமேல் ஸ்கந்த தேவா உனது மகளின் படிப்புச் செலவைத் தருவார். அதனால் பாடசாலைக்கு அவளை ஒழுங்காக அனுப்பு. இனிமேல் தோட்டங்களுக்கு வேலை செய்யவோ, அல்லது கனகசபாபதியின் வீட்டு வேலை செய்வதற்கோ அனுப்பாதே. பதின்நான்கு வயது வரை கட்டாயக் கல்விச் சட்டம் உள்ளது. ஒரு பிள்ளையின் எதிர்காலம் கல்வியிலேயே தான் தங்கியுள்ளது. ஒருவனுக்குக் கல்வி தான் மெய்யுணர்வை உண்டாக்கும். கல்லாததால் தான் நீங்கள் இருவரும் பழி பாவங்களைப் பற்றி உணராது தீமைகளையே செய்து வருகிறீர்கள். உங்கள் பிள்ளைகளையென்றாலும் கற்பியுங்கள்'' என்றார் தணிகாசலம்.

“ இப்ப நான் பிள்ளையை வேலைக்கு விடுவதில்லை. பள்ளிக்கூடத்திற்குப் போறான்'' என்றான் கிருஸ்ணன்.

“நான் உன்னை இந்த விடயமாகச் சந்திக்கவிருந்தனான். நல்ல வேளை கோயிலடியில் சந்தித்து விட்டேன். கோயிலடியில் எப்பொழுதும் உண்மையையே பேச வேண்டும். இப்பொழுது மகளைப் பாடசாலைக்கு அனுப்புவதாகவும், குடியை விட்டு விடுவதாகவும் கூறி விட்டு பின் முன் போல மறக்காமல் இருந்தால் சரி'' என்றார் தணிகாசலம்.

“இனிக் கடைசி வரையும் நான் மாறமாட்டன் அண்ணை. இது மகா கணபதி மீது ஆணை'' என்றான் கிருஸ்ணன்.

“சொன்னபடி நடந்து கொண்டால் எல்லோருக்கும் நல்லது. அன்னதான மடத்துள் விளக்குமாறுகள் உள்ளன. எடுத்து வந்து கூட்டுங்கள்'' என்றார் தணிகாசலம்.

புஸ்பநாதன் அன்னதான மடத்தை நோக்கிச் சென்றான்.

359. சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

## கெடுமாறு ஒழுகு

புஸ்பநாதனின் வீட்டுக்குக் கிருஸ்ணன் வந்தான். அவன் வந்த போது புஸ்பநாதன் அங்கு இருக்கவில்லை. அன்று வெள்ளிக்கிழமை. அதனால் புஸ்பநாதனின் மனைவி இலட்சுமி வீட்டை கழுவிச் சுத்தம் செய்திருந்தாள். முற்றத்தை அழகாகப் பெருக்கி சாணகம் கரைத்துத் தெளித்திருந்தாள். முற்றத்தில் ஒரு துளசி மரம் நின்றது. அதற்கு நீரூற்றி பூக்கள் வைத்திருந்தாள். அதன் அருகில் தீபம் எரிந்து கொண்டிருந்தது. கிருஸ்ணன்

அதைப் பார்த்தான். மிகவும் அழகாக இருந்தது. தீபத்துக்கருகில் புகைந்து கொண்டிருக்கும் சாம்பிராணிக் குச்சியின் வாசம் மூக்கைத் துளைத்தது.

கிருஸ்ணன் எப்படிக் குடித்தாலும் இலட்சுமிக்குப் பயந்தவன். அவளின் சொல்லைத் தட்டாதவன். அவனுக்கு நாற்பதுவயது. இலட்சுமி அவனை விடப் பத்து வயது குறைந்தவள், அழகானவள், அவளது சகோதரர்கள் இருவர் வெளிநாட்டிலிருப்பதால் வெளிநாட்டு உடுப்புக்களையும் வாசனைத் திரவியங்களையும் அடிக்கடி அனுப்பி வைத்துக் கொண்டிருந்தனர். பணம் அனுப்புவது குறைவு. பணம் அனுப்பினால் புஸ்பநாதன் குடித்துச் செலவு செய்து விடுவான் என்பதற்காகப் பணம் அனுப்புவது குறைவு. அனுப்பும் பணத்தையும் அவளின் தந்தையின் பெயரிலேயே அனுப்புவார்கள். அவர் அதை எடுத்துத் தேவைக்கேற்றபடி கொடுப்பார்.

கிருஸ்ணன் வளர்ந்து மதாளித்திருந்த துளசிச் செடியைப் பார்த்தான். முன்பு ஒரு நாள் இலட்சுமியின் சகோதரன் ஒருவன் பணம் அனுப்பிய விசயம் புஸ்பநாதனுக்குத் தெரிய வந்தது. அதில் குடித்த கடனைக் கொடுப்பதற்குப் பணம் கேட்டான். இலட்சுமி கொடுக்க மறுத்து விட்டாள். அதனால் இருவருக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டு சண்டையில் முடிவடைந்தது. புஸ்பநாதன் கோபித்துக் கொண்டு இலட்சுமிக்கு அடித்தான். பின்பு அவள் நட்டு பராமரித்து வணங்கி வந்த துளசிச் செடியைப் பிடுங்கி எறிந்தான். இலட்சுமி கோபித்துக் கொண்டு தனது தந்தையின் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

அன்று மாலை புஸ்பநாதனைத் தேடி அங்கு வந்த கிருஸ்ணன் துளசிச் செடி முற்றத்தில் வாடிக் கிடந்ததைக் கண்டு கவலைப்பட்டான். இலட்சுமியின் அழகில் எப்பொழுதும் சலனப்படும் கிருஸ்ணனுக்கு அழகான தேவதையைப் போன்ற இலட்சுமி முற்றத்தில் கிடப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. பரபரப்புடன் சென்று வாடிக்கிடந்த துளசிச் செடியை நட்டு நீர் ஊற்றினான். இலட்சுமி இரண்டு வார காலம் வீட்டுக்கு வரவில்லை. அந்த இரண்டு வார காலமும் கிருஸ்ணன் அத்துளசிச் செடிக்குக் காலையும் மாலையும் நீருற்றி வந்தான். அத்துடன் காலையில் துளசிச் செடிக்கு பூவும் வைத்தான். அந்தத் துளசியைத் தொட்டுப் பராமரிப்பது அவனுக்கு இன்பத்தைக் கொடுத்தது. இலட்சுமிக்கு அருகில் இருந்து தொடுவதைப் போன்ற ஓர் உணர்வு அவனுக்குள் ஏற்பட்டது. நாலைந்து தினங்களின் பின்பு அந்த துளசிச் செடி துளிர்த்த போது இலட்சுமி வெளிநாட்டு உடையில் கவர்ச்சியாக நிற்பதைப் போன்ற ஒரு பிரமை அவனுக்குள் உண்டானது.

அதன் பின் அவன் அங்கு வரும் போதெல்லாம் அந்த துளசிச் செடியை வாஞ்சையுடன் பார்பான். துளசிச் செடியில் வைத்திருக்கும் பூவில் இலட்சுமியின் முகம் தெரியும்.

முற்றத்தில் யோசனையுடன் நின்ற கிருஸ்ணனுக்கு எதிரே வந்த இலட்சுமி சொன்னாள்; ''அவர் இல்லை. பொழுது புலர முன்பு போய் விட்டார்.''

கிருஸ்ணன் நிமிர்ந்து பார்த்தான். அபூர்வ தேவதை யொன்று திடீரென்று தனக்கு முன்னால் அலங்காரம் செய்து வந்திருப்பதைப் போன்ற உணர்வு.

அவள் அணிந்திருந்த சிவப்புச் சட்டை மின்னலைப் போல கண்ணைப் பறித்தது. சலனத்துடன் திரும்பிய அவனுக்கு இலட்சுமி சொன்னாள்; ''முன்பும் பல முறை குடிக்க மாட்டோம் என்று நீங்கள் இவரும் சத்தியம் செய்து விட்டு ஓரிரு தினங்களில் செய்த சத்தியத்தை மறந்து மீண்டும் குடித்தீர்கள். உங்களைக் குடிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. பொய்ச் சத்தியம் பண்ண வேண்டாம் என்று தான் சொல்லுறன். சத்தியம் செய்தால் அதன் படி நடத்தல் வேண்டும். அப்படி நடக்க முடியாத உங்களுக்கு ஏன் சத்தியம். எனது கணவரை கெடுப்பது நீங்கள் தான். அவர் விட்டாலும் அவரை விட நீங்கள் விட மாட்டீர்கள்''.

''இனிமேல் நான் குடிக்க மாட்டன்'' என்றான் கிருஸ்ணன்.

''மிகவும் நல்லது. திருமணம் செய்த பின்பு நான் கேட்ட மகிழ்ச்சியான வார்த்தை இது தான். ஆசை, சினம் ,அறியாமை ஆகிய மூன்றும் குற்றங்களுக்கும் மூல காரணி. குடி தான் குடியை விட்டால் தீமை பயக்கும். காமம் ,கோபம், அறியாமையாகியவை ஒரு மனிதனை வந்தடையாது. அவை வந்தடையா விட்டால் அவற்றால் வரும் துன்பங்கள் இல்லாமல் ஒழிந்து விடும்''.

''கிருஸ்ணனுக்கு அவள் 'காமம்' என்ற சொல்லைச் சற்று அழுத்திச் சொன்னது போலத் தெரிந்தது. இலட்சுமி எதையும் பயப்படாது முகத்திற்கு முன்னால் சொல்லி விடுவாள், முன்பு ஒரு முறை; ''நீயும் ஒரு நண்பனா? நண்பனின் மனைவி மீது இச்சைப்பட்டு அவர் இல்லாத வேளைகளில் வந்து தொந்தரவு தருகிறாயே. இது உனக்கு நியாயமாகப் படுகிறதா. உன்னைப் பற்றி எனது கணவருக்குச் சொன்னால் என்ன நடைபெறும். தெரியுமா...?'' என்று சொன்னது அவளின் காதில் ஒலித்தது.

''என்ன கிருஸ்ணா.... ? எப்ப வந்தனி?'' என்று கேட்டுக் கொண்டு வந்தான் புஸ்பநாதன்.

''இப்ப தான் வந்தனான். காலமை ஏன் கோயில் கூட்டவரவில்லை''

''அவசரமாய் மாமான்ரை வீட்டை போக வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. மச்சானுக்குக் கலியாணம் பேசினை. இப்பத்தான் என்னை இலட்சுமியின்ரை வீட்டார் மதிக்க ஆரம்பிச்சிருக்கினை'' என்று சிரித்தான் புஸ்பநாதன்.

''நாங்கள் ஒழுங்காய் இருந்தால் எல்லாரும் மதிப்பினை. இன்பமும் துன்பங்களும் எங்களைப் பொறுத்தது தான். அதை நாங்கள் தான் தேடிக் கொள்கிறோம். அறியாமையால் உண்டாகும் ஆசையாலும் சினத்தாலும் தான் எல்லாத் துன்பங்களையும் நாம் தேடிக் கொண்டோம்'' என்றான் புஸ்பநாதன்.

360. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்

நாமம் கெடக்கெடும் நோய்.

காமம், சினம், அறியாமை ஆகிய மூன்று பெருங் குற்றங்களையும் அடியோடு ஒழித்து விட்டால், துன்பங்கள் வராமல் கெடும்.

# வித்து

புஸ்பநாதன் இப்பொழுது முற்றாக மாறி விட்டான். அவன் குடிப்பதில்லை. காலையில் எழுந்தவுடன் பல் துலக்கி முகம் கழுவுவான். இலட்சுமி அவனுக்கு முன்பாகவே எழுந்து தான் வளர்க்கும் பசு மாட்டில் பால் கறந்து, அதைச் சீனி போட்டுக் காய்ச்சிக் கொண்டு வந்து புஸ்பநாதனுக்குக் கொடுப்பாள். முன்பென்றால் அவள் புஸ்பநாதன் வெளியே செல்லும் வரை நித்திரையால் எழும்ப மாட்டாள். தற்செலயலாக எழுந்தாலும் நித்திரை போலப் பாசாங்கு செய்வாள். புஸ்பநாதன் எப்பொழுது எழும்புகிறான். அவன் எங்கே போறான், எப்பொழுது வருகிறான், என்றெல்லாம் அவள் அக்கறை கொள்வதில்லை.

புஸ்பநாதன் பாலைக் குடித்து விட்டுக் கோயிலடிக்குச் சென்று விடுவான். அவன் கோயிலால் வந்து குளித்தவுடன் காலை உணவைக் கொடுப்பாள் இலட்சுமி. இருவரும் ஒன்றாக அமர்ந்து கதைத்துச் சிரித்துக் கொண்டு உணவை உண்பார்கள். வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூசைக்கு இருவரும் ஒன்றாகக் கோயிலுக்குச் செல்வார்கள்.

அன்று அவர்களது வீட்டுக்கு வந்த இலட்சுமியின் தந்தையார் ஞானசேகரம் சொன்னார்; ‘‘தம்பி, மூத்தவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். மாமிக்கும் வாதம் நெடுந்தூரம் நடக்க மாட்டா. எனக்கும் வயது போய்விட்டது. ஒரு வாகனம் வீட்டில் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். முன்பே வாங்கியிருக்கலாம். நீங்கள் ஒழுங்கில்லாமல் இருந்தீர்கள். இப்பொழுது நீங்கள் இருப்பதைப் போல என்றும் நீங்கள் இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? தம்பி நீங்கள் ஒழுங்காக இருந்தால் எவ்வளவு இன்பம் தெரியுமா...? நீங்கள் இனி ஒரு வாகனத்திற்குச் சொந்தக் காரன் என்பதை நினைவில் வைத்திருங்கள்’’ என்றார்.

‘‘நான் இனிக் கடைசி வரையும் தீமையான செயல்களில் ஈடுபட மாட்டேன். எதன் மீதும் ஆசைப்பட மாட்டேன். வாகனத்தை ஆடம்பரப் பொருளாகக் கருதாது அத்தியவாசியப் பொருளாகவே கருதுவேன்’’ என்றான்.

‘‘மிகவும் மகிழ்ச்சி தம்பி. நல்லவனாக வாழ்ந்தால் எல்லோருக்கும் நல்லது’’ என்று கூறி விட்டுச் சென்றார் ஞானசேகரன்.

புஸ்பநாதன் நவராசாவிடம் சென்று தனக்கொரு நல்ல மோட்டார் வாகனம் வாங்கித் தரும்படியும் அதைத் தான் செலுத்தக் கற்றுத் தரும்படியும் கேட்டான். அதன்படி நவராசா அவனுக்கு ஒரு மோட்டார் வாகன மொன்றை

வாங்கிக் கொடுத்தான். அந்த மோட்டார் வாகனத்தை நிறுத்துவதற்கு ஒரு கட்டிடத்தை அமைத்தான் புஸ்பநாதன்.

தினமும் ஓரிரு மணித்தியாலங்கள் வாகனத்தைச் செலுத்த புஸ்பநாதனுக்குக் கற்றுக் கொடுப்பான் நவராசா. நிலவுள்ள நாட்களில் இரவிலும் பயிற்சி நடைபெறும்.

அதற்காக தினமும் நவராசா புஸ்பநாதனின் வீட்டுக்குச் செல்வான். இலட்சுமி அவனை மகிழ்வுடன் வரவேற்று உபசரிப்பாள். அவனைச் சகோதரனாக நினைத்து கலகலப்பாகக் கதைப்பாள். காந்திமதியின் இழப்பால் மனமுடைந்து கவலையுடன் இருந்த நவராசாவுக்கு இலட்சுமியின் அன்பான பராமரிப்பும் கதையும் ஒரு புதிய உலகை அறிமுகப்படுத்தியது. அவளுடன் கதைக்க வேண்டும், அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஓர் உணர்வு அவனின் மனதுள் எழுந்தது. அதனால் அவளைத் தனது கவலையைத் தீர்க்கும் மருந்தாக எண்ணினான் நவராசா. அவனது இருதயத்தின் ஒரு மூலையில் இருந்த நீதியான உணர்வுகளின் எச்சரிக்கையும் அவன் பொருட்படுத்தவில்லை.

அன்று நவராசா வந்த போது புஸ்பநாதன் இருக்கவில்லை. திரும்பச் சொல்ல நினைத்த நவராசாவை இலட்சுமி தடுத்தாள்; ‘‘நீங்கள் வந்தால் இருக்கச் சொன்னவர். இன்னும் இரண்டு தினங்களில் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான பரீட்சை வருகிறது. இரண்டு நாட்களும் முழுமையாகப் பயிற்ச்சி பெற வேண்டும் என்றவர். உள்ளுக்கு வந்து இருங்கோ’’ என்றாள் இலட்சுமி.

நவராசா உள்ளே சென்று அமர்ந்தான். சிறிது நேரத்தில் இலட்சுமி தீன்பண்டங்களும் தேநீரும் கொண்டு வந்தாள். அவனின் அருகே சென்று அவற்றைக் கொடுத்தாள். நவராசாவின் மனம் பரபரத்தது. அவளது முகத்தைப் பார்த்தான். ஓர் அபூர்ப தேவதையின் எழில் அவளது முகத்தில் குடி கொண்டிருந்தது. சிவந்த உதடுகள் போதையை ஊட்டின. அவளது கவர்ச்சியான கண்கள் அவனுக்கு மயக்கத்தைக் கொடுத்தன.

‘‘மகனே பாவங்களுக் கெல்லாம் காரணம் ஆசை. ஆசை என்ற வித்திலிருந்து தான் பஞ்சமா பாதகங்கள் உருவாகின. ஆசையிலும் பெண்ணாசை இருக்கவே கூடாது. உனது மனைவியைத் தவிர்ந்த மற்றப் பெண்களை நீ தாயாகவே நினைத்தல் வேண்டும். ஒருவன் மனைவியின் மேல் வைக்கும் அன்பானது இறைவனைச் சென்றடையும், என்று உபநிடதம் கூறுகிறது. மனைவியைக் காதலிப்பவன் இறைவனைக் காதலிக்கிறான். மனைவிக்குத் துன்பம் செய்பவன் இறைவனுக்குத் துன்பம் செய்தவனாவன். இதே போலத் தான் கணவன் மீது அன்பு செலுத்தும் மனைவியின் அன்பும் இறைவனைச் சென்றடையும். பிற பெண்களின் மீது நாம் வைக்கின்ற தகாத ஆசை அவா எனப்படும். இதற்கு மன்னிப்பே இல்லை. இந்த அவாவால் வாழ்வில் எண்ணற்ற துன்பங்கள் ஏற்படும். பிறவிகள் தொடர்ந்து வரும்’’

கதிரேசன் கூறிய வார்த்தைகள் நவராசாவின் காதில் ஒலித்தன. எனினும் அவற்றை ஏற்க மனம் மறுத்தது.

''என்ன யோசிக்கிறியள். இன்னொரு வடை எடுத்துச் சாப்பிடுங்கோ... உங்களைப் பார்த்ததும் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது...'' இலட்சுமி தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தாள்.

நவராசா திகைத்துப் போனான். ''இலட்சுமி என்ன சொல்கிறாள்?''

''ஏதோ ஓர் உணர்வு என்னையும் அறியாமல் ஏற்படுகிறது. உங்களை அடிக்கடி பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எந்த நேரமும் என் மனதில் எழுகிறது. உங்களோடு கதைத்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது''.

நவராசா குழம்பினான்; ''எனது மனதுள் எழும் உணர்வுகள் தான் இவளது மனதிலும் எழுகிறதா..? அப்படியானால் இவள் என்னை... சீச்சீ.... இந்த உணர்வுகளுக்கு இடங் கொடுத்தால் துன்பந்தான் மிஞ்சும். இனிமேல் இங்கு வரக் கூடாது'' என்று நினைத்தான் நவராசா.

''இந்தப் படத்தைப் பாருங்கோ....'' இலட்சுமி ஒரு படத்தை நீட்டினாள். நவராசா அதை வாங்கிப் பார்த்து விட்டுத் திகைத்துப் போனான். வெளிநாட்டில் உள்ள எனது சகோதரனைப் போலவே இருக்கிறீர்கள். ஒரு வித்தியாசமும் இல்லை. எனது சகோதரன் வெளிநாட்டுக்குப் போய்ப் பத்து வருடங்கள் முடிந்து விட்டன. உங்களைப் பார்த்ததும் எனது சகோதரனது ஞாபகம் வரும். இப்போது நீங்கள் இங்கு வந்து கலகலப்பாகக் கதைப்பதால் நான் எனது சகோதரனுடன் கதைத்து மகிழ்வதைப் போன்ற நிலையிலேயே உள்ளேன். தயவு செய்து அடிக்கடி வந்து போங்கள்'' என்றாள் இலட்சுமி.

நவராசா கவலைப் பட்டான். ஒரு நல்ல பெண்ணின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் நான் ஏதேதோ நினைத்து விட்டேனே என்பதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது. அவனது பேரன் கதிரேசு கூறியது அவனுக்கு நினைவுக்கு வந்தது; ''மகனே எந்தப் பொருளாக இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்கி ஆசைப்படாதே. கண்ணாடிக் கற்களுக்கும் இரத்தினக் கற்களுக்குமுள்ள வித்தியாசம் அதைப் புரிந்து கொண்டவனுக்குத் தான் தெரியும். பாலும் சுண்ணாம்பு நீரும் பார்த்தால் ஒரே மாதிரித் தான் இருக்கும். இதே போல மனிதர்களினது வெளித்தோற்றத்தைக் கொண்டும், அவர்களது பேச்சைக் கொண்டும் முடிவு எடாதே. பார்ப்பதற்கு தீயவர்களைப் போல இருப்பவர்கள் நல்லவர்களாகவும் இருப்பார்கள். சிரித்துச் சிரித்துப் பேசுபவர்கள் நல்லவர்கள் என்றும் சொல்ல முடியாது''.

அப்பொழுது புஸ்பநாதன் வந்தான்; ''இலட்சுமி உங்கள் மீது உயிரையே வைத்திருக்கிறாள். நீங்கள் தனது சகோதரனைப் போலவே இருக்கிறீர்களாம். வாயோயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாள்'' என்றான் புஸ்பநாதன்.

நவராசா தனது தவறுக்காக மனதுள் வருந்தினான்.

361. அவாஎன்ப எல்லா உயிர்க்குமஎஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

எல்லா உயிர்களுக்கும் எக்காலத்திலும் நீங்காமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்னும் ஆசையாகும்.

## விரும்புவது

வருணனும் பூரணியும் கனகசபாபதியின் வீட்டுக்கு வந்திருந்தனர். கனகசபாபதி முன்னய அடாவடித்தனங்களை யெல்லாம் விட்டு விட்டு தனக்கும் மற்றவர்களுக்கும் இடையே இருந்த பிரச்சினைகளை யெல்லாம் தீர்த்துக் கொண்டான். கடை கட்டிய சிதம்பர சொத்துக் காணியை சின்னத்தம்பிக்குக் கொடுத்து விட்டான்.

கனகசபாபதி தனது பேரனை மடியில் வைத்துக் கொஞ்சினான்; ‘‘நீ பிறந்த கிரகம் தான் என்னைத் திருத்தியது. இனிமேல் நான் எந்தத் தவறுகளும் செய்ய மாட்டேன். நீ பிறந்ததே போதும்’’ என்றான்.

சகுந்தலை அளவில்லாத மகிழ்ச்சியுடன் பூரணியுடன் கதைத்தாள். ‘‘இப்பொழுது உனது அப்பா திருந்தி விட்டார். அவர் இப்பொழுது யாருடனும் பிரச்சினைகளுக்குப் போவதில்லை. யாராவது வந்து தமது கஷ்டங்களைச் சொன்னால் தன்னாலியன்றளவு உதவி செய்கிறார். காலையில் கோயிலுக்குப் போனால் மாலையில் தான் வருகிறார். முன்பென்றால் வாய்க்குருசியாக மாமிசம் காய்ச்சினால் மட்டும் சாப்பிடும் அவர் இப்பொழுது மாமிசமே உண்பதில்லை. மதிய உணவைப் பெரும்பாலும் கோயில் மடத்தில் உண்டு விடுகிறார். குடிப்பதும் இல்லை, இப்பொழுது தான் எனக்குச் சந்தோசமாக உள்ளது’’ என்றாள்.

‘‘நாங்களும் அப்பா திருந்தியதால் தான் இங்கே வந்தோம். இல்லாவிட்டால் மாமாவின் வீட்டில் தான் இருந்திருப்போம். இப்பொழுது தான் அவர் வாழும் வாழ்க்கையில் அர்த்தம் உள்ளது. மனிதன் பிறந்து மிருகங்களைப் போல வாழ்வதில் என்ன பயன் இருக்கிறது. பிறந்தவன் தான் வாழ்ந்த சுவட்டை விட்டுச் செல்லல் வேண்டும்’’ என்றாள் பூரணி.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த கனகசபாபதி சொன்னான்; ‘‘இப்பொழுது நான் எதைச் செய்தாலும் என்னை அதில் பூரணமாக அர்பணித்து விடுகிறேன். முன்பு நான் செய்வது தான் சரி யென்றும் நியாயம் என்றும் நினைத்தேன். அது எனக்கு மட்டும் நியாயமாக இருந்தது. மற்றவர்களுக்குத் தீமைகள் ஏற்படுவதைக் கண்டு எனது மனம் குதூகலித்தது. ஆனால் நான்

இப்பொழுது மற்றவர்களுக்குத் துன்பம் செய்வதில்லை. பெரியவர்களும் ஞானிகளும் கூறியவற்றையே செய்கிறேன். அது எனக்கு இன்பத்தைக் கொடுக்கிறது''.

அப்பொழுது ஆதித்தியனும் தில்லைநடராசாவும் வந்தனர். ஆதித்தியனைக் கண்ட கனகசபாபதி சொன்னான்; ''மச்சான், எனக்கிருக்கிறது ஒரே ஒரு பிள்ளை. என்னுடைய சொத்துக்களெல்லாம் அவளுக்குத் தான் சேர வேண்டும். இனிமேலும் என்னால் அச் சொத்துக்களை வைத்துப் பாதுகாக்க முடியாது. சொத்து முழுவதையும் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். என்னால் அவற்றைச் சுமக்க முடியவில்லை''.

''ஐயையோ என்னால் முடியாது. எனக்கு எந்தப் பொருளிலும் ஆசை இல்லை. மறுபடியும் இந்தப் பூமியில் பிறவாத நிலையைத் தான் நான் விரும்புகிறேன். அந்த நிலை எனக்கு வரவேண்டுமானால் நான் எந்த ஒரு பொருளையும் விரும்புவதை விட்டு விடவேண்டும். எனது பிள்ளைகள் எல்லாம் கரைசேர்ந்து விட்டனர். எல்லாப் பிள்ளைகளின் பிள்ளைகளையும் நான் தோளில் தூக்கி வைத்து விளையாடி விட்டேன். இப்பொழுது எனக்கு எந்த ஆசையும் இல்லை. ஒரு சிறிய பழத்தைக் கூடச் சாப்பிட வேண்டும் என்ற அவா எனக்கில்லை. கடவுள் மீது தான் நான் பற்றும் நம்பிக்கையும் வைத்துள்ளேன்'' என்றார்.

''நானும் அந்த நிலையில் தான் இருக்கிறேன். பூரணி உன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் பொறுப்பேற்றுக் கொள். பொருட்கள் மீதிருந்த ஆசையால் நான் பட்ட கஷ்டங்கள் போதும். இனிமேலும் என்னால் கஷ்டப்பட முடியாது. ஒருவன் தேவைக்கு அதிகமான பொருட்களின் மேல் ஆசை வைப்பதால் தான் துன்பப்படுகிறான். நான் பட்ட துன்பங்கள் போதும்'' என்றார் கனகசபாபதி.

அன்று இரவுப் பூசைக்கு வருணனும் பூரணியும் கனகசபாபதியும் சகுந்தலையும் மகா கணபதி ஆலயத்திற்குச் வந்தனர். அன்று சுவாமியார் கடுஞ்சுகவீன முற்றதால் மக்கள் அவர் தங்கியிருந்த மடத்தின் முன்னால் கூடி நின்றனர்.

''சுவாமி உங்களின் உடல் நெருப்பாகக் கொதிக்கிறது. வைத்தியரை அழைத்து வரட்டுமா? இல்லை வாகனம் கொண்டு வந்து தங்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லட்டுமா..?'' என்று கேட்டார் தணிகாசலம்.

''மகனே, நீ நினைப்பதைப் போலப் பெரிதாக எந்த நோயும் என்னைப் பீடிக்கவில்லை. சற்று ஓய்வாக என்னை இருக்க விட்டால் போதும். ஒருவன் ஒன்றை விரும்ப வேண்டு மென்றால் மறுபடியும் பிறவாமல் இருப்பதைத் தான் விரும்ப வேண்டும். தயவு செய்து எனது விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்யாதீர்கள். பற்றுக்களை அறுத்து விட்டு பரமனின் பாதத்தை அடையவே நான் விரும்புகிறேன். நான் மருந்து குடித்தால் வாழ்வின் மேல் பற்று வைத்து

விட்டதாக அமைந்து விடும். ஒருவனின் வாழ்நாள் தீர்மானிக்கப்பட்டபடி தான் அமையும். மருந்தால் உயிரைப் பிடித்து வைக்க முடியுமாக இருந்தால் சாவு என்பது இல்லாமல் போய் விடும். எனவே அமைதியாக இருங்கள். நீங்கள் செயலின்றி இருப்பதையே நான் விரும்புகிறேன்'' என்றார் சுவாமியார்.

அதற்கு மேல் தணிகாசலம் பேச விரும்பவில்லை. சுவாமியார் எதைச் சொன்னாலும் அர்த்தத்துடன் தான் சொல்வார் என்று நினைத்தவாறு கோயிலுக்குச் சென்று மகா கணபதியை வணங்கினார். அவரது மனம் சுவாமியாருக்கு எதுவும் நடக்கக் கூடாது என்று பிரார்த்தித்தது.

''மக்கள் பல உணவுப் பொருட்களைக் கொண்டு வந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி சுவாமியாரின் அருகே வந்தார். சுவாமியாரின் உடல் இளைத்திருந்தது. முகம் வாடியிருந்தது. ''சுவாமி காலையில் இருந்து தங்கள் உணவு உட்கொள்ளவில்லை யென்று மடத்தில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். குடிப்பதற்காவது ஏதாவது தரட்டுமா...?''

சுவாமியார் புன்னகைத்தார்; ''மகனே எனக்கு எந்த வருத்தமும் இல்லை. சற்று ஓய்வு எடுக்கிறேன். அவ்வளவு தான். எனக்கு எந்தப் பானமும் இப்பொழுது தேவையில்லை. மக்கள் அன்பு மிகுதியால் பல பொருட்களைக் கொண்டு வந்துள்ளனர். அவற்றையெல்லாம் கொண்டு போகச் சொல். அவர்கள் கொண்டு வந்த பொருட்கள் எனக்குப் பல வருடங்களுக்கும் போதும். இவற்றையெல்லாம் வைத்துப் பராமரிக்க என்னால் முடியாது. நான் சில தினங்களுக்கு உணவருந்தாது இருக்கப் போகிறேன். மக்களைக் குழம்ப வேண்டாம் என்று சொல்லுங்கள்'' என்றார்.

சுவாமியாருக்குச் சுகவீனம் என்று அறிந்த வைத்தியர் பால குமாரன் அவசர அவசரமாக வந்து சுவாமியாரைப் பரிசோதித்தார். அவரால் எந்த வருத்தத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லை. சுவாமியார் ஆரோக்கியமாக இருந்தார்.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றுஅது
வேண்டாமை வேண்ட வரும்.

ஒருவன் ஒன்றை விரும்புவதாக இருந்தால், மீண்டும் பிறவாத நிலையையே விரும்புதல் வேண்டும். அந்நிலை அவாவின்மையால் வரும்.

## சிறந்த செல்வம்

புஸ்பநாதனின் மைத்துனன் குகவேள் வெளிநாட்டிலிருந்து திருமணத்திற்காக வந்திருந்தான். அதனால் புஸ்பநாதனும் இலட்சுமியும் ஞானசேகரனின் வீட்டுக்குச் சென்றனர். புஸ்பநாதன் மோட்டார் வண்டியைச் செலுத்தக் கற்றுக் கொண்ட போதும் வாகன நெருக்கம் மிகுந்த பட்டணப் பகுதிகளில் வாகனமோட்டப் பயந்தான். அதனால் நவராசா தான் திருமண

வைபவங்களுக்காக வாகனத்தை ஓட்டினான். குகவேள் இலட்சுமி சொன்னதைப் போல அவனை ஓரளவு ஒத்திருந்தான்.

அன்று சனிக்கிழமை ஞானசேகரன் திருமண விடயமாக பெண் வீட்டுக்குச் சென்று விட்டார். குகவேள் ஊரில் இருக்கும் போது பல இளைஞர்களுடன் நட்பாக இருந்தான். அதனால் ஊரில் உள்ள பலர் அவனை வந்து சுகம் விசாரித்துச் சென்றனர். அன்று அவனைப் பார்க்கக் கௌசிகனும், நந்தகுமாரனும் வந்திருந்தனர். குகவேள் அவர்களுடன் நட்பாக இருந்த காலத்திலேயே அவர்கள் மதுபான வகைகளைக் குடிப்பார்கள். அதனால் குகவேள் அவர்களுடன் சேர்வது குறைவு. இருந்த போதும் அவர்கள் குகவேளின் மீது நட்புப் பாராட்டினர். குகவேளின் நட்பை இழக்க அவர்கள் விரும்பவில்லை. அதனால் குடிக்கும் வேளைகளில் அவர்கள் குகவேளைச் சந்திப்பதில்லை.

அன்று வந்த கௌசிகனுக்கும் நந்தகுமாரனுக்கும் பல பொருட்களைக் கொடுத்தான் குகவேள்.

‘‘வெளிநாட்டுக்குப் போனனி; அங்கு குடிக்காமலா இருந்திருப்பாய். எங்கடை ஊர் அம்மன் கோயில் ஐயர்ரை மகன் வெளிநாட்டிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் பூசைக் கென்று போனவர். இஞ்சை வந்த போது பொடியளோடை சேர்ந்து வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த குடிவகை களைக் குடித்தவராம். நிவேதன் சொன்னான். உள்ளூர் குடிவகைகளைக் குடிச்சுக் குடிச்சு வெறுத்துப் போய் விட்டது. ஐயர் தந்த வெளிநாட்டு சாராயத்தைப் போலை உள்ளூரான் எதுவும் இல்லை. இரண்டு நாள் ஐயர் தந்தவர். பிறகு முடிந்து விட்டது என்றவர். நீ ஏதாவது கொண்டு வந்தால் தா குடிச்சுப் பார்ப்பம்’’ என்றான் நந்தகுமாரன்.

குகவேள் பேசாது இருந்தான்; ‘‘குகன் வெளிநாட்டுக் குடிவகை உடம்புக்கு நல்லதென்று சொல்லுறாங்கள். வெள்ளைக் காரர் ஆரோக்கியமாக இருப்பதற்கு அந்த நாட்டில் தயாராகிற குடிவகைகள் தான் காரண மென்றும் சொல்லுறாங்கள். வெறிக்கு குடிக்க நாங்கள் விரும்பவில்லை. வெறிக்கிற அளவிற்கு உன்னாலை கொண்டு வர முடியாது. ருசித்துப் பார்க்கத் தா’’ என்றான் கௌசிகன்.

குகவேள் உள்ளே சென்று அழகான ஒரு போத்தலைக் கொண்டு வந்து நந்த குமாரனிடம் கொடுத்து விட்டுச் சொன்னான்; ‘‘கொண்டு போய் வீட்டை குடியுங்கோ. இஞ்சை குடிக்கிறது அப்பாவுக்குப் பிடிக்காது. ஒவ்வொரு நாளும் வாருங்கோ. கலியாண வீட்டு வேலைகளை நீங்கள் தான் எனக்குச் செய்ய வேண்டும்’’.

‘‘அதெல்லாம் செய்து தாறம். இதைத் தந்ததற்கு மிகவும் நன்றி. நாங்கள் போயிட்டு வாறம்’’ என்று எழுந்தான் கௌசிகன். அவனுடன் சென்றான் நந்தகுமாரன்.

அப்பொழுது அங்கே வந்த புஸ்பநாதன் சொன்னான்; ''மச்சான் இவங்கள் இரண்டு பேரும் சரியான குடிகாரர்கள். குடுத்துக் காட்டினியள் என்றால் ஒவ்வொரு நாளும் வருவங்கள். என்னைப் பொறுத்த வரை குடிகாரரோடு சேரக் கூடாது''.

''என்ன செய்வது பழைய சினேகிதம்'' என்ற குகவேள் உள்ளே சென்று தான் கொண்டு வந்த இன்னொரு மதுபானப் போத்திலைக் கொண்டு வந்து புஸ்பநாதனிடம் நீட்டினான்; ''அத்தான் இது நல்ல சாமான். வெறிக்காது உடல் அலுப்புத் தீரும். சமிபாடடையும். உற்சாகமாக இருக்கும். ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சம் குடியுங்கோ'' என்றான்.

புஸ்பநாதன் அதை வாங்கவில்லை. உடலில் அலுப்பு இருந்தால் தானே தீர்வதற்கு நான் நன்றாகச் சாப்பிடுகிறேன். உழைக்கிறேன். அதனால் உணவு சமிபாடடைகிறது'' என்று புஸ்பநாதன் சொல்லிக் கொண்டிருக்கும் போது குகவேள் குறுக்கிட்டான்; ''அத்தான் இதைக் குடி வகையாய் நினைக்காதைங்கோ. மருந்தாய் நினையுங்கோ.

''வேண்டாம், தவராசா குடிக்கிறதே இல்லை. மரத்தாலை விழுந்து பத்து நாள் ஆஸ்பத்திரீலை இருந்தவன். அவனுக்கு அவனது தாய் மருந்தாய்க் குடிக்கச் சொல்லித் தான் கொஞ்சம் சாராயம் குடுத்தவா. இப்ப அவன் பெரும் குடிகாரன். அத்துடன் நான் விட்டுட்டன் இனிக் குடிக்க மாட்டன்'' என்றான் புஸ்பநாதன்.

''குகன் அவரை வற்புறுத்தாதை இவர் குடித்த குடி இந்தக் கிராமத்தில் வேறு எவரும் குடித்திருக்க மாட்டினை. தீய பழக்கங்களைப் பழகுவது மிகவும் எளிதானது. தீய பழக்கங்களை விடுவது கஷ்டமானது. எனவே அவரை வற்புறுத்தாதே'' என்றாள் இலட்சுமி.

புஸ்பநாதன் நினைத்துப் பார்த்தான். தில்லை நடராசாவின் இரண்டு காளை மாடுகளையும் அவிழ்த்தன்று கனகசபாபதி ஒரு போத்தல் சாராயம் வாங்கிக் கொடுத்திருந்தான். அதை சின்னத்தம்பியும் தனபாலனும் கிருஸ்ணனும் அவனுமாகச் சேர்ந்து குடித்தனர். காளைகளை வெட்டடி உரித்துக் கொடுத்ததற்காகப் பாக்கியநாதன் இரண்டு போத்தல் கசிப்புக் கொடுத்தான். அதையும் நால்வரும் குடித்தனர். இறைச்சியைக் கொண்டு போய் வீட்டில் கொடுத்து விட்டு சீனியனிடம் கள்ளருந்த நால்வரும் சென்றனர்.

''எனக்குப் போதும் இப்பவே தாங்க முடியாமல் இருக்கு'' என்றான் கிருஸ்ணன்.

''சரி நீ குடிக்கா விட்டால் விடு'' என்ற புஸ்பநாதன் கிருஸ்ணனுக்காக வைக்கப்பட்டிருந்த இரண்டு போத்தல் கள்ளையும் குடித்தான். அவனால் எழுந்து நிற்க முடியவில்லை. எழுந்தான், தலையைச் சுற்றியது. முகம் அடிபட விழுந்தான். முன்பல் ஒன்று உடைந்து இரத்தம் கசிந்தது.

‘‘நான் போகப் போறன்’’ என்று எழுந்தான் சின்னத்தம்பி. அவனுக்குப் பின்னால் தள்ளாடியவாறு நடந்தான் கிருஸ்ணன்; ‘‘தம்பி புஸ்பாவையும் கூட்டிக் கொண்டு போங்கோ. இஞ்சை இருந்தால் கரைச்சல். வாற போற ஆட்களோடு சண்டைக்குப் போவார்’’ என்றான் சீனியன்.

‘‘அப்படியோ, என்று எழுந்த புஸ்பநாதன் சீனியனின் நெஞ்சைப் பிடித்துத் தள்ளினான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நிதானமில்லாது அங்கும் இங்கும் நடந்தான். அவனால் நடக்க முடியவில்லை கால் தடுக்கி விழுந்தான்; ‘‘இண்டைக்குச் சீனியனுக்கு அடிக்க வேணும். எங்கடை காசிலை வீடு கட்டுறது, பிறகு குடிச்சால் எங்களைப் பிடிக்காது. நாலைந்து நாளைக்கு வராட்டில் வீதிவழிய தேடித்திரியுறது. கெட்ட பயல். கிருஸ்ணா அடியடா’’ அலம்பினான் புஸ்பநாதன்.

கிருஸ்ணனும் சின்னத்தம்பியும் சென்று விட்டனர். புஸ்பநாதனும் தனபாலனும் தள்ளாடிய படி வந்து பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் நின்ற வேம்பின் கீழ் இருந்தனர். புஸ்பநாதனுக்கு வயிற்றைப் புரட்டியது. சத்தி வந்தது. அவன் சத்தியெடுத்தான். வாயாலும் மூக்காலும் அவன் குடித்த கள்ளும் சாராயமும் வந்தது. அதைத் தனபாலன் கவனிக்கவில்லை. எழுந்து சென்று விட்டான்.

புஸ்பநாதன் சத்தி எடுத்து விட்டு அதற்கு மேல் படுத்திருந்தான். அவனால் எழுப்ப முடியவில்லை. அப்பொழுது அந்த வழியால் வந்த தில்லை நடராசா ஆடைகளின்றிப் படுத்திருந்த புஸ்பநாதனைக் கண்டு மனம் வருந்தினார். பின்பு அவனைத் தூக்கி கைத்தாங்கலாக அழைத்துச் சென்று வீட்டில் விட்டார்.

மறு நாள் தில்லை நடராசா அவனைக் கண்ட போது சொன்னார்; ‘‘குடிப்பது மகா பாவம். அதை விட அளவுக்கதிகமாகக் குடித்து விட்டு சீலை துணி கூட இல்லாமல் படுத்திருப்பது எவ்வளவு கோவமானது. அளவுக்கு மிஞ்சின ஆசையை அவா என்று சொல்வார்கள். எதற்கும் ஓர் அளவு வேண்டும். ஆசைப்படுவது இயல்பு. ஆசை இருக்கும் வரை மனிதனால் இன்பமாக வாழ முடியாது. அவாப்பட்டால் அவன் அழிவின் எல்லைக்குப் போய் விட்டான் என்பது அர்த்தம். தீயவற்றை விரும்பாமல் வாழ்வது தான் வாழ்க்கை. மிருகங்கள் கூட அவாப்படுவதில்லை. அவை எவ்வளவு உணவு கிடைத்தாலும் தமக்குக் காணக் கூடிய உணவுக்கு மேல் ஒரு பிடி கூட உண்பதில்லை. கேவலம் மனிதன் தான் அவாப்பட்டு அல்லற்படுகிறான். மது பானத்தை நீ அளவாகக் குடித்திருந்தால் அல்லற்பட்டிருப்பாயா....?’’ இனியாவது அவாப்படாமல் வாழப்பழகு’’ தில்லை நடராசாவின் குரல் அவனது காதில் ஒலித்தது.

363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை;
யாண்டும் அஃதுஒப்பது இல்.

அவா இல்லாத நிலையைப் போன்ற சிறந்த செல்வம் இவ்வுலகில் இல்லை அதற்கு நிகரனது வேறெதுவும் இல்லை.

## தூயநிலை

எவ்வளவு தான் மனதைக் கட்டுப்படுத்திய போதும் நவராசாவால் காந்திமதியை மறக்க முடியவில்லை. எந்நேரமும் அவன் அவனின் விழித்திரைக்குள் வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தாள். அவன் அவளை உயிருக்குயிராக நேசித்தான். ஆனால் அவள் அவனை விரும்பவில்லை. அவனின் காதலை உதாசீனம் செய்து விட்டு இன்னொருவனை விரும்பினாள். அதைத்தான் நவராசாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

காந்திமதி இறந்த பின்பு நவராசா பைத்தியம் பிடித்தவன் போல இருந்தான். கதிரேசனின் வார்த்தைகளில் ஆறுதல் இருந்த போதும் சில சமயங்களில் உணர்வுகள் கட்டு மீறி அவனை வருத்தின. அவனது நண்பன் பரமநாதன். முற்கோபக் காரன். எதையும் ஆராயாது கதைப்பவன். அதனால் அவன் பல கஷ்டங்களுக்கு ஆழான போதும் அவற்றை உணர்ந்து திருந்தாதவன். அவனுக்கும் மனைவிக்கும், மாமன் மாமிக்கும் அடிக்கடி சண்டை வரும். முன்பு குடிக்கக் கூடாதென்று தத்துவம் பேசும் பரமநாதன் விரக்தியால் குடிக்கப் பழகினான்.

நவராசாவின் நண்பனான பரமநாதன் நவராசாவுடன் சேர்ந்து திரிவான். அவன் அளவுக்கு அதிகமாகக் குடிப்பது நவராசாவுக்குப் பிடிப்பதில்லை; ‘‘பரமு, எனக்குக் குடிப்பவர்களைப் பிடிக்காது. எனது நண்பனாக உன்னை நான் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் நீ குடியாதவன் என்பதற்காகத் தான் திருமணம் செய்யு முன் குடிப்பழக்க மில்லாத நீ இப்பொழுது ஏன் குடிக்கிறாய். நீ குடிப்பதானால் நான் உன்னுடன் சேரமாட்டேன்’’ என்றான் நவராசா.

பரமநாதன் சிரித்தான். விழுந்து விழுந்து சிரித்தான். பின் சொன்னான்; ‘‘நீ திருமணமாகாதவன். அதனால் தான் நீ குடிப்பதில்லை. திருமணமாகு முன்பு நான் குடித்தேனா...? பெண்கள் கெட்டவர்கள். தமது கருமம் பார்ப்பதற்குத் தான் எம்முடன் பழகுகிறார்கள். தமக்கு விருப்பமில்லாத எதுவும் ஆண்கள் செய்யக் கூடாது. எல்லாவற்றையும் தங்களின் பொறுப்பில் விட்டு விட்டு அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஆமாப் போட்டு தலையாட்டா விட்டால் மூஞ்சையை நீட்டுவார்கள். ஒழுங்காகச் சமைக்க மாட்டார்கள். கலகலப்பாகப் பழக மாட்டார்கள். இதனால் தான் வீட்டில் சண்டை வரும். நிம்மதியாக என்னால் இருக்க முடியவில்லை. அதனால் தான் குடிக்கிறேன். உனக்கும் காந்திமதியை இழந்த சோகம் அளவுக்கதிகமாக இருக்கு. குடிச்சுப் பார் எல்லாவற்றையும் மறந்து விடுவாய்’’.

நவராசாவுக்கும் குடிக்க வேண்டும் போல இருந்தது. அதனால் பரமநாதனுடன் சேர்ந்து ஒரு நாள்க் குடித்தான். பரமநாதன் சொன்னது போல் நன்றாகத் தான் இருந்தது. அதனால் தொடர்ந்து குடித்தான்.

அன்று குகவேளின் திருமணத்திற்கான பட்டுப் பிடைவைகள் எடுப்பதற்காக பெண் வீட்டாரும் புஸ்பநாதனும் இலட்சுமியும் குகவேளும் பட்டணத்திற்குச் சென்றனர். நவராசா தன் மோட்டார் வண்டியை ஓட்டிச் சென்றான். பிடைவைகள் வாங்கியதும் புஸ்பநாதன் தனக்கு அலுவல்கள் இருப்பதாகக் கூறி விட்டுச் சென்று விட்டான். நவராசா பெண் வீட்டாரைக் கொண்டு போய் இறக்கி விட்டு குகவேளின் வீட்டுக்கு வந்தான். அவனின் அருகில் வந்த குகவேள்; உள்ளே வந்து விட்டுப் போங்கள்'' என்று நவராசாவை அழைத்தான்.

வீட்டின் முன்பாக இருந்த நவராசாவைக் குகவேள் உள்ளே வரும்படி அழைத்தான். உள்ளே மேசையில் வெளிநாட்டு மதுபானப் போத்தலும் ஒரு கண்ணாடிப் பாத்திரமும் இருந்தது. ''நீங்கள் குடிப்பீர்களோ தெரியாது. விரும்பினால் எடுங்கள்'' என்றான் குகவேள்.

நவராசா மதுபானப் போத்தலைத் திறந்து, மதுபானத்தை கண்ணாடிப் பாத்திரத்தில் ஊற்றிக் குடித்தான். சிறிது நேரத்தின் பின்பு இன்னொரு முறை ஊற்றிக் குடித்து விட்டு சென்றான்.

நவராசாவின் போக்கில் மாற்றம் இருப்பதாக உணர்ந்தார் கதிரேசன். மெதுவாக அவனது நண்பர்களிடத்தில் விசாரித்துப் பார்த்தார். நவராசா, பரமநாதனுடன் சேர்ந்து குடிப்பதைப் பற்றி அறிந்து கொண்டார். அது அவருக்குக் கவலையைக் கொடுத்தது.

அன்று அவன் வந்த போது சொன்னார்; ''மகனே நீ குடிப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். அது உண்மையா?''

''இல்லை அப்பூ, நான் குடிப்பதில்லை யாரோ தவறாக உங்களுக்குக் கூறி விட்டார்கள்'' என்றான் நவராசா.

''முன்பெல்லாம் தவறாகக் கூறாதவர்கள் இப்பொழுது ஏன் தவறாகக் கூறுதல் வேண்டும். ஏதோ ஒரு சிறு நிகழ்வு நடந்தால் தான் அதைப் பெரிதாக்கி மக்கள் கதைப்பார்கள். அதில் சிறிதளவு தான் உண்மை இருக்கும். மிகுதியெல்லாம் சோடனைகளாக இருக்கும். ஒருவன் தான் கேட்பதை அப்படியே சொல்ல மாட்டன். ஆனால் கருத்து மாறுபாடு இராது''.

''இல்லை அப்பு, நான் குடிக்கவில்லை. வேண்டுமானால் சத்தியம் செய்து தருகிறேன்'' என்றான் நவராசா.

''வேண்டாம், வேண்டாம். சத்தியம் செய்வது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. உனது நெஞ்சிற்கு நீ செய்தது என்னவென்று தெரியும். அது எனக்கும்

தெரியும். பிறகேன் சத்தியம். நம்பிக்கையில்லாதவன் தான் கடவுளை சாட்சியாக அழைக்கிறான். ஏனென்றால் கடவுள் வந்து உண்மையைச் சொல்ல மாட்டார் என்று அவன் நினைக்கிறான். மனிதன் தூய்மையாக வாழ வேண்டும். தூய நிலை என்பது என்ன வென்று நான் உனக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறேன். பொய் பேசாமல் இருத்தல் தான் தூய நிலை. அதற்கு அவா இருத்தல் கூடாது. காணி, பூமி ,பொருள், பண்டம், பணம் என்பவற்றில் மட்டுமல்ல கள்ளிலும் ஆசைப்படுவது தான் அவா. பொய் பேசுவது தான் தீய செயல்களின் ஆரம்பம்''. கதிரேசன் உணர்ச்சி வசப்பட்டார். அவரால் பேச முடியவில்லை; ''மகனே எமது பரம் பரையினர் ஏழைகளாகத் தான் வாழ்ந்தனர். இப்பொழுது தான் பணத்தைக் கண்டுள்ளனர். நீ ஏழையாக இருக்கு மட்டும் ஒழுக்கமாக வாழ்ந்தாய். பணத்தைக் கண்டதும் நீ மாறி விட்டதாக நான் கேள்விப் படுகிறேன். பணத்தை நீதான் தேடினையே தவிர பணம் உன்னைத் தேடி வரவில்லை. இந்தப் பணத்தால் எமது குல மானம் போக வேண்டியிருந்தால் பணத்தைத் துறப்பது தான் சிறப்பானது.''

நவராசா பதில் கூறவில்லை. தடுமாறிய படி நின்றான். தான் குடித்த விஷயம் எப்படி இவருக்குத் தெரிந்தது என்று அதிசயப்பட்டான்.

''மகனே துயரத்தை மறப்பதற்கு வழி, துயரத்தை மறப்பது தான். ஓயாமல் அதையே நினைத்துக் கொண்டிருந்தால் கவலை மேலிடும். அதனால் தீய பழக்கங்களைக் கைக் கொள்ள நேரிடும். மற்றவர்கள் விரும்பாத ஒன்றை எப்படி அவர்களுக்குத் திணிப்பது அதுவும் காந்திமதி உயிரோடு இருந்திருந்தாவது கேட்டுப் பார்த்திருக்கலாம். அவள் உயிரோடு இருந்தாலும் இன்னொருவனுக்கு நிட்சயிக்கப்பட்டவள். அதனால் கேட்கவும் முடியாது. எனவே நீ சிவகுருநாதனின் பேர்த்தியை உடனடியாகத் திருமணம் செய்து கொள்வது தான் நல்லது. நீ நல்லவனாக வாழ வேண்டும். எமது பரம்பரை தளைக்க வேண்டும்'' என்றார் கதிரேசன்.

''அப்பூ, நான் குடித்தது உண்மை தான். எனது பெற்றோர் கட்டிக் காத்த ஒழுக்க நெறியில் இருந்து நான் தவறி விட்டேன். இனிமேல் நான் குடிக்க மாட்டேன்; பொய் சொல்ல மாட்டேன்; நீங்கள் விரும்பிய படி வாழ்வேன். எனக்கு வாசுகியைச் செய்ய விருப்பம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்றான் நவராசா.

கதிரேசன் பூரித்துப் போனார்.

364. தூஉய்மை என்பது அவாவின்மை; மற்றுஅது
வாஅய்மை வேண்ட வரும்.

தூய நிலை என்று கூறப்படுவது அவா இல்லாதிருத்தலே; இத் தூயநிலை, உண்மை பேசுவதால் உண்டாகும்.

## பற்றற்றவர்

புஸ்பநாதன், குகவேனின் திருமணத்திற்காக இரவும் பகலும் உறங்காமல் வேலை செய்தான். ஞானசேகரன் குகவேனின் திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடந்த எண்ணினார். அதனால் திருமணத்திற்கான ஏற்பாடுகள் மிகவும் மும்மரமாக நடந்தான். புஸ்பநாதன் உணவைக் கவனிக்காது ஓடித்திரிந்தான். அவனுடன் நவராசாவும் சேர்ந்து வேலை செய்தான்.

மறு நாள்த் திருமணம் காலை பத்துமணிக்குச் சென்ற புஸ்பநாதனும் நவராசாவும் மாலை ஐந்துமணிக்குப் பொருட்களுடன் வீட்டுக்கு வந்தனர். இலட்சுமி வெளியே அலுவலாகச் சென்று விட்டாள். அதனால் புஸ்பநாதன் முற்றத்தில் அமைக்கப்பட்ட கல்யாணப் பந்தலில் இருந்த நாற்காலி ஒன்றில் அமா்ந்திருந்தான். உள்ளே பொருட்களை வைத்து விட்டு வந்த நவராசா; ‘‘நான் போய்விட்டு வாறன்’’ என்று புஸ்பநாதனுக்குக் கூறினான். புஸ்பநாதனுடன் கதைத்துக் கொண்டிருந்த குகவேள்; ‘‘வாருங்கோ நவம் அண்ணை சாப்பிட்டுட்டுப் போகலாம்’’ என்றான்.

‘‘கடையில் வடை சாப்பிட்டனான். குளித்து விட்டுச் சாப்பிடுவம்’’ என்றான் நவராசா.

‘‘சாப்பிட்டு விட்டு இரவைக்குக் குளி’’ என்ற புஸ்பநாதன் எழுந்து உள்ளே சென்றான். அதற்கு முன் சென்ற குகவேள்; ‘‘அத்தான்’’ என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

‘‘புஸ்பநாதன் அவனின் அருகே சென்றான். அவனது அறையில் இருந்த மேசையில் வெளிநாட்டு மதுபானப் போத்தல் ஒன்று இருந்தது. அதன் அருகில் இரண்டு கண்ணாடிப் பாத்திரங்கள் இருந்தன.

கதிரையில் அமா்ந்த புஸ்பநாதன் கண்ணாடிப் பாத்திரங்கள் இரண்டிலும் மதுபானத்தை ஊற்றினான்; நவம் நான் குடிப்பதில்லை என்று தான் தீா்மானித்தனான். வெளியில் குடிப்பதில்லை. வீட்டுக்குள்ளை இருக்கு. அதை மச்சான் காட்டி; ‘‘இது உடம்புக்கு நல்லது. வேலை செய்யிறவை உடல் அலுப்புத் தீரக் கொஞ்சம் மருந்தாகக் குடிப்பது குற்றமில்லை. குடிச்சுப் போட்டு வீதிகளிலை விழுந்து கிடக்கிறதும் மற்றவையோடை சண்டைகளுக்குப் போறதும் தான் குற்றம்’’ என்றான். சாராயத்தைத் தேடி நான் போவது இல்லை. அந்த ஆசையும் எனக்கில்லை. வீட்டுக்கை இருக்கிறத்தைக் கண்டதாலும், வெளிநாட்டு மதுபானம் எப்படி இருக்கும் என்றும் சுவைத்துப் பார்க்க விரும்பியதாலும் தான் நேற்றுக் கொஞ்சம் குடிச்சனான். நல்ல சாமான். வெறிக்கேல்லை. உடம்பு அலுப்பெல்லாம் போயிட்டுது’’ என்று கூறி விட்டுக் கண்ணாடிப் பாத்திரத்தில் இருந்த மதுபானத்தைக் குடித்தான்.

நவராசா எதுவும் பேசாமல் நின்றான். முதல் நாள் கதிரேசன் கூறிய வாா்த்தைகள் அவனின் காதில் ஒலித்தன; ‘‘மகனே பற்றற்று வாழச் சொல்லி நான் சொல்லவில்லை. இளைஞனான உனது மனதில் ஆயிரம் இன்பக் கற்பனைகள் இருக்கும். எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று

ஆசைப்படுவாய். அது உனது வயதிற்கு இயல்பானது. ஆனால் பிறரின் பொருளை வஞ்சகமாக அடைய வேண்டு மென்று நினைப்பது ஆசைக்கு அப்பாற்பட்ட அவா. தீய செயல்களைச் செய்ய நினைப்பது ஆபத்தான அவா. மதுபானம் குடித்தல், சூதாதல், பிறன் மனைவிமேல் இச்சைப்படுதல், பொய் பேசுதல் போன்றவையெல்லாம் ஒரு மனிதன் எந்த வேளையிலும் செய்யக் கூடாதவை. இவையெல்லாம் மனிதனின் அவாக்கள். அவாப்படுதல் கூடாது. அவாப்பட்டவனின் வம்சம் தழைக்காது''.

''என்னடாப்பா யோசிக்கிறாய் எடுத்துக் குடி'' என்றான் புஸ்பநாதன்.

''எனக்கு வேண்டாம் அண்ணை அப்புக்கு குடிக்க மாட்டன் என்று சொன்னனான்''.

''இது மணவாது அதோடை பெரிசாய் வெறியாது'' என்றான் புஸ்பநாதன்.

''நவம் அண்ணைக்கு நேற்றுக் கொடுத்தனான். நவம் அண்ணை, மனிதன் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. எமக்குக் கட்டுப் பட்டது தான் மனது. நான் நிற்கும் வரை வெளிநாட்டு மதுபானத்தைக் குடியுங்கோ. நான் போனாப் பிறகு விடுங்கோ'' என்றான் குகவேள்.

''எடுத்துக் குடி நவம்'' என்றான் புஸ்பநாதன்.

கண்ணாடிப் பாத்திரத்தில் ஊற்றிய மதுபானத்தைப் பார்த்தான் நவராசா. அவனுக்கு ஆசையாக இருந்தது. மனதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அதை எடுத்துக் குடித்தான். மீண்டும் ஒரு முறை மதுபானத்தை ஊற்றிக் குடித்து விட்டு சாப்பிட உட்கார்ந்தான் நவராசா.

அவர்கள் குடித்துக் கொண்டு இருக்கும் போது இலட்சுமி வந்து விட்டாள். அவள் இருவருக்கும் உணவு பரிமாறினாள். கறிகள் மிகவும் சுவையாக இருந்தன. சாப்பிட்டவாறு உணவு பரிமாறும் இலட்சுமியைப் பார்த்தான் நவராசா. வெளிநாட்டு உடையில் ஓர் அபூர்வ தேவதையாகத் தோன்றினாள் அவள். நவராசாவின் மனதுள் அனலாக மறைந்திருந்த உணர்வுகள் மெதுவாக கிளர்ந்து எழுந்தன. அவளின் அழகான முகத்தைப் பார்க்க வேண்டும் என்று மனம் அடிக்கடி பரபரத்தது.

''குடிக்க மாட்டன் என்று சத்தியம் பண்ணி விட்டு குடித்திருக்கிறீர்கள். அத்துடன் நல்ல முறையில் வாழும் நவராசா அண்ணையையும் கெடுக்கிறியள். கதிரேசு அப்பு அறிந்தால் என்ன சொல்லுவர். நீங்கள் கெடுறது மில்லாமல் அடுத்தவரையும் கெடுக்கிறியள்'' என்றாள் இலட்சுமி.

புஸ்பநாதன் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் இருந்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். நவராசாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது; ''குடித்தால் தான் கேவலமான எண்ணங்கள் மனதில் எழுகின்றன. குடிக்காமல் விட்டிருக்கலாம். கதிரேசன் சொல்வார்; ''ஒருவன் மற்றவர்களை

ஏமாற்றலாம். தன்னைத் தான் ஏமாற்ற முடியாது. தன்னைத் தான் ஏமாற்றுபவன் பைத்தியக் காரன். உனது மனதிற்குப் பிழையானது என்று தெரிந்தால் அதைச் செய்யாது விட்டு விடுவது தான் நன்மையைத் தரும். ஒரு செயலை மறைப்பதற்கு நீ பல தந்திரங்களைப் பிரயோகித்து அதில் வெற்றியும் காணலாம். ஆனால் உன்னிடம் அதை எப்படி மறைப்பாய்'' நவராசாவுக்குத் தலையைச் சுற்றியது. எழுந்து கையைக் கழுவினான்.

''உன்னுடைய விசர்க்கதையாலை நவம் சாப்பிடாமல் எழுந்து விட்டான். சாப்பிடும் போது தேவையில்லாத கதைகள் கதைக்கக் கூடாதென்று உனக்கு எத்தனை தடவைகள் சொன்னாலும் விளங்குவதில்லை'' என்று கோபித்தான் புஸ்பநாதன்.

நவராசா வீட்டுக்கு வந்து நன்றாகக் குளித்தான். அவனது தலை வலித்தது. சிறிது நேரம் வீட்டில் இருந்தான். அவனது மனம் அல்லற்பட்டது. அதனால் எழுந்து கோயிலுக்குச் சென்றான். அரசமர நிழலில் சுவாமியார் இருந்தார். நாலைந்து தினங்களாக உணவின்றிப் படுத்திருந்த சுவாமியார் அன்று காலை எழுந்து குளித்து விட்டு மகா கணபதியை வணங்கினார். பின் சென்று அரசமரநிழலில் அமர்ந்தார். அவர் அன்று காலையும் உணவு உண்ணவில்லை.

நவராசா சுவாமியாரின் அருகில் சென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான்; ''சுவாமி என்னால் துன்பங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை உலகின் மீது வெறுப்பாக இருக்கிறது.

'' இந்த வயதில் உனக்கு அப்படி என்ன துன்பங்கள் வந்து விட்டன. உலகை இந்த வயதில் நீ வெறுக்கலாமா..? ஒரு பொருளின் தேவை ஒருவனுக்கு இருந்த போதும் அதை ஆசைப்படாது ஒதுக்குவது தான் பற்றறுத்தல். உனக்கு வாழ வேண்டிய தேவை இருக்கு. அதை நீ வெறுப்பது பற்றறுத்தல் அல்ல. விரக்தி, கவலை, துன்பம் என்று தான் சொல்ல வேண்டும் தீயவற்றின் மீதும், எமக்குக் கிடைக்காத பொருட்கள் மீதும் அவாப் பட்டால் விரக்தி, துன்பம், கவலை என்பன ஏற்பட்டு உலகை வெறுக்கச் செய்யும். அவற்றின் மீத அவாப்படாதே. துயரங்கள் ,துன்பங்கள், கவலைகள் இல்லாத வாழ்க்கை இந்தப் பூவுலகில் எங்கும் இல்லை. உனது பேரனாரின் விருப்பப்படி வாசுகியை மணம் செய். எல்லாத் துயரமும் பறந்து விடும். மகா கணபதியில் நம்பிக்கை வை. உலக வாழ்வு இனிக்கும்'' என்றார் சுவாமியார். நவராசாவின் மனதில் திடம் ஏற்பட்டது.

365. அற்றவர் என்பார் அவாஅற்றார்; மற்றையார்
அற்றாக அற்றது இலர்.

பற்றற்றவர் என்று கூறப்படுபவர் அவா இல்லாதவரே; அவா உள்ளவர், பற்றற்றவர் அல்லர்.

# கெடுப்பது

அன்று முழுவதற்காக எண்ணெய் வைத்தான் கனகசபாபதி. கடந்த ஒரு மாத காலமாக அவன் மரக்கறி வகைகளை உண்டு வந்தான். சாராயத்தை அவன் குடிப்பதில்லை. கிருஸ்ணன் தான் திருந்தி விட்டதாகக் கூறிய போதும் அவனுக்குப் போதிய வருமானம் வருவதில்லை. கமம் செய்து வந்தான். அதை அவன் ஊக்கத்துடன் செய்வதில்லை. காலையில் எழுந்து சென்று மகா கணபதி கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்வான். பின் தோட்ட வேலைகளுக்குச் சென்று விடுவான். கடந்த பல நாட்களாக அவன் மாமிசம் உண்ணவில்லை; மதுபான வகைகளைக் குடிக்கவில்லை. அடிக்கடி அவனது உடல் வலித்தது.

அன்று மாலை அவன் தோட்டத்தால் வேலை முடிந்து வரும் போது கனகசபாபதியை வழியில் கண்டான். அவனுக்குக் கனகசபாபதியுடன் கதைக்க விருப்பமில்லை. அதனால் தலையைக் குனிந்த படி சென்றான்.

‘‘எங்கை ஓடுறாய், நின்று கொள். அன்றைக்கு நான் சரியாய் பயந்து போனன். அதாலை தான் உண்மையை ஒப்புக் கொண்டனான். நினைத்துப் பார்த்தால் அந்த வாழ்க்கை வெறுத்துப் போய் விட்டது. நெடுக ஒரே சண்டையும் சச்சரவும் தான். நீ என்னைக் கோவிக்காதை. நான் இப்ப திருந்தி விட்டன். நீயும் திருந்தி விட்டாய். இனி மேல் நான் கெட்ட காரியங்களிலை ஈடுபட மாட்டன். நீ மனஸ்தாபப் படாமல் வீட்டை வா. வீட்டு வேலைகளைச் செய். இந்தா இதிலை நூறு ரூபா இருக்கு வைத்துக் கொள்’’ என்று கூறி நூறுரூபாவை எடுத்து நீட்டினான் கனகசபாபதி.

‘‘எனக்கு வேண்டாம். உந்த அற்ப ஆசைகளாலை தான் நாங்கள் தீமையைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனக்கு வேண்டாம்’’ என்றான் கிருஸ்ணன்.

‘‘பொல்லாத மானஸ்தன் நீ. இதைப் பிடி’’ என்ற கனகசபாபதி அவன் அப்பணத்தை வாங்காததால் அவனது இடுப்பினுள் செருகினான்.

‘‘வேண்டாம் என்றால் கொண்டு போறத்தை விட்டு விட்டு இடுப்பிலை ஏன் செருகினனீங்கள்’’.கோபித்தான் கிருஸ்ணன்.

‘‘உமக்கு இப்ப கோபம் வருது. இப்ப நான் திருந்தி விட்டன். இனித் தாற பொருட்களெல்லாம் தான தருமம் என்று நினைத்துக் கொள்’’ என்று சொல்லி விட்டு நடந்தான் கனகசபாபதி.

அன்று கிருஸ்ணனது மூத்தமகனுக்கு மருந்து வாங்க வேண்டும். இரண்டு நாட்களாக காய்ச்சல் அவனுக்குக் கடுமையாகக் காய்ந்தது. கிராமத்தில் இருந்த வைத்தியரிடம் காட்டியும் சுகம் வரவில்லை. அதனால் பட்டணத்தில்

உள்ள ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும். அங்கு செல்வதானால் முன்நூறு ரூபாவாவது வேண்டும். என்ன செய்யலா மென்று யோசித்தான் கிருஸ்ணன்.

தனபாலனிடம் சென்றான். அவன் தன்னிடம் பணம் இல்லை யென்று சொன்னான். புஸ்பநாதன் மைத்துனனின் திருமண விடயமாக ஓடித் திரிவதால் அவனைச் சந்திக்க முடியவில்லை. கவலையோடு வீட்டுக்கு வந்தான். வழியில் கனகசபாபதி வந்தான்.

''என்ன கிருஸ்ணா முகம் வாடி இருக்கு ஏதாவது சுகமில்லையோ?''

''மகனுக்குச் சுகமில்லை பட்டணத்து ஆஸ்பத்திரிக்குப் போக வேணும். காசில்லை. புஸ்பநாதனிடம் போனான். அவனைக் காணவில்லை'' கிருஸ்ணனது குரல் கரகரத்தது.

''இந்தா பிடி'' என்று கனகசபாபதி ஆயிரம் ரூபாத்தாள் ஒன்றை நீட்டினான். கிருஸ்ணன் அதிர்ந்து போனான். முன்பு கனகசபாபதி சொல்லும் கள்ள வேலைகளைச் செய்தாலே இவ்வளவு பணம் தர மாட்டான்; '' பிடியடாப்பா, நான் முந்தின மாதிரி இல்லை. சின்னத்தம்பிக்கும் அருள்நேனுக்கும் உள்ள பிரச்சினைக ளெல்லாம் தீர்த்திட்டன். அதுக்குப் பிறகும் உனக்கு நம்பிக்கை இல்லையே''.

கிருஸ்ணன் பணத்தை வாங்கினான். கனகசபாபதியின் முகத்தைப் பார்த்தான்; ''பிறகு வீட்டை வா'' என்றான் கனகசபாபதி.

கனகசபாபதியின் உடலெங்கும் நல்லெண்ணையைப் பூசிய கிருஸ்ணன் அவனது உடலை நன்கு பிடித்து விட்டான். முன்பென்றால் எண்ணெய் தேய்க்கும் போது இருவரும் சாராயம் குடிப்பார்கள்.

''கிருஸ்ணா எண்ணெய் தேய்த்தால் சாராயம் கொஞ்சம் குடிக்க வேணும். பல வருடங்களாகக் குடித்தனாங்கள். இப்ப விட்டவுடனை கைகாலெல்லாம் பிடிக்குது உடலெல்லாம் புண்ணாக நோகுது. கடைசி முழுகிற நேரமெண்டாலும் கொஞ்சம் குடிக்க வேணும். நீ போய் வாங்கி வா''.

''நான் சத்தியம் பண்ணிப் போட்டன்'' நடுங்கினான் கிருஸ்ணன்.

''எட, உன்னைக் குடிக்கச் சொல்லிச் சொன்னனானே.... நான் கொஞ்சம் குடிக்கப் போறன். நீ யாருக்கும் சொல்லிப் போடாதை. முக்கியமாய் சகுந்தலைக்கும் ஆதிக்கும் தெரியக் கூடாது. வெள்ளைச் சாராயம் வாங்கியா. அது சரியான விலை. ஆனால் மணக்காது'' என்றான் கனகசபாபதி.

கிருஸ்ணன் தயங்கினான்; ''இந்தா இதிலை நூறுரூபா இருக்கு. இது உனக்கு பிரச்சினை இல்லை. பயப்படாமல் போ. ஊருக்கை வாங்கிறது

பிரச்சினையென்றால் பட்டணத்திலை போய் வாங்கி வா. பட்டணத்திற்குப் போனால் கோழிப் பொரியலும் வாங்கி வா'' என்றான் கனகசபாபதி.

வேறு வழியின்றி பணத்தை வாங்கிக் கொண்டு சென்றான் கிருஸ்ணன். அன்று சகுந்தலை ஆதித்தியனின் வீட்டுக்குச் சென்று விட்டான். மறுநாள் வருணனும் பூரணியும் பயணம் செய்ய விருந்ததால் அன்றும் மறு நாளும் அவளுக்கும் களகசபாபதிக்கும் ஆதித்தியனின் வீட்டிலேயே சாப்பாடு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

சாராயத்தைக் குடித்த கனகசபாபதி கோழிக்காலை எடுத்துக் கடித்தான். வெகு நாட்களுக்குப் பின் அன்று தான் சாப்பிட்ட மாதிரி இருந்தது.

''கனக்கக் குடியாதைங்கோ ஆதித்தியன் ஐயா வீட்டை போறியள். குடித்தது தெரிந்தால் நான் தான் வாங்கி வந்து தந்ததாக நினைப்பினை'' என்றான் கிருஸ்ணன்.

''நீயும் கொஞ்சம் குடித்துப் பாரன்''

கிருஸ்ணனுக்குச் சாராயத்தைக் கண்டதும் நாவில் நீர் ஊறியது பல நாட்களாகக் குடிக்காததால் குடிக்க வேண்டும் என்ற ஆசை மனதில் எழுந்தது. அதைச் சிரமப் பட்டு அடக்கினான்.

'' ஆசைகளை விட்டுட்டன் என்று சொன்னாப் போலை மனம் கேட்குமே. ஒரு ஆசையைக் கூட விட முடியாமல் இருக்கு. சுவாமியார் எப்படித்தான் வாழ்கிறாரோ தெரியவில்லை. அவரைத் தான் விடு தணிகாசலம் எப்படி வாழுறான். அவனுக்கு ஆசைகள் எதுவும் இல்லாமல் இருக்கே.''

கிருஸ்ணன் எதுவும் பேசவில்லை. மனதில் எழுந்த உணர்வுகளை அடக்கக் கஷ்டப்பட்டான். அன்று சுவாமியார் கூறியது அவனது காதில் ஒலித்தது; ஒருவன் அவாப்படாமல் வாழ்வது தான் அறம். அவாவானது ஒருவன் பலவீனமாக இருக்கும் போது அவனைத் தன் பக்கம் இழுத்து விடும். ஒருவனை வஞ்சித்து அவன் இன்பம் அடைவதில் இருந்து கெடுப்பது அவா தான். எனவே அவாவுக்கு அஞ்சி வாழுங்கள். அவாப்படாதவனுக்குத் துன்பமில்லை. என்நாளும் இன்பமான வீடு பேற்றை அவன் அடைவான். அவாவை அறுக்க வேண்டுமானால், அவாப்படும் பொருட்களின் மீதுள்ள ஆசையை நீக்க வேண்டும். உதாரணமாக மதுபானம் குடிக்க வேண்டும் என்ற அவா மனதுள் எழுந்தால் அவன் மதுபானம் உள்ள இடங்களுக்குச் செல்லுதல் ஆகாது. தீயவற்றைக் கண்டால் மனம் தீதாக மாறி விடும். எனவே தீயவற்றின் பக்கம் செல்லாதீர்கள். தீயவர்களுடன் சேராதீர்கள். கட்டாயப் படுத்தித்தான் தீய எண்ணங்களைப் போக்க முடியும். இதற்காக நீங்கள் நல்லவர்களோடு நட்புக் கொள்ளுங்கள். நல்லவனாக இருக்கக் கடும் முயற்சி செய்யுங்கள். காலப் போக்கில் கெட்ட எண்ணங்கள் யாவும் மறைந்து விடும். இது மிகவும் கடினமான செயல். குளத்தில் நீந்தும் ஒருவன் தண்ணீரைக் குடிக்காது விடமாட்டான். அதே போல் உலகில் வாழும் உயிர்கள் தம்மையறியாமல் தீய செயல்களில் ஈடுபடுகின்றன. ஆசைகள்

இருக்கும் வரை பிறவிக்கு முடிவில்லை. ஒரு சிறிய ஆசை கூட மனதில் இருந்தால் அது துன்பத்தைத் தான் தரும். எனவே பலவீனனான நீ, உனக்குத் துன்பம் வருமென்று கண்டால் அவ்விடத்தை விட்டுச் சென்று விடு... சென்று விடு'' சுவாமியார் அருகில் இருந்து பெரும் சத்தத்துடன் சொல்வது போல இருந்தது. கிருஸ்ணன் அவ்விடத்தை விட்டு ஓடினான். விரைவாக ஓடினான்.

366. அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

ஒருவன் அவாவிற்கு அஞ்சி வாழ்வது தான் அறமாகும். ஏன் எனில் ஒருவனைக் கெடுத்து வஞ்சிப்பது அவாவேயாகும்.

## நல்ல செயல்

கிருஸ்ணன் பாலசிங்கத்தின் கடைக்கு முன்னால் வந்து வேப்பமரநிழலில் அமர்ந்தான். வேகமாக ஓடி வரும் போது கனகசபாபதி அவனைக் கூப்பிட்டார்; ''கிருஸ்ணா எங்கையடா ஓடுகிறாய். நீ சாராயம் குடிக்க வேண்டாம் நில். எனக்குத் துணையாக வந்திரு. நீ குடிக்க வேண்டாம் நான் உன்னை வற்புறுத்த மாட்டேன். வாடாப்பா... என்னால் முடியாமல் இருக்கு''.

கிருஸ்ணன் முன்னைய விடவேகமாக ஓடினான். சுவாமியாரின் வார்த்தைகள் அவனைத் துரத்தின. அவன் வேகமாக ஓடி வந்து வேப்ப மரநிழலில் இருந்து சற்று நேரம் இளைப்பாறினான். அவனுக்கு மேல் மூச்சு வாங்கியது. ஒரு கணம் தன்னை நினைத்துப் பார்த்தான். அவனுக்குத் துக்கமாக இருந்தது. வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டங்கள்களை அவன் அனுபவித்து விட்டான். எல்லாம் நான் செய்த தீய செயல்களால் தான் வந்தவை. முன்பிருந்தே நான் குடிக்காது விட்டிருந்தால் பெரும்பணக்காரனாய் இருந்திருப்பேன்; ''மகனே குடிதான் குடியைக் கெடுப்பது. உனது உழைப்பு முழுவதையும் அழிப்பது குடிதான். நினைத்துப் பார் ஒரு நாளைக்கு நீ எத்தனை காசிற்குக் குடிக்கிறாய். ஒரு மாதத்திற்கு எவ்வளவு குடிப்பாய். அப்படியானால் வருடத்திற்கு எவ்வளவு காசைக் குடித்தழித்திருப்பாய். எனக்குத் தெரிந்தவரை நீ இருபது வருடங்களுக்கு மேலாகக் குடிக்கிறாய். கணக்கிட்டுப் பார்த்தால் பத்து இலட்சரூபாவுக்கு மேல் நீ குடித்தழித்திருப்பாய். அந்தப் பத்து இலட்சத்தையும் நீ சேமித்திருந்தால் நீ இன்று ஒரு பெரிய பணக்காரன் உன்னுடைய பிள்ளைகள் எல்லாம் நல்ல நிலைக்கு வந்திருக்கும். அத்துடன் குடிப்பவர்களுக்கு பலவிதமான நோய்களும் வந்து சேர்ந்து விடும். எனவே குடியைக் கைவிட்டு விட்டு மனிதனாக வாழ்'' என்று கதிரேசன் அடிக்கடி கூறுவ அவனது ஞாபகத்திற்கு வந்தது.

வேப்பமரத்தின் குளிர்மையும், அங்கு வீசிய குளிர்ந்த காற்றும் கிருஸ்ணனுக்கு இதமாக இருந்தது. அதனால் மடிக்குள் இருந்த சுருட்டை

எடுத்துப் பற்ற வைத்து விட்டு சிறிது நேரம் அமர்ந்திருந்தான். அப்பொழுது அங்கே தில்லைநடராசா வந்தார். கிருஸ்ணன் அவரைக் காணாதது போல் மறுபக்கம் திரும்பினான். கிருஸ்ணன் கனகசபாபதியின் வீட்டிலிருந்து பையுடன் புறப்பட்டுச் சென்றதைத் தில்லைநடராசா அவதானித்தார். அதை அவர் பெரிது படுத்தவில்லை. அதன் பின் அவனை அவதானித்தார். அவன் பட்டணப் பக்கமாகச் சென்றான். தில்லைநடராசா வீட்டுக்குச் சென்று மாடுகளுக்குத் தண்ணீர் வைத்து விட்டு வந்து சந்தியில் இருந்த கடையொன்றில் நின்றார். கிருஸ்ணன் பட்டணத்தில் இருந்து வந்து கொண்டிருந்தான். பையில் பொருட்கள் பல இருப்பதைப் போல இருந்தது. அவனுக்குப் பின்னால் சென்று பார்த்தார். கிருஸ்ணன் கனகசபாபதியின் வீட்டுக்குச் செல்வதைக் கண்டார்.

அவரின் மனதில் சந்தேகம் எழுந்தது; ‘‘இன்று வீட்டில் சகுந்தலை இல்லை. கனகசபாபதி கிருஸ்ணனைக் கொண்டு சாராயம் வாங்கியிருப்பாரோ..?’’ என்று நினைத்தான். எவ்வளவு தான் கனகசபாபதி தான் மாறி விட்டதாகக் கூறிய போதும் தில்லைநடராசா அதை நம்பவில்லை. கெட்டவர்கள் சமயத்திற்கேற்ற வகையில் நடிக்கக் கற்றவர்கள் தமது காரியம் பார்ப்பதற்காக அவர்கள் சமயத்திற்கு நல்லவர்கள் போல் நடிப்பார்கள். தமது காரியம் முடிந்ததும் பழைய நிலைக்குத் திரும்பி விடுவார்கள் என்று நினைத்தான் தில்லைநடராசா.

சுருட்டுப் புகைத்தபடி வேப்பமரநிழலில் அமர்ந்திருந்த கிருஸ்ணனின் அருகில் சென்றார் தில்லை நடராசா. அவரைக் கண்டதும் கிருஸ்ணன் வாயில் இருந்த சுருட்டை எடுத்துத் தூர வீசி விட்டு எழுந்தான்; ‘‘கிருஸ்ணா காலமை கனகசபாபதிக்குச் சாராயம் வாங்கத் தானே பட்டணத்திற்குப் போனனீ’’.

கிருஸ்ணன் திகைத்துப் போனான். அவனது உடல் வியர்த்து உதடுகள் துடித்த போதும் வார்த்தைகள் வெளியே வரவில்லை; ‘‘யாரும் காணாதவாறு தானே நான் பட்டணத்திற்குச் சென்றனான். அது எப்படி இவருக்குத் தெரிய வந்தது?’’.

‘‘என்ன களவு அகப்பட்டு விட்டது என்று பயப்படுகிறாயா. ஒருவன் எப்படித்தான் தீய செயல்களை மறைத்துச் செய்தாலும் அவை வெளி வந்து விடும். அவன் குடித்தால் எனக்கென்ன என்று நான் விட முடியாது. அவனுடைய வீட்டில் எனது நண்பனைச் சம்பந்தம் செய்யச் சொன்னதால் தினமும் எனக்குப் பல பிரச்சினைகள் வருகின்றன. இனி அவன் குடிக்க மாட்டான் என்று நினைத்தேன். அவன் மீண்டும் குடிக்கிறான். என்பதை இன்று அறிந்து கொண்டேன். அவன் குடித்தால் ஊருக்குக் கூடாது. அவனோடு சேர்ந்து நீயும் குடித்தால் பழையபடி ஊருக்குள் பிரச்சினைகள் உருவாகி விடும்’’ என்றார் தில்லை நடராசா கோபமாக.

‘‘நான் என்ன அண்ணை செய்கிறது. அவனோடு சேரக் கூடாது. என்று தான் நினைக்கிறான். ஆனால் முடியாமல் இருக்கு. போனவாரம் எனது மகன்

கடும் சுகவீனமுற்று விட்டான். ஊருக்கை உள்ள எல்லாரிடமும் காசு கேட்டுப் பார்த்தன். ஒருத்தரும் தரேல்லை. கடைசியாய் கனகசபாபதி தான் தந்தது. அவர் காசு தராவிட்டால் என்னுடைய மகன் சில சமயம் இறந்தும் இருப்பன்'' அழுதான் கிருஸ்ணன்.

தில்லைநடராசா சிலகணங்கள் பேசவில்லை. யோசித்துக் கொண்டு நின்றார்; ''தீயவர்கள் சமயம் பார்த்துத் தான் உதவி செய்வார்கள். பின் அவ்வுதவிக்காக உன்னைத் தகாத செயல்களில் ஈடுபடுமாறு வற்புறுத்துவார்கள். நீ என்னிடம் வந்திருந்தால் நான் தந்திருப்பேன். உயிர் போவதாக இருந்தால்க் கூட தீயவர்களிடம் நாம் உதவி கோரிச் செல்லக் கூடாது'' என்றார் தில்லை நடராசா.

''உங்களிடம் பணம் கேட்டு வர எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இண்டைக்கு நான் கனகசபாபதிக்குச் சாராயம் வாங்கி வந்து கொடுத்தனானே தவிர நான் குடிக்கவில்லை. அவர் என்னை குடிக்கச் சொல்லி வற்புறுத்திய தாலை தான் நான் ஓடியந்தனான். அவரைத் திருத்த முடியாது என்று நான் நினைக்கிறன். பட்டணத்திலை உள்ள ஒரு கடையிலை பொரித்த முழுக் கோழியொன்று வாங்கியரச் சொன்னவர். அதை நான் வாங்கி வந்து கொடுத்தனான்''.

பெருமூச்சு விட்டார் தில்லைநடராசா; ''உண்மையாக நீ குடிக்கவில்லையா..?''

''இல்லை அண்ணை, நான் குடிக்க மாட்டன். தீய பொருட்களைக் கண்டால் விலகிச் செல். என்று சுவாமியார் சொன்னதை வேத வாக்காய்க் கருதி ஓடியந்திட்டன். இனிமேல் எனக்கு கஷ்டம் வாற வேளைகளிலை நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். அதோடை உங்கடை தோட்டத்திலை வேலை செய்யவும் எனக்கு அனுமதி தரவேண்டும். தீய பழக்கங்களைப் பழகியவர்கள் நல்லவர்களோடு சேர்ந்தால் தான் தமது தீய பழக்கங்களைக் கைவிடுவார்கள். சாராயத்தைக் கண்டதும் எனது மனம் அவாப்பட்டது. இன்னும் சில நிமிடங்கள் அங்கிருந்தால் நான் குடித்திருப்பேன்'' என்றான் கிருஸ்ணன்.

தில்லைநடராசா மனதுக்குள் திட்ட மொன்றை வகுத்தார். பின் கிருஸ்ணனைக் கூட்டிக் கொண்டு ஆதித்தியனின் வீட்டுக்குச் சென்றார். கிருஸ்ணன் ஆதித்தியனின் வீட்டுக்குப் பின்னால் இருந்த மாட்டுத் தொழுவத்துள் நின்றான். தில்லைநடராசா நடந்த சம்பவங்கள் அனைத்தையும் வருணனுக்குக் கூறி விட்டு அவனை மாட்டுத் தொழுவத்திற்கு அழைத்து வந்தார்.

''வருணா, நீ என்னை மதிப்பவன் அதனால் தான் யாவற்றையும் ஒளிவு மறைவின்றிச் சொன்னேன். இதை நீ யாருக்கும் சொல்ல வேண்டாம். தயவு செய்து கிருஸ்ணனுக்கு ஏதாவது உதவி செய். நான் ஆதித்தியனிடம் சொல்லி வீட்டு வேலைகளையும் மாடுகளைப் பராமரிக்கும் வேலையையும்

பெற்றுக் கொடுக்கிறேன். அவன் நல்லவனாக வாழ விரும்புகிறான். அதற்கு நாம் உதவி செய்தல் வேண்டும்'' என்றார்.

''உங்களுக்கு நான் இப்பொழுது ஐயாயிரம்ரூபா தருகிறேன். மாதம் மாதம் உங்களின் பிள்ளைகளின் செலவுக்காக ஐயாயிரம் ரூபா தில்லைமாமாவுக்கு அனுப்புகிறேன். நீங்கள் குடித்ததாக அறிந்தால் பின் பணம் அனுப்பமாட்டேன். அத்துடன் எனது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் துணையாக வீட்டில் இருங்கள். அதற்கு அவர்கள் சம்பளம் தருவார்கள்'' என்றான் வருணன்.

கிருஸ்ணனுக்கு மயக்கம் வருவதைப் போல இருந்தது. சுவாமியார் அன்று அவன் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்த போது கூறிய வார்த்தைகள் அவனின் காதில் ஒலித்தன; ''ஒருவன் அவா முழுவதையும் ஒழித்தால் அவன் இன்பமாக வாழ்வதற்குரிய நன்மைகள் பலவும் வந்து சேரும்; சுவாமியாரின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை. இனிமேல் நான் தீய செயல்களில் ஈடுபட மாட்டேன்'' என்று நினைத்தான் கிருஸ்ணன்.

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

ஒருவன் அவாவை ஒழித்தால், அவன் இன்பமாக வாழ்வதற்கு உரிய எல்லா நன்மைகளும் அவன் விரும்பியவாறு வந்தடையும்.

## ஒழியாமல் வரும்

கனகசபாபதியின் வீட்டு வேலைகள் செய்பவள் தேவிகா. தேவிகா நல்ல அழகி. கனகசபாபதியின் வீட்டில் பரம்பரையாக வேலை செய்யும் கணபதிப்பிள்ளையின் மகள் சிறுவயதில் இருந்து அந்த வீட்டுக்கு தகப்பனுடன் அவள் வந்து செல்வாள் நல்ல அழகி. அவளின் அழகில் மயங்கிய கனகசபாபதி அவளோடு சிரித்துக் கதைப்பான். தீய பழக்கங்கள் பல இருக்கும் கனகசபாபதி அவளுடன் சிரித்துக் கதைப்பது சகுந்தலைக்குப் பிடிப்பதில்லை. அதனால் ஒரு நாள் அவள் தேவிகாவுக்குச் சொன்னாள்; ''நீ திருமணமானவள். என்றாலும் இளம் பெண். நான் உன்னைத் தப்பாக நினைக்கவில்லை. ஆனால் எனது கணவர் குடிகாரர் பல தீமைகளை ஆராயாது செய்பவர். சமீப காலமாக அவர் உன்னுடன் சிரித்துப் பேசுகிறார். அது நல்லதற்கல்ல என்றே நான் நினைக்கிறேன். தயவு செய்து நீ அவதானமாக இரு. அவருடன் தேவையில்லாமல் கதைக்காதே''.

தேவிகா பதறிப் போனாள்; ''நான் இங்கு வேலை செய்பவள். நான் ஒரு போதும் அவருடன் வலியச் சென்று கதைத்ததில்லை. அவர் தான் ஒவ்வொரு வேலையையும் சொல்லிக் கொண்டு என்னைத் தேடி வருவார். நாங்கள் மானமுள்ளவர்கள். தொழிலுக்காக இங்கே வருகிறேனே தவிர, ஆட்களை

மயக்கி பணம் சம்பாதிக்க வரவில்லை. நீங்கள் சந்தேகித்தால் நான் இன்று முதல் இங்கு வேலைக்கு வராமல் விடுகிறேன்'' என்றார்.

''நான் அப்படி நினைக்கவில்லை அவர் பொல்லாதவர் கவனமாக நடந்து கொள் என்று சொன்னேன்'' என்றாள்.

அதன் பின் தேவிகாவுக்கு அங்கே வேலை செய்ய விருப்பமில்லை. சகுந்தலையின் வற்புறுத்தலுக்காக வந்தாள். அவள் ஒரு நாள் வேலைக்கு வராவிட்டால் சகுந்தலை அவளைத் தேடி வந்து விடுவாள்.

கிருஸ்ணன் வாங்கி வந்து கொடுத்த சாராயம் முழுவதையும் கனகசபாபதி குடித்து விட்டுப் பொரித்த கோழி முழுவதையும் உண்டான். ஆரம்பத்தில் கொஞ்சம் குடிப்போம் என்று நினைத்த கனகசபாபதி குடிக்கத் தொடங்கியதும் அதை மறந்து விட்டான். அரைப் போத்தல் சாராயத்தைக் குடித்து விட்டு நன்றாகத் தோய்த்திருந்தான். ஒரு மாதத்திற்குப் பின் அன்று தான் எண்ணெய் வைத்துத் தோய்ந்ததைப் போல் இருந்தது. தோய்ந்து விட்டு வந்து மிகுதியாக இருந்த சாராயத்தைக் குடித்தான். அப்பொழுது தேவிகா அங்கே வந்தாள். அன்று சனிக்கிழமையாதலால் முழுகியிருந்தாள். அதனால் அவளது தலை முடி காற்றில் பறந்தது. அன்ன நடை பயின்று வரும் ஒரு தேவதையைப் போல கனகசபாபதிக்கு அவள் தோற்றமளித்தாள்.

''தேவிகா.... இஞ்சை வா. இப்ப என்னுடைய காணி பூமி, காசு பணம் எல்லாவற்றையும் நான் தானதர்மம் பண்ணப் போறன். உன்ரை கொப்பர் முப்பது நாற்பது வரிசம் இஞ்சை வேலை செய்தவர். நீயும் சின்ன வயதில் இருந்தே வேலை செய்கிறாய். அதனால் உனக்குத் தான் என்னுடைய பெரும் சொத்துச் சேரவேண்டும்...''.

தேவிகா நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்கள் சிவந்திருந்தன. மேசையில் சாராயப் போத்தல் சரிந்து கிடந்தது; ''என்ன பார்க்கிறாய். நான் குடிச்சிட்டன் என்று நினைக்கிறியா. என்ன தான் தத்துவம் பேசினாலும் என்னாலை ஆசைகளைத் துறக்க முடியவில்லை. உன்னிலையும் நெடுநாளாய் எனக்கு ஆசை....'' கனகசபாபதி சொல்லியவாறு தேவிகாவுக்கு அருகே வந்தான். அவனின் எண்ணம் என்ன வென்று தேவிகாவுக்குப் புரிந்தது. மெதுவாக விலகி ஓடினாள்.

''தேவிகா ஓடாதை நில்...'' கனகசபாபதி பலத்துச் சொன்னான். தேவிகா விரைவாக ஓடிச் சென்றாள். அது கனகசபாபதிக்குக் கவலையைக் கொடுத்தது. சகுந்தலை இல்லாத நேரத்தில் அவளின் மீதிருந்த ஆசையைத் தீர்க்க முடியவில்லையே என்று நினைத்தான். நேரம் செல்லச் செல்ல நடப்பது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை.

நான்குமணியாகியும் கனகசபாபதி சாப்பிட வராததால் சகுந்தலையும் ஆதித்தியனும் அவனைத் தேடி வந்தனர். முற்றத்தில் கனகசபாபதி இரத்த வெள்ளத்தில் கிடந்தான். சகுந்தலையும் ஆதித்தியனும் எப்படி இரத்தம் வந்ததென்று புரியாமல் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

கனகசபாபதி அவசரசிகிட்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான். மூன்று தினங்கள் அவனுக்கு மயக்கம் தெளியவில்லை. நான்காம் நாள் அவன் கண்விழித்தான். அதன் பின்பு ஐந்து தினங்கள் அவன் அவசர சிகிட்சைப் பிரிவில் தங்கியிருந்தான். ஆறாம்நாள் அவன் சிறிது குணமடைந்ததால் சாதாரண நோயாளிகள் தங்கிச் சிகிட்சை பெறும் அறைக்கு மாற்றப் பட்டான்.

அவனைப் பரிசோதித்த வைத்தியர் சொன்னார்; ‘‘நீங்கள் அளவுக்கதிகமாக மதுபானத்தை நெடுநாட்களாகக் குடித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதனால் உங்களது உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உங்களின் ஈரல் மதுபானத்தால் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. அதனால் தான் நீங்கள் இரத்தம் இரத்தமாக வாந்தி எடுத்துள்ளீர்கள். நல்ல காலம் இருந்ததால் வீட்டார் வந்து உங்களை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தனர். ஒரு சில மணித்தியாலங்கள் வீட்டார் தாமதித்து வந்திருந்தால் முற்றத்திலேயே பிணமாகி இருப்பீர்கள். இனிமேல் நீங்கள் குடிகக் கூடாது. தவறிக் குடித்தீர்களானால் அன்றே மரணமடைய வேண்டிய நிலை உருவாகும். உங்கள் உடலுக்குக் கெடுதலானவற்றை நீங்களே செய்கிறீர்கள். இதை ஒரு கற்காதவன் செய்தால் அறியாமை என்று சொல்லலாம். கற்ற நீங்கள் செய்ததை எப்படிச் சொல்வது. இனியாவது கற்றபடி நடக்க முயற்சியுங்கள். நீங்கள் குடிப்பதால் எத்தனை பேருக்குக் கரைச்சல் தெரியுமா? அன்று இரவு முழுவதும் மூன்று வைத்தியர்களும் ஐந்து தாதிமாரும் பல தொழிலாளர்களும் உங்களுக்கருகில் விடியும் வரை விழித்திருந்தார்கள். அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்று தெரியுமா...?’’.

கனகசபாபதி முனகியவாறு கட்டிலில் படுத்திருந்தான். மறுநாள் பயணம் செய்யவிருந்த வருணனும் பூரணியும் பயணம் செய்யவில்லை. அவர்கள் கனகசபாபதியின் கட்டிலின் அருகில் நின்றார்கள்; ‘‘அப்பா, நாம் மற்றவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது. மனிதனுக்கு ஆசைகள் அளவோடு இருத்தல் வேண்டும். அவாப்பட்டு அன்று அளவுக்கதிகமாகக் குடித்தமையால் தான் இந்த நிலைமை உங்களுக்கு உண்டானது. இது எங்களுக்கு எவ்வளவு மானக்கேடு. நீங்கள் குடிக்க மாட்டன் என்பதால் தான் நானும் அவரும் மாமாவும் உங்களைப் பார்க்க வந்தோம். இவ்வளவு காலமும் எமது குடும்பத்திற்கு மட்டும் தான் அவமானம் ஏற்பட்டது. இப்ப மாமாவின் குடும்பத்திற்கும் பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளது. என்னுடன் படித்த தேவிகா இனிமேல் எங்கடை வீட்டுக்கு வேலைக்கு வரமாட்டன் என்று முகத்திலை அறைந்ததைப் போலச் சொல்லி விட்டாள். உங்களிற்கு வயதிற்கேற்ற குணம் கூட இல்லையே..’’.

கனகசபாபதிக்கு வியர்த்துக் கொட்டியது. அவமானத்தால் கண்களை மூடினான் நெஞ்சு வலித்தது.

368. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அ∴துஉண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் வராது. அவா இருந்தால் எல்லாத் துன்பங்களும் மேலும் மேலும் தொடர்ந்து வரும்.

## கொடிய துன்பம்

கனகசபாபதியால் எழுந்து நடக்க முடியவில்லை. பத்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிட்சை பெற்றார். அவர் வீட்டுக்கு வரும் போது வைத்தியர் சொன்னார்; ''நீங்கள் இனிக் குடித்தால் வைத்தியசாலைக்கு வரத்தேவையில்லை. வந்தாலும் உங்களைக் காப்பாற்ற முடியாது. அந்தளவில் உங்களது உடல் பாதிக்கப்பட்டுள்ளது. உங்களது ஈரல் மதுபானத்தால் அரிக்கப்பட்டு முற்றாகக் கரைந்து விட்டது. மிகவும் அவதானமாக இருங்கள். மனிதர்கள் துன்பங்களை விலை கொடுத்து வாங்கித் தம் உடலையும் மனதையும் கெடுத்துக் கொள்கின்றனர். மதுபானம், புகையிலை, வெற்றிலை பாக்கால் உடல் கெடுகிறது. தேவையற்ற ஆசைகளால் மனம் கெடுகிறது. இவற்றைத் தவிர்த்தால் ஆரோக்கியமாக வாழலாம். கடந்த காலங்களை எணணிக் கவலைப் படுவதை விட்டு விட்டு இனியாவது ஆசைப்படாமல் ஒழுங்காக வாழுங்கள்''.

கனகசபாபதி எதுவும் சொல்லவில்லை. வீட்டுக்கு வந்தார் சகுந்தலை அவருடன் முகங் கொடுத்துப் பேசவில்லை. நேரத்திற்கு நேரம் உணவைக் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள். தேவிகாவுடன் அவன் தகாத முறையில் நடக்க முற்பட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தீய செயல்கள் யாவும் புரியும் அவர் பெண் விஷயத்திலாவது கண்ணியமாக இருப்பார் என்று எதிர்ப்பார்த்தாள். அந்த விஷயத்திலும் அவர் பலவீனமாக இருந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆடு மாடுகளுக்கு நேரத்திற்கு நேரம் தினீயும் நீரும் வைப்பதைப் போல வைத்தாள். தேவிகாவும் இப்பொழுது வேலைக்கு வருவதில்லை. அதனால் அவளுக்கு வேலைப்பழு கூடியிருந்தது. ஏற்கனவே வாதநோயால் பீடிக்கப்பட்டு நடப்பதற்குச் சிரமம்பட்ட அவளுக்கு வேலைப்பழு அதிகரித்து கவலையை அளித்தது. அதனால் தேவிகாவின் வீட்டுக்குச் சென்று அவளை வரும்படி கேட்டாள்.

''அம்மா, இந்த விஷயம் எனது கணவருக்கும் பெற்றாருக்கும் தெரியாது. எனது கணவர் வீட்டு வேலைகளுக்குப் போக வேண்டாம் என்று அடிக்கடி சொல்வார். ஆணும் பெண்ணும் ஒரு வீட்டில் வேலைக்குச் சென்றால் பிள்ளைகளின் நலன்கள் பாதிக்கப்பட்டு விடுமென்றும், பிள்ளைகள் தான் எமது செல்வம். நாம் தான் படிக்கவில்லை எமது பிள்ளைகளையாவது கற்பிக்க வேண்டும் என்பார். அதனால் வேலக்குச் செல்லாமல் விட்டது. அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. அதனால் நான் வேலைக்கு வர விரும்பவில்லை'' என்றாள்.

வேலை செய்யக் கஷ்டப்பட்ட சகுந்தலை கிருஸ்ணனின் வீட்டுக்குச் சென்றாள். அவள் சென்ற பொழுது கிருஸ்ணன் வீட்டில் இருந்தான்.

‘‘வாருங்கோ.... வாருங்கோ’’ என்று வரவேற்றான் கிருஸ்ணன்.

‘‘கிருஸ்ணா இப்போ தேவிகா வீட்டுக்கு வேலைக்கு வருவதில்லை. எனக்கு வாதநோய் இருக்கெண்டு உனக்குத் தெரியும். அதனால் வேலைகள் செய்ய முடியவில்லை. நீ அல்லது உனது மனைவி வந்தால் எனக்கு உதவியாக இருக்கும்’’.

‘‘நான் இப்பொழுது ஆதித்தியன் ஐயா வீட்டில் வேலை செய்கிறேன். அவர்கள் மிகவும் நல்லவர்கள். அங்கிருந்து வர நான் விரும்பவில்லை’’.

‘‘சம்பளம் கூடத்தரலாம்’’ என்றாள் சகுந்தலை.

‘‘கிருஸ்ணன் சிரித்தான்; ‘‘முன்பு நான் பணத்திற்கு அவாப்பட்டதாலை தான் எனக்கு இவ்வளவு துன்பங்களும் வந்தன. பணமே எனக்கு வேண்டாம். அவா என்று சொல்லப்படுகின்ற துன்பங்களுள் பொல்லாத துன்பம் ஒரு மனிதனுக்கு இல்லாமற் போய்விட்டால் அவன் எந்நாளும் இன்பமாய் வாழ்வான் என்று அடிக்கடி சுவாமியார் சொல்வார். அவர் சொல்லும் போது எனக்குச் சிரிப்புத் தான் வரும். ஆனால் அது எவ்வளவு உண்மை என்று இப்ப தான் தெரியுது. ஆசைகள் எல்லாவற்றையும் நான் ஒதுக்கின தாலை இன்பமாய் வாழ்றன்’’ என்றான்.

‘‘முன்பு போல் உனது மகளையாவது விடன்’’ கெஞ்சினாள் சகுந்தலை.

‘‘அம்மா முன்பு அறியாமையாலும், காசின் மீது கொண்ட அவாவினாலும் தான் நான் பிள்ளைகளைக் கொண்டும், மனைவியைக் கொண்டும் உழைப்பிச்சனான். அது எவ்வளவு தவறு என்று இப்பத்தான் தெரிகிறது. வரும் வருமானத்திற் கேற்றபடி அவாப்படாது வாழ்ந்தால் மகிழ்வாய் வாழலாம். பிள்ளை இப்ப ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்கிறாள். தணிகாசலம் அண்ணையின்ரை புண்ணியத்தாலை கடவுள் சுப்பிரமணியம் வாத்தியாற்ரை மகன் பிள்ளையின்ரை படிப்புக்குக் காசு தாறார். அதாலை உங்கடை வீட்டை அனுப்பினால் அவர் கோபிப்பர்’’ என்றான் கிருஸ்ணன்.

சகுந்தலை வீட்டுக்குச் சென்ற பொழுது வாசலில் மோட்டார் வாகனம் ஒன்று நின்றது. புஸ்பநாதனும் நவராசாவும் கனகசபாபதியைத் தூக்கிக் கொண்டு வந்தனர்; ‘‘நாங்கள் வீதியால் வரும் போது நெஞ்சுவலியென்று பலமாகக் கத்தினார். அதனால் தான் புஸ்பராசாவின் மோட்டார் வண்டியைப் பிடித்தந்தோம்’’ என்றான் அவளின் அடுத்த வீட்டுக்காரன்.

சகுந்தலை மோட்டார் வண்டியில் ஏறினாள்; ‘‘புஸ்பண்ணை இந்த வாகனத்தைக் குடுப்பம் நல்ல விலை கேட்கிறார்கள். இதிலும் நல்லதாக நான் எடுத்துத் தாறன்’’ என்றான் நவராசா.

‘‘வேண்டாம் வேண்டாம். இது நல்லது எனக்குப் பிடிச்சிட்டுது. இதையே வைத்திருப்பம்’’ என்றான் புஸ்பநாதன்.

‘‘வாங்கினதிலும் பார்க்க பத்தாயிரம் ரூபா கூட வாங்கித் தாறன். நான் இதைத் தொழிலாகத் தான் வைத்திருக்கிறன். ஆயிரம் வாகனம் வரும் போகும். இதில் பார்க்க எத்தனையோ நல்ல வாகனங்கள் வரும் நான் இருக்கிறன். ஏன் பயப்பிர்றியள்’’.

பத்தாயிரம் ரூபா என்றதும் புஸ்பநாதனின் மனம் மாறிவிட்டது. பத்தாயிரம் ரூபா ஒரு நாளில் வருகிறது. இதை உழைத்து மிச்சம் பிடிக்க ஆறேழு மாதம் சென்றாலும் முடியாது’’ என்று நினைத்து ஒப்புக் கொண்டான்.

கனகசபாபதியை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு புஸ்பநாதன் தனது வாகனத்தை விற்றான். அதனால் நவராசாவுக்கும் பத்தாயிரம் ரூபா இலாபமாகக் கிடைத்தது.

வீட்டுக்கு நடந்து வந்த புஸ்பநாதனிடம் இலட்சுமி கேட்டாள்; ‘‘மோட்டார் வண்டி எங்கை..?’’

‘‘பத்தாயிரம் ரூபா கூடக் கேட்டார்கள் விற்று விட்டேன். நவராசா நல்ல வாகனமாக ஒன்று எடுத்துத் தாறதாய்ச் சொன்னவன்’’.

‘‘அது நல்ல வாகனம் எங்களுக்கு நல்ல பொருத்தம். நாம் அதை வாங்கியது எமது தேவைக்காகத் தான். விற்றுப் பொருள் சம்பாதிக்க வேண்டு மென்றில்லை. நாளைக்கு அப்பா ஆஸ்பத்திரிக்குப் போற நாள். இருதய வருத்தக்காரனான அவரால் பேருந்தில் செல்ல முடியாததால்த்தான் வாகனம் வாங்கச் சொன்னவர். அறிந்தால் பேசுவார்’’.

‘‘நாளைக்கு நவராசாவின் வாகனத்தில் கொண்டு போகலாம்’’.

மறு நாள் நவராசா வேறொரு வாகனத்தை புஸ்பநாதனுக்கு வாங்கிக் கொடுத்தான். அதன் நிறமே இலட்சுமிக்குப் பிடிக்கவில்லை; ‘‘ வீட்டிலை இலட்சுமி மாதிரி இருந்த வாகனத்தைக் விற்று விட்டு பேய் மாதிரி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறியள் எனக்கெண்டால் இதைப் பிடிக்கேல்லை’’ என்றான் இலட்சுமி.

மறுநாள் வைத்தியசாலைக்குச் செல்லும் போது ஞானசேகரம் சொன்னார்; ‘‘தமபி இந்த வாகனத்தை எனக்குப் பிடிக்கவில்லை. வித்தது நல்ல வாகனம்’’ என்றார்.

நாட்கள் சில நகர்ந்தன. புதிதாக வாங்கிய வாகனம் அடிக்கடி இயங்க மறுத்தது. செல்லும் போது வழியில் நின்றது. அன்று ஞானசேகரன் தூரத்தில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றார், புறப்படும் போதே வாகனம்

இயங்க மறுத்தது. கஷ்டப்பட்டு இயங்கிய போதும் வழியில் இரண்டு தடவை நின்றது; ‘‘தம்பி, ஏன் இந்த வாகனம் அடிக்கடி நிற்கிறது. பழுதென்றால் உடன் திருத்தி விடல்வேண்டும். இரவில் ஏதாவது ஒன்று நடந்தால் எப்படிச் சொல்வது’’.

‘‘இந்த வாகனம் எனக்குப் பொருத்தமில்லை மாமா. நேற்றும் திருந்தினனான். நவராசா ஓடினால் நல்ல முறையில் செல்கிறது. நான் ஓடினால் தான் கரைச்சல் தருகிறது’’ என்றான் புஸ்பநாதன்.

பணத்திற்கு ஆசைப்பட்டால் இப்படியான கஷ்டங்களை எதிர்நோக்கத்தான் வேண்டும். வாழ்க்கையில் எல்லாம் எமக்குப் பொருத்த வேண்டும். தோட்டம் உழுற காளை மாடுகூடப் பொருந்தாவிட்டால் சரியாய் உழமாட்டுது. இடிக்கும், அதுக்கு நோய் வரும். எனவே பொருந்தியதை விற்கக் கூடாது. பணம் வரும் என்ற ஆசையாலும் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வாகனம் ஓட வேண்டும் என்ற ஆசையாலும் தான் இன்று இவ்வளவும் நடைபெற்றது’’ என்றார் ஞானசேகரன்.

புஸ்பநாதன் அந்த வாகனத்தை விற்றுத் தரும்படி நவராசாவைக் கேட்டான். பலர் வந்து பார்த்து விட்டுச் சென்றனர். அன்று வந்த ஒருவன் சொன்னான்; ‘‘இது இரண்டு பேரை மோதிக் கொன்றது. நீ ஏணன்ணை வாங்கினனீ’’.

அதிர்ந்து போனான் புஸ்பநாதன். பத்தாயிரம் ரூபாவுக்கு ஆசைப்பட்டதால் ஏற்பட்ட விபரீதத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இரண்டு மாதங்களின் பின் அந்த வாகனத்தை வாங்கியதிலும் பார்க்க இருபதினாயிரம் ரூபா குறைத்து விற்றுக் கொடுத்தான் நவராசா. புஸ்பநாதனுக்குக் கவலையாக இருந்தது. இன்னொரு வாகனத்தை வாங்கினாலும் அதுவும் கரைச்சல் கொடுத்தால் என்ன செய்வது என்ற பயம் உண்டானது.

நடந்தது நடந்து விட்டது. அதற்காகக் கவலைப்படுவதால் என்னபலன். முன்பே எல்லாவற்றையும் யோசித்திருக்க வேண்டும். துன்பங்களுள் எல்லாம் பெருந் துன்பம் அவா. நீங்கள் காசுக்கு அவாப்பட்டதால் தான் இவ்வளவும் நடந்தது. முன்பு விற்ற வாகனத்தைப் போய்க் கேட்டுப் பாருங்கள்’’ என்றாள் இலட்சுமி.

நவராசாவும் புஸ்பநாதனும் முன்பு வாகனத்தை விற்றவனிடம் சென்றனர். அவன் அதை பத்தாயிரம் ரூபா கூட வைத்து விற்று விட்டதாகச் சொன்னான். விற்றவனின் பெயரையும் விலாசத்தையும் சொன்னான். அவர்கள் அவனைத் தேடிச் சென்றனர். அவன் புஸ்பநாதன் விற்ற விலையிலும் இருபத்தையாயிரம் ரூபா கூடுதலாகச் சொன்னான். அவன் சொன்ன பணத்தைக் கொடுத்து விட்டு புஸ்பநாதன் அவ்வாகனத்தை வாங்கி வந்தான். எனினும் அதன் விலையை ஞானசேகரனுக்குச் சொல்லவில்லை. இலட்சுமிக்குச் சொன்னான்.

“பரவாயில்லை. எங்களுக்குப் பணம் தேவையில்லை. நல்ல வாகனம் தான் தேவை. இனியாவது கவனமாக இருங்கோ” என்றாள் இலட்சுமி.

அடுத்தவாரம் சிலர் புஸ்பநாதனின் வீட்டுக்கு வந்தனர். அவன் வாங்கிய விலையிலும் கூடுதலாக அவ் வாகனத்தை கேட்டனர். புஸ்பநாதன் அதை விற்க மறுத்து விட்டான்.

369. இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

அவா என்ற துன்பங்களுள் கொடிய துன்பம் இல்லாதிருந்தால் இன்பம் இடையறாது தொடர்ந்து வரும்.

## இன்பவாழ்வு

சிவகுருநாதன் கதிரேசனின் வீட்டுக்கு வந்திருந்தார். தனது பேர்த்தியை நவராசாவுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற ஆசை அவரது மனதில் நிரம்பியிருந்தது. கதிரேசன் மீது கொண்ட நட்புக் காரணமாக அவர் தனது தங்கையைக் கதிரேசனுக்குத் திருமணம் முடித்து வைக்க விரும்பினார். ஆனால் அவள் திடீரென்று பாம்பு தீண்டி இறந்தமையால் அது நிகழாது விட்டது. இருந்தும் அவர்களிடையே இருந்த உறவில் எந்தப் பிரிவும் ஏற்படவில்லை. இருவரும் இப்பொழுதும் மிகவும் நெருங்கி இருந்து உரையாடுவதைப் பார்க்கப் பதினாறு கண்கள் வேண்டும்.

இது நாள் வரை நட்பாக இருந்த கதிரேசன் அன்று சிவகுருநாதனுக்குச் சொன்னார்; “சிவகுரு எனது பேரனுக்கு உனது பேர்த்தியைத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறேன். உனக்கு விருப்ப மென்றால் சொல்லு. நவராசா எனது ஒன்றை விட்ட சகோதரனின் மகனின் மகன். அவனை உனக்குத் தெரியும். அவன் உனது மகனின் மகளைச் செய்தால் கடைசிக் காலத்திலாவது நாம் உறவினராகலாம்”.

“தற்காலப் பிள்ளைகளைப் பற்றி நான் எப்படிச் சொல்ல முடியும். தகப்பனையும் மகளையும் கேட்காமல் நான் உனக்கு முடிவைச் சொல்லி விட்டு பின் அவர்கள் ஏதாவது வித்தியாசமாகச் சொன்னால் கரைச்சல் எதற்கும் இரண்டு நாள் பொறுத்துக் கொள்” என்றார்.

இரண்டு நாட்களில் பதில் சொல்கிறேன் என்ற சிவகுருநாதன் இரண்டு மாதங்கள் கழித்து வந்திருக்கிறார். இதுவரை பல முறை அவர்கள் இருவரும் சந்தித்துப் பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடியிருக்கின்றனர். இருந்த போதும் சிவகுருநாதன் நவராசாவின் திருமணத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. கதிரேசனும் கேட்கவில்லை.

ஈஸ்வரி தேநீர் கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்தாள். சிவகுருநாதன் தேநீரை வாங்கிச் சுவைத்துக் குடித்தார்.

''என்னுடைய மகனுக்கு நவராசாவைச் செய்ய நல்ல விருப்பம். வாசுகிக்கு அவ்வளவாக விருப்பமில்லை. ஆசிரியர் பரீட்சை எழுதியிருக்கிறாளாம். அந்த மறு மொழி வந்த பிறகு தானாம் முடிவு சொல்லுவள். ஆயிரம் ஆசிரியர்களை எடுப்பதற்கு ஐம்பதினாயிரம் பேர் பரீட்சை எழுதியிருக்கினை''.

''அதுக்கும் கலியாணத்திற்கும் என்ன தொடர்பு..'' கதிரேசன் கேட்டார்.

வாசுகி அன்று சொன்னது அவரின் காதில் எதிரொலித்தது; '' அப்பா தோட்டம் செய்து பட்ட கஷ்டங்கள் காணும் நான் ஆசிரியர் பரீட்சை எழுதியிருக்கிறன். அந்த மறுமாழி வரட்டும். அது கிடைக்காட்டில் நான் வெளிநாட்டு மாப்பிளையைத் தான் செய்வன்.''

''வெளிநாட்டில் இருக்கும் சிவராஜசிங்கத்தின் மகன் மயூரன் ஊரில் இருக்கும் போது வாசுகிக்குப் பின்னால் திரிந்தவன். வெளிநாட்டுக்கு அவன் போன பின்பும் நாலைந்து கடிதங்கள் போட்டவன். இப்ப இரண்டு மூன்று வருடங்களாகக் கடிதத் தொடர்புகள் இல்லை. வாசுகி இடைக்கிடை தொலைத் தொடர்பு நிலையத்திற்குப் போட்டு வாறவள். ஏதாவது தொடர்பு இருக்கோ தெரியாது'' சிவகுருநாதன் நினைத்தார்.

''என்ன யோசிக்கிறியள்'' என்று கேட்டார் கதிரேசன்.

''ஒன்றுமில்லை, நீ நவராசாவின்ரை கலியாண விஷயமாக கேட்டனீ. நான் இன்னும் பதில் சொல்லேல்லை. இப்பவும் சொல்ல முடியாமல் இருக்கு'' என்றார் சிவகுருநாதன்.

தில்லை நடராசா தனது மனைவியின் மூத்த சகோதரியின் மகளுக்கு நவராசாவைத் திருமணம் பேசி வந்தார். அதைப் பற்றிக் கதிரேசன் நவராசாவைக் கேட்டார். ''யோசித்துச் சொல்லுறன்'' என்றான் நவராசா.

அன்று நவராசா புஸ்பநாதனின் வீட்டுக்குச் சென்றான். அப்பொழுது புஸ்பநாதன் அங்கு இருக்கவில்லை. இலட்சுமி தன்னை அழகாக அலங்கரித்திருந்தாள். அவள் வீட்டில் இருந்தாலும் அலங்காரப் பூச்சுக்கள் மூலம் தன்னை அலங்கரித்திருப்பாள்.

''உங்களுக்கு நாலைந்து இடங்களிலை திருமணம் பேசுவதாக அறிந்தேன். சிவகுருநாதன்ரை மோனிடம் என்ன இருக்கு…? தில்லையண்ணையும் தன்ரை மனிசீன்ரை தமக்கையின்ரை மகளைப் பேசி வந்தவராம். அவையிட்டையும் ஒன்றும் இல்லை நீங்கள் இப்ப ஒரு பெரியவர்த்தகர். சீதனமாகப் பல இலட்சங்கள் வாங்கலாம். ஏமாந்து விடாதைங்கோ'' இலட்சுமி சொன்னாள்.

''வீட்டார் தான் பேசீனை நான் இன்னும் முற்றுச் சொல்லேல்லை''.

‘‘காசை உழைச்சுச் சம்பாதிக்க முடியாது. வெளிநாட்டிலை இருக்கிறவங்களின்ரை சகோதரங்களைச் செய்தால் வசதியாக வாழலாம். என்னைச் செய்தபடியால் தான் இவர் வசதியாக வாழுறார்’’ சிரித்தாள். இலட்சுமி நவராசாவின் உடலுள் லேசான மின்சாரம் ஓடுவதைப் போல இருந்தது. அழகான பற்கள், சிவந்த உதடுகள்; ‘‘புஸ்பநாதன் அதிட்டக்காரன். அழகான மனைவி, கைநிறையக் காசு. செய்தால் இப்படியான பொம்பிளையைத் தான் செய்ய வேண்டும்’’.

‘‘என்ன இப்பவே கற்பனை பண்ணத் தொடங்கி விட்டீர்களோ? உங்களின் கலியாணப் பிரச்சினையை என்னோடை விடுங்கோ... எனது மாமாவின் மகள் ஒருத்தி இருக்கிறாள். என்னை விட அழகானவள். ஐந்து சகோதரங்கள் வெளிநாட்டிலை இருக்கு. நான் கேட்டுப் பார்க்கிறன். அவளைச் செய்தால் நீங்கள் எனக்கு நெருங்கிய சொந்தக் காரராகி விடுவீர்கள்’’.

நிமிர்ந்து இலட்சுமியைப் பார்த்தான் நவராசா. அவளது அழகான உடலைத் தழுவ வேண்டும் என்று உணர்வுகள் துடித்தன. அவளின் மாமனின் மகளைச் செய்தால் இலட்சுமியையும் பார்த்து இரசிக்கலாமென நினைத்தான் நவராசா.

தில்லை நடராசா இரண்டு மூன்று முறை வீட்டுக்கு வந்து நவராசாவின் திமணத்தைப் பற்றிக் கதைத்து விட்டுச் சென்றார். அதனால் கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார்; ‘‘தம்பீ வாசுகி ஏதோ பரீட்சை எழுதியிருக்கிறாளாம். அந்தப் பரீட்சை முடிவு வந்த பின் தொடர்ந்து படிக்கப் போறாளாம். அதனால் அந்தக் கலியாணம் சரிவராது. தில்லையின்ரை பொறாமகளைச் செய்யலாம் நீ சம்மதித்தால் கதைக்கலாம்’’.

‘‘எனக்கு விருப்பமில்லை அப்பூ நல்லகாசோடை செய்யலாம். புஸ்பநாதன்ரை சொந்தக் காரப் பெண் ஒன்றிருக்காம். கேட்டுப் பார்க்கலாம் என்று இலட்சுமி சொன்னது’’.

‘‘இலட்சுமீன்ரை குடும்பம் அவ்வளவு நல்ல தல்ல. இலட்சுமியும் ஏதோ பிரச்சினைப் பட்டதென்ற தாலை தான் புஸ்பநாதனுக்குக் கட்டிக் கொடுத்தவை. காசு பணம் இல்லைத் தம்பி வாழ்க்கை நல்ல குடும்பமாய்ப் பார்க்க வேணும். உது உனக்கு விளங்காது. காசு பணத்தையெல்லாம் எப்பொழுதும் தேடிக் கொள்ளலாம். பண்பான இடத்தைத் தேடிக் கொள்ள முடியாது. நீ அடிக்கடி புஸ்பநாதன் வீட்டுக்குப் போவது எனக்குப் பிடிப்பதில்லை. நாம் ஒழுங்காக இருந்தாலும் ஊர்ச்சனங்கள் கண்டபடி கதைக்க நாம் இடம் கொடுக்கக் கூடாது’’ என்றார் கதிரேசன்.

மாதம் ஒன்று கழிந்தது. சிவகுருநான் கதிரேசனைத் தேடி வந்தார்; ‘‘கதிரேசு வாசுகி சிவராசசிங்கத்தின்ரை மகனை நம்பித்தான் நவராசாவைச் செய்ய மாட்டன் என்றவள். இப்ப விசாரித்துப் பார்த்தால் அவன் கலியாணம் செய்து இரண்டு பிள்ளைகள் இருக்காம். நாங்கள் பல வருடங்களாக

நட்பாகப் பழகினனாங்கள். எதையும் மறைக்கக் கூடாது. இப்ப தாயும் தகப்பனும் புத்திமதி சொன்னதாலை அவள் நவராசாவைச் செய்யச் சம்மதிக்கிறாள். இனி உனக்கு விருப்ப மெண்டால் சொல்லு''.

''நான் எப்படிச் சொல்வது. அவனைக் கேட்க வேண்டும். அவன் முன்பு இருந்த நிலை வேறை. ஒரு பெண் காதலிச்ச விஷயம் தெரிந்த பிறகு எந்த ஆண் சம்மதிப்பன்'' என்றார் கதிரேசன்.

சம்மதிக்காவிட்டால் அவள் கன்னியாகவே இருக்கட்டும் அதற்காக உள்ளதை உயிர் நண்பனான உனக்கு மறைக்க முடியாது'' என்றார் சிவகுருநாதன்.

சிவகுருநாதன் சென்ற பின்பும் கதிரேசன் யோசித்துக் கொண்டிருந்தார். அன்று மாலை வந்த நவராசா; ''அப்பூ, புஸ்பநாதனின் மனைவியின் மாமனின் மகளைச் செய்ய எனக்கு விருப்பம். பெம்பிளையை இலட்சுமி காட்டினவள். நல்ல அழகி அதோடை இருபத்தைந்து இலட்சரூபா காசாகத்தரீனை. ஐந்து சகோதரர்கள் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் திருமணத்திற்கு வருகிறார்கள். அம்மாவையும் அப்பாவையும் கூட்டிக் கொண்டு போய்ப் பெண்ணைப் பார்த்து நிட்சயார்த்தம் செய்யப் போறன்''.

கதிரேசு மௌனமாக இருந்தார். முன்பென்றால் கதிரேசனுடன் தான் எதைச் செய்வதானாலும் அவன் ஆலோசிப்பான்.

அன்று கோயிலடியில் தில்லைநடராசாவைச் சந்தித்துக் கதைத்தார் கதிரேசன். தில்லைநடராசா சிரித்து விட்டுச் சென்று விட்டான். ஏன் தில்லைநடராசா சிரித்தான் என்பது கதிரேசனுக்குப் புரியவில்லை. மடத்திற்குப் போனார் கதிரேசன். மடத்தில் அவருடன் தங்கியிருந்த பொன்னையா என்ற வயோதிபர் சொன்னார்; ''அண்ணை உங்கடை பேரனுக்கு அவளை ஏன் செய்யச் சம்மதித்தனீங்கள் அவள் முன்பு ஒருவனைக் காதலித்து அவனோடை ஓடினவள். பொடியன்ரை தகப்பன் மூன்று மாதங்களுக்குப் பிறகு அவையைக் கண்டு பிடித்துப் பொடியனைப் பிரித்து வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டார். இவள் கர்ப்பமாக இருந்த தென்று கேள்விப்பட்டனான்''.

கதிரேசனுக்குத் தலையைச் சுற்றியது. அவர் எதுவும் பேசவில்லை. திருமண எழுத்து முடிந்து விட்டது. மறுவாரம் திருமணம் நவராசாவின் தாயும் தகப்பனும் மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தனர். வெளிநாட்டால் வந்த அவளின் சகோதரர்கள் ஆடம்பர மோட்டார் வாகனத்தில் வந்து போய்க் கொண்டிருந்தனர். கதிரேசன் பேசாமல் இருந்தார்.

திருமணம் நடைபெற்றது. இலட்சுமி முன் நின்று திருமணத்தைக் கோலாகலமாக நடத்திவைத்தாள். வெளிநாட்டிலிருந்து அவளது சகோதரங்களுடன் வந்திருந்த ஓர் இளைஞனுடன் மிகவும் நெருங்கிக் கலகலப்பாகப் பழகினாள் நவராசாவின் மனைவி. அது நவராசாவுக்குப் பிடிக்கவில்லை அதைப்பற்றி அவன் இலட்சுமிக்குச் சொன்னான்.

இலட்சுமி சிரித்தாள் உங்களுடன் நான் கலகலப்பாகப் பழகுகிறேன். அதில் தப்பிருக்கா'' என்று கேட்டார் இலட்சுமி.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவள் நவராசாவுக்கு அடங்கி நடக்கவில்லை. அதனால் அவன் மனம் வருந்தினான்; ஒரு போதும் அடங்காத தன்மையை உடைய அவாவை ஒழித்தால், நீங்காத இன்ப வாழ்வு அமையும். பணம் பொருள் இல்லாமல் மனிதனால் இன்பமாக வாழ முடியாது. அதற்காகப் பணமும் பொருளும் தான் வாழ்க்கை அல்ல. இன்பம் என்பது மனதில் தான் தங்கி உள்ளது. போது மென்ற மனமே ஒருவனை இன்பத்திற்கு அழைத்துச் செல்லும் உள்ளதைக் கொண்டு திருப்த்தி அடைபவன் தான் என்றும் இன்பத்தை அனுபவிப்பவன் அதை விட்டு விட்டு போதாது என்று அவாப்பட்டு பணத்தைத் தேடினால் இன்பமும் கிடைக்காது. நிம்மதியும் வராது'' என்று கதிரேசன் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தன'' இனி அதைப் பற்றி நினைத்துப் பிரயோசனமில்லை'' என்று எண்ணிக் கவலைப்பட்டான் நவராசா.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஒரு பொழுதும் நிறைவான தன்மையைத் தராத அவாவை ஒழித்தால், அந்நிலை எப்பொழுதும் மாறாதிருந்து இன்ப வாழ்வைத் தரும்.

## முயற்சியும் சோம்பலும்

திருமணமான பின்பு நவராசாவின் மனம் முற்றாகக் குழம்பி விட்டது. அவனது மனைவி துர்க்கா அவனை மதிப்பது குறைவு. அத்துடன் அவனது பெற்றோர்களையும் உறவினர்களையும் அவள் மதிப்பதில்லை. அதனால் நவராசாவின் பெற்றோர் துர்க்காவின் வீட்டுக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டனர். அவ்வீட்டில் ஏதாவது விஷேசம் நடந்தால் மட்டும் அந்த நேரத்திற்குப் போய் விட்டு வந்து விடுவார்கள். இது நவராசாவுக்குக் கவலையைக் கொடுத்தது. அவன் ஒரு கதை சொன்னால் அவள் பல கதைகள் சொல்வாள். வேலையால் அவன் வீட்டுக்குப் பகற் சாப்பாட்டிற்கு வரும் போது அவள் நித்திரையாக இருப்பாள். அவள் சிறுவயதாக இருக்கும் போதே தாயை இழந்தமையால் பேர்த்தியாருடனே வசித்து வந்தாள். பேர்த்தியான மீனாட்சிக்கு எழுபத்தைந்து வயது.

அன்று தோட்டத்தில் கூலியாட்கள் பலர் வேலை செய்தமையால் அவர்களுக்கு மதிய உணவும் தேநீரும் கடையில் வாங்கி வந்து கொடுத்து விட்டு நவராசா வீட்டுக்கு வரநேரமாகி விட்டது. நவராசாவுக்குச் சரியான பசி. தனது வீட்டுக்குச் செல்லலாமா என்று நினைத்தான். பின்பு பெற்றோராயினும் தனது குடும்பப் பிரச்சினைகளை அவர்களுக்குச் சொல்லி அவர்களையும் துன்பப் படுத்த அவன் விரும்பவில்லை.

களைப்போடு வந்த நவராசாவை மீனாட்சி வரவேற்றாள்; ‘‘ராசா எவ்வளவு தான் வேலைகள் இருந்தாலும் வயிற்றைப் பட்டினி போடுதல் கூடாது. அதனால் ஆயிரம் வருத்தங்கள் வந்திடும். மனிதன் பாடு பட்டு உழைப்பது இந்த வயித்துக்குத் தானே. வயிறு என்று ஒன்று இல்லாவிட்டால் நாம் ஏன்பாடு பட வேண்டும். நேரம் நாலுமணியாச்சு கைகாலை அலம்பிக் கொண்டு வா ராசா’’ என்றாள்.

வீட்டினுள் வானொலி பாடிக் கொண்டிருந்தது. நவராசா குளிக்கும் அறைக்குச் சென்று குளித்து விட்டு வந்த போது துர்க்கா சாப்பாட்டறை மேசையில் இருந்தாள். நவராசா வந்து கதிரையில் அமர்ந்து உண்ணத் தொடங்கினான்.

‘‘இண்டைக்கு எனது சினேகிதி ஒருத்தியின் வீட்டுக்குச் செல்லப் போவதாகச் சொன்னனான். மூன்றுமணிக்கு வருவதாகக் கூறி விட்டு நாலரைக்கு வருகிறீர்கள்’’ என்றாள் துர்க்கா.

‘‘தோட்டத்திலை வேலை செய்பவர்களுக்கு சாப்பாடு வாங்கி வர நேரமாயிட்டுது’’ என்றான் நவராசா.

‘‘தோட்டத்தை விடுங்கோ எமக்கிருக்கிற சொத்துப் போதும் தானே..’’

‘‘வீட்டில் சும்மாய் இருந்தால் உடம்பு பழுதாகி விடும், நோய் வந்திடும், அதோடு உமது சகோதரங்கள் இவ்வளவு காலமும் நீர் தனியாக இருந்ததால் அனுப்பினார்கள். இனி அனுப்புவார்களா?’’

‘‘அவை அனுப்புவினை’’ என்றாள் துர்க்கா.

அன்று ஐந்து மணிக்கு துர்க்காவின் சினேகிதியின் வீட்டுக்குத் துர்க்காவும் நவராசாவும் சென்றனர். அன்று இரவு உணவை அங்கு உண்டு விட்டு அங்கிருந்து அவர்கள் வர இரவு பத்து மணியாகிவிட்டது.

அந்த முறை வெண்காயச் செய்கையில் நவராசாவுக்கு நட்டமேற்பட்டது. அதனால் அவன் குத்தகைக்குச் செய்த சிவபாதசேகரத்தின் தோட்ட நிலத்தை திருப்பிக் கொடுத்து விட்டான். இதை அறிந்த கதிரேசன் அவனை அழைத்துச் சொன்னார்.

‘‘மகனே, சிவபாதசேகரத்தின் தோட்ட நிலத்தை ஏன் திருப்பிக் கொடுத்தாய். அந்த நிலத்தில் நீ பயிர்களை நட்டுப் பெரும் இலாபமடைந்தாய் ஒவ்வொரு வருடமும் இலட்சக் கணக்கில் அந்த நிலத்தில் இருந்து இலாபம் கிடைத்தது. பொருள் வரும் போகும் ஆனால் முயற்சியை நாம் கைவிடுதல் கூடாது. அத்துடன் வேலையில்லாதிருந்து நாம் செலவுகள் செய்தால் பெருந்தொகைப் பணமும் சில வருடங்களில் செலவாகி விடும்.

எனவே நீ சிவபாத சேகரத்திடம் சென்று கொடுத்த தோட்டத்தை மீழப் பெற்று பயிர் நடு. அது தான் உன்னை வாழவைக்கும்'' என்றார்.

நவராசா எதுவும் பேசாமல் இருந்தான்; ''நீ முன்பு போல் இப்ப இல்லை. உற்சாகத்துடன் முன்பு உழைத்தாய். இப்பொழுது உற்சாகமும் இல்லை. உழைப்பும் இல்லை. இந்நிலை ஆபத்தில் தான் முடியும்''.

நான் சிவபாதசேகரத்திடம் கொடுத்த காணியை வாங்கிப் பயிர் செய்கிறேன்'' என்று கூறி விட்டுச் சென்றான் நவராசா. அதன் பின் அவன் இரண்டு மாதங்கள் அங்கு வரவில்லை.

வீட்டுப் பிரச்சினைகளால் மனம் உடைந்த நவராசா மோட்டார் வாகனங்களை வாங்கி விற்பனை செய்வதையும் குறைத்துக் கொண்டான். துர்க்கா நல்ல தொரு மோட்டார் வாகனத்தை வாங்கும் படி கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தாள். அதனால் நவராசா சீதனப்பணத்தில் பெருந்தொகையை எடுத்து விலை உயர்ந்த தொரு மோட்டார் வண்டியை வாங்கினான்.

அன்று காலை வந்த வாகனத் தரகரான துரைசிங்கம், நவராசாவிடம் சொன்னார்; ''நவம் யாழ்ப்பாணத்திலை நல்லதொரு மோட்டார் வண்டி நிற்கிறது. வாகனத்தின் சொந்தக்காரன் வைத்தியர். அவரைத் திடீரென்று வெளிநாட்டுப் பயிற்சிக்குப் போகச் சொல்லி அரசாங்கம் அறிவிச்சிட்டுது. நாளைக்கு அவர் கொழும்புக்குப் போறார். போனால் வர இரண்டு வரிசமாகுமாம். அதை விற்பதற்கு அவர் அவசரப்படுகிறார். வாங்கினால் ஒரு இலட்சரூபா வென்றாலும் மிஞ்சும். இப்ப அவர் ஆஸ்பத்திரிக்குப் போட்டார். பதினொரு மணிக்கு நீ வந்தியெண்டால் போய்ப் பார்த்து வாங்கலாம். மறந்து போகாமல் வந்து விடு'' என்று கூறி விட்டுச் சென்றார் துரைசிங்கம்.

துரைசிங்கம் வரும் போது காலை எட்டுமணி. அப்பொழுதும் நவராசா நித்திரையால் எழும்பவில்லை. முதல் நாள் இரவு இரண்டு மணிவரை துர்க்காவும் அவனும் தொலைக் காட்சியில் படம் பார்த்தனர். அதனால் அவனால் எழும்ப முடியவில்லை. பேர்த்தியார் தயாரித்துக் கொடுத்த தேநீரைக் குடித்து விட்டு மீண்டும் படுத்து விட்டான்.

பத்துமணிக்கு நித்திரையால் எழுந்த அவன் பல் துலக்கி முகம் கழுவி விட்டுக் குளித்தான். பின் காலை உணவை உண்டு விட்டு சிறிது நேரம் துர்க்காவுடன் கதைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எழுந்து வாகனம் வாங்கச் செல்லச் சோம்பலாக இருந்தது.

நவராசா, துரைசிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற போது துரைசிங்கம் அங்கே இருக்கவில்லை. அதனால் அவன் வைத்தியரின் வீட்டுக்குச் சென்றான். அங்கே துரைசிங்கம் இன்னொருவருடன் நின்றார். மோட்டார் வண்டி அவருக்கு விற்கப்பட்டு விட்டது.

மோட்டார் வாகனத்தை வாங்கியவன் துரைசிங்கத்திற்குத் தரகு காசை கொடுத்து விட்டுச் சென்றான்.

“பதினொன்றரைமணி வரை உனக்காக நான் பார்த்துக் கொண்டு நின்றனான். அதற்கிடையில் வைத்தியர் இரண்டு முறை ஆள் அனுப்பி விட்டார். நான் அங்கு சென்ற போது அவர் சொன்னார்; “துரை நீர் எனக்குத் தெரிந்தவர் என்பதால் தான் நான் சொல்லியனுப்பினனான். எனது மனைவியின் சகோதரன் மோட்டார் வாகனத்தை விற்காது தனது வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டுச் செல்லும் படி கூறுகிறார். நான் அவசரமாகச் செல்ல வேண்டியிருக்கிறது. உமது நிலை என்ன” என்று கேட்டார் நான் அவருக்கு ஒரு மணி நேரம் தவணை சொல்லி விட்டு ஏகாம்பரத்தைக் கூட்டிவந்து வாகனத்தை வாங்கிக் கொடுத்து விட்டேன். என்ரை சீவியம் இதை நம்பித் தான் போகுது. ஏகாம்பரம் இருபத்தையாயிரம் ரூபா தந்தது. வைத்தியரும் இரண்டாயிரம் ரூபா தந்தார். நீ இவ்வளவு நேரமும் என்ன செய்தனி. முந்தியெண்டால் இரவு பதினொரு மணிக்குப் படுத்து விடியப் புறம் நாலுமணிக்கு எழும்புவாய். அதை விடப் பத்துமணிக்கு வாறதெண்டு சொன்னால் ஒன்பதரைக்கு நிற்பாய். இப்ப உனக்கு என்ன நடந்தது? முந்தி தோட்ட வேலை தரகு வேலை கோயில் தொண்டு துரவெண்டு எவ்வளவு வேலைகளைச் செய்தனீ. இப்ப தோட்டத்தையும் அநியாயமாக விட்டு விட்டாய். போனவரிசம் வெங்காயம் வித்துப் போட்டு மூன்று இலட்சத்திற்கு வாகனம் ஒன்று எடுத்தனீ.. நவம் சொல்லுறன் என்று குறை நினைக்காதை வெளிநாட்டிலை இருந்து நெடுகக் காசு அனுப்ப மாட்டாங்கள். ஊருக்கை கனபேருக்கு இப்ப பிள்ளைகள் காசு அனுப்புவதில்லை. எமது கையால் உழைக்கிற உழைப்புத் தான் நிரந்தரமானது. இப்ப அந்த வாகனத்தை எடுத்திருந்தால் குறைந்தது ஓர் இலட்சம் ரூபா இலாபம் வந்திருக்கும்” என்று கூறி விட்டுச் சென்றான் துரைசிங்கம்.

இரண்டு தினங்கள் கழித்து நவராசா தாயின் வீட்டுக்குச் சென்றான். கதிரேசன் வெளி விறாந்தையில் அமர்ந்திருந்தார். மற்றய நாட்களில் நவராசா வீட்டிற்கு வரும் போது கதிரேசனுக்கு புகையிலை வாங்கி வந்து கொடுப்பான். அவர் அதில் தான் சுருட்டுச் சுற்றிப் புகைப்பார். இரண்டு முறை நவராசா வீட்டுக்கு வந்த போதும் புகையிலை வாங்கி வரவில்லை. புகையிலை இல்லாததால் அவர் பல நாட்களாகச் சுருட்டுப் பற்றவில்லை.

அன்றும் நவராசா கதிரேசனுக்குப் புகையிலை வாங்கி வரவில்லை புகையிலை இல்லாமையால் அவனின் வரவை அவர் ஆவலோடு எதிர் பார்த்திருந்தார். நவராசா புகையிலை கொண்டு வராதது அவருக்கு ஏமாற்றமாக இருந்தது. புகையிலையை எடுத்துச் சுருட்டுச் சுற்றி விட்டு, அதன் காம்புகளை அன்னதான மடத்தில் இருக்கும் தனது நண்பர்களுக்கு அவர் கொடுப்பார். புகையிலை இல்லாததால் பல நாட்களாக அவர் மடப் பக்கம் செல்லவில்லை.

“அப்பு எத்தனை நாளாய்ச் சுருட்டுப் பத்தவில்லை. நீ இப்ப அவருக்குப் புகையிலையை ஏன் வாங்கி வந்து கொடுப்பதில்லை. அதையும் உன்ரை மனிசியைக் கேட்டோ செய்கிறாய்.?” தாய் கேட்டாள்.

நவராசாவுக்கு அவமானமாக இருந்தது; ‘‘மறந்து போனன்’’ என்று கூறி விட்டு நூறுரூபாவை எடுத்து; ‘‘அப்பு, என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ. நான் தீர மறந்து போனன். இந்தாருங்கோ காசு பாலசிங்கம் கடையிலை வாங்குங்கோ’’ என்றான்.

கதிரேசன் பணத்தை வாங்கி மடிக்குள் வைத்து விட்டுச் சொன்னார்; ‘‘மகனே, மறதி, சோம்பல் என்பன ஒரு மனிதனுக்கு சாகும் வரை வரக் கூடாது. எவ்வளவு உற்சாகமாக வேலை செய்த நீ, இப்பொழுது சோம்பியிருக்கிறாய் என்றால் அதற்குக் காரணம் ஊழ்வினை என்று தான் சொல்ல வேண்டும். ஒருவனுக்குச் செல்வம் சேரவேண்டு மென்று பலன் இருந்தால் ஊழால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும். அச் செல்வம் போக வேண்டு மென்றால் ஊழ்வினை அவனுக்கும் சோம்பலை உண்டாக்கும். இது தான் வாழ்வின் நியதி. ஊழ்வினை தான் உன்னை முன்பு ஊக்கத்தைக் கொடுத்து உயர்த்தியது. இப்ப அதே ஊழ்வினை சோம்பலைக் கொடுத்து உனது வாழ்வைக் கெடுக்கிறது’’ என்றார் கதிரேசன்.

நவராசா நினைத்துப் பார்த்தான். முன்பென்றால் ஓரிரு நிமிடங்கள் கூட அவன் சோம்பியிருந்த தில்லை அதனால் செல்வம் இலட்சம் இலட்சமாக வந்து குவிந்தது. இப்பொழுது அவனுக்கு வேலை செய்யச் சோம்பலாக இருக்கிறது. ‘‘அதனால் தான் அன்று வாகனம் வாங்குவதற்கு நேரம் தப்பிச் சென்றேனோ...?’’ என்று நினைத்தான் நவராசா.

371. ஆகுஊழால் தோன்றும் அசைவின்மை; கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி.

ஒருவனது கைப்பொருள் வளர்வதற்கு காரணமான ஊழால் முயற்சி உண்டாகும்; கைப் பொருள் அழிவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

## விதிப்படி

மயில்வாகனத்தின் தங்க ஆபரணக் கடை கள்வர்களால் கொள்ளையடிக்கப் பட்ட பின், அவனால் தொழில் செய்ய முடியவில்லை. அதனால் கடையை மூடியிருந்தான். பின் அவன் தணிகாசலத்திடம் வந்தான்; ‘‘அண்ணை கடையை மூடியமையால் எமக்கு அன்றாட சீவியத்திற்கே கஷ்டமாக இருக்கிறது. அதனால் மீண்டும் ஆபரண வியாபாரம் செய்ய விரும்புகிறேன். முன்பு நீங்கள் உதவி செய்தமையால் தான் நான் கடை வைத்து முன்னேற முடிந்தது. எனவே தயவு செய்து இன்னுமொரு முறை உதவி செய்யுங்கள்’’ என்றான்

“நீ எப்பொழுதும் மன்னிக்கும் நிலையிலேயே இரு. ஒருவன் நீ செய்த நன்மைக்குப் பதிலாக தீமைகளைச் செய்தாலும் அதை மன்னிக்கத் தயாராக இரு. அத்துடன் தீமை செய்தவன் உதவி கோரினால் அதையும் செய். அவன் செய்த தீமையைப் பற்றிச் சிந்திக்காது, அவன் கேட்ட உதவியைச் செய். அதற்காக அவனோடு பேரம் பேசாதே; நிபந்தனைகளை விதிக்காதே. பிரதிபலன் பாராதே” என்று சுவாமியார் கூறுவது அவரது காதில் ஒலித்தது. அதனால் அவனை அழைத்துக் கொண்டு மணிவண்ணனிடம் சென்றார். அவனிடம் மயில்வாகனத்திற்கு உதவி செய்யுமாறு வேண்டினார்.

மணிவண்ணனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. முன்பு பல முறை அவன் மயில்வாகனத்திடம் ஏமாந்தவன். எனவே தணிகாசலத்தை உள்ளே அழைத்துச் சென்று சொன்னான்; “அண்ணை ஒரு நாள் மயில்வாகனம் வந்து தனது நண்பன் ஒருவனிடம் ஏராளமான தங்கக் காசு இருப்பதாகவும் அவற்றைக் கொள்வனவு செய்யத் தன்னிடம் பணம் இல்லை என்றும் அவற்றை எனக்கு வாங்கித் தருவதாகவும் கூறி பத்துஇலட்சரூபா வாங்கிச் சென்றான். அதன் பின் அவன் வரவில்லை. பலமுறை நான் அவனிடம் கேட்டுப் பார்த்தேன். இன்று வரை அப்பணம் எனது கைக்கு வந்து சேரவில்லை. அது என்னுடைய ஊழ் என்று தான் நான் நினைக்கிறேன். நான் வியாபார விஷயமாக யாருக்காவது ஏதாவது கொடுப்பதானால் உரிய பத்திரங்கள் இல்லாமல் கொடுக்க மாட்டேன். அத்துடன் பொருளைப் பார்த்துப் பரீட்சித்து நல்லதென்ற பின்பு தான் பொருளை வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பேன். ஆனால் அன்று எனது அறிவை விதிமயக்கி விட்டது. இவனிடம் ஏமாந்த பலர் என்னிடம் வந்து தாம் ஏமாந்த விதங்களைப் பற்றி எனக்கு விபரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் நான் ஏமாநதேனென்றால், அது என்னுடைய விதியென்று தான் கூறவேண்டும். இனி நான் உவனுக்கு உதவமாட்டன். கள்ள வேலைகள் பலவும் செய்யும் உவனோடு நீங்கள் சேர்ந்து வந்ததே எனக்குப் பிடிக்கவில்லை. தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்” என்றான்.

“தணிகாசலம் அமைதியாகச் சொன்னார்; “மணி, பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ் ஒருவனை அறிவற்றவனாக ஆக்கும். அதே போல் பொருள் சேர்வதற்குக் காரணமான விதி அவனை அறிவாளியாக்கும் என்பார்கள். அன்று நீ நடந்து கொண்டதற்கு விதிதான் காரணம்”.

“அண்ணை நம்பிக்கை தான் வாழ்க்கை. வியாபாரத்தில் நம்பிக்கை வைக்காவிட்டால் எதுவும் செய்ய முடியாது. நான் உங்களை நம்பித்தானே ஊரில் உள்ள எல்லோருக்கும் கடன் கொடுக்கிறேன்” என்றான் மணிவண்ணன்.

“சரி... இப்பொழுது அவன் தனது வீட்டுக் காணியின் உறுதியுடன் வந்திருக்கிறான். அந்தவீடும் காணியும் ஐம்பது அறுபது இலட்சம் பெறும். அவனுக்கு நீ இருபத்தைந்து இலட்சம் ரூபா கொடு. இரண்டு வருடங்களுக்குள் மீளாவிட்டால் அதை விற்று விட்டு உனது பணத்தை எடுத்துக் கொண்டு மிகுதியைக் கொடு” என்றார் தணிகாசலம்.

சிலகணங்கள் மணிவண்ணன் யோசித்தான். பின் சொன்னான்; ‘‘தேவையில்லாமல் ஏன் அண்ணை நான் கரைச்சலுக்கை போவான்’’.

‘‘உலகத்தில் கரைச்சல் இல்லாதது எது? நாம் எதையும் செய்யாமல் பேசாமல் இருந்தாலும் ஊழ்வினை எம்மைச் சும்மா விட மாட்டாது. குற்றவாளியாக்க வேண்டுமானால் குற்றவாளியாக்கியே தீரும். தீய செயல்கள் செய்பவன் மீதும் நான் இரக்கம் காட்டுதல் வேண்டும். நல்லவன், கெட்டவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடில்லாமல் செயலாற்ற வேண்டும் என்று விரும்புபவன் நான். என்னைப் போலவே நான் உங்களையும் கருதுவதால் தான் மயில்வாகனத்தையும் கூட்டிக் கொண்டு உங்களிடம் வந்தேன். என்றும் நல்லெண்ணத்துடன் வாழும் உங்கள் மீதுள்ள நம்பிக்கையால் தான் வந்தேன். தயவு செய்து உதவி செய்யுங்கள்’’ என்றார் தணிகாசலம்.

‘‘ மனிதன் அறியாமை மிக்கவன். அதனால் தான் துணிந்து பல தீமைகளைச் செய்கிறான். தீமைகளைச் செய்து விட்டுப் பின் அதை நியாயப்படுத்துவதற்காகப் பல தீய செயல்களைச் செய்கிறான். இவற்றை மெய்யுணர்வு படைத்தோர் பொருட்படுத்தலாகாது உதவி செய்ய விரும்புவோர் நன்மை தீமையைப் பற்றி ஆராயக் கூடாது. நீ நல்லவற்றைச் செய்து கொண்டிரு. இறைவனின் திருவருள் உன்னை என்றும் காத்துக் கொள்ளும். உனது பணி உதவிகோருவோருக்குச் செய்வதே பயனைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். பயன் ஊழின் தன்மையைப் பொறுத்தது. நீ செய்யும் உதவி ஊழின் காரணமாக உனக்குத் தீமையையும் தரலாம். அதற்காகக் கவலைப் படாதே. நீ செய்யும் பணி ஆக்க வேலைக்கு என்றும் உதவட்டும்’’ என்று சுவாமியார் கூறிய வார்த்தைகள் மணிவண்ணனின் காதில் ஒலித்தன.

‘‘சரி அண்ணை உங்களின் விருப்பப்படி நான் இருபத்தைந்து இலட்சரூபா கொடுக்கிறேன். உறுதியை எதித்துத் தரட்டும்’’ என்றான் மணிவண்ணன்.

மறுவாரம் சட்டத்தரணி ஒருவரின் வீட்டில் உறுதி எழுதிய பின் மயில்வாகனத்திற்கு இருபத்தைந்து இலட்சரூபா பணம் கொடுத்தான். மணிவண்ணன்.

‘‘தணிகாசலம் அண்ணை மிகவும் நன்றி. இதை வைத்து நான் பிழைத்துக் கொள்வேன். மணி, முன்பும் நான் உனக்குப் பணம் தரவேண்டும். கட்டாயம் நான் தருவேன்’’ என்றான் மயில்வாகனம்.

‘‘முன்பு என்னை ஏமாற்றியதால் தான் நான் உங்களுக்கு உதவி செய்ய விரும்பவில்லை. வியாபாரத்தில் நம்பிக்கை தான் முக்கியம் வியாபாரி ஒருவன் கடன் கொடாமல் வியாபாரம் செய்ய முடியாது. நம்பிக்கையின் பெயரால் தான் எல்லாம் நடைபெறுகிறன’’ என்றான் மணிவண்ணன்.

உண்மை தான் மணி, நம்பிக்கையில்லாவிட்டால் வாழ முடியாது. ஊழ்வினை தான் நம்பிக்கையைக் கொடுக்கிறது'' என்றான் மயில்வாகனம்.

372. பேதைப் படுக்கும் இழவுஊழ்; அறிவகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை.

பொருள் இழப்பதற்குக் காரணமான ஊழ், ஒருவனை அறிவற்றவனாக்கும்; பொருள் சேர்வதற்குக் காரணமான ஊழ் அவனை அறிவாளி யாக்கும்.

## மிகுதி

கணபதி மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் கனகலிங்கம் பிரதி அதிபராக இருந்தாலும் க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு இரசாயணவியல் கற்பிப்பவர். அவரிடம் இரசாயணவியல் கற்ற மாணவர்கள் அந்தப் பாடத்தில் ஒரு போதும் சித்தியடையாது விட்டதில்லை. முதல் முறை பரீட்சை எடுக்கும் மாணவர்களே விசேட சித்தி பெறுவது உண்டு. அதனால் அவருக்கு யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் பெயரும் புகழும் உண்டு. கணபதி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து பட்டணத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் அவரை தமது பாடசாலைக்கு இரசாயணவியல் ஆசிரியராக வரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தன. கல்வித் திணைக்களமும் அவரைத் தேசிய பாடசாலை ஒன்றிற்கு இரசாயணவியல் ஆசிரியராகச் செல்லும்படி அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருந்தது. ஆனால் கனகலிங்கம் மறுத்து விட்டார்.

அவர் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தில் தான் கல்வி கற்றார். இளமையிலேயே தகப்பனை இழந்த அவருக்குக் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் நிறுவுனராக கந்தர் வைத்திலிங்கம் தான் அவரது கல்விச் செலவை ஏற்றார். அவர் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போதும் அவரது பல்கலைக்கழக கல்விச் செலவையும் அவரே ஏற்றார். பின்பு அவர் கல்வி கற்று முடிந்ததும் கணபதி மத்தியமகா வித்தியாலயத்தில் அவரை ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார்.

அதனால் நிறுவுனரான கந்தர் வைத்திலிங்கத்தில் பெரும் மதிப்பு வைத்திருந்த கனகசபாபதி, அப் பாடசாலையிலேயே தொடர்ந்து கடமையாற்றி வந்தார். அத்துடன் வீட்டிலும் இராசாயணவியல் பாடத்தை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கற்பிப்பார். ஊர்ப் பிள்ளைகளிடமும், வறிய பிள்ளைகளிடமும் அவர் பணம் பெறுவது இல்லை. வேறு பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் அவரிடம் வந்து இரசாயணவியலைப் படிப்பார்கள். பாடசாலை விட்ட பின்பு பாடசாலையில் மேலதிக வகுப்புக்கள் வைப்பார். விக்னேஸ்வரமூர்த்திக்கு உதவியாக எந்நேரமும் பாடசாலையில் இருப்பார்.

மாவட்டத்தில் விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர். ஓய்வு பெறவுள்ளதால் கல்வித் திணைக்களம் விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர்

பதவிக்கு விண்ணப்பம் கோரியது. முப்பது வருட காலமாக அப்பாடசாலையில் சேவை செய்த கனகலிங்கத்திற்கு முதல் முறையாக விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளர் பதவியில் ஆசை வந்தது. அதனால் விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பிக் கொண்டு விக்னேஸ்வரமூர்த்தியிடம் வந்தார்.

''ஐயா, இது நாள் வரையும் எனக்கு இந்தப் பாடசாலையை விட்டுச் செல்ல விருப்பமில்லாதிருந்தது. இப்பொழுது விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரி இருக்கின்றனர். நான் விண்ணப்பிக்க விரும்புகிறேன். அதனால் தயவு செய்து எனது விண்ணப்பப் பத்திரத்தைச் சிபார்சு செய்து தாருங்கள்'' என்றார்.

விக்னேஸ்வரமூர்த்தி அதிர்ந்து போனார். தனது வலக்கரம் திடீரென்று செயலிழந்து விட்டதைப் போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இரவு பகலாக இருபத்தி நான்குமணி நேரமும் தன்னுடன் இருந்து பற்றுடன் பாடசாலைக் கடமைகளைச் செய்து வரும் அவரின் இழப்பை விக்னேஸ்வரமூர்த்தியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் விண்ணப்பித்தால் அவருக்குத் தான் அப்பதவி கிடைக்கும். அவரை விட விஞ்ஞானப் பாடத்தில் திறமையுள்ள ஆசிரியர் வேறு எவருமில்லை.

''இதைப் பாருங்கோ'' என்று தான் கொண்டு வந்த விண்ணப்பப் பத்திரத்தை நீட்டினார் கனகலிங்கம்.

அதை வாங்கிப் பார்த்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; ''உங்களுக்குத் தான் இந்தப் பதவி கிடைக்கும். விஞ்ஞானம் சம்பந்தமான பல நூல்களைக் மிக நுட்பமாக நீங்கள் கற்றிருக்கிறீர்கள். அதை விட கல்வி முகாமைத்துவ முதுதத்துவமானிப் பட்டம் பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் செல்வது பாடசாலைக்குப் பெரும் இழப்புத்தான். எனினும் உங்களது முன்னேற்றம் தான் முக்கியம். நான் சிபார்சு செய்கிறேன்'' என்று கூறிக் கையொப்ப மிட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

கல்வித்திணைக்களம் அப்பதவிக்கு விண்ணப்பித்த நான்கு விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் ஒரு பரீட்சை வைத்தது. பின் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. நேர்முகப் பரீட்சைக்கென இருந்த மேலாளர்கள் கனகலிங்கத்தை மரியாதையோடு வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி அவரது கல்விச் சான்றிதழ்களைப் பரீட்சித்தனர்.

நேர்முகப் பரீட்சை முடிந்ததும் நம்பிக்கையோடு வெளியே வந்தார். கனகலிங்கம். நேர்முகப் பரீட்சை நடந்து பதினைந்து தினங்களுக்குப் பின்பு விஞ்ஞானக் கல்வி அதிகாரிக்கான பதவி தங்கப்பிரகாசம் என்பவருக்கு வழங்கப்பட்டது. அதனால் மனம் நொந்த கனகலிங்கம் இரண்டு வாரகாலம் விடுப்பு எடுத்து விட்டு வீட்டில் இருந்தார்.

''நேர்மைக்குக் காலமில்லை. பதவிகளும் பதவி உயர்வுகளும் மேலதிகாரிகளின் விருப்புக்கேற்பவே வழங்கப்படுகின்றன. நேர்மையாக

உழைப்பவனுக்கு வழங்கப்படுவதில்லை. உங்களுக்கு எனது சேவையைப் பற்றித் தெரியும். இருபத்தி நான்கு மணிநேரமும் நான் மாணவர்களின் நலனுக்காகவே உழைக்கிறேன். மேலதிக வகுப்புக்களை வைக்கிறேன். இதற்கெல்லாம் நான் காசு வாங்குகின்றேனா..? எனது சேவையை மதிக்காத கல்வித் திணைக்களத்தில் வேலை செய்ய நான் விரும்பவில்லை. என்னிடம் போதியளவு சொத்து இருக்கிறது. இப்பொழுது எனக்கு ஐம்பது வயது. ஐந்து வருடங்களுக்கு நான் வெளிநாடு செல்லப் போவதாகக் கூறி லீவு எடுக்கப் போகிறேன்'' என்று விக்னேஸ்வரமூர்த்திக்குச் சொன்னார் கனகலிங்கம்.

முதல் நாள் விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்த கல்விப் பணிப்பாளர் சொன்னார்; ''விக்கி, நான் கனகலிங்கத்திற்குத் தான் விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளர் பதவி கொடுக்கவிருந்தேன். மிகவும் கெட்டிக்காரனான கனகலிங்கம் பரீடசையில் சித்தியடையவில்லை. கனகலிங்கத்திற்குப் பரீட்சையில் நாற்பது புள்ளிகள் மட்டுமே கிடைத்தது. ஆனால் தங்கப் பிரகாசத்திற்கு தொண்நூற்றைந்து புள்ளிகள் கிடைத்தது. ஏன் கனகலிங்கம் பரீட்சையில் புள்ளிகள் பெறவில்லை என்று தெரியவில்லை''.

''நீங்கள் விடுப்பு எடுக்கக் கூடாது. பரீட்சையில் நீங்கள் சித்தியடையவில்லை. ஒருவன் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றாலும் ஊழுக்கு ஏற்றவாறு அவனுக்கு அறியாமையே மிகுதியாகத் தோன்றும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீங்கள் திறமையான ஆசிரியர். ஒவ்வொரு வருடமும் உங்களது திறமையான கற்பித்தலால் பல மாணவர்கள் மருத்துவத் துறைக்கு எடுபடுகின்றனர். பலர் பொறியியல் துறைக்கும் விஞ்ஞானத்துறைக்கும் கணிதத் துறைக்கும் எடுபடுகின்றனர். ஆனால் அன்று உங்களுக்கு வைக்கப்பட்ட பரீட்சையில் நீங்கள் சித்தியடையவில்லை. இதற்கு விதி தான் காரணம். நாம் இன்னென்ன தொழில் செய்ய வேண்டு மென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. தீர்மானிக்கப்படாத எவையும் எம்மை வந்தடைய மாட்டாது. உங்களுக்கு விஞ்ஞானக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்ற வேண்டும் என்ற விதி இருந்தால் அதை யாராலும் தடை செய்ய முடியாது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இதை நான் நம்ப மாட்டேன். இயலாதவர்கள் தான் விதி, கிரகநிலை ஊழ் என்றெல்லாம் சொல்கிறார்கள். தன் நம்பிக்கையும் முயற்சியும் உள்ள ஒருவனால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. இந்தச் சிறிய பாடசாலையை இன்று இவ்வளவு முன்னேற்றியதற்குக் காரணம் விதி என்கிறீர்களா..?'' கோபத்துடன் கேட்டார் கனகலிங்கம்.

''அப்படித்தான் நான் நினைக்கிறேன். மிகவும் திறமைசாலியான பலர் பரீட்சைகளில் தோல்வியடைகின்றனர். பணத்தைப் பெருந் தொகையாக முதலீடு செய்யும் பலர் தொழிலில் நஷ்டமடைகின்றனர். நன்றாகப் படித்த பலர் சில சமயங்களில் வாழ்க்கையில் தோல்வியடைகின்றனர். ஒருவன் பொருள் தேடுவதானாலும் சரி உத்தியோகம் பெறுவதானாலும் சரி, பதவி உயர்வு பெறுவதானாலும் சரி ஊழ்தான் முக்கிய காரணம். ஒருவன் அறிஞனாக்குவதும் அறிவில்லாதவனாக்குவதும் விதி என்று சொல்கிறார்கள். எனவே தயவு செய்து மனம் சேராது கடமையைச் செய்யுங்கள். ஓர்

ஆசிரியர் தான் உலகை உருவாக்குகிறார். நான் ஓய்வெடுக்க இன்னும் இரண்டு வருடங்களே உள்ளன. அதன் பின் நீங்கள் தான் இப்பாடசாலையின் அதிபர். அதற்கான ஏற்பாடுகளை நான் செய்து வருகிறேன். ஒரு கல்வி அதிகாரியால் ஒரு வைத்தியரை உருவாக்க முடியுமா...? ஒரு பொறியியலாளரைஉருவாக்க முடியுமா? இல்லை ஒரு தொழிலாளியை உருவாக்க முடியுமா? அதிபராலும் ஆசிரியர்களாலும் தான் இவர்களை உருவாக்க முடியும் என்பதை நினைத்து ஆறுதலடையுங்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கனகலிங்கம் யோசித்துப் பார்த்தார். அவர் சொல்வதிலும் நியாயம் இருப்பது போலத் தோன்றியது; ''அவரவருக்குரியது அவரவருக்குக் கிடைக்கும் அதைத் தடுத்து நிறுத்த இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எவராலும் முடியாது'' என்று ஸ்ரீனிவாசன் சுவாமியார் கூறியது கனகலிங்கத்தின் காதில் ஒலித்தது.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

ஒருவன் நுட்பமான நூல்கள் பலவற்றைக் கற்றுத் தேர்ந்து பாண்டித்தியம் பெற்றாலும், ஊழிற்கு ஏற்றவாறு அவனுக்கு உள்ளதாகும் அறிவே மேற்பட்டுத் தோன்றும்.

## இருமை

''எனக்கு மனநிலை சரியில்லாமல் இருக்கிறது. நான் ஓய்வு பெற விரும்புகிறேன். இன்று காலையில் வீட்டுக்கு வந்த எனது சகோதரி தனது மகளின் திருமணம் முற்றாகி விட்டதென்று கூறி அதற்கு இரண்டு இலட்சரூபா கடனாகத் தரும்படி கேட்டாள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. கடந்த முப்பது வருடகாலமாக பாடசாலையே கதியென்று நினைத்து வாழ்ந்தது எவ்வளவு பிழையென்று இப்போது தான் நான் உணர்கிறேன். பாடசாலையில் கற்பித்துக் கொண்டு கமம் செய்தவர்களும் தனியார் கல்வி நிலையங்களில் சென்று கல்வி கற்பித்தவர்களும் வியாபாரம் செய்தவர்களும் இன்று நல்ல நிலையில் இருக்கிறார்கள். பாடசாலையின் முன்னேற்றத்தையும் மாணவர்களின் நலங்களையும் கருத்திற் கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள் தான் இன்று கஷ்டப்படுகின்றனர். முன்பு தனியார் கல்வி நிறுவனம் நடத்தும் பலர் என்னை வந்து தமது நிறுவனத்தில் கற்பிக்கச் சொன்ன போது நான் அங்கு சென்று கற்பித்திருந்தால் இன்று நான் எனது தங்கைக்கு உதவி செய்திருக்கலாம்'' என்றார் கனகலிங்கம்.

விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் பேசாமல் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் சொல்வதற்குப் பதில் சொல்ல அவரால்

முடியவில்லை. இவ்வளவு காலமும் எதைப் பற்றியும் சிந்திக்காது பாடசாலையின் நலத்தை மட்டும் சிந்தித்துக் கொண்டிருந்த கனகலிங்கத்திற்கு விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளர் பதவி கிடைக்காதது பெருங் கவலையை உண்டு பண்ணியிருக்கின்றது என்று நினைத்தார். இவ்வளவு காலமும் அவருக்கு வராத பதவி ஆசை இப்போது வந்ததனால் தான் இவ்வளவு பிரச்சினைகளும் வந்துள்ளன என்று நினைத்தார்.

‘‘பணம், பொருள் யாவும் ஒருவனுக்குச் சேரவேண்டும் என்ற பலன் இருந்தால் தான் சேரும் என்பார்கள். அத்துடன் நாம் எவ்வளவு முயற்சிகள் எடுத்தாலும் எமக்குச் சேரவேண்டியவை தான் சேரும். பணம் பொருள் தான் வாழ்கை என்று நினைக்கிறீர்களா? தணிகாசலத்திடம் பணம் இல்லை. ஆனால் பெரும் பணக்காரர்கள் கூடச் செய்ய முடியாத வேலைகளை அவர் செய்து முடித்து விடுகிறார். எந்த ஒரு வேலையை ஆரம்பித்தாலும் தணிகாசலம் தலைமை வகித்துச் சென்றால் அந்த வேலை உடனே முடிந்து விடும். அப்படி ஓர் இராசி அவருக்கு இருக்கிறது’’.

‘‘நீங்கள் சொல்வது எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். எனக்கும் இப்பொழுது ஓய்வு எடுக்க வேண்டும் என்று விதி இருப்பதாக நினைக்கிறேன். ஓய்வு எடுத்து விட்டு தனியார் கல்வி நிறுவனமொன்றில் கல்வி கற்ப்பிக்க விரும்புகிறேன். பட்டணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவன மொன்று என்னை க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இரசாயணவியல் கற்பிக்கும் படி கேட்கிறார்கள். இப்பொழுது நான் சம்பளமாகப் பெறும் பணத்திலும் பார்க்கக் கூடுதலாகத் தருவதாகக் கூறுகின்றனர். என்னைப் பொறுத்தவரை பணம் தான் வாழ்வு. எனது தங்கை கேட்ட பணத்தை என்னால் கொடுக்க முடியாததையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன்’’ என்றார்.

‘‘பல ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களிலும் கடமை புரிகின்றனர். அதே போல நீங்களும் செய்யலாம். பகல் வேளையை மாணவர்களின் நலனுக்காகச் செலவு செய்யுங்கள்’’ என்று சொன்னார் விக்னேஸ்வரமூர்த்தி.

கனகலிங்கம் எதுவும் பேசவில்லை சிறிது நேரம் பேசாமல் இருந்தார். விக்னேஸ்வரமூர்த்தி சொல்வது போலப் பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டே தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்று கடமையாற்றலாம். என்று நினைத்தார்.

‘‘என்ன யோசிக்கிறீர்கள். ஊழின் காரணமாக உலகத்தின் தன்மை இரு வேறு வகைப்படும். செல்வம் உள்ளவராக இருப்பது வேறு. அறிவுள்ளவர்களாக இருப்பது வேறு நீங்கள் மிகுந்த அறிவாளி. மாணவர்களின் நலனில் நீங்கள் மிகவும் அக்கறையுடன் இருந்தீர்கள். அதனால் உங்களால் பணம் சேர்க்க முடியவில்லை. தொழில் மூலம் வருவாயைப் பெருக்க வேண்டும் என்று நினைத்து உழைப்பவனிடம் பணம் சேரும். ஆனால் அறிவு சேரமாட்டாது. அறிவோடு புகழ்சேரும். அது உயிர் போனாலும் நிலைத்து நிற்கும். எனக்கு தரம் ஒன்றில் கற்பித்த ஆசிரியையை

இன்றும் நினைவில் இருக்கிறது. வீட்டில் இருந்து என்னைத் தூக்கிக் கொண்டு வருவார். நான் கா. பொ.த. சாதாரண வகுப்புப் படிக்கும் போதும் கூட அவாவுடன் தான் பாடசாலைக்கு வருவேன். அதை விட எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரிலும் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. அந்த நிலை சமூகத்தில் வேறு எவருக்கும் கிடையாது. நினைத்ப் பாருங்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கனகலிங்கம் நினைத்துப் பார்த்தார். இரசாயணவியல் பாடத்தில் அவருக்கு அக்கறையை ஊட்டிய பொன்னுத்துரை ஆசிரியர், அவரின் நினைவில் தோன்றினார். அவரது அன்பான அரவணைப்பும் அக்கறையான கவனிப்பும் தான் அவரை இரசாயணவியல் பட்டதாரி ஆக்கியது.

''ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களின் நலனில் அக்கறை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். நாம் கற்பிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கும் போது அதனால் வரும் இன்பத்திற்கு அளவே இல்லை. ஒரு குடும்பத்தில் உள்ள பெற்றோருக்கு ஓரிரு வைத்தியர்களோ பொறியலாளர்களே அல்லது பட்டதாரிகளோ பிள்ளைகளாக இருக்கலாம். ஆனால் எனக்கு நூற்றுக்கணக்கான வைத்தியர்களும் பொறியியலாளர்களும் பட்டதாரிகளும் பிள்ளைகளாக இருக்கிறார்கள். இந்தப் பெருமை மாணவனின் நலனில் அக்கறை உள்ள ஓர் ஆசிரியனுக்கு மட்டுமே கிடைக்கும். அதனால் நீயும் ஓர் ஆசிரியனாக வந்து தன்நிகரில்லாச் சேவையைச் செய்'' என்று பொன்னுத்துரை ஆசிரியர் கூறியது அவரது காதில் ஒலித்தது.

''உங்கள் சகோதரி, உங்களிடம் பணத்திற்கு வந்த போது உங்களிடம் பணம் இல்லாவிட்டால், நீங்கள் யாரிடமாவது கடனாகப் பணம் கேட்டிருக்கலாம். தேவைக்குக் கடன் பெறுவதில் நீங்கள் ஏன் வெட்கப்படல் வேண்டும். என்னைக் கேட்டிருந்தால் நான் பணம் ஒழுங்கு செய்து தந்திருப்பேன். நீங்கள் ஏன் பேசாமல் இருந்தீர்கள்''.

கனகசபாபதிக்கு அப்போது தான் தான் அப்படிக் கேட்டிருக்கலாம். என்ற எண்ணம் வந்தது.

''இப்பொழுது வேண்டுமானாலும் சொல்லுங்கள் நான் ஒழுங்கு செய்து தருகிறேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஊழின் காரணமாக உலகில் இரண்டு தன்மைகள் அமைகின்றன. செல்வம் உள்ளவராய் இருப்பது வேறு, அறிவு உள்ளவராய் இருப்பது வேறு என்று நீங்கள் கூறியதில் எவ்வளவோ உண்மை இருக்கிறது. பணம் இன்று வரும் நாளை போய் விடும். அது போன்றது தான் விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளர் பதவியும் ஓர் ஆசிரியரைப் பற்றியும் அதிபரைப் பற்றியும் தான் சிறிந்த ஒரு மாணவன் கதைபானே தவிரக் கல்விப் பணிப்பாளரைப் பற்றி அவன் எண்ணுவதில்லை. நான் ஒரு சிறந்த ஆசிரியராகவே இருக்க

விரும்புகிறேன். தனியார் கல்வி நிலையத்திற்குச் செல்ல விரும்பவில்லை'' என்றார் கனகலிங்கம்.

374. இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வமுடையவர்களாக இருப்பது வேறு; அறிவுடையவர்களாக இருப்பது வேறு.

## நன்றும் தீதும்

மயில்வாகனம் கடன்பட்ட விஷயத்தைக் கேள்விப்பட்ட அவனது மாமனான பஞ்சலிங்கம் தணிகாசலத்தைத் தேடி வந்தார்.

''தணிகாசலம், நான் உன்னைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ எல்லோரினதும் நன்மைக்காகத்தான் பாடுபடுகிறாய். அதனால் பலர் நன்மையடைந்துள்ளனர். பெருவாழ்வும் பெற்றுள்ளனர். முன்பு நீ எந்தப் பொறுப்பும் இல்லாமல் உனது காணியை ஈடுவைத்துக் கொடுத்தால் தான் மயில்வாகனம் ஆபரணக் கடையைத் தொடங்கியது. ஆனால் அந்த நன்றி ஒரு போதும் அவனிடம் இருந்ததில்லை. எனது மகள் திலகவதி வாயோயாமல் உன்னைப் பற்றித்தான் சொல்வாள். நீ பல முறை அவனிடம் உதவி கோரிச் சென்றும் அவன் உனக்கு உதவி செய்யவில்லை. மாறாக உன்னுடைய காணியையும் மீட்டுத் தரவில்லை. எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் மீட்டுத்தந்தவர். அப்படி இருந்தும் நீ உதவி செய்திருக்கிறாய். ஆனால் நிறுத்தினார் பஞ்சலிங்கம்.

''ஒருவன் என்னிடம் வந்து உதவி கோரினால் அதைச் செய்யா விட்டால் எனது மனம் சஞ்சலப்படும். நிம்மதியிராது. என்னால் உதவி செய்யாமல் இருக்க முடியாது. சுவாமியார் சொல்வார்; ''அன்பைக் கொடு; ஆதரவைக் கொடு; ஆலோசனையைக் கொடு; உற்சாகத்தைக் கொடு; உதவியைக் கொடு;பணியைக் கொடு; பண்பைக் கொடு'' என்று.

''உங்களின் நிலையை நான் குறை கூறவில்லை. எதைக் கொடுப்பதானாலும் சற்றுச் சிந்தித்துக் கொடுக்க வேண்டும். மயில்வாகனத்திடம் இருப்பது அந்த ஒரே ஒரு காணி மட்டும் தான். இவனுக்கு திறமை இல்லை; அறிவு இல்லை; போதிய அனுபவமில்லை; செய்வதெல்லாம் கள்ளத் தொழில் முன்பு கடன் பட்டுத்தான் தொழில் செய்தவன். கடன் காரனின் கரைச்சலால் தான் நகைகளைக் கொடுத்து விட்டுக் கொள்ளையிடப்பட்டதாகவும் கூறுவான்''.

''அப்படியும் செய்திருப்பானா?'' தணிகாசலம் அதிர்ச்சியோடு கேட்டார்.

‘‘அப்படியும் செய்திருப்பான். அவனை நம்பமுடியாது. இப்ப மகளை வெருட்டி, கையொப்பமிடாவிட்டால் தான் தற்கொலை செய்து கொள்வேன். என்று பயமுறுத்தித் தான் மகளிடம் கையொப்பம் பெற்றிருக்கிறான். இதைக் கொண்டு நல்ல முறையில் வியாபாரம் செய்யா விட்டால், இரண்டு வருடங்களின் பின் வீடு வளவு அறுதியாகி விடும். பிறகு எனது மகளும் பிள்ளைகளும் அந்தரித்துப் போங்கள்’’ அழுதார் பஞ்சலிங்கம்.

தணிகாசலத்திற்கு ஒரு மாதிரியாகி விட்டது. காசு கொடுக்க முன் திலகவதியைச் சென்று சந்தித்திருக்கலா மென்று நினைத்தார்.

‘‘எல்லாம் விதிப்படிதான் நடக்கும். நீ நன்மை தான் செய்தனி. தொழில் இல்லாமல் கஷ்டப்படுபவன் தொழில் செய்யட்டும் என்று நினைத்து முன்பும் உதவி செய்தாய். அது பெரும் நன்மையை விளைவித்தது. இப்பவும் தொழில் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடை தான் உதவி இருக்கிறாய். ஊழ்வினை காரணமாக நல்லவை தீயவையாய் மாறும். தீயவை நல்லவைகளாக மாறும். அதுக்கு நாம் எதுவும் செய்ய முடியாது’’ என்றார் பஞ்சலிங்கம்.

தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது. முன்பு மயில்வாகனம் தன்னை ஏமாற்றியதால் பணம் கொடுக்க மணிவண்ணன் மறுத்தான். உதவி செய்ய வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக அவர் மணிவண்ணனை வற்புறுத்தியதால் மறுக்க முடியாத நிலையில் தான் மணிவண்ணன் மனமின்றிக் கொடுத்தான். அது தீமையாக வந்து விடுமோ எனப் பயந்தார் தணிகாசலம். பணத்தைக் கொடுத்த சில நாட்களின் பின் தணிகாசலத்தைச் சந்தித்த மணிவண்ணன் சொன்னான்; ‘‘அண்ணை மயில்வாகனத்தின் போக்குச் சரியில்லை. உங்களுக்காகத் தான் நான் பணம் கொடுத்தேன். எனக்கு காணி தேவையில்லை. தற்செயலாக அவன் மீட்காவிட்டால் விற்றுத் தந்திடுங்கோ. ஒரு வழியிலை பஞ்சலிங்கம் எனது உறவினன். அன்று ஒரு நாள் என்னைக் கண்டு; ‘‘தம்பி காசு குடுக்க முன்னம் என்னை ஒருக்காக் கேட்டிருக்கலாம் என்றவர். அதோடை அந்தக் காணியைச் சாட்டி மேலும் பணம் தரச் சொல்லி மயில்வாகனம் வந்தால் கொடுக்க வேண்டாம் என்றவர். இந்த விஷயத்திலை நீங்கள் பிழை விட்டுட்டியள் போலத் தெரிகிறது. இப்பவே ஆறுமாதங்கள் முடிவடைந்து விட்டன. கெதிப்பண்ணி மீளச் சொல்லுங்கோ’’ என்றான்.

இது நாள் வரை கவலைப்படாத தணிகாசலம் இப்பொழுது கவலைப்பட ஆரம்பித்தார். அவரால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அதனால் சுவாமியாரிடம் நடந்தவற்றைக் கூறினார்; ‘‘நாம் ஒன்று நினைக்க ஊழ் வேறொன்று செய்யும் எவ்வளவு தான் கற்றவனாக இருந்தாலும், அவதானமாக இருந்தாலும் அவனை மாற்றும் சக்தி வாய்ந்தது. ஊழ் எதையும் சிந்தித்துச் செய்யும் நீ, மயில்வாகனத்தின் மனைவியையாவது சந்தித்துக் கதைத்திருக்கலாம் இனி என்ன செய்ய முடியும். கறந்த பால் முலை ஏறுமா? உடைந்த மண்பானையை ஒட்டலாமா...? கவலையை மற எல்லாம் விதிப்படி நடக்கும்’’ என்றார்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அன்று மயில்வாகனத்திடம் வந்த தங்கப் பவுண்களை விற்கும் வியாபாரி ஒருவன்; ‘‘மயில்வாகனம், எனக்குத் தெரிந்த ஒருவனிடம் நூறு பவுண் இருக்கிறது. தெரியாதவர்களுக்கு விற்க முடியாது. பட்டணத்தில் உள்ள பெரிய நகைக் கடைக்காரரிடம் கொண்டு செல்ல முடியாது. நீ இப்பொழுது தானே கடையை ஆரம்பித்துள்ளாய். மலிவாய் வாங்கித் தாறன்’’ என்றான்.

‘‘என்ன விலை’’

‘‘பவுண் பன்னீராயிரம்ரூபா விலை போகிறது. நீ எண்ணாயிரம் ரூபாப்படி தாவன்’’

‘‘மயில்வாகனம் சிரித்தான். கள்ள நகைக்கு எண்ணாயிரம் குடுக்க வேணுமே. பெரிய வீடுகளிலை, நகைக் கடைகளிலை கொள்ளை அடித்திருப்பங்கள். பவுண் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய்ப் படி தாறன்’’ என்றான் மயில்வாகனம்.

‘‘காணாது அண்ணை கடைசி நாலாயிரமாவது....’’ அவன் கதைத்துக் கொண்டிருக்கும் போது மயில்வாகனம் குறுக்கிட்டான்; ‘‘உது கள்ள நகை நாளைக்கு காவல்துறைக்குப் போனால் காசும் இல்லை நகையும் இல்லை’’ என்றான் மயில்வாகனம்.

‘‘சரி அவன் ஓமென்றால் கூட்டியாறன். என்னையும் கவனித்துக் கொள்ளுங்கோ’’ என்று கூறிவிட்டுச் சென்றான் வியாபாரி.

மறுநாள் நூற்றி ஐம்பது பவுண் உருக்கிய தங்கத்தை ஒரு பவுண் மூவாயிரம் ரூபாப் படி வாங்கினான் மயில்வாகனம். தரகனுக்கு பத்தாயிரம் ரூபா கொடுத்தான். தரகன் போதாது என்று அடம் பிடித்ததால், மேலும் ஐயாயிரம் ரூபா கொடுத்தான் மயில்வாகனம்.

அன்று மாலை அவனுக்கு ஆபரணங்கள் செய்து கொடுக்கும் செல்வராசா என்ற பொற்றொழிலாளியை அழைத்துக் கொஞ்சப் பவுணைக் கொடுத்து நகைகள் செய்வித்தான்.

‘‘செல்வராசா, மணிவண்ணண்ரை காலைப் பிடித்துத் தான் காசு வாங்கினான். மனிசியும் மாமாவும் தணிகாசலத்தைப் பேசினவை. எனக்கு இதைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது. தயவு செய்து விரைவாகச் செய்து தா’’ என்றான்.

‘‘அதன் படி செல்வராசா நான்கு மாதங்களில் முழுப்பவுணுக்கும் நகைகள் செய்து கொடுத்தான்; ‘‘ஐயா நீங்கள் முன்பும் களவு கொடுத்தனீங்கள் கவனமாக இருங்கோ. அதோடு களவு பவுண் எக்கச்சக்கமாய் நகரில்

உலாவுது. தங்கம் வாங்கும் போது காவல் துறைக்கு அறிவித்து விட்டு வாங்குங்கோ''.

''எனக்கு உதுகள் தெரியாதே என்னை ஒருத்தரும் ஏமாற்றேலாது. கள்ளர் ஆயுதங்களோடை வந்து என்னைக் கட்டி வைச்சிட்டு எடுத்திட்டாங்கள். இப்ப நான் கவனமாக இருக்கிறன்'' என்றான் மயில்வாகனம்.

''எல்லாம் ஊழ்வினைப் பயன் ஐயா, தீமை செய்யிற பலர் இன்றைக்கு நல்லாய் இருக்கினை. நன்மை செய்யிறவை துன்பத்தை அனுபவிக்கினை'' என்றான் செல்வராசா.

மாதம் ஒன்று கழிந்தது. மயில்வாகனம், தணிகாசலத்தையும் அழைத்துச் சென்று மணிவண்ணனிடம் ஈடு வைத்த தனது வீட்டுக் காணியை மீட்டான். அன்று தான் தணிகாசலத்திற்கு நிம்மதியாக இருந்தது; ''அபப்னே மகா கணபதியே இன்றைக்குத் தான் எனது வயிற்றில் பாலை வார்த்தாய்'' என்று பிரார்த்தித்தார்.

375. நல்லவை எல்லாம்அம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

செல்வத்தை தேடுகின்ற முயற்சிக்கு, ஊழால் நல்லவை யாவும் தீயவையாதலும் உண்டு; தீயவை நல்லவையாதலும் உண்டு.

## நிலையாத நீங்காத பொருட்கள்

அன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் சப்பரத் திருவிழா. தணிகாசலத்தின் மனைவி பாக்கியலட்சுமி நல்லூர்க் கந்தனின் முதல்த்தரப் பக்தை. கொடியேற்றத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே வீடு வளவுகளெல்லாம் கழுவித் துப்பரவு செய்து விடுவாள். கொடியேற்றத்திற்கு முதல் நாளில் இருந்து வைரவர் சுவாமியின் திருவிழா முடியும் வரை தினமும் ஒரு நேரச் சோறுதான் சாப்பிடுவாள். திருவிழா முடியும் வரை தினமும் காலைப் பூசைக்குச் சென்று வந்த பின்பு தான் சமைப்பாள். இருபத்தைந்து தினங்களும் தணிகாசலத்தின் பாடு பெரும்பாடாக இருக்கும். தோட்ட வேலை செய்பவர்களுக்கு அவர் தான் தேநீர் தயாரித்துக் கொடுப்பார். காலை உணவு தயாரிப்பார். பிள்ளைகள் அவர் தயாரிக்கும் காலை உணவை உண்டு விட்டுப் பாடசாலைக்குச் சென்று விடுவார்கள். தணிகாசலம் கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்குவாரே தவிர விரதங்கள் அனுஸ்டிப்பது குறைவு. அதுவும் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தைத் தவிர வேறு எந்த ஆலயங்களுக்கும் செல்ல மாட்டார். நல்லூர்கந்தசுவாமி கோயிலுக்குத் தன்னுடன் வரும்படி பாக்கியலட்சுமி கேட்பாள். அவர் அதற்குச் சம்மதிப்பார். ஆனால் அன்று அவருக்கு என்றுமில்லாத வேலைகள் வந்து விடும். நாலைந்து பேர் வந்து அவரைக் கூட்டிச் செல்லக் காத்திருப்பார்கள். இல்லாவிட்டால் அன்று

தோட்டத்தில் பலா் வேலை செய்வார்கள். இதனால் பாக்கியலட்சுமிக்கும் அவருக்கும் சண்டைவரும்.

தினமும் வருவதாகக் கூறிக் கொண்டு வந்த போதும் தணிகாசலம் கோயிலுக்குச் செல்லவில்லை. அன்று சப்பரத் திருவிழா. முதல் நாள் இரவு பாக்கியலட்சுமி சொன்னாள்; ‘‘இந்த முறை ஒரு நாள்க் கூட நீங்கள் கந்தனைத் தரிசிக்க வரவில்லை. இன்று சப்பறத்திருவிழா கட்டாயம் வரவேண்டும். நீங்கள் இன்று வராவிட்டால் நான் தேர், தீர்த்தத்துக்குக் கூடப் போக மாட்டன்’’

அவரது மகள் வந்து அவரது மடியில் இருந்து தனது கைகளால் தணிகாசலத்தின் முகத்தை வருடியபடி சொன்னாள்; ‘‘அப்பா என்னோடு படிக்கும் பிள்ளைகள் எல்லோரும் தாய் தகப்பன் மாருடன் வருகிறார்கள். அகிலாவுக்குத் தகப்பன் கடையில் அழகான பொம்மை ஒன்று வாங்கிக் கொடுத்தார். நான் அம்மாவைக் கேட்டான் அவா; ‘‘அது சரியான விலை என்று சொல்லி வாங்கித் தர மறுத்திட்டார். இன்று நீங்கள் வந்து வாங்கித் தாருங்கள்’’ என்றாள்.

‘‘என்ன விலை?’’

‘‘நூற்றிஐம்பது ரூபா வாங்கித்தர மாட்டியளே...’’ கவலையோடு கேட்டாள்.

‘‘இல்லை இல்லை நான் வாங்கித் தாறன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘உவா் இப்படித்தான் சொல்லுவா் நாளைக்கு நாங்கள் கோயிலுக்கு வெளிக்கிடும் போதுவரார். ஊரவர்களின் நலன்களைக் கவனிப்பதைப் போலக் குடும்பத்தின் நலன்களையும் கவனிக்கத்தானே வேண்டும்’’ என்றாள் பாக்கியலட்சுமி.

மறுநாட்காலை தில்லை நடராசா தனது காணியை அளக்க வேண்டும் என்று தணிகாசலத்திடம் வந்தான்.

‘‘தில்லை, இன்றைக்கு நான் வரமாட்டன். மனிசியும் பிள்ளைகளும் இருபது நாட்களாகக் கோயிலுக்கு என்னை வரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தவை. ஒவ்வொரு நாளும் சாட்டுச் சொல்லிப் போட்டன். இன்றைக்குச் சாட்டுச் சொல்ல முடியாது. கட்டாயம் போக வேண்டும்’’ என்றார் தில்லைநடராசா.

தில்லைநடராசாவுக்கு ஒரு மாதிரியாகி விட்டது; ‘‘இவ்வளவு நாளும் இழுபட்டுக் கொண்டிருந்தது. இண்டைக்குத் தான் கனகா் சம்மதித்தவா். பின்நேரம் ஐந்துமணிக்கு நில அளவையாளரை வரச் சொன்னனான். வந்தியலெண்டால் நல்லது’’ கெஞ்சினான் தில்லை நடராசா.

‘‘தயவு செய்து கேட்காதை. மனிசியும் பிள்ளைகளும் என்னை வீட்டாலை வெளியேற்றிப் போடுங்கள். வேலாயுதபிள்ளையையும் தனபாலசிங்கத்தையும் கூட்டிக் கொண்டு போ. நான் சொல்லி விற்றன். அதோடை கனகரையும் நான் சந்திக்கிறன். நிலம் அளக்கிற மகாலிங்கத்திற்கும் எல்லாம் சொல்லுறன்’’ என்றார் தணிகாசலம்.

அன்று மாலை நான்குமணிக்கு தணிகாசலமும் மனைவியும் பிள்ளைகளும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பேருந்தில் புறப்பட்டனர். தணிகாசலத்தின் மகனுக்கும் மகளுக்கும் அவர் வருவது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. தாம் விரும்பிய பொருட்களெல்லாவற்றையும் வாங்கலாமென மனதுள் திட்டமிட்டனர்.

கோயிலில் எங்கு பார்த்தாலும் சன வெள்ளமாகவே இருந்தது.

‘‘நான் உள்ளே சென்று அர்ச்சனை செய்து விட்டு வருகிறேன்’’ என்று கூறி விட்டு பாக்கியலட்சுமி கோயிலுக்குள்ளே சென்றாள்.

தணிகாசலம் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கடைகள் உள்ள இடத்திற்குச் சென்றார். அவர்கள் விரும்பிய பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தார். அவர்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. பின் அவர்கள் வந்து பந்தலில் அமர்ந்தனர். சப்பரத்தில் முருகனும் வள்ளி தெய்வானையும் வலம் வந்தனர். சப்பரம் வீதி உலா முடிந்த பின் தணிகாசலமும் மனைவியும் பிள்ளைகளும் வீட்டுக்குத் திரும்பினர்.

சேலையைக் கழற்றும் போது தான் தனது தாலிக் கொடி கழுத்தில் இல்லாதது அவளுக்குத் தெரிய வந்தது. அதை அவர் கவலையோடு தணிகாசலத்திற்குச் சொன்னாள். தணிகாசலம் திகைத்துப் போனார். பத்துப் பவுண் பெறுமதியான அந்தத் தாலிக் கொடி ஒரு இலட்ச ரூபாவுக்கு மேல் பெறுமதி உடையது. எவ்வளவோ கஷ்டப்பட்டுத் திருமணம் செய்து இருபது வருடங்களுக்குப் பின்பு தான் பாக்கியலச்சுமிக்கு அவர் அக் கொடியை வாங்கிக் கொடுத்திருந்தார்.

‘‘எப்படிக் காணாமல் போயிருக்கும்’’.

‘‘தாலிக் கொடியின் பூட்டு கழன்றிருந்தது. முன்பே அதைக் கொண்டு போய்ச் சரி செய்து கொண்டு வரும்படி சொன்னான். உங்களுக்கு வீட்டு வேலைகள் செய்ய நேரமிருந்தால் தானே சன நெரிச்சலுக்குள் கழன்று விழுந்து விட்டது’’ என்றாள் பாக்கியலட்சுமி.

‘ஊழின் காரணத்தால் நமக்கு உரியவை அல்லாத பொருட்களை எப்படித்தான் கவனமாகப் பாதுகாத்தாலும் அவை எம்மிடம் நிலைத்திராது. நமக்குரிய பொருட்களை நாம் கவனமாகப் பாதுகாக்கா விட்டாலும் அவை நம்மை விட்டுப் போகாது. நீ கவலைப்படாமல் படு. காலையில் கோயிலுக்குச் சென்று பார்ப்போம்’’ என்று கூறினார் தணிகாசலம்.

மறு நாள் காலை அவரும் மனைவியும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று கற்பூரம் கொழுத்தி, தேங்காய் அடித்து விட்டு முருகனை வணங்கினார்கள். பின்பு கோயில் திருவிழாக் காலங்களில் பாதுகாப்பிற்கென நிறுவியிருந்த காவல் நிலையத்திற்குச் சென்றனர். அங்கே தலைமை அதிகாரியான சிவபாதசுந்தரம் இருந்தார். அவர் தணிகாசலத்தைக் கண்டதும் ‘‘வாருங்கோ’’ என்று வரவேற்றார்; ‘‘இவர்கள் ஏன் விடியுமுன் காவல் நிலையத்திற்கு வந்திருக்கிறார்கள்’’ என்று நினைத்தார்.

எனது மனைவியின் தாலிக் கொடி நேற்று இரவு காணாமல் போய் விட்டது. பத்துப் பவுண், வீட்டுக்குப் போன பின்பு தான் தெரிய வந்தது. நாங்கள் வீட்டிற்குச் சென்ற போது இரவு பதினொரு மணி’’ என்றார் தணிகாசலம்.

‘‘காலையில் வீதி துப்பரவு செய்த விக்னேஸ்வரன் என்ற அடியவர் ஒரு தாலிக் கொடி நிலத்தில் இருந்ததாகக் கொண்டு வந்து தந்தவர். அதன் அடையாளத்தைச் சொல்ல முடியுமா.?’’ என்று கேட்டார் சிவபாதசுந்தரம்.

‘‘பூட்டுக்கழன்றிருக்கு தாலியில் கோர்க்கப்பட்ட காசில் உடைவு இருப்பதால் நூலால் கட்டியுள்ளேன். என்றாள் பாக்கியலட்சுமி.

‘‘சரி அதுதான் கொடி. கவனமாக அல்லவா இருத்தல் வேண்டும். கழன்றதைச் சீர் செய்திருந்தால் விழுந்திராது. அதோடு கோயிலுக்கு வருபவர்கள் தங்க நகை அணிவதைத் தவிர்த்தல் வேண்டும்’’ என்று கூறி விட்டுத் தாலிக் கொடியைக் கொடுத்தார் சிவபாதசுந்தரம்.

தணிகாசலமும் மனைவியும் தேரில் உலா வந்த முருகனையும் வள்ளி தெய்வானையையும் வணங்கி விட்டு வீட்டுக்குத் திரும்பினர். அவரது வீட்டில் ஏராளமான மக்கள் நின்றனர். மணிவண்ணனும் நின்றான்; ‘‘எமக்கு உரியவை அல்லாத பொருட்களை நாம் வருந்திக் காப்பாற்றினாலும் அவை எம்மிடம் தங்கியிருக்க மாட்டாது. தமக்கு உரியவற்றை கடலில் கொண்டு சென்று வீசினாலும் அவை எம்மை வந்தடையும். இதைத் தான் ஊழ் என்று சொல்வது’’ என்று தொலைந்த தாலிக் கொடியைக் காட்டினார் தணிகாசலம்.

‘‘உண்மை தான் அண்ணை பத்துவருடங்களுக்கு முன்பு என்னிடம் கடனாகக் காசு வாங்கிய மயில்வாகனம், நேற்றுக் கொண்டு வந்து தந்திட்டுப் போறான். அது திரும்பிவருமென்று நான் கனவிலையும் நினைக்கவில்லை’’ என்றான் மணிவண்ணன்.

‘‘விக்னேஸ்வரன் என்ற அடியவர்தானாம் தாலிக் கொடியை எடுத்துக் கொடுத்தது. அது நான் வணங்கிற நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி தான் இரவு முழுவதும் நான் விழித்திருந்து மகா கணபதியைப் பிரார்த்தித்தேன். எனது பிரார்த்தனை வீண் போகவில்லை. வாற வெள்ளிக்கிழமை மகா கணபதிக்குப் பெரிய தொரு அபிஷேகம் செய்யப் போகிறேன்’’ என்றார் தணிகாசலம்.

அப்பொழுது அங்கே விக்னேஸ்வர மூர்த்தியும் கனகலிங்கமும் வந்தனர்; "பார்த்தீர்களா இதைத் தான் விதி அல்லது ஊழ் என்று சொல்வது. எமக்குக் கிடைக்க வேண்டியவை எப்படியும் கிடைத்துத் தான்தீரும். கிடைக்காதவை கடைசி வரையும் கிடைக்க மாட்டாது. இதை உணர்ந்து கொண்டால் மற்றவர்களை நாம் குறை கூற மாட்டோம். ஒரு மனிதன் உயர்வடைவதற்கும் தாழ்ந்து போவதற்கும் காரணம் ஊழ்வினை தான். அவன் பிறரைக் குறை கூறுவதற்குக் காரணமும் அதுவே தான். அதை உணர்ந்து கொண்டவனுக்கு வாழ்வில் துன்பம் ஏற்பட மாட்டாது" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"உண்மை தான் அதை அனுபவம் தான் ஒரு மனிதனுக்கு உணர்த்துதல் வேண்டும்" என்றார் கனகலிங்கம்.

376. பரியினும் ஆகாவாம் பால் அல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம.

ஊழின் காரணத்தால் தமக்குரியவை அல்லாத பொருள்களை வருந்திக் காப்பாற்றினாலும் தங்காமல் போய்விடும்; தமக்குரியவையைச் கொண்டு சென்று கொட்டினாலும் போகாது.

## நுகரல் அரிது

பகல் பன்னிரண்டு மணியிருக்கும் மணிவண்ணன் தனது வியாபாரத் தலத்தில், தான் ஓய்வெடுப்பதற்கென நவீன வசதிகளுடன் கட்டிய அறையில் இருந்த கட்டிலில் படுத்திருந்தான். அவனுக்குக் களைப்பாக இருந்தது. எழும்பி நடக்கக் கஷ்டப்பட்டான். காலையில் வீட்டிலிருந்து புறப்படும் போது மனைவி கட்டிக் கொடுத்த காலை உணவை அவன் உண்ணவில்லை. அவனுக்கு அருகில் அவனது தொழிலாளியான சுந்தரலிங்கம் நின்றான்.

"முதலாளி காலை உணவை உண்ணாததால் தான் உங்களுக்குக் களைப்பாக இருக்கிறது. எடுத்துத் தரட்டா" என்று கேட்டான்.

"வேண்டாம் பசிக்குது தான், ஆனால் மனைவி தந்த பத்திய உணவை என்னால் உண்ண முடியவில்லை. ஆட்டாமா என்றால் எனக்குப் பிடிக்காது. அரிசிமாவில் தான் இடியப்பம் பிட்டு அவித்து நான் சாப்பிடுவது வழக்கம். என்னால் ஆட்டமாப்பிட்டை உண்ண முடியவில்லை. அரிசிமா பிட்டை நல்லெண்ணையுள் வெண்காயமும் கத்தரிக்காயும், உருளைக்கிழங்கும் போட்டு பொரித்துப் பிரட்டிச் சாப்பிட்டு விட்டு ஒரு கோப்பை பால் குடித்தனென்றால் மத்தியானம் பசிக்காது. இரவு பத்துமணிக்குத் தான் இரவுச் சாப்பாடு சாப்பிடுவன். இப்ப சலரோகமும் இரத்த அழுத்தமும் வந்ததாலை அரிசிமாப் பிட்டுச் சாப்பிட முடியாமல் இருக்கிறது. எண்ணெய் வகைகள் எதையும் சாப்பிடக் கூடாது என்று வைத்தியர் சொல்கிறார்". கவலைப் பட்டான் மணிவண்ணன்.

சுந்தரலிங்கம் காலை உணவுப் பொதியை எடுத்து அவிழ்த்து ஆட்டாமாப் பிட்டையும் வல்லாரைச் சம்பலையும் அவித்த கடலைக் கறியையும் ஒரு கோப்பையில் எடுத்து வைத்து விட்டு; ''சாப்பிடுங்கோ'' என்றான்.

மணிவண்ணன் மெதுவாக எழுந்து சாப்பிட்டான். வல்லாரைச் சம்பலுக்கும் கடலைக்கறிக்கும் உப்புப் போடவில்லை. அதனால் சுவையில்லாமல் இருந்தது. கஷ்டப்பட்டுச் சாப்பிட்டான். பின்பு சுந்தரலிங்கம் தயாரித்துக் கொடுத்த ஆடை நீக்கிய பாலைக் குடித்தான். சீனி கலக்கப்படாததால் பால் சுவையில்லாமல் இருந்தது. அதில் சிறிதளவைக் குடித்து விட்டு மிகுதியை மேசையில் வைத்தான். களைப்பு சற்று நீங்கிய போதும் சாப்பிட்டது போல இருக்கவில்லை.

அப்பொழுது மணிவண்ணன் தங்கியிருந்த அறைக்கு இன்னொரு தொழிலாளி வந்து சொன்னான்; ''முத்துலிங்கம் முதலாளி வந்திருக்கிறார்''.

''கணக்குப் பிள்ளையையும் முத்துலிங்கம் முதலாளியையும் இங்கே வரச் சொல்'' என்றான் மணிவண்ணன்.

கணக்குப் பிள்ளையும் முத்துலிங்கமும் அங்கே வந்தனர்; '' கப்பலில் நூறு உந்துருளி வாகனங்கள் ஏற்றப்பட்டுள்ளது. பத்தாயிரம் மூட்டை அரிசியும் பத்தாயிரம் மூட்டை சீனியும் மாவும் ஏற்றப்பட்டுள்ளது. அந்தக் கப்பல் இன்று மாலை ஆறுமணிக்கு காங்கேசன் துறைத் துறைமுகத்திற்கு வந்து சேரும். அதை இறக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து இருநூறு பாரஊர்த்திகள் செல்கின்றன. இன்று இரவு களஞ்சியப் பொறுப்பாளரையும் ஐம்பது தொழிலாளிகளையும் தங்கச் சொல்லியுள்ளேன்'' என்றார் கணக்குப் பிள்ளை.

''முத்துலிங்கம் முதலாளிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து விடுங்கோ. இங்கிருந்து கொழும்புக்கு அனுப்ப வேண்டிய உருளைக்கிழங்கு, வெண்காயம், செத்தல் மிளகாய் காய்கறிகள் போன்றவற்றை இங்கிருந்து செல்லும் வாகனங்களில் ஏற்றி விட்டுக் சுந்தரேசனைப் பொறுப்பாக அனுப்புங்கள். என்னால் இன்று ஒரு இடத்திற்கும் பயணிக்க முடியவில்லை. பேரம்பலத்திடமிருந்து பெறவேண்டிய பணத்தைப் பற்றி நினைவூட்டுங்கள். அவனிடம் நான் வருவதாகச் சொன்னேன். இன்று வரமுடியவில்லை என்று சொல்லுங்கள். நேரமிருந்தால் என்னை வந்து சந்திக்கச் சொல்லுங்கள்'' என்றான் மணிவண்ணன். கணக்குப் பிள்ளை எழுந்து சென்று விட்டார்.

''வைத்தியசாலைக்குச் சென்று உடலைப் பரிசீலனை செய்யுங்கள். கொஞ்ச நாட்களுக்கு ஓய்வெடுங்கள். மன உளைச்சலும் வேலைப்பழுவும் தான் அனேகமான நோய்களுக்குக் காரணி. எனக்கும் உங்களுக்குள்ள இரண்டு வருத்தங்களும் இருக்கின்றன. அதனால் மூத்தமகனிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு ஓய்வெடுக்கப் போகிறேன்'' என்றார் முத்துலிங்கம்.

‘‘எனக்கு ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. அவள் மருத்துவக் கல்லூரியில் படிக்கிறாள். இப்போ என்னால் முன்பு போல ஓடியாடித் திரிய முடியவில்லை. ஐந்நூறுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் என்னை நம்பியிருக்கிறார்கள். அதனால் தான் தொழிலை விட முடியாமல் இருக்கிறது’’ என்றான் மணிவண்ணன்.

‘‘நான் சொல்வதைப் பற்றிக் குறை நினைத்துக் கொள்ளக் கூடாது. என்னுடைய வர்த்தக நிலையத்தை விற்க விரும்புகிறேன். அது முன்பு நீங்கள் நடத்தியது. நான் கஷ்டப்பட்டு விட்டேன் என்பதற்காக அதை எனக்குத் தந்தீர்கள். இப்பொழுது என்னால் அதை நடத்த முடியவில்லை. மகனுக்குப் பல நிறுவனங்களை முகாமைத்துவம் செய்யத் தெரியாது. அதனால் அதை விற்க அனுமதித்தல் வேண்டும்’’ என்றான் முத்துலிங்கம்.

‘‘எவ்வளவு பணத்தை எதிர்பார்க்கிறீர்கள்.

‘‘அதை எனது மனைவியின் சகோதரன் கேட்கிறான். வெளிநாட்டில் இவ்வளவு காலமும் வேலை செய்தவன். இப்ப அங்கு செல்ல விருபுகிறான் இல்லை’’.

‘‘சரி... சரி... நீ அவனுக்குக் கொடு. அதை எடுத்தாலும் நான் நடத்த முடியாது’’ என்றான் மணிவண்ணன்.

முத்துலிங்கம் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அன்று மாலை நான்குமணிக்கு மணிவண்ணன் கணபதி மத்திய மகாவித்தியாலயத்திற்குச் சென்றான். விக்னேஸ்வரமூர்த்தி யாரோ ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தார். அதனால் அவன் வெளியே இருந்தான். அவனைக் கண்ட விக்னேஸ்வரமூர்த்தி அவனை உள்ளே வருமாறு அழைத்தார். மணிவண்ணன் உள்ளே சென்றான். உள்ளே விக்னேஸ்வரமூர்த்தியின் எதிரே வாட்ட சாட்டமான ஒருவர் உட்கார்ந்திருந்தார்; இவர் வெளிநாட்டில் இருந்து வந்திருக்கிறார். இவர் தான் உங்களிடம் செய்யச் சொன்ன ஐந்நூறு உருக்குக் கதிரைகளுக்கான பணத்தைத் தந்தவர். நீங்கள் கதைத்துக் கொண்டிருங்கள். நான் இன்னும் மதிய உணவை உண்ணவில்லை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘நாலரைமணியாகி விட்டது’’. என்றான் மணிவண்ணன்.

‘‘நான் அதிகாலையில் வருவதால் காலை உணவும் பாடசாலைக்குத் தான் வரும். அனேகமான நாட்களில் நான் காலை உணவை உண்பதில்லை. மதிய உணவை உண்ண நினைத்தாலும் பலர் வந்து விடுகின்றனர்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

மதிய உணவை உண்டு விட்டு வந்த விக்னேஸ்வரமூர்த்தியோடு கதைத்து விட்டுப் புறப்பட்டான் மணிவண்ணன்; ‘‘பல நாட்களாக நான் சுவாமியாரையும்

மகா கணபதியையும் தரிசிக்கவில்லை. அதனால் கோயிலுக்குச் செல்லப் போகிறேன்'' என்றான் மணிவண்ணன்.

''நானும் வருகிறேன். குருக்கள் நாலைந்து நாட்களுக்கு முன்பு மணிக்கோபுரம் வெடித்து விட்டது என்று சொன்னவர். பார்த்துத் திருத்த வேண்டும். என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

இருவரும் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். அங்கே தணிகாசலமும் கனகலிங்கமும் நின்றனர்.

''கனகலிங்கம் வாத்தியார் விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளராய்ப் போகப் போறார் என்று மகள் கவலைப் பட்டவள். வருடா வருடம் பத்துப் பதினைந்து வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் பல விஞ்ஞான கணிதப் பட்டதாரிகளையும் உருவாக்கிற வாத்தியாருக்கு ஏன் உந்த ஆசை வந்ததோ தெரியவில்லை. அவர் கல்விப்பணிப்பாளராகச் சென்றால் மாணவர்களுக்குப் பெரும் நஷ்டமேற்படும். நான் அவரைக் கண்டு கல்வியதிகாரியாகப் பதவி ஏற்க வேண்டாம் என்று சொல்லப் போகிறன் என்று சொன்னவள். பின்பு நீங்கள் கல்விப்பணிப்பாளராகச் செல்லாததையிட்டு மகிழ்ந்தார். சனிக்கிழமை தன்னை உங்கடை வீட்டை கூட்டிக் கொண்டு போகச் சொன்னவள்'' என்றான் மணிவண்ணன்.

கனகலிங்கம் மகிழ்ந்து போனார். அவரிடம் கற்ற பல மாணவர்கள் வீடு தேடி வந்து விஞ்ஞானக் கல்விப்பணிப்பாளராகச் செல்ல வேண்டாம் என்று கூறி விட்டுச் சென்றனர்.

மணிவண்ணனும் விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் கோயிலின் உள்ளே சென்று மணிக்கோபுரத்தைப் பார்வையிட்டனர். மணிவண்ணன் அதைத் திருத்துவதற்கான செலவை ஏற்றுக் கொண்டான்.

குருக்களிடம் திருநீறு, சந்தணம், வாங்கிய மூவரும் சுவாமியாரிடம் வந்தனர்; ''மணிவண்ணனுக்கு இப்பொழுது வேலை கூடி விட்டது போலத் தெரிகிறது. கோயிலுக்குப் பல நாட்களாக வரவில்லை. அத்துடன் நன்றாக மெலிந்து விட்டாய்'' என்றார் சுவாமியார்.

''உடல் நலமில்லைச் சுவாமி''

''தேவைக்கு அதிகமாக உழைப்பதும் தேவைக்கதிகமாக உண்பதும் நோயை உண்டாக்கும். தேவையிலும் பார்க்கக் குறைவாக உழைப்பதும் தேவையிலும் பார்கக் குறைவாக உண்பதும் நோயை உண்டு பண்ணும். எனவே அளவறிந்து செயலாற்றுவது தான் நோயைத் தவிர்ப்பதற்காக வழி. கடும் உழைப்பாளி உழைப்பில் கவனம் செலுத்துவதால் உண்ண மறுக்கிறான். இது நோயின் வித்தாகிறது. கோடி கோடியாய்ப் பொருட்களைச் சேர்த்தாலும் அனுபவிப்பதற்கு விதி இருத்தல் வேண்டும். ஊழ்வினை காரணமாகப் பெரும் செல்வந்தர்கள் தாம் தேடிய சொத்தை அனுபவிக்க முடியாமல் அல்லற்படுகிறார்கள். பலரால் பாலைக் கூடக் குடிக்க

முடிவதில்லை. வயிராற உண்ண முடியவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்பவன் உண்ண முடிந்த போதும் உணவில்லாமல் கஷ்டப்படுகிறான். உணவுள்ளவன் உண்ண முடியாதிருக்கிறான். வகுத்தான் வகுத்தபடி தான் யாவும் நடைபெறும். எனவே உடல் நிலையைக் கவனி; ஓய்வெடு'' என்றார் சுவாமியார்.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

கோடி கோடியாகச் செல்வத்தைச் சேர்த்தாலும், ஊழ் வகுத்த படி தான் செல்வத்தை அனுபவிக்க முடியும்.

## துறவி ஆவான்

சுவாமியார் சொல்வது எவ்வளவு உண்மை. உடல் நிலையைக் கவனியாது பொருள் தேடும் ஆகையால் அலைந்தமையால் தான் நான் இந்த நோயைத் தேடிக் கொண்டேன். நான் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பம் எனது நடத்தைகளாலேயே என்னை வந்தடைந்தது. இனி வருந்திப் பயனென்ன?'' என்று நினைத்தான் மணிவண்ணன்'' இனி ஓய்வு எடுக்க வேண்டும். தேடியது போதும். இனி நான் உழைக்கக் கூடாது'' என்று முடிவெடுத்தான் மணிவண்ணன்.

விக்னேஸ்வரமூர்த்தியும் சற்றுத் தளர்ந்து போனார். தினமும் அவரது மனைவி கொடுத்தனுப்பும் காலை உணவை அவர் உண்பதில்லை. காலை உணவு உண்ண வேண்டும் என்ற உணர்வு அவருக்குப் பெரும்பாலும் வருவதில்லை. மத்தியாண உணவையும் மாலை நான்குமணிக்கே உண்பார். அதனால் அவரின் மனைவி சொல்வாள்; ''உடல் நலமாக இருந்தால் தான் சேவை செய்ய முடியும். மக்களுக்குச் சேவை செய்ய விரும்பும் ஒருவன் தனது உடலை இரும்பு போல வைத்திருத்தல் வேண்டும். உடலைப் பேணிக் காத்தல் வேண்டும். இல்லாவிட்டால் நோயாளியாகி விடுவான். நீங்கள் சாப்பிடா விட்டால் எப்படி உடம்பில் தைரியம் வரும். நாளைக்கு நோய் என்று வந்து பாயில் படுத்தால் தான் தெரியும்'' என்பாள்.

இனிமேல் நானும் உடம்பைக் கவனித்தல் வேண்டும். நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்'' என்று நினைத்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

கனகலிங்கம் சொன்னார்; ''எனது இளைய மகனுக்குச் சரியான காய்ச்சல் இராத்திரி வலியும் வந்து விட்டது. நான் நல்லாய்ப் பயந்து போனேன். வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனாங்கள். அங்கை மறிச்சிட்டினை. அது தான் மகா கணபதிக்கு அர்ச்சனை ஒன்று செய்து கொண்டு போகிறேன்''.

‘‘இப்ப எப்படி இருக்கிறது’’ என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘காய்ச்சல் குறையவில்லை. பகல் சாப்பாடும் கொண்டு போனான் அப்பவும் ஒரு முறை வலி வந்து விட்டது. வைத்தியர் பயப்படத் தேவையில்லை யென்று சொல்கிறார். என்றாலும் எனக்குப் பயமாக இருக்கிறது. மனைவி இன்று முழுவதும் சாப்பிடவில்லை அழுது கொண்டிருக்கிறாள்’’ என்றார் கனகலிங்கம்.

‘‘மணி, கிட்டடியில் கொழும்புக்குப் போவீர்களா..?’’ என்று கேட்டார் தணிகாசலம். ‘‘போகத் தான்வேணுமண்ணை. பிரயாணம் செய்யக் கூடிய நிலை இல்லை. ஏன் கேட்னீங்கள்?’’ என்று கேட்டான் மணிவண்ணன்.

‘‘மகளுக்கு ஒரு புத்தகம் வாங்க வேண்டும். இஞ்சை அது இல்லை. கொழும்பிலை தானாம் இருக்கு. ஏழாயிரமோ எண்ணாயிரம் ரூபா வருமெண்டவள். இலவசக் கல்வியென்று சொல்லீனை. ஆனால் பல்கலைக்கழகத்திலை படிக்கிற பிள்ளைக்குப் புத்தகச் செலவே ஒரு இலட்சத்தைத் தாண்டும் போலைக் கிடக்கு. அவள் பல்கலைக் கழகத்திற்குப் போக முன்னம் வேலாயுதபிள்ளை தனக்குத் தெரிந்த பெடியன் ஒருவன் வெளிநாட்டிலை வேலை செய்யிறான் விரும்பினால் மகளைக் கட்டிக்குடு. என்று சொன்னவர். அந்த நேரம் கட்டிக் கொடுத்திருக்கலாம். இப்ப என்னாலை செலவுகளைத் தாங்க முடியவில்லை’’ என்றார் தணிகாசலம்.

‘‘போய்க் கதை கதையாதைங்கோ ஒரு பிள்ளை மருத்துவத்துறைக்கு எடுபடுவதென்பது இலேசான காரியமே? அதை நினைத்துப் பெருமைப் படுறத்தை விட்டுட்டுத் துக்கப்படுறியள்’’ என்றார் கனகலிங்கம்.

‘‘ஆரம்பத்திலை நான் பெருமைப்பட்டனான் தான். இப்ப செலவுகள் வரேக்கை தான் யோசனையாக இருக்கு. கோயில் வேலைகள், பொதுவேலைகள் என்று எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு வேலை செய்தாலும் பற்றாக் குறையாகத் தான் இருக்கு’’ என்றார் தணிகாசலம்.

‘‘இயற்கையின் வழி நடத்தலுக்கேற்ப நடைபெறுவது தான் வாழ்க்கை. அதை எல்லோரும் புரிந்து கொள்ளல் வேண்டும். மனித வாழ்க்கையில் இயற்கைக்குக் கீழ்ப்படியாது எவரும் வாழ முடியாது. நாம் எத்தனையோ காரியங்களை நினைக்கிறோம். பலவாறு திட்டமிடுகிறோம். இவையெல்லாம் நடப்பதில்லை. நாம் ஒன்று நினைக்க இன்னொன்று நடந்தும் விடுகிறது. சில சமயங்களில் நினைத்த படியே நடந்து விடுகிறது. சில சமயங்களில் நினையாதவை நடந்து விடுகின்றன. இதில் நன்மையும் வரும். தீமையும் வரும். நன்மை வந்தால் அதை இறைவன் எமக்களித்ததாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். தீமை வந்தால் நாம் அவற்றைத் தேடிக் கொண்டதாக நினைத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு செயல் காலத்திற்குக் காலம் மாறுபட்ட பயன்களைக் கொடுக்கும். ஒரு காலத்தில் தணிகாசலம் தனது மகள் வைத்தியராக வேண்டு மென்று நினைத்தான். பல்கலைக்கழகத்திற்கு அவள் தெரிவான போது மிகவும் மகிழ்ந்தான்.

ஆனால் இன்று அதற்காகத் துயரப்படுகிறான். இது தான் இயற்கையின் செயல்.

“ஒவ்வொருவனும் தான் வாழும் வாழ்க்கை சிறந்ததாக இருந்தால் மட்டும் தான் தீமைகள் வராது என்று நினைக்கிறான். அதனால் அவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்கிறான். ஆனால் ஊழ்வினையில் இருந்து அவனால் தப்பிக்க முடியாது. பலவீனமான உடலில் நோய் ஏற்படுவது போல அவ நம்பிக்கையும் பலவீனமும் மனதில் வந்து சேர்ந்து விட்டால் துன்பங்கள் வந்து குடிபுகுந்து விடும். அப்பொழுது அவன் எடுக்கும் முயற்சிகள் தோல்வியையே தரும். ஊழ்வினை என்பது இல்லாவிட்டால் துன்பங்கள் இல்லை. துன்பங்கள் ஆசையால் வருகின்றன. ஆசைகள் இல்லாவிட்டால் பிறப்பில்லை. பிறப்பில்லாவிட்டால் உலகில் உயிர்கள் இராது. எனவே வாழ்வைத் தூய்மைப் படுத்துவதும், இன்பத்தைக் கொடுப்பதும், சிறப்பிப்பதும் ஊழ்வினையால் வரும் துன்பங்களே ஆகும். விதியானது ஒருவனுக்குக் கொடுக்கின்ற துன்பங்களைக் கொடுக்காமல் விடுமானால், அனுபவிக்கப் பொருள் இல்லாதவர்கள் துறவிகள் ஆகி விடுவார்கள்” என்றார் சுவாமியார்.

“சுவாமியாருக்கு என்ன பெண்சாதியின் கவலையா? பிள்ளை குட்டிகளின் கவலையா? இல்லை நான் பெரிதாக வாழ வேண்டும் பொருள் தேட வேண்டும் என்ற கவலையா? பற்றற்றிருப்பதால் இப்படியெல்லாம் பேச முடிகிறது. எம்மால் முடியுமா?” என்று பெருமூச்சு விட்டார் தணிகாசலம்.

“என்ன தணிகாசலம் என்றுமில்லாதவாறு யோசிக்கிறாய். விதியின் பயனை யாரும் உய்த்து உணர முடியாது. பறவைகள் விலங்குகள் தமது குஞ்சுகளுக்கும் குட்டிகளுக்கும் உணவு தேடியா கொடுக்கின்றன? பிறந்த உயிர்கள் எல்லாம் கடளின் பிள்ளைகள். தந்தைக்குத் தனது ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் என்னென்ன செய்ய வேண்டும் என்று தெரியும். பொறுப்புக்களை நினைத்துக் கவலைப்படக் கூடாது. மகிழ்வுடன் அவற்றை ஏற்றுச் செய்தல் வேண்டும். நாம் செயலில் ஈடுபடுவதைப் பொறுத்துத் தான் பயன் ஏற்படுகிறது. பொறுப்புக்களைச் சுமக்க முடியாதவர்களுக்கு உலகம் பாரமானதாகவே தோன்றும். பொறுப்புக்களை இலகுவானது என்று ஏற்றுக் கொள்பவர்களுக்கு செயல் சுவர்க்கமாகத் தோன்றும். பயப்படுவதாலோ அன்றி அலட்சியம் செய்வதாலோ பொறுப்புக்கள் நீங்கி விட மாட்டா. ஊழின் வலிமையால் துன்பங்கள் ஒருவனுக்கு வராவிட்டால் அவன் துறவியாகி விடுவான்” என்றார் சுவாமியார்.

378. துறப்பார்மன் துப்புரவு வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

ஊழானது துன்பங்களைக் கொடுத்து வருத்தாமல் விடுமானால், அனுபவிக்கப் பொருளில்லாத வறியவர்கள் துறவிகளாவர்.

அந்த வருடம் கணபதி மத்திய மகாவித்தியாலயத்தின் கா.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அவ்வளவு நல்லதாக அமையவில்லை. முன்னைய வருடங்களை விட மிகமிகக் குறைந்தளவு மாணவர்களே பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகி இருந்தனர். அதனால் மக்களை விடக் கல்வித்திணைக்களம் தான் கூடுதலாகக் கவலை அடைந்தது.

விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் கவலைப்பட்டார். அதை விடத் தணிகாசலம் கவலைப்பட்டார். பரீட்சைப் பெறுபேறுகள் வந்தன்று பாடசாலைக்கு வரும் தணிகாசலம் பரீட்சைப் பெறுபேறு வந்து இரண்டு வாரங்கள் கழிந்தும் பாடசாலைக்கு வரவில்லை. முன்பென்றால் பரீட்சைப் பெறுபேறுகள் வந்தால் ஒரு நாளைக்கு மூன்று நான்கு முறை வருவார். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும் என்றும், அவ்விழாவை எவ்வளவு சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றும் ஆலோசனைகள் வழங்குவார். இந்த வருடம் அவரது இரண்டாவது மகன் பரீட்சை எழுதியிருந்தான். அவன் கட்டாயம் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாவான் என்று பௌதீகவியலைக் கற்பிக்கின்ற ரவீந்திரன் ஆசிரியரும் இரசாயணவியலைக் கற்பிக்கின்ற கனகலிங்கம் ஆசிரியரும் தணிகாசலத்திற்கு நம்பிக்கையூட்டியிருந்தனர். கணித பாடத்தில் திறமைச் சித்தியடைந்த தணிகாசலத்தின் மகன் பௌதீகவியலிலும் இரசாயணவியலிலும் சாதாரண சித்தியே அடைந்திருந்தான். அதைத் தணிகாசலத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மகன் பொறியியலாளராக வந்தால் தான் தனக்கும் தனது குடும்பத்திற்கும் விடிவுகாலம் வரும் என்று தணிகாசலம் நம்பியிருந்தார்.

மகள் மருத்துவ பீடத்தில் கற்ற பொழுதும் அவளுக்குத் திருமணம் செய்வதானால் பத்து இருபது இலட்சரூபா சீதனமாகக் கொடுத்தல் வேண்டும். மகன் நன்றாகப் படித்தானானால் மாற்றுச் சம்மந்தமாகச் செய்யலா மென அவர் நினைத்திருந்தார். அந்த நினைவில் இடிவிழுந்தால் அவரால் வேலைகள் எதுவும் செய்ய முடியவில்லை. அவரது நிலையைக் கண்டு மனம் வருந்திய அவரது மகன் சொன்னான்; ‘‘அப்பா நாம் எவ்வளவு தான் கெட்டித்தனமாகப் படித்தாலும் அதிஷ்டமும் எமக்குத் துணை இருக்க வேண்டும். அதிஷ்டம் இருந்தால் நாம் கற்ற பகுதிக்குள் வினாக்கள் வரும். இம் முறை எமது பாடசாலையில் பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லாமைக்குக் காரணம் அதிஷ்டமின்மையே. வழக்கமாக இரவீந்திரன் ஆசிரியரும் கனகலிங்கம் ஆசிரியரும் பாடம் முழுவதையும் கற்பிப்பார்கள். பின்பு பரீட்சைக்கு வரக் கூடிய வினாக்கள் சிலவற்றைத் தந்து அவற்றை கவனமாகப் படிக்கும் படி கூறுவார்கள். இவ்வளவு காலமும் அவர்கள் கூறும் பகுதிக்குள்ளேயே வினாக்கள் பல வந்தன. ஆனால் இம்முறை அவர்கள் கூறிய பகுதிக்குள் மிகவும் குறைவான வினாக்களே வந்தன. மாணவர்கள் அனேகமாக ஆசிரியர்கள் இருவரும் தரும் பகுதியையே நன்றாகப் படிப்போம். மற்றய பகுதிகளில் நாம் அக்கறை கொள்வது குறைவு. அதனால் தான் இம்முறை பெறுபேறுகள் நன்றாக அமையவில்லை. நீங்கள் கவலைப்படாதீர்கள். கவலைப்படுவதால்

பிரச்சினைகள் தீர்ந்து விட மாட்டாது. நான் அடுத்த முறை கவனமாகப் படித்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாவேன்’’ என்றான்.

அவன் அப்படிக் கூறிய போதும் தணிகாசலத்தின் மனம் ஆறுதலடையவில்லை. அன்று தணிகாசலத்தை வந்து சந்திக்கும் படி விக்னேஸ்வரமூர்த்தி சொல்லியனுப்பியிருந்தார். அதனால் வேண்டா வெறுப்பாகப் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்றார் தணிகாசலம்.

பாடசாலையில் சுவாமியார் விக்னேஸ்வரமூர்த்தியோடு கதைத்துக் கொண்டிருந்தார். தணிகாசலம் உள்ளே சென்றார்; ‘‘தணிகாசலத்தை இப்பொழுது காணமுடியாதுள்ளது. அவ்வளவு வேலையா?’’ என்று கேட்டார் சுவாமியார்.

‘‘இப்போது அவர் பாடசாலைக்கும் பெரிதாக வருவதில்லை’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘கவலை, தாங்க முடியாத கவலை’’ என்ற சுவாமியார் சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டுச் சொன்னார்; ‘‘தணிகாசலம், நாம் நினைப்பதெல்லாம் நடைபெறுவதில்லை என்று நான் உனக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். ஊழ்வினைப் பயன் மனிதர்களுக்கு மட்டும் இருப்பதில்லை. மனிதனோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் இருக்கின்றது. பாடசாலைகள், கோயில்கள், சமூகநிலையங்கள் யாவற்றிற்கும் எழுற்சியான காலமும் உண்டு; வீழ்ச்சியான காலமும் உண்டு. பலவருடங்களாக நல்ல பெறுபேற்றைத் தந்த ஆசிரியர்களைப் பாராட்டி மகிழ்ந்தோம். இம்முறை பெறுபேறுகள் சரியில்லை என்பதற்காகத் துயரப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக மதிப்பவனுக்குத் தான் வெற்றி ஏற்படும். உனது மகன் இன்னும் இரண்டு முறை உயர்தரப் பரீட்சை எடுக்கலாம். அடுத்த முறை அவன் சித்தியடைவான். அவனுக்கு நீ ஆறுதல் கூறுவதைவிட்டு விட்டு நீ கவலைப்படுவதன் மூலம் பிரச்சினை தீர்ந்து விடுமா? எல்லாவற்றிற்கும் ஊழ்வினை தான் காரணம். ஆசிரியர்கள் நல்ல முறையில் கற்பித்தாலும் மாணவன் ஒவ்வொருவனுக்கும் நல்ல காலம் இருத்தல் வேண்டும்’’ என்றார் சுவாமியார்.

‘‘புதன்கிழமை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி விழாவைப்பதெனத் தீர்மானித்துள்ளோம்.’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘சரி’’ என்றார் தணிகாசலம்.

‘‘தணிகாசலம் இப்போது உனது போக்கு மாறுபட்டுள்ளது. மகளின் கல்வியை நீ சுமையாக எண்ணுகிறாய். பெண்கள் குறைவானவர்கள் என்று நீ நினைக்கிறாய். ஐந்து ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோரை விட ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் நன்றாக இருக்கிறார்கள். எங்கே பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ அங்கே தான் மகிழ்ச்சி இருக்கிறது.

பெண்களை மதிக்காத குடும்பம் ஒரு பொழுதும் உருப்பட மாட்டாது. சக்தியில்லாமல் சிவத்தால் இயங்க முடியாது. நீ உனது மகளைக் கற்பிக்கும் போது எவ்வளவு உற்சாகமாக இருந்தாய். அவள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது பாடசாலையில் உள்ள பிள்ளைகளுக்கெல்லாம் பரிசுகள் கொடுத்தாய். மகா கணபதிக்குப் பொங்கிப் படைத்தாய். அவள் கல்வியை முடிக்கும் வேளையில் கவலைப்படுகிறாய். இதை அவள் அறிந்தால் எவ்வளவு துக்கப்படுவாள். ஊழ்வினை காரணமாக நல்லவை வரும் போது மகிழ்ச்சியடையும் மனிதன் அதே ஊழ்வினை காரணமாகத் துன்பம் வரும் போது வருத்தப்படுவது ஏன்?" என்று கேட்டார் சுவாமியார்.

தணிகாசலம் எதுவும் பேசாமல் இருந்தார்.

379. நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்
அல்லற் படுவது எவன்?.

ஊழ்வினையால் நல்லவை நடக்கும் போது மகிழ்கின்றவர், அதே ஊழ்வினையால் துன்பங்கள் வரும்போது கலங்குவது ஏனோ?.

## முன்நிற்கும்

எனது பெயர் பரமேஸ்வரன். கொழும்பில் பல கோடிரூபா மதிப்புள்ள ஆடைத் தொழிற்சாலை வைத்து நடத்துகிறேன். எனது ஆடைத் தொழிற்சாலையில் ஆயிரத்து இருநூற்று அறுபத்தேழு தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இதை விட இனிப்புத் தொழிற்சாலை ஒன்றுள்ளது. அதில் எழுநூற்றி ஐம்பத்தெட்டுப் பேர் வேலை செய்கிறார்கள். இவர் எனது மனைவி காமாட்சியம்பாள். இவர் எனது மகன் வத்சல்யன் உங்கள் மகளோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் கல்வி கற்கிறார். எனது சொந்த ஊர் மானிப்பாய். எனது நல்ல நண்பன் மணிவண்ணன். மணிவண்ணன் கடந்த பல வருடங்களாக எனது ஆடைத் தொழிற்சாலையில் உருவாக்கப்படும் ஆடைகளை வாங்கி வந்து யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்கிறார். அவரைக் கேட்டால் என்னைப் பற்றிய விபரங்கள் யாவற்றையும் விரிவாகக் கூறுவார். நான் அவரிடம் உங்களைப் பற்றி விசாரித்தேன். அவர் சொன்னார்; "தணிகாசலம் அண்ணையைப் பற்றி சொல்ல வார்த்தைகளே இல்லை. கடவுள் என்றும் சொல்லலாம். அதற்கு மேலும் சொல்லலாம். அப்படியான ஒரு மனிதனை என் வாழ்நாளில் நான் காணவில்லை. அவர் மிகவும் வசதி குறைந்தவர். ஆனால் அவரைப் போல வசதியுள்ளவர் இந்த உலகில் எவரும் இல்லை" என்று கூறினார். என்று கூறி விட்டு நிறுத்தினார் பரமேஸ்வரன்.

பலஇலட்சரூபா பெறுமதியான மோட்டார் வண்டியில் தணிகாசலத்தைத் தேடிக் கொண்டு அவரது வீட்டுக்குச் சென்ற பரமேஸ்வரனும் அவரது மனைவியும் மகனும் அவர் அங்கு இல்லாமையால் நாவலர் ஸ்ரீ வித்தியா

மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். அங்கு தணிகாசலமும் விக்கினேஸ்வரமூர்த்தியும் தில்லைநடராசாவும் சுவாமியாரோடு கதைத்துக் கொண்டிருந்தனர். பரமேஸ்வரன் கோயிலடியில் வந்து இறங்கிக் கற்பூரம் கொழுத்தித் ,தேங்காய் உடைத்து, மகா கணபதியை வணங்கி விட்டு அங்கு நின்ற ஒருவரிடம் ‘‘தணிகாசலம்’’ நிற்கிறாரா என்று கேட்டார். அவர் பரமேஸ்வரனை அழைத்து வந்து ‘‘இவர் தான் தணிகாசலம்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

தணிகாசலத்திற்கு ஒன்றும் புரியவில்லை. தனக்கு அருகில் வந்து தன்னையும் தன் மனைவியையும் மகனையும் அறிமுகம் செய்து விட்டு, தனது தொழிலைப் பற்றியும் தனது வசதிகளைப் பற்றியும் கூறிக் கொண்டிருக்கும் பரமேஸ்வரனை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு செய்வதறியாது நின்றார் தணிகாசலம்.

‘‘மணிவண்ணனது வீட்டுக்குச் சென்றனான். அவர் அங்கு இல்லை. வெளியே சென்று விட்டார். அவரது மனைவியிடம் நான் தணிகாசலத்தின் வீட்டுக்குச் செல்கிறேன். வந்தவுடன் அவரைத் தணிகாசலத்தின் வீட்டுக்கு வரச் சொல்லுங்கள். என்று கூறி விட்டு வந்தேன்’’ என்று பரமேஸ்வரன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது மணிவண்ணன் மோட்டார் வண்டியில் வந்து இறங்கினான்.

‘‘நீங்கள் தொலைபேசியில் சொல்லியிருந்தால் நான் காத்திருப்பன்’’ என்றான் மணிவண்ணன்.

‘‘அதற்கு எங்கே நேரம் வந்தது. வத்சல்யன் எம்மை வரும்படி தினமும் கரைச்சல் பண்ணிக் கொண்டிருந்தான். சென்றவாரம் நான் லண்டனுக்குச் சென்றேன். நாளைக்கு அமெரிக்காவுக்குச் செல்ல விருக்கிறேன். நான் இலங்கையில் இருப்பதே குறைவு. அமெரிக்காவுக்கு அவசரமாகச் செல்ல வேண்டும் மகனுடைய கரைச்சலை விட மனைவியினுடைய கரைச்சல் தான் அதிகம். மருமகளைப் பார்க்க வேண்டுமாம். வத்சல்யன் புகைப்படம் அனுப்பினவன். இருந்தாலும் மருமகளை நேரில் கண்டு பத்து இலட்ச ரூபா பெறுமதியான வைர மோதிரத்தைப் போட்டு விட்டு அவளைக் கட்டிப் பிடித்துக் கொஞ்ச வேண்டுமாம்’’ பரமேஸ்வரன் கதைத்துக் கொண்டிருந்தார்.

தணிகாசலத்திற்கு எதுவும் புரியவில்லை. விக்னேஸ்வரமூர்த்தியும் சுவாமியாரும் அவர்கள் வந்த விஷயத்தைப் புரிந்து கொண்டனர்.

‘‘தணிகாசலம் அண்ணை இவர் தான் என்னுடைய முதலாளி. பல கோடி ரூபா பெறுமதியானவர். அவருக்கு ஒரே ஒரு மகன். அவன் உங்களது மகளை விரும்பி விட்டான். உங்களது மகளுக்கும் அவன்மீது காதல். இன்று பெண் பார்க்க வந்திருக்கிறார்கள்.’’

“தணிகாசலம் திகைத்துப் போனார். அவரால் தனது காதுகளை நம்ப முடியவில்லை. இப்படியான தொரு பெரு வாழ்வு தனது மகளுக்கு ஏற்பட்டு விட்டதா?” என்று நினைத்தார்.

“மகனே உனது மகன் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானால் மாற்றுச் சம்மந்தமாகச் செய்யலாமென்று நினைத்தாய். அதனால் பெருங் கவலை கொண்டு நாளாந்த வேலைகளையே கவனியாது பித்துப் பிடித்தவன் போல் நடந்து கொண்டாய். இப்போது பார்த்தாயா..? உனது மகனையே கரை சேர்க்கிற தன்மை உனது மகளுக்கு ஏற்பட்டு விட்டது. விதியை விட வலிமையானது உலகில் வேறெதுகும் இல்லை. விதியை விலக்குவதற்கு வேறு வழிவகைகளைத் தேட முடியாது. வேறு வழிவகைகளைத் தேடினாலும் விதியே முன் வந்து நிற்கும்” என்றார் சுவாமியார்.

பரமேஸ்வரனும் காமாட்சியம்பாளும் வத்சல்யனும் சுவாமியாரின் பாதங்களைப் பணிந்தனர்; “நல்லாய் இருங்கள்” என்று சுவாமியார் வாழ்த்தினார். பின்பு பரமேஸ்வரனைப் பார்த்துக் கூறினார்; “மகனே, நீ தணிகாசலத்தின் குடும்பத்தில் பெண் எடுக்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும். மிகவும் உத்தமனான தணிகாசலம் ஒரு தெய்வப் பிறவி. அவன் செய்த தான தர்மங்களும் உதவிகளும் தான் இன்று அவனிடம் வந்து சேர்ந்துள்ளன. உனது மகன் பாக்கியவான். பணம், பொள், சொத்துக்கள் அல்ல வாழ்க்கை அன்பான உறவே வாழ்க்கை” என்றார்.

தணிகாசலம் அவர்களை அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்குச் சென்றார். பெரிய கோடீஸ்வரரான அவர்களைத் தனது சிறிய வீட்டிற்கு அழைத்துச் செல்ல அவருக்கு வெட்கமாக இருந்தது.

“நானும் முன்பு ஏழையாகத் தான் இருந்தேன். ஊழ்வினை தான் என்னைக் கோடீஸ்வரனாக்கியது. நான் பெரிதாகக் கற்கவில்லை. ஆனால் பெரும் படிப்புப் படித்தவர்களது அறிவு, அனுபவத்தால் வந்து விட்டது. உங்கள் வீட்டைப் பற்றி யெல்லாம் கவலைப்படாதீர்கள். இன்று நாம் திருமண நிட்சயார்த்தம் செய்து விட்டோம். இன்றிலிருந்து எனது மகனை உங்களின் பொறுப்பிலேயே விட்டுச் செல்கிறேன். வீட்டில் நல்ல உணவு வகைகளை உண்ட அவனுக்குக் கடைச் சாப்பாடு பிடிப்பதில்லை. உங்கள் கிராமத்தில் பெரியதொரு வீட்டை ஐம்பது இலட்சரூபாவுக்கு மணிவண்ணன் வாங்கித் தந்திருக்கிறார். நல்ல நாளாகப் பார்த்து அங்கு செல்லுங்கள். இந்த மாதத்தில் வரும் நல்ல நாளில் திருமணப் பதிவை முடிப்போம். பின்பு படிப்பு முடிந்ததும் திருமணத்தை வைப்போம்” என்றார் பரமேஸ்வரன்.

காமாட்சியம்பாள் தான் மருமகளுக்கெனக் கொண்டு வந்த வைர மோதிரத்தை மருமகளின் விரலில் அணிந்தாள். அவள் காமாட்சியம்மாளையும் பரமேஸ்வரனையும் வணங்கினார்.

பரமேஸ்வரனின் குடும்பத்தினர் சென்று விட்டனர். மணிவண்ணன் தணிகாசலத்திற்குப் பரமேஸ்வரனின் குடும்பத்தைப் பற்றிச் சொல்லிக்

கொண்டிருந்தான். அதைத் தணிகாசலத்தாலும் மனைவியாலும் நம்ப முடியவில்லை. ஊழை விட மிக்க வலிமை உடையவை எவையும் உலகில் இல்லை. நாம் ஊழை விலக்கும் பொருட்டு இன்னொரு வழியை ஆராய்ந்தாலும் அதிலிருந்து தப்ப முடியாது. அது இன்னொரு வழியால் வந்து எமக்கு முன்னே நிற்கும். நல்ல விஷயங்களானாலும் சரி தீய விஷயங்களானாலும் சரி எம்மால் விலக்க முடியாது. உனது மகனின் பரீட்சை பெறுபேற்றைப் பார்த்தாயா..? மிகவும் திறமைசாலியான அவனால் சித்தியடைய முடியவில்லை. உனது மகளுக்கு சீதனம் கொடுத்தல் வேண்டும். மாற்றுச் சம்பந்தம் செய்யலாம். படிப்பிக்காமல் விட்டிருக்கலாம். காசுவசதியில்லாத பெண்கள் பலர் பெரும் உத்தியோகங்களில் இருந்தும் திருமணமாகாது இருக்கிறார்களே எனது மகளும் அப்படித்தான். இருக்கப் போகிறாள். என்று என்னைச் சந்திக்கும் நேரங்களில் கூறுவீர்களே இப்ப என்ன நடந்தது. நீங்கள் நினைத்தபடியா நடந்தது. நான் எனது மகளைப் பரமேஸ்வரனின் மகனுக்குக் கேட்டனான். பரமேஸ்வரனுக்கு நல்ல விருப்பம். அவர் தனது மகனைக் கேட்ட போது அவன் மறுத்து விட்டான். அத்துடன் உங்களது மகளைத் தான் தான் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறிவிட்டான். முதலில் மறுத்த பரமேஸ்வரன், மகனின் பிடிவாதத்தால் சம்மதித்து விட்டார். எல்லாம் விதி அண்ணை. இன்று உங்களது மகளுக்குக் கிடைத்ததைப் போன்றதொரு பெரு வாழ்வு வேறுயாருக்கும் கிடைக்காது'' என்றான் மணிவண்ணன்.

தணிகாசலம் பூரித்துப் போனார். அவரால் பேச முடியவில்லை; ''அண்ணை ஒருவன் மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யாமலும், அவர்களை மதித்து உதவி செய்தும் வாழ்ந்தால் அந்த நற்செயல்கள் அவனுக்கு எவ்வேளையிலும் உதவும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது தான் இப்ப நடந்திருக்கிறது'' என்றான் மணிவண்ணன்.

அப்பொழுது தணிகாசலம் வளர்த்து சுவாமியாரோடு இருக்கும் வீமன் நாய் அங்கு வாலசைத்துக் குதூகலத்தால் ஒலி எழுப்பியபடி தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தது. அதைக் கண்ட தணிகாசலம்; ''பாக்கியம் சுவாமியார் வருகிறார் அவரை வரவேற்க ஆயத்தம் செய்'' என்றார். சிறிது நேரத்தில் சுவாமியார் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்களுடன் தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தார்.

தணிகாசலமும் மனைவியும் பிள்ளைகளும் அவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தனர்.

''மகனே, யாரும் நினைப்பது நடப்பதில்லை. விதிவலியது'' என்றார் சுவாமியார்.

### 380. ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று
### சூழினும் தான்முந் துறும்.

ஊழை விட மிக்க வலிமையுள்ளது பேறு எதுவும் இல்லை. ஊழை விலக்கும் பொருட்டு மாற்று வழியைத் தேடினாலும் அங்கும் ஊழே முன்வந்து நிற்கும்.